# நாட்டின் நம்பிக்கை

## கொள்கை பிரகடனம்



தேசிய மக்கள் சக்தி

# தேசத்தின் நம்பிக்கை

## கொள்கைப் பிரகடனம்

தேசிய மக்கள் சக்தி

# தேசத்தின் நம்பிக்கை

## கொள்கைப் பிரகடனம்

தேசிய மக்கள் சக்தி

தேசத்தின் நம்பிக்கை

© நியமுவா வெளியீடுகள்

முதற்பதிப்பு: 2019 அக்டோபர்

ISBN: 978-955-8696-58-3

தொடர்புகளுக்கு: தேசிய மக்கள் சக்தி

ஸ்ரீ சுபூதிபுர மாவத்தை

பத்தரமுல்லை

தொலைபேசி: 011 – 2885686

தொலைநகல்: 011 – 2885686

மின்னஞ்சல்: nppsrilanka@gmail.com

இணையத்தளம்: www.npp.lk

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| 01. | **அறிவுத்திறம் படைத்த ஒரு தேசம்** | 08 |
| | கல்வி | 09 |
| | தகவல் தொழில்நுட்பமும் தொடர்பாடலும் | 20 |
| 02. | **முழுநிறைவான ஒரு தேசம்** | 26 |
| | சுகாதாரம் | 27 |
| | வீட்டு வசதிகள் | 44 |
| | விளையாட்டு | 45 |
| | கலையும் கலாசாரமும் | 47 |
| 03. | **இடரச்சமற்ற ஒரு தேசம்** | 60 |
| | உந்துசக்தியாக பெண் | 61 |
| | தேசத்தின் எதிர்காலமும் சிறுவர் பரம்பரையும் | 63 |
| | வாலிபமும் சமூக முன்னேற்றமும் | 64 |
| | முதியோர் சனத்தொகை | 66 |
| | மாற்றுத் திறனாளிகள் | 67 |
| | திருநங்கையர் சமூகம் | 69 |
| 04. | **என்றென்றும் பசுமையான ஒரு தேசம்** | 70 |
| | சுற்றுச்சூழல் | 71 |
| 05. | **செழிப்பான ஒரு தேசம்** | 83 |
| | விரிவாற்றலுடைய பொருளாதாரம் | 84 |
| | விவசாயம் | 98 |
| | கால்நடை அபிவிருத்தி | 103 |
| | கடற்றொழிலும் நீரக வளமூலங்களும் | 106 |
| | எரிசக்தி | 110 |
| | போக்குவரத்து | 115 |
| 06. | **சட்டத்திற்கு மதிப்பளிக்கின்ற ஒரு தேசம்** | 125 |
| | புதியதோர் அரசியலமைப்பு | 126 |
| | இலஞ்சமும் ஊழலும் | 130 |
| | பொது நிருவாகம் | 131 |
| | பொலிஸ் சேவை | 134 |
| | சிறைச்சாலை | 135 |
| | போதைப்பொருள் தடுப்பு | 136 |
| 07. | **பாதுகாப்பளிக்கின்ற ஒரு தேசம்** | 138 |
| | வெளியுறவுக் கொள்கை | 139 |
| | தேசிய பாதுகாப்பு | 141 |
| | ஊடக சுதந்திரமும் தகவலுக்கான அணுகும் வாய்ப்பும் | 142 |
| | பிரஜைகளின் பொறுப்பு | 144 |
| 08. | **ஒரே தேசம்** | 145 |
| | இலங்கைத் தேசம் | 146 |

# முகவுரை

தேசிய மக்கள் சக்தி இயக்கத்தின் கீழ் அணிதிரண்டுள்ள இலங்கையின் 31 அமைப்புக்களின் உத்வேகம், தியாகம், பிரார்த்தனை என்பவற்றின் அடிப்படையில் இத்தேசிய கொள்கைப் பிரகடனம் தயாரிக்கப்பட்டது. 71 ஆண்டு காலமாக இலங்கை அரசை முன்னகர்த்திச்சென்ற அதிகாரக் கட்டமைப்பு அனைத்துத் துறைகளிலும் அடித்தளம் ஆட்டங்கண்ட, மேற்றளம் தகர்ந்து உடைப்பெடுத்த, நிர்மூலமான, ஒரு துர்ப்பாக்கியமான தேசத்தையே ஈற்றில் ஈன்று கொடுத்துள்ளது. இத்தேசத்தின் சமுதாயத்தினர் அதன் விளைவை ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. அதேபோல் எத்தகைய அளவுகோல்களைக் கொண்டு, கோட்பாடுகளைக் கொண்டு மதிப்பிடப்பட்டபோதும் இந்நிலை ஒரு பாரதூரமான குற்றமாகும். இழப்பீடொன்றின் மூலம் ஈடுசெய்யவோ அல்லது பதிலீடொன்றின் மூலம் திருத்தியமைக்கவோ முடியாதளவு தீவிரமான அழிவுகளை சில பகுதிகளில் காணக்கூடிய வீழ்ச்சிகள் ஏற்படுத்தியுள்ளன.

கல்வி, பொருளாதாரம், சுகாதாரம், போக்குவரத்து, தேசிய ஐக்கியம், விவசாயம், கலையும் கலாசாரமும், சுற்றுச்சூழல் முதலான துறைகளை மையமாகக்கொண்டும், அரசியலமைப்புசார் நல்லொழுக்கம், சட்டவாட்சி, பொது நிருவாகம், பிரஜைகளின் பொறுப்பு அல்லது வெளியுறவுக் கொள்கை போன்ற துறைகளை இரண்டாம்நிலையாகவும் கருதி தொகுக்கப்பட்ட, இலங்கைத் தேசத்தின் எதிர்கால நீடுறுதிநிலையை ஐயமின்றி உறுதியாக வென்று தரக்கூடிய தேசியக் கொள்கைகளின் தொகுப்பாக, இந்த வரலாற்று முக்கியத்துவம்வாய்ந்த ஆவணத்தை நாம் உங்கள் கைகளில் தவழ விடுகின்றோம். இலங்கையின் அரசியல் இயக்கமொன்று ஒட்டுமொத்த அரச கட்டமைப்பையும் ஒரு கைப்பிடியளவு சுருக்கி தூர நோக்குடன், அறிவுத்திறம் படைத்ததாக, சிறப்பாகக் கட்டியெழுப்பப்பட்ட, முழுமைபெற்ற, தலைசிறந்த கொள்கை ஆவணம் இதுவென்பதை நாம் உங்களுக்கு திட நம்பிக்கையுடன் முன்மொழிகின்றோம்.

தேசிய மக்கள் சக்தி இயக்கத்துடன் கரங்கோத்திணைந்துள்ள அதன் பங்குதார அமைப்புக்களின் கடந்த சுமார் இரண்டரை ஆண்டுகால பகீரதப் பிரயத்தனத்தில் உருவான மகிழ்ச்சியளிக்கும் பெறுபேறான இக்கொள்கை ஆவணத்தை அந்தந்த துறைகளில் புத்தம்புதிய ஆய்வாளர்கள், கல்விமான்கள், பல்கலைக்கழக சமூகத்தினர் இணைந்து உருவாக்கினர். குறித்த பன்முகத்தன்மைகளும் சிறப்புநிலையும் கொண்ட அறிஞர்களின் நோக்கம், ஒரு திசைமுகப்பட்டதாக இருந்தது. அதாவது வார்த்தைகளால் வர்ணித்துவிட முடியாதவாறும் கணக்கிட்டு மதிப்பிட முடியாதவாறும் அதலபாதாளத்தில் வீழ்ந்துள்ள இந்நாட்டை சட்டத்தின் அடிப்படையில் நிருவகிக்கப்படுகின்ற, பொருளாதார சுபீட்சம் கொண்ட, சுதந்திரமான, உலகத்தாருடன் தோளோடு தோள் நிற்கின்ற, உறுதிப்பாடான, நிலைபேறான ஒரு தேசத்தை உருவாக்குகின்ற கனவாகும். அப்பிரார்த்தனை, ஒரு விஞ்ஞானபூர்வ ஆவணத்தின் வடிவம் பெற்று உங்கள் கைகளில் தவழ்கிறது.

அந்தந்தத் துறைகளில் தனிக்கொள்கைகளிடையே பரப்புக்களுடன் பரஸ்பரம் தொடர்புபடும் விதத்தில் தொகுக்கப்பட்டிருப்பது இந்த ஆவணத்தின் சிறப்பம்சமாகும். அத்தகைய

இடைத்தொடர்பு இல்லாத காரணத்தினாலும் இத்தேசம் நாளுக்கு நாள் இருளில் மூழ்கும் விதம் நம் கண்ணெதிரே தோன்றுவதனால் அவ்விடயம் எமது ஆழ்ந்த கவனத்தை ஈர்த்தது.

இக்கொள்கை வெளியீட்டை ஆராயும் உங்கள் அனைவருக்கும் பலம்பொருந்திய தேசிய கொள்கை வெளியீடொன்று இல்லாதநிலையில் எமது நாட்டை வழிநடாத்திச் சென்ற அதிகார அரசியல் எமது நாட்டை எந்தளவு சூறையாடிள்ளதென்பது உறுதியாகத் தெரிய வேண்டும். தேசிய கொள்கைகள் ஒரு நாட்டின் அபிவிருத்தியின் கைந்நூலாகும்; முன்னோக்கிய பாதையின் திசைகாட்டியாகும்; தொலைநோக்குடைய ஒரு திட்டமாகும்.

கிராமம் கிராமமாகச் சென்று, மக்களை நேரில் சந்தித்து, அவர்களுடன் அளவளாவி, மதிப்பீடுகளை மேற்கொண்டு திரட்டிய தரவுகளை சிறப்பறிவுள்ளவர்களைக்கொண்டு ஆராய்ந்து, அனுபவத்தையும் கோட்பாட்டறிவையும் இரண்டறக் கலந்து உருவாக்கப்பட்ட இந்த பலமான கொள்கைப் பணிச்சட்டகம், எமது நாட்டை அபிவிருத்தியிலும் முழுநிறைவாந்தன்மையிலும் வெற்றிப் பாதையிலும் இட்டுச் செல்லும். 2019 சனாதிபதித் தேர்தல் என்பது தேசிய மக்கள் சக்தி இயக்கத்தின் எதிர்கால வெற்றிகள் பலவற்றின் முதல் அடியெடுப்பாகும். ஆகையால், இத்தேசிய கொள்கைகள், இடைநடுவில் கைவிடப்படும் அல்லது மறந்துவிடும் வெறும் பிதற்றல்களாக இருக்காது. வெற்றியின் முதற்படியின் மீதிருந்து எதிர்காலத்தில் உருவாகக்கூடிய அரசியல் சவால்கள் அனைத்தையும் வெற்றிகொள்ளும் இப்புதிய அரசியல் இயக்கம், இத்தேசிய கொள்கைகளின் அடிப்படையில் தனது திசையை தேடிக்கொள்ளும். அது தொடர்ந்துசெல்லும் ஓர் அபிவிருத்திப் பாதையாகும்; முற்றுப்பெறாத ஒரு மக்கள் பிரகடனமாகும்.

ஆட்சிசெய்வதற்கு பொதுமக்களாகிய உங்களுக்கு நாம் அறைகூவல் விடுக்கின்றோம். உங்களுக்குத் தேவையான அரசை உருவாக்கிக்கொள்ள நீங்களே முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். உங்கள் யோசனைகளே இக்கொள்கைகளின் சாரமாகும். ஆதலால், இக்கொள்கைகளின் அடிப்படையில் கட்டியெழுப்பப்படுவது, நீங்கள் விரும்பிய கனவே; இத்தனை காலமாக உங்களிடமிருந்து பறித்தெடுத்த வாழ்வே. சட்டம், ஒழுக்கபண்பாடு, நவீன அறிவு என்பவற்றுடன் தொடர்ச்சியான சமுதாய உரையாடலொன்றுடன்கூடிய எமது அணுகுமுறை இலங்கையை நிச்சயமாக முன்னேற்றத்தைப் பாதையில் நகர்த்தும். அத்தகைய அறிவுத்திறம்படைத்த ஓர் உரையாடலுக்காக நாம் உங்களுக்கு அறைகூவல் விடுக்கின்றோம். ‘தேசத்தின் நம்பிக்கை’, இலங்கையின் அரசியல் இயக்கமொன்று நாட்டு மக்களுக்கு முன்வைத்த ஒப்பற்ற அரசியல் பிரேரணை என்பது நிச்சயம் நிரூபணமாகும்.

# 01

# அறிவுத்திறம் படைத்த ஒரு தேசம்

# கல்வி

## பண்புத்தரமுள்ள கல்வி – நாகரிகமான பிரஜை

கல்வியானது மனிதர்களிடம் குடிகொண்டுள்ள உள்ளார்ந்த ஆற்றல்களையும் திறமைகளையும் வெளிக்கொணர்ந்து சமூக அபிவிருத்திக்கு முனைப்பான விதத்தில் பங்களிப்பாற்றக்கூடிய, சமநிலையான ஆளுமை பொருந்திய, நாகரிகமான மனித வளத்தை உருவாக்கக்கூடிய ஒரு கலாசார செயன்முறையாகும்.

இருப்பினும், இலங்கையின் கல்விச் செயன்முறையானது இந்நோக்கங்களை அடைந்துகொள்ளத் தவறியுள்ளதென்பதும் அதற்கு விரைவாகவும் நேர்ப்படியாகவும் துலங்கல்களைக் காட்டுவது இன்றியமையாத ஒரு விடயமென்பதும் அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்படுவதாகும். இலங்கையின் இலவசக் கல்வி குறித்து நாம் பெருமையுடன் பேசுகின்றோம். ஆயினும், தற்போது இலங்கையின் கல்விச் செயன்முறையைப் பூர்த்திசெய்யாத நிலையில் இடைவிலகும் மாணாக்கர்களின் விகிதம் (drop-out ratio) மிக அதிகமாகும். பாடசாலை செல்லவேண்டிய வயதுப் பராயத்திலுள்ள பிள்ளைகளின் ஆரம்பக் கல்வி நுழைவு 97% சதவீதமாகும். அவர்களில் 87% சதவீதத்தினர் மட்டுமே 11 ஆம் ஆண்டு வரை கல்வி பெறுகிறார்கள். 51% சதவீதமானவர்கள் மட்டுமே க.பொ.த (சாதாரண தர) பரீட்சையில் சித்தியடைந்து உயர்தரக் கல்வியில் நுழைகிறார்கள். அவர்களில் 8% சதவீதம் போன்ற சொற்ப அளவினர் மட்டுமே பல்கலைக்கழகம் புகும் வாய்ப்பைப் பெறுகிறார்கள். மறுபுறம், கல்வியின் பயன்கூர்தன்மையும் பாரதூரமான ஒரு பிரச்சினையாக விளங்குகிறது. 20 வயதிற்கு மேற்பட்ட சனத்தொகையில் 26.3% க்கு கூடுதலானவர்கள் முறையான தொழிற்பயிற்சியைப் பெறவில்லை. முதலாம் ஆண்டுக்கு தமது பிள்ளைகளை அனுமதிப்பதில் பெற்றோர்கள் எதிர்கொள்ளும் சிரமங்கள், அது தொடர்பில் பின்பற்றப்படும் செயன்முறையில் காணக்கூடிய ஊழல் மலிந்த தன்மை என்பனவற்றிலான விமர்சனங்கள் மிகவும் பாரதூரமானவையாகும். எனினும், தற்போதுள்ள 10,194 பாடசாலைகளில் 5,161 (49%) பாடசாலைகளும் 200 க்கும் குறைவான மாணவர்கள் காணப்படுகின்ற பாடசாலைகளாக இருப்பதிலிருந்து பாடசாலைக் கட்டமைப்பில் நிலவும் ஏற்றத்தாழ்வுகளும் அத்தகைய ஏற்றத்தாழ்வுகள் தொடர்பில் சமூகம் காட்டுகின்ற கூருணர்ச்சியும் பிரதிபலிக்கிறது. அதேபோல் “இலவச” கல்வி காணப்படுவதாகக் கூறப்படும் ஒரு நாட்டில், தனிப்பட்ட முறையில் கல்விக்காக சுமக்கவேண்டியுள்ள செலவு பாரியளவானதாகும். அடைந்துகொள்ளக்கூடிய கல்வியின் பண்புத்தரம் மட்டுமன்றி, கல்வியில் பிரவேசிப்பதற்கான வாய்ப்பு கூட ஒருவருரின் பொருளாதார நிலை மீது தங்கியிருக்கின்றது என்பது வெளிப்படையானதாகும். தற்போதைய கல்வி நெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்கும் இலவசக் கல்வியின் நோக்கங்களான சமத்துவமும் சமஉரிமையும் சமவாய்ப்புகளும் உறுதிப்படுத்தப்படுகின்றவாறும் பிரேரிக்கப்படும் எந்தவொரு கொள்கையும் வேலைத்திட்டமும் தயாரிக்கப்பட வேண்டும்.

கல்வி உருக்குலைந்த நிலைமையில் அதனை மேற்கொள்ள வேண்டியுள்ளது என்பதையும் குறுகிய காலத்துள் அதனை மாற்றியமைக்க முடியாது என்பதையும் நாமறிவோம். உத்தேச வேலைத்திட்டம் பூர்த்தியடைவதற்கு குறிப்பிட்ட ஒரு காலம் எடுக்குமென்பதால், நிலைமாற்ற காலமாக (Transitional Phase) அக்காலப்பகுதியை அடையாளம் காண வேண்டியிருக்கும். அக்காலப்பகுதியினுள் கல்வியை வர்த்தகப் பண்டமாக மாற்றுதல் அல்லது சந்தை வாதத்தினுள் செயற்படுவதன் மூலம் கல்வியின் உண்மையான நோக்கத்தை நிறைவேற்றிக்கொள்ள முடியாதென்ற அடிப்படையின் மீதமைந்து பல்வேறு மட்டங்களில் தனியார் கல்வியை ஒழுங்குபடுத்துவதற்கு தற்காலிக நிறுவனக் கட்டமைப்புகளையும் ஏற்படுத்த நேரிடும்.

## கல்வி எவ்வாறானதாக அமைந்திருக்க வேண்டும்?

பாலர் பாடசாலைக் கல்வி முதல் உயர்கல்வி வரை தேவைப்படும் நிதிகளை அரசாங்கம் செலவிட்டு இலவசக் கல்விச் செயன்முறையை முன்னெடுத்துச் செல்வதும் அதனை ஒழுங்குபடுத்தத் தேவையான மனித மற்றும் பௌதிக வளங்கள் உள்ளிட்ட உட்கட்டமைப்பு வசதிகளை உறுதிப்படுத்துவதும் அரசாங்கத்தின்பாற்பட்ட பொறுப்பாகும். அதற்காக மொத்தத் தேசிய உற்பத்தியில் குறைந்தபட்சம் 6% சதவீதமேனும் கல்விக்கு ஒதுக்கப்படும்.

மட்டுப்பாடுகளின்றி சமூகத்திலுள்ள அனைத்துக் குழுக்களுக்கும் தமது தகுதிகள் மற்றும் திறன்களின் அடிப்படையில் கல்விக்கான சமமான அணுகும் வாய்ப்பிருக்க வேண்டும்.

பொறுப்பான ஒரு பிரஜை என்ற வகையில் சமூக விதிமுறைகளை ஏற்றுக்கொண்டும் அவற்றுக்கு மதிப்பளித்தும் செயற்படுவதற்கும் தேவையான அறிவையும் திறன்களையும் உளப்பாங்குகளையும் நடைமுறைகளையும் மதிப்பீடுகளையும் கல்வியானது வழங்க வேண்டும்.

கல்வியானது தொழிற்சந்தை மற்றும் கைத்தொழில் தேவையை மட்டுமே அடிப்படையாகக் கொண்டதாக இருத்தலாகாது என்றபோதும், சமூகத் தேவையையும் விளைதிறனையும் அதிகரிக்கக்கூடிய தொழிலாளர்களைப் பெற்றுக்கொள்வதற்கு கல்வியானது பங்களிப்புச் செய்ய வேண்டும்.

கல்வியின் உள்ளீடானது அனைத்து இனங்களும் உள்ளிட்ட அனைத்துக் கலாசாரங்களையும் ஏற்றுக்கொள்ளக்கூடிய, எந்தவொரு சமூகக் குழுவுக்கும் பாரபட்சம் காட்டாததாகவும் அனைத்துக் குழுக்களுக்கும் பாதுகாப்பை வழங்கக்கூடியதாகவும் பண்புத்தரமுள்ளதாகவும் விளங்க வேண்டும்.

தற்போதுள்ள அறிவைப் பெற்றுக்கொள்வதையும் அந்த அறிவைப் பரப்பீடுசெய்வதையும் அதேபோல் புத்தறிவை உருவாக்குவதையும் உள்ளடக்கிய ஒரு செயன்முறையே கல்வியாகும்.

ஆளொருவர் கல்வியின் ஊடாக அடைந்துகொள்ளும் அனைத்து விதமான அபிவிருத்திகளும் தற்போதைய அனைத்துக் கலாசாரங்களுக்கும் பாரியதொரு பங்களிப்பை வழங்குவதுடன் சமூகத்தினால் பிரஜையின் கல்விக்காக மிக உயர்ந்த செலவொன்று மேற்கொள்ளப்படுகிறது. இதன் அடிப்படையில் சமூகத்திற்கு பதில்கூறக்கூடிய பிரஜைகளை கல்வியானது உருவாக்க வேண்டும்.

சமூக, பொருளாதார மற்றும் சுற்றாடல் துறைகளின் பேண்தகு தன்மை, பண்புத்தரம் என்பவற்றை வளர்ப்பது கல்வியின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாக இருத்தல் வேண்டும்.

உலகளாவிய, தேசிய தேவைப்பாடுகளின் அடிப்படையில் வளங்கள் நுகரப்படுவதுடன், எதிர்காலத்திற்கு அவை பாதுகாக்கப்படுகின்ற விதமாக செயலாற்றுவதற்கும் புத்தாக்கச் செயன்முறைகளை ஊக்குவிப்பதற்கும் கல்வியானது துணிய வேண்டும்.

கல்வியானது குறிப்பான ஒரு வயதுப் பிரிவினருடன் மட்டுப்படுத்திவிடக்கூடிய ஒன்றல்ல. அதேபோல், அது ஒரே தடவையில் பூர்த்திசெய்யக்கூடிய ஒரு செயன்முறையும் அல்ல. ஆதலால், அடையப்பெற்றுள்ள மிக உயர்ந்த தகைமை எதுவாயிருப்பினும், ஈடுபடக்கூடிய தொழில் எதுவாயிருப்பினும், வாழ்நாளில் கல்வியைப் பெறக்கூடிய வகையில் அச்செயன்முறை வகுக்கப்பட்டிருக்க வேண்டும்.

கல்வியின் உள்ளீடானது காலத்திற்கும் சமூகத் தேவைப்பாடுகளுக்கும் ஏற்றவாறு நிகழ்நிலைப்படுத்தப்பட்டிருக்க வேண்டும் என்பதுடன் உலகளாவிய மற்றும் உள்ளூர்த் தேவைப்பாடுகளுக்கு பயன்படக்கூடிய விதத்தில் மாற்றியமைக்கக்கூடிய ஆற்றலைக் கொண்டதாக அது அமைந்திருக்க வேண்டும்.

கற்றல் சூழலில் அடிப்படை மனித விழுமியங்களையும் தொடர்புகளையும் போலவே அறிவாதார (Emperical) கற்றல்களையும் மேம்படுத்துவதன் மூலம் தனி மனிதனுள் வாழ்வு பற்றிய ஆழமான பொருளையும் சமுதாயமும் உலகும் பற்றிய பரந்ததொரு நோக்கையும் ஏற்படுத்துவதன் மூலம் கற்றல் பற்றிய பேராவலை உருவாக்க வேண்டும்.

புத்தறிவை புத்துருவாக்குவதை இலக்காகக்கொண்ட ஆராய்ச்சிகளை ஊக்குவித்தல், புத்தாக்கம், மேற்பார்வை, மதிப்பீடு, அறிவை விநியோகித்தல் என்பவற்றுடன் கையகப்படுத்தல், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தை ஈடுபடுத்திக்கொள்ளல் என்பவற்றின் மூலம் புத்தறிவை கையகப்படுத்திக்கொள்வதும் விநியோகிப்பதும் கல்விச் செயன்முறையில் அடங்க வேண்டும்.

தலைமைத்துவம், ஒழுகலாறு, முழுதளாவியம், சமூக அணிதிரட்டுகையும் சமுதாய ஈடுபாடும் (Social Mobilization and Community Engagement) பன்மைச் சமூகப் பிரிவுகளின் பங்கேற்பை விருத்திசெய்தலும் பயன்கூர் தொடர்பாடலும் கல்வியின் அத்தியாவசியமான கூறுகளாக இருத்தல் வேண்டும்.

பண்புத்தரமுள்ள கல்விச் செயன்முறையொன்றை முன்னெடுத்துச்செல்வதற்கு அதன் தொழில்சார் விருத்தியையும் கலைத்திட்ட போதனையியலையும் (Curriculum Pedagogy) தொடர்ந்து நிகழ்நிலைப்படுத்தலும் உட்கட்டமைப்பு வசதிகளை முன்னெடுத்துச்செல்லலும் விருத்தி செய்தலும், தர நியமங்களும் தராதர அங்கீகாரமும் (Standards and Accreditation), பணியாளர்தொகுதி முகாமை மற்றும் அரசியல் நோக்கு, சட்டவாக்கம், கொள்கைகளும் ஒழுங்குபடுத்தலும், மூலோபாயத் திட்டங்களை வகுத்தல், நிதியீட்டம், நிறுவனக் கட்டமைப்பு, தரப் பாதுகாப்பும் ஏற்புநிலையும் வகைகூறும்பாங்கும் முக்கியமானவையாகும்.

# செயற்பாடுகள்

## முன்சிறுவர் பராய அபிவிருத்திக் கல்வி

முன்சிறுவர் பராய அபிவிருத்தி என்பது பொது நியமம்பெற்ற ஒரு சட்டகத்தினுள் அடங்கிய ஒரு கல்வி மட்டுமன்றி, பிள்ளைக்கு குடும்ப சூழலிலிருந்து சமூக வாழ்வில் பிரவேசிப்பதற்குத் தேவைப்படும் அடிப்படை வசதிகளை வழங்குகின்ற ஒரு செயன்முறையாகும். அதற்கான வாய்ப்பை வழங்குவதும் அக்காலகட்டத்தில் சமூக பருப்பொருளொன்றாக பிள்ளையைப் பாதுகாத்து வளர்ப்பதும் ஒரு சமூகப் பொறுப்பாகும்.

- 3 வயது முதல் 5 வயது வரையான பிள்ளைகள் அனைவருக்கும் முறைசார் முன் சிறுவர் பராய அபிவிருத்திக் கல்வியொன்றை இலவசமாக வழங்குதல்.
- பிள்ளைகள் அனைவருக்கும் தமது வீட்டிலிருந்து அல்லது தமது பெற்றோர் தொழில்புரியும் இடத்திலிருந்து 02 கி.மீ. தொலைவினுள் அமைந்துள்ள பாலர் பாடசாலையொன்றில் கல்வி பயில்வதற்கு வாய்ப்பான விதத்தில், ஏற்றுக்கொள்ளப்பட்ட பொது நியமங்களுக்கமைய தயார்செய்யப்பட்ட முன்சிறுவர் பராய அபிவிருத்தி நிலையங்களின் தொகுதியொன்றை ஏற்படுத்துதல்.
- முறைசாரா பாடவிதானங்களுக்கும் செயற்பாடுகளுக்கும் பதிலாக பிள்ளைகளின் உடலியல் மற்றும் உளவியல்சார் நிலைமைகளுக்கு ஏற்றவாறும் சமூக வாழ்வில் பிரவேசிப்பதற்குத் தேவைப்படும் நற்பழக்கவழக்கங்களையும் உளப்பாங்குகளையும் ஒழுக்கநெறிகளையும் விருத்திசெய்யும் செயற்பாடுகளை உள்ளடக்குகின்றவாறும் நிகழ்ச்சித்திட்டமொன்றை அறிமுகப்படுத்தல்.

இதன்போது தன்னம்பிக்கையுடன் நாளாந்த வாழ்க்கைக்கும் சுற்றுச்சூழலுக்கும் இயைபான விதத்தில் பணியாற்றுவதற்கான ஆற்றல்களை விருத்திசெய்வதன் மீதும் கவனம் செலுத்துதல் வேண்டும்.

- முன்சிறுவர் பராய அபிவிருத்தி நிலையங்களை ஒழுங்குபடுத்துவதற்கான தேசிய முன்சிறுவர் பராய அபிவிருத்தி அதிகாரசபை.

- முன்சிறுவர் பராய அபிவிருத்தி நிலைய முதுகணர்களுக்கும் ஆசிரிய ஆசிரியைகளுக்கும் தேவையான ஆகக்குறைந்த கல்வித் தகைமைகளும் கட்டாய தொழிற்பயிற்சியும்.

- முன்சிறுவர் பராய அபிவிருத்திச் சேவைக்கு தொழில்சார் ரீதியில் வரவேற்பொன்று கிடைக்கக்கூடிய விதத்திலான ஆகக்குறைந்த சம்பளம்.

- முன்சிறுவர் பராய அபிவிருத்தி தொழில்வாண்மையினருக்கு பயிற்சியளிப்பதற்கான முறைசார் தேசிய நிறுவகமொன்றும் நாடுதழுவியளவில் அதனோடிணைக்கப்பட்ட கிளை வலையமைப்பொன்றும்.

- தமது தாய்மொழிக்கு மேலதிகமாக, பேச்சுத் தொடர்பாடலுக்குரிய மொழிகளாக மற்றைய தேசிய மொழிகளையும் ஆங்கில மொழியையும் பயிற்றுவித்தல்.

- பல மத, பல இன, பல கலாசார பன்முகத்தன்மைக்கு ஏற்றவாறு அத்தகைய பன்முகத்தன்மைக்கு மதிப்பளித்துச் செயற்படுவதற்கு பிள்ளையைப் பழக்குவிக்கும் நிகழ்ச்சித்திட்டங்கள்.

- பிள்ளைகளின் சுகாதார மற்றும் போசாக்கு நிலைமைகளை விருத்திசெய்வதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள்.

தற்போதுள்ள பாலர் பாடசாலைகள் அனைத்திற்கும் தேவைப்படும் வசதிகளை ஏற்படுத்திக்கொடுத்து மேற்கூறிய முன்சிறுவர் பராய அபிவிருத்தி நிலையத் தொகுதியுடன் இணைத்துவிட நடவடிக்கை எடுக்கப்படும். அதேபோல், அவற்றில் பணிபுரியும் அடிப்படைத் தகைமைகளைக் கொண்டவர்களுக்கு பாலர் பாடசாலைகள் பற்றிய தொழிற்பயிற்சியை வழங்கி, தேசிய பாலர் பாடசாலை தொழிற்சேவையில் இணைக்கப்படுவர்.

## ஆரம்பக் கல்வியும் உயர்நிலைக் கல்வியும்

பிள்ளைகள் அனைவருக்கும் 13 ஆண்டு கால கல்விசார் அல்லது தொழில்சார் பாடசாலைக் கல்வி கட்டாயமாக்கப்படுகின்றவாறு பாடசாலை முறைமை மீள் கட்டமைக்கப்படும். அதேபோல் மத, இன அல்லது பால்நிலை அடிப்படையில் பாடசாலைகள் பிரிக்கப்படாமல் இருப்பதை உறுதிப்படுத்துதல் வேண்டும். பிள்ளைகள் அனைவருக்கும் வசதியான ஒரு பாடசாலைக்கு போட்டியின்றி சேர்வதற்கு வாய்ப்பான விதத்தில் ஆரம்பப் பாடசாலை முறைமையொன்றும் 02 அல்லது 03 ஆரம்பப் பாடசாலைகள் உள்ளடங்குகின்றவாறு கனிஷ்ட உயர்நிலைப் பாடசாலை முறைமையொன்றும் சிரேஷ்ட உயர்நிலைப் பாடசாலை முறைமையொன்றும் உருவாக்கப்படும். சிரேஷ்ட உயர்நிலைப் பாடசாலை முறைமையில் கல்விசார் மற்றும் தொழில்சார் கல்வி அமுல்படுத்தப்படும். அதேபோல் தேவைக்கேற்ப கல்விசார் அல்லது தொழில்சார் கல்வியின் ஒவ்வொரு துறைக்கும் சிறப்பானதாக அமைந்த பாடசாலைகள் காணப்படலாம்.

அனைத்து பாடசாலை வகுதிகளும் பின்வருமாறு வகைப்படுத்தப்படும்:

- 1 ஆம் ஆண்டு முதல் 5 ஆம் ஆண்டு வரையான ஆரம்பப் பாடசாலைகள்.
- 6 ஆம் ஆண்டு முதல் 9 ஆம் ஆண்டு வரையான கனிஷ்ட உயர்நிலைப் பாடசாலைகள்.
- 10 ஆம் ஆண்டு முதல் 13 ஆம் ஆண்டு வரையான சிரேஷ்ட உயர்நிலைப் பாடசாலைகள்.

குறித்த பாடசாலை முறைமையில் -

- ஒவ்வொரு பிள்ளைக்கும் தனது வீட்டிலிருந்து அல்லது பெற்றோர் தொழில்புரியும் இடத்திலிருந்து 04 கி.மீ. தொலைவினுள் அமைந்திருக்கும் ஒரு பாடசாலையில் கல்வி பயில்வதற்கு ஏற்ற விதத்தில், பொது அங்கீகாரம்பெற்ற தராதரங்களுக்கு ஏற்ற வகையில் அமைக்கப்பட்ட ஓர் அரசாங்கப் பாடசாலை முறைமை.
- உள்ளூராட்சி மன்றங்களினால் பராமரிக்கப்பட்டுவருகின்ற தேவைப்பாடுகளுக்கும் பொதுவாக அங்கீகரிக்கப்பட்ட தராதரங்களுக்கும் ஏற்ற வகையிலான ஒரு பாடசாலைப் போக்குவரத்து முறைமை.
- ஒவ்வொரு பாடசாலையிலும் காணப்பட வேண்டிய ஆகக்குறைந்த வசதிகளை நிர்ணயம்செய்து ஒரு சுற்றறிக்கை.
- வசதிகளைப் பராமரிப்பதற்குத் தேவையான பௌதிக வளங்களையும் மனித வளங்களையும் வழங்குவது அரசாங்கத்தின் பொறுப்பு.
- ஒரு வகுப்பறையினுள் இருக்க வேண்டிய ஆகக்கூடிய மாணாக்கரின் எண்ணிக்கையும் இருக்க வேண்டிய ஆகக்குறைந்த வசதிகளும் பற்றிய ஒரு சுற்றறிக்கை.
- சிறுவர் பராயத்திற்கு இடைஞ்சலாக அமையாத வகையில் அந்தந்த வயதுப் பிரிவுகளுக்கு ஏற்ற விதத்திலும் தேவையற்ற சுமையொன்று சுமத்தப்படாதவாறும் பாடவிதானம் மீளுருவாக்கப்படல்.

06 ஆம் ஆண்டு முதல் 09 ஆம் ஆண்டு வரையான நான்காண்டு கால கனிஷ்ட உயர்நிலைக் கல்விப் பராயத்தினுள் நற்பிரஜை ஒருவரை உருவாக்கத் தேவையான கல்வியறிவு, விஞ்ஞான மற்றும் கணித, சமூக, தொழில்நுட்ப மற்றும் அழகியல், மொழியறிவு உள்ளிட்ட பொதுவான கல்வியொன்றை வழங்குவதுடன், சிரேஷ்ட உயர்நிலைக் கல்வி தேவைப்படும் பின்னணியொன்றை உருவாக்கும் கல்வியொன்றை வழங்குவது கனிஷ்ட உயர்நிலைக் கல்வியின் நோக்கமாகும். அந்நோக்கத்திற்குப் பொருத்தமான இணைப் பாடவிதானமொன்றைத் தயாரித்து அமுல்படுத்துதல் வேண்டும்.

- இரண்டு அல்லது மூன்று ஆரம்பப் பாடசாலைகளை உள்ளடக்கும் வகையிலான கனிஷ்ட உயர்நிலைப் பாடசாலை முறைமை.
- மாணாக்கரின் வயதுப் பிரிவுகள் மற்றும் அதற்குரிய அறிவு நுட்பம்சார் நிலைமைகள் விருத்தியடையும் விதத்திலான புதிய பாடவிதானங்கள்.
- பிள்ளைகளின் இயல்பூக்கங்கள், விசேட திறமைகள் என்பவற்றின் அடிப்படையில் உயர்கல்வியை அல்லது தொழிற்கல்வியைத் தெரிவுசெய்யக்கூடிய விதத்தில் 06 ஆம் ஆண்டு முதல் 09 ஆம் ஆண்டு வரை கற்பிக்கப்பட வேண்டிய பிரதான பாடங்கள்.
- பிள்ளைகளின் சமூக ஒழுக்க விழுமிங்களையும் பிரஜைகளின் பொறுப்புக்களையும் விருத்திசெய்வதை உறுதிப்படுத்துகின்ற மேலதிக பாடங்களும் செயற்பாடுகளும்.
- ஒவ்வொரு பிள்ளைக்கும் தனது மதம் பற்றியும் இலங்கையின் பிரதான மதங்கள் பற்றியும் ஒப்பீட்டுக் கல்வி கிடைக்கக்கூடிய விதத்திலான ஒரு மத பாடம்.
- அந்தந்த வயதுப் பிரிவுகளுக்கு ஏற்ற விதத்தில் பாலியல் மற்றும் இனப்பெருக்கச் சுகாதாரம் பற்றிய கல்வி.

- சுற்றாடல் நட்புறவையும் இயற்கையின் இருப்பையும் ஏற்றுக்கொள்ளும் உளப்பாங்குகளை விருத்திசெய்யக்கூடிய இணைப் பாடவிதான நிகழ்ச்சித்திட்டங்கள்.

சமூகப் பிரஜையொருவராக இருப்பதற்குத் தேவைப்படும் அடிப்படை அறிவையும் உள்ளாற்றலையும் பெற்றுக்கொள்வது சிரேஷ்ட உயர்நிலைக் கல்வியின் நோக்கமாகும். அதேபோல் மூன்றாம்நிலைக் கல்விக்கு அடிப்படையாக அமையும் கல்விசார் அல்லது தொழில்சார் அறிவும் பிரயோகங்களும் குறித்து கவனம் செலுத்தி பாடத்துறைகளும் பாடவிதானங்களும் தயாரிக்கப்பட வேண்டும். அதன் காரணமாக, உயர்நிலைக் கல்வியைத் தொடர்ந்து கல்விசார் அல்லது தொழில்சார் உயர்கல்வியின்பால் ஈடுபாடுகொள்ளும் மாணாக்கர்களுக்குத் தேவைப்படுகின்ற அடிப்படை அறிவும் நேரடியாகவே தொழில்களில் ஈடுபாடுகொள்ளும் மாணாக்கர்களுக்குத் தேவைப்படுகின்ற அடிப்படை அறிவின் அடிப்படையும் இக்காலகட்டத்தில் தயார்செய்யப்பட வேண்டும்.

09 ஆம் ஆண்டில் நடாத்தப்படும் தேசிய மட்ட பரீட்சையைத் தொடர்ந்து மாணாக்கர்கள் தமது திறமையும் விருப்பும் அடிப்படையில் கல்விசார் (விஞ்ஞானம், கலை, வணிகம் போன்ற பாடத்துறைகள்) அல்லது தொழில்சார் பாடத்துறையை (நேரடியாகவே யாதேனுமொரு தொழிற்றுறைக்குரிய) தெரிவுசெய்வர். சிரேஷ்ட உயர்நிலைக் கல்வியின் முதல் இரண்டாண்டு காலத்துள் தனது சுயவிருப்பின் அடிப்படையில் ஒரு பாடத்துறையிலிருந்து மற்றுமொரு பாடத்துறைக்கு மாறக்கூடியவாறு பாடவிதானங்களும் அவற்றின் அடிப்படைகளும் அமுல்படுத்தப்பட வேண்டும்.

- 9 ஆம் ஆண்டு இறுதியில் தெரிவுசெய்த பிரதான பாடங்களுக்கு தேசிய மட்டத்திலான ஒரு பரீட்சை.
- அந்தந்த மாணாக்கர்களின் உள்ளார்ந்த ஆற்றல்களுக்கும் விருப்பார்வத்திற்கும் ஏற்ற விதத்தில் பாடத்துறைகளைத் தெரிவுசெய்யும் வாய்ப்பு.
- கல்விசார் மற்றும் தொழில்சார் அடிப்படையை வகுக்கும் அந்தந்த பாடத்துறைகளுக்கு சிறப்பாயமைந்த பாடங்களும் பொதுவான திறன்கள் விருத்தியடையும் தொழில்நுட்பக் கல்வி, வாழ்க்கைத் திறன்கள், இலக்கிய நயம், அடிப்படைச் சட்டம் தொடர்பான புதிய பாடங்கள்.
- 10 – 13 ஆம் ஆண்டு வரை செல்லும்போது படிமுறையாக குறித்த பாடத்துறைக்குரிய அறிவின் ஆழத்தை அதிகரிக்கின்றவாறான பாடவிதானங்கள்.
- 11 ஆம் ஆண்டு நிறைவில் தனது விருப்பார்வத்தின் அடிப்படையில் ஒரு பாடத்துறையிலிருந்து மற்றுமொரு பாடத்துறைக்கு மாறக்கூடிய வகையிலான நெகிழ்வுப் பாங்கான பாடவிதானங்கள்.
- சூட்டிகையான வகுப்பறைகள், இணையம் போன்ற நவீன நுட்பமுறைகளின் மூலம் தகவல் தொழில்நுட்பம் மற்றும் ‘ரொபோரிக்ஸ்’ தொழில்நுட்பத்தின் அடிப்படைப் பிரயோகங்கள் பற்றிய அறிவை வழங்குவதற்கான ஒரு வேலைத்திட்டம்.
- இலங்கையின் மத, இன, கலாசார பன்முகத்தன்மைக்கு ஏற்ற விதத்தில் குறித்த பன்முகத்தன்மைக்கு மதிப்பளித்துச் செயலாற்றுவதற்கு பிள்ளைகளைப் பழக்குவிக்கும் ஒரு கற்றல் சூழல்.
- வாழ்க்கைத் திறன்கள் மற்றும் சமுதாய சார்புக் கோட்பாட்டுக்குத் தேவையான அறிவையும் பிரயோக ரீதியான திறன்களையும் விருத்திசெய்வதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள்.
- இளமைப் பராயத்திற்கு ஏற்ற விதத்தில் பாலியல் மற்றும் இனப்பெருக்கச் சுகாதாரம் பற்றிய கல்வி.
- பாடசாலை வாழ்விலிருந்து வயதுவந்தவர்களின் உலகு வரையான நிலைமாறு காலத்திற்கு முகங்கொடுப்பதற்குத் தேவையான அறிவையும் உளப்பாங்குகளையும் திறன்களையும் வழங்கக்கூடிய ஒரு கற்றல் சூழல்.

- பொறுப்புக்களை வகித்தல், தலைமைத்துவம், அனுபவ முதிர்வு, சமூக உறவுகளைப் பேணுதல் என்பவற்றுடன் பிரச்சினைகளுக்கு முகங்கொடுப்பதற்கும் தேவைப்படுகின்றபோது சமூக ஒழுக்கநெறிக் கோவைகளுக்குச் செல்வதற்கும் தேவைப்படும் அறிவுசார் நிகழ்ச்சித்திட்டங்கள்.

## பரீட்சைகளும் மதிப்பீடுகளும்

### பாடசாலை அளவிலான பரீட்சைகள்

- 1 ஆம் ஆண்டு முதல் 5 ஆம் ஆண்டு வரையான தொல்லைதரும் பரீட்சைகளை இல்லாதொழித்தல்.
- ஒவ்வொரு பிள்ளையின் திறமைகளின் மட்டத்தை வெவ்வேறாக அடையாளம் காணலும் (feedback) அதற்கேற்றவாறான விசேட நடவடிக்கைகளும்.
- 6 ஆம் ஆண்டு முதல் 9 ஆம் ஆண்டு வரை நடாத்தப்படுகின்ற பரீட்சைகளின் அடிப்படையில் 1, 2, 3 என மாணவர்களை தரவரிசைப்படுத்தும் (Rank) முறையை இல்லாதொழித்தல்.
- பிள்ளைகளின் தனிப்பட்ட திறமைகளை அதிசிறப்பான நிலையில் தொடர்ந்தும் பேணிச் செல்வதற்குத் தேவையான மதிப்பீட்டு முறைகள்.
- ஒவ்வோர் ஆண்டு இறுதியிலும் புலனுணர்வாற்றலின் (Cognititive) அடிப்படையில் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டிய பிள்ளைகளை அடையாளம் கண்டு, அவர்களுக்குப் பொருத்தமான விதத்தில் நிகழ்ச்சித்திட்டங்களை வகுத்தல்.

### தேசிய அளவிலான பரீட்சைகள்

- தொல்லை தரும் 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை முறையை இல்லாதொழித்தல்.
- அனைத்து தொழில்நுட்ப மற்றும் பிற பௌதிக வசதிகளுடன் கூடிய தேசிய பரீட்சை மதிப்பீட்டு நிலைய முறைமையொன்றை விருத்திசெய்தல்.
- க.பொ.த. (சா/தர), க.பொ.த. (உ/தர) பரீட்சை முடிவுகளை ஒரு மாத காலத்துள் வெளியிடுதல்.
- அந்தந்தப் பாடங்களைக் கற்பிக்கின்ற ஆசிரிய ஆசிரியைகளுக்கு மதிப்பீட்டுச் செயன்முறை தொடர்பான பயிற்சியளித்தல்.
- மதிப்பீடுச் செயற்பாட்டில் சம்பந்தப்பட்ட ஆசிரிய ஆசிரியைகள் பங்கேற்பதைக் கட்டாயப்படுத்தல்.
- விளைதிறனும் சரியாகவும் மதிப்பீட்டுச் செயன்முறையில் ஈடுபடும் பரீட்சகர்களை தரவரிசைப்படுத்தி மேலதிக ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளை வழங்குதல்.

### தேகாரோக்கியம்

- பிள்ளைகளின் உடல் மற்றும் உள சமநிலைகளைப் பேணிச் செல்வதற்குத் தேவையான நிகழ்ச்சித்திட்டங்கள்.
- அனைத்துப் பாடசாலைகளுக்கும் குடிநீர் மற்றும் துப்புரவான கழிப்பறை வசதிகள்.
- விளையாட்டுத்துறையை மேம்படுத்த விளையாட்டு மைதானம், குளியலறை போன்ற உட்கட்டமைப்பு வசதிகள் பாடசாலைகள்தோறும் உருவாக்கப்படும். அதற்கேற்ற வகையில் பாடசாலைகளின் கால அட்டவணைகள் உருவாக்கப்படும்.

- உயர்நிலைப் பாடசாலைகளில் சமூக நல்வாழ்வை விருத்திசெய்தலும் அது தொடர்பான பிரச்சினைகள் குறித்து நடவடிக்கை எடுத்தலும்.
- தொழில்சார் திறனுடன்கூடிய, மனித வளம் மற்றும் தொழில்நுட்ப பாவனையுடன்கூடிய அலகுகளை நிறுவுதல். போதைப்பொருள் பாவனை போன்ற சிக்கல்களைத் தடுப்பதற்கு விசேடமாக நடவடிக்கை எடுத்தல்.
- விசேடமாக கல்வி நிறுவனங்களின் சுற்றயலில் போதைப்பொருள் விற்பனை, விநியோகம் என்பவற்றைத் தடுப்பதற்கான ஒன்றிணைந்த ஒரு வேலைத்திட்டத்தை அமுல்படுத்தல்.

## பாடசாலைக் கல்வி நிர்வாகமும் மனித வள மேம்பாடும்

- கல்வித்துறை ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள், இடமாற்றங்கள் மற்றும் பிற தொழில்முறை நடவடிக்கைகளுக்கான சுயாதீன கல்வி நிர்வாக சேவை ஆணைக்குழுவொன்றை நியமித்தல்.

- பாடசாலைக் கல்வி நிறுவனங்களில் ஏற்படும் அனைத்து பதவி வெற்றிடங்களையும் 02 மாத காலத்துள் நிரப்புதல்.

- கல்வி விடயங்கள் அனைத்தையும் ஒரே அமைச்சின் கீழ் கொண்டுவருதல்.

- ஆசிரியத் தொழிலில் இணையும் அனைவருக்கும் ஒரு பட்டம்.

- தேவையான அனைத்து மனித மற்றும் பௌதிக வளங்களையும் வழங்கி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளையும் கல்வியியற் கல்லூரிகளையும் பட்டமளிப்பு நிறுவகங்களாக தரமுயர்த்துதல்.

- பண்புத்தரமான கல்விச் செயன்முறைக்கு ஆசிரியத் தொழிலை இலங்கையில் அதிக ஊதியம் பெறும் முதல் தரமான 10 தொழில்களில் ஒன்றாக மாற்றுதல்.

- ஆசிரியத் தொழிலில் பிரவேசிக்க முன்னர் குறைந்தபட்சம் ஓராண்டு கால தொழில்சார் பயிற்சியளித்தல்.

- பாடவிதான மாற்றங்களும் துறையின் புதிய போக்குகளும் குறித்து ஒவ்வொரு மூன்று ஆண்டுகளுக்கும் ஒருமுறை கட்டாயமாக்கப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்.

- கல்வி ஆராய்ச்சிகளும் செயல்நிறைவேற்றப் பகுப்பாய்வுகளில் ஈடுபடுவதற்குத் தேவையான வசதிகளை வழங்குதலும் அத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடுவோருக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளை வழங்குதலும்.

- ஒவ்வொரு நான்காண்டுகளுக்கும் ஒருமுறை பாடவிதானங்களை நிகழ்நிலைப்படுத்தல்.

- பாடசாலை முறைமையினுள் அனைத்துச் சமூகங்களும் எதிர்நோக்கும் பாலியல் அல்லது பிற துன்புறுத்தல்களை ஒழித்துக்கட்டுவதற்கான வலுவான ஒரு கட்டமைப்பை உருவாக்குதல்.

- பாடவிதான விருத்தி, பாடநூலாக்கம், மதிப்பீட்டுச் செயன்முறை என்பவற்றை ஒன்றுடனொன்று தொடர்புபடுத்தி முன்னெடுத்துச்செல்வதற்குத் ஏற்ற வகையிலான திறன்கொண்ட ஒரு புதிய நிறுவனக் கட்டமைப்பு.

- பிரிவேனாக்கள் மற்றும் பிற மதம்சார் கல்வி நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துவதற்குத் தேவையான வசதிகளை வழங்குவதற்கு ஐந்தாண்டுத் திட்டம்.

## மூன்றாம்நிலைக் கல்வி (தொழிற்கல்வி)

தொழிற்றுறைகளுக்கான சிறப்புப் பயிற்சி, அறிவு உற்பத்தி, விநியோகம், அறிவைக் கையகப்படுத்தல் என்ற கூறுகள் மூன்றாம்நிலைக் கல்வி என்பதில் அடங்கும். தொழிற்றுறைகளுக்கான சிறப்புப் பயிற்சி என்பதன் கீழ் சிறப்புப் பயிற்சி உள்ளடங்கும் எந்தவொரு தொழிற்றுறையும் (உதாரணமாக: மருத்துவம், பொறியியல், சட்டம், ஆசிரியத் தொழில், சுற்றுலா சேவைகள், நிதியியற் சேவைகள், கலை மற்றும் கலாசாரம்) அடங்கும். சமூக ரீதியாக தேவைப்படும் எந்தவொரு புத்தறிவையும் உற்பத்திசெய்தல் அறிவுற்பத்தி என்பதனால் கருதப்படும். சமூகத்தில் அறிவுரீதியாக தலைமைத்துவம் வகிக்கக்கூடியவர்களை உருவாக்குவதும் அறிவுற்பத்திக்குத் தேவையானவர்களை உருவாக்குவதும் அறிவைக் கையகப்படுத்தல் என்பதில் அடங்கும்.

புத்தறிவு உற்பத்தி, சமூகத்தின் மத்தியில் அறிவுசார் தலைமைத்துவம் வகிக்கக் கூடியவர்களை உருவாக்குதல், அறிவுற்பத்திக்குத் தேவையானவர்களை உருவாக்குதல் என்ற மூன்று கூறுகளும் பல்கலைக்கழகத்தினுள் கட்டமாயமாகவே காணப்பட வேண்டும். இம்மூன்று கூறுகளும் முழுதளாவிய வகையில் உள்ளடங்கும் நிறுவனங்களே பல்கலைக்கழகம் என்பதால் கருதப்படும்.

### செயற்பாடுகள்

- முதலாம் ஆண்டில் நுழைபவர்களில் குறைந்தபட்சம் 50% சதவீதமானவர்களை கல்விசார், தொழில்சார் அல்லது தொழில்நுட்பம்சார் உயர்கல்வியின் ஊடாக பட்டம்பெற்றவர்களாக உருவாக்குதல்.

- அந்தந்த தொழிற்றுறைகளில் அடங்கும் அனைத்துச் சேவைகளுக்கும் ஒரு பட்டத்தை வழங்குதல்.

- க.பொ.த (உ/த) பெறுபேறுகள் வெளியாகி 3 மாதங்களுக்குள் பல்கலைக்கழக அனுமதி இடம்பெறும்.

- ஒரு பூர்வாங்க நடவடிக்கையாக பல்கலைக்கழக அனுமதிக்காக தற்போது அமுலிலுள்ள மாவட்ட ஒதுக்கீட்டு முறை திருத்தப்பட்டு, வயக் கல்விப் பிரிவுகள் போன்ற மிகச் சிறிய கல்வி பிரிவுகளின் அடிப்படையிலான ஒதுக்கீட்டு முறையை ஏற்படுத்தல்.

- அந்தந்த பாடநெறியின் ஆகக் குறைந்த தகைமைகளை அடையாளம் கண்டு அத்தகைய தகைமைகளைப் பூர்த்தி செய்யும் அனைவருக்கும் குறித்த பாடநெறியைத் தொடர்வதற்கு வாய்ப்பளித்தல்.

- மாற்றுத்திறனாளிகளுக்கு எவ்விதத்திலும் பாரபட்சம் காட்டாமல் மூன்றாம்நிலைக் கல்வியில் பிரவேசிப்பதற்கான வாய்ப்புகள் ஏற்படுத்தப்படும்.

- மூன்றாம்நிலைக் கல்வியை ஒழுங்குபடுத்தும் ஓர் ஆணைக்குழுவை அமைத்தல்.

- விடுதிகள், விரிவுரை மண்டபங்கள், ஆய்வுகூடங்கள், சுகாதார, விளையாட்டு, இலக்கிய, பொது மாணவர் இயக்க, நூலக, இணைய அணுகு மையங்களும் அனைத்து சமூகங்களுக்கும் பயன்படுத்தக்கூடிய தராதரங்களுக்கு அமைவான உணவுச்சாலைகளும்.

- மூன்றாம்நிலைக் கல்வி நிறுவகங்களில் இடம்பெறக்கூடிய இம்சைகளைத் தடுப்பதற்கான கூட்டான ஒரு கட்டமைப்பு.

- மூன்றாம்நிலைக் கல்வி நிறுவகங்களில் கல்விச் சுதந்திரத்தை உறுதிப்படுத்தல்.

- இன்றைய பல்கலைக்கழகங்கள் சட்டத்தை உத்தேச கொள்கைகள், வேலைத் திட்டங்களுக்கு ஏற்ற விதத்தில் நிகழ்நிலைப்படுத்தல்.

- மூன்றாம்நிலைக் கல்வி நிறுவகங்களில் கல்விச் சுதந்திரத்தை உறுதிப்படுத்தல்.

- கல்வி நிர்வாக நிறுவகங்களில் சுதந்திரத்தையும் ஜனநாயகத்தையும் உறுதிப்படுத்தல்.

- கல்விசார், கல்விசாரா ஆட்சேர்ப்பு நடைமுறைகளை அரசியல் கலப்பற்றதாக்குதல்.

- நிர்வாக மற்றும் பிற தொழில்சார் பிரச்சினைகள் குறித்து கிடைக்கப்பெறும் முறைப்பாடுகள் தொடர்பாக விசாரணை செய்வதற்கான முறைசார், சுயாதீனமான ஒரு கட்டமைப்பை ஒவ்வொரு மூன்றாம்நிலைக் கல்வி நிறுவகத்திலும் நிறுவுதல்.

- தேசிய மற்றும் பிராந்தியத் தேவைகளை கருத்திற்கொண்டு மூன்றாம்நிலைக் கல்வி நிறுவகங்களில் புதிய பட்டக் கற்கைநெறிகளையும் ஆராய்ச்சிகளையும் ஆரம்பித்தல்.

- அனைத்து உயர்கல்வி நிறுவகங்களிலும் மாணாக்கர்களுக்கு சர்வதேச பல்கலைக்கழகங்களில் பட்டப்பின்படிப்பு கல்வியைத் தொடர்வதற்கு ஆங்கிலமொழி உள்ளிட்ட ஏனைய அடிப்படைத் தகைமைகளைப் பெற்றுக்கொள்வதற்கான விசேட அலகுகளை நிறுவுதல்.

- சர்வதேச பல்கலைக்கழகங்களில் பட்டப்பின்படிப்பு கல்விக்கான வாய்ப்புகளைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான தொடர்புகளை விஸ்தரித்தல்.

- அந்தந்த பாடநெறியின் ஆகக்குறைந்த தகைமைகளை அடையாளம் கண்டு அத்தகைய தகைமைகளைப் பூர்த்திசெய்யும் அனைவருக்கும் குறித்த பாடநெறியைத் தொடர்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்தல்.

- தொழில்சார் பாடநெறிகளுக்கு பக்க உள்நுழைவை (Lateral Entries) படிமுறையாக ஏற்படுத்தல்.

- உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கைத்தொழில்களுடன் ஆராய்ச்சிகளை முன்னெடுப்பதற்காக விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பத் துறைகளில் பட்டப் பின்படிப்புக்கான ஒரு பல்கலைக்கழகக் கட்டமைப்பை ஏற்படுத்தல்.

- பட்டப் பின்படிப்புக் கற்கைகளையும் ஆராய்ச்சிகளையும் பலப்படுத்துவதற்கு தேவையான நிதி மற்றும் பௌதிக வளங்களை வழங்குதல்.

- பட்டத் தேர்வில் சித்தியடைந்து 02 மாத காலத்துள் ஒரு தொழிலையோ ஓராண்டு கால பயிற்சியையோ வழங்குவதற்கு ஒவ்வொரு பல்கலைக்கழகத்திலும் விசேட அலகுளை நிறுவுதல்.

## வயதுவந்தோருக்கான கல்வியும் தொலைக்கல்வியும்

முன்னேறிய சமூக, அரசியல், கலாசார புரிதல்களுடன்கூடியதாகவும் ஒழுக்கநெறிசார், பொறுப்புள்ள வகையிலும் சமுதாய வாழ்வைப் போசித்து நற்பிரஜை ஒருவரை உருவாக்கத் தேவைப்படக்கூடிய முறைசார்ந்த, சமுதாயத்தை மையமாகக்கொண்ட ஒரு கல்வியே வயதுவந்தோருக்கான கல்வி என்பதன் மூலம் கருதப்படுகிறது. பல்வேறு காரணங்களின் பேரில் முறைசார் கல்வி முறையின்மூலம் பல்வேறு சந்தர்ப்பங்களில் விலகிச் செல்ல நேரிட்ட ஒவ்வொருவரையும் முழுமையான ஒரு பிரஜையாக மாற்றுவதற்குத் தேவையான சமூக, அரசியல் மற்றும் கலாசார கல்வியை வழங்குவது குறித்து இங்கு விசேட கவனம் செலுத்தப்படும்.

பல்வேறு தொழிற்றுறைகளில் ஈடுபட்டுள்ளவர்களுக்கும் பல்வேறு சந்தர்ப்பங்களில் மூன்றாம்நிலைக் கல்வியைப் பூர்த்திசெய்வதற்கு முன்னர் முறைசார் கல்வியை விட்டு விலக நேரிட்டவர்களுக்கும் மூன்றாம்நிலைக் கல்வியை வழங்குவதென்பதே இதன்மூலம் கருதப்படுகிறது. இதனடிப்படையில் தமது சேவை நிலைமைகளை அல்லது புவியியல் காரணிகளை அடிப்படையாகக்கொண்டு தடங்கல்கள் ஏற்படாதவாறு உயர்கல்வியில் பிரவேசிக்கக்கூடிய வாய்ப்புகள் விஸ்தரிக்கப்படும்.

- பிரதேச செயலக அதிகாரப் பிரதேசம் தோறும் சமுதாயஞ்சார் கல்வி நிலையமொன்றை ஏற்படுத்தல்.
- ஒவ்வொரு பிரஜைக்கும் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளைக் கற்றுக்கொள்ளக்கூடியவாறான பாடநெறிகளை ஏற்படுத்திக்கொடுத்தல்.
- அடிப்படைச் சட்டம், தகவல் தொழில்நுட்பம் மற்றும் தொழில்நுட்பக் கருவிகள் தொடர்பான கல்வி நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்தல்.
- திறந்த மற்றும் தொலைக்கல்வி முறையை மூன்றாம்நிலை கல்வியின் ஒரு பகுதியாக ஏற்றங்கீகரித்தல்.
- பிராந்திய மற்றும் திறந்த கல்வித் துறையின் நோக்கத்தை அடைந்துகொள்வதற்கு தற்போதுள்ள நிறுவனக் கட்டமைப்புகளில் மாற்றத்தை ஏற்படுத்தல்.

உத்தேச கல்விக் கொள்கையை அமுல்படுத்துவதற்கான அரசியல் அதிகார பீடத்தின் தேவையும் அர்ப்பணிப்பும் இன்றியமையாதது என்பதுடன், அவ்வேலைத்திட்டத்தை அமுல்படுத்துவதற்குத் தேவைப்படும் நிர்வாகம்சார், கட்டமைப்புசார் மாற்றங்கள் பொருத்தமான விதத்தில் ஏற்படுத்தப்படல் வேண்டும்.

# தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்

அறிவுத்திறம் படைத்த ஓர் இலங்கையைக் கட்டியெழுப்புவதற்கான உயரிய மனித வளத்தை மிகச் சிறந்த தகவல் தொழில்நுட்பத் திறன்கள் நிரம்பிய ஒரு சமூகமாக மாற்றுவதும் உலகில் தகவல் தொழில்நுட்பத் தீர்வுகளை வழங்கும் முன்னோடியாக இலங்கையை மாற்றியமைப்பதும் அந்த இடைவெளியினூடாக தேசிய பொருளாதாரத்திற்கு முக்கிய பங்களிப்பொன்றை வழங்குவதும் ஏனைய துறைகளில் தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதற்கான வாய்ப்புகளை தொடர்ந்தேர்ச்சியாக உருவாக்குதலும் அதன் பயன்களை பொதுமக்களுக்கு கிடைக்கச்செய்தலும் இதன் நோக்கமாகும்.

உலகின் அனைத்து துறைகளிலும் பாரம்பரிய கருவிகளும் அவற்றின் பிரயோகங்களும் தொழில்நுட்பத்தை மையமாகக்கொண்ட சூட்டிகையான கருவிகளும் பிரயோகங்களும் மூலம் மீளுருவாக்கம்பெறும் நிலை துரிதமாக ஏற்பட்டு வருவதுடன் அதற்கு பாரியதொரு சந்தைக் கேள்வியும் நிலவுகிறது. உலகில் ICT பிரயோகங்களுக்கும் பயன்பாட்டுக்கும் செலவிடப்படும் பணத்தொகைகள் மிகத் துரிதமாக அதிகரித்துள்ளதுடன், திட்டமிட்ட வேலைத்திட்டமொன்றின் மூலம் இச்சந்தையில் பிரவேசிப்பதற்கான உள்ளார்ந்த ஆற்றல் இலங்கை வசமுள்ளது. நாடுகளின் தகவல் தொழில்நுட்ப உள்ளார்ந்த ஆற்றல்களை மதிப்பீடுசெய்யும் World Economic Forum அளவாய்வுகளின் அடிப்படையில் அரச தலையீடொன்றும் வேலைத்திட்டமும் இன்றிய நிலையிலும் இலங்கை 2014 ஆம் ஆண்டில் 63 ஆவது இடத்தை வகித்தது. இந்தியா, வியட்னாம் போன்ற ஆசிய பிராந்தியத்தின் ஏனைய நாடுகளும் எமது நாட்டை விட பின்தங்கியுள்ளன. உலகின் தலைசிறந்த மென்பொருள் பொறியியலாளர்களைக்கொண்ட நாடுகளின் வரிசையில் இலங்கை 43 ஆவது இடத்தை வகிப்பதுடன், Distributed System துறையில் இலங்கை முன்னணி வகிக்கின்றது. ICTA அறிக்கைகளுக்கு அமைய 2018 ஆம் ஆண்டாகும்போது இத்துறையில் 1 பில்லியன் டொலர் வெளிநாட்டு வருமானமொன்றை இலங்கை ஈட்டித் தந்துள்ளது.

உரிய வேலைத்திட்டமொன்றும் அரச தலையீடொன்றும் உடையதாக எமது வரையறுத்த இயற்கை வளங்களையும் மனித மூலதனத்தையும் பேண்தகு அடிப்படையில் ஈடுபடுத்திக்கொள்வதன் மூலம் இலங்கையை உலகின் முதல் தர தகவல் தொழில்நுட்ப உள்ளார்ந்த ஆற்றல் கொண்ட நாடாக மிளிரச் செய்ய முடியும்.

## நோக்கங்கள்

நான்காவது கைத்தொழில் புரட்சிக்கு ஏற்ற விதத்திலான உழைப்பாளர் சேனையையும் ஒழுங்கமைப்புகளையும் அரச கட்டமைப்பையும் தயார்படுத்துவதற்கு -

- தகவல் தொழில்நுட்ப புதிய பாடத்திட்டத்தையும் முறைமையியல்களையும் கல்வி முறைமையில் நிறுவுதல்.
- வர்த்தக நிலையங்கள், ஆராய்ச்சிகள், கருவிகள், நிலையங்கள், துரித இணையத் தொடர்பிணைப்புக்கள் சார்ந்த தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல்.
- உலகளாவிய வர்த்தகத் தொடர்புகளைக் கட்டியெழுப்புவதற்கு தகவல் தொழில்நுட்பப் பயன்பாடுகளை விஸ்தரிப்பதன் மூலம் அச்சமூகங்களுக்கு புதிய வியாபார வாய்ப்புகளை கண்டுபிடிப்பதற்கும் அவற்றை முன்னேற்றிக் கொள்வதற்கும் வாய்ப்பை உருவாக்குதல்.
- உலக வழங்கல் வலையமைப்பில் புத்தறிவும் திறன்களும் படைத்த உழைப்பாளர்களையும் புதிய இலக்குடன் உற்பத்திகளை விநியோகிக்கும் இலங்கையின் வர்த்தக சின்னத்தை நிலைநிறுத்துதல்.

- அடுத்த ஐந்தாண்டு காலத்துள் தகவல் தொழில்நுட்பத் துறையை முன்னணி வெளிநாட்டு வருமான மார்க்கமொன்றாக மாற்றியமைத்தல்.
- அபிவிருத்தித் திட்டங்களை வகுக்கும்போது தகவல் தொழில்நுட்பப் பிரயோகங்களை உட்படுத்துவதன் மூலம் சூட்டிகையான (smart) நகரங்களையும் கிராமங்களையும் உருவாக்குதல்.
- தகவல் மற்றும் தொடர்பாடல் துறையை பொருள்கோடல்செய்தலும் செயல்வலுவாக்கப்படுத்தலும் மீளாய்வுக்கான மேற்பார்வைப் பணிச் சட்டகமொன்றை உருவாக்குதலும்.

## செயற்பாடுகள்

- தொழில்நுட்பத்தின் புதிய போக்குகளை அடையாளம் காணவும், வாழ்க்கைத் தரத்தை அதிகரிக்கவும், பொருளாதார வளர்ச்சியை துரிதப்படுத்தவும் அடுத்த மூன்று தசாப்த காலத்திற்கான தொழில்நுட்ப வழிகாட்டல். (Technological Road Map)

- வினைத்திறன் வாய்ந்த அரசாங்க சேவை: தகவல் தொழில்நுட்பக் கொள்கையை பொருள் கோடல் செய்தலும் நிகழ்நிலைப்படுத்தலும், ஏனைய துறைகளிலான தகவல் தொழில்நுட்ப பிரயோகங்களை அமுலுப்படுத்தலும் மேற்பார்வைக்கான அரச கட்டமைப்பொன்றை உருவாக்குதலும்.

  - அமைச்சுக்களுக்கு இடையிலான குழு
  - தேசிய மென்பொருள் மன்றம்
  - தகவல் தொழில்நுட்ப வர்த்தக சபை
  - தகவல் தொழில்நுட்பத் தொழில்வாண்மையினர் சபை
  - திறந்த சபை
  - சட்ட மறுசீரமைப்பு மற்றும் மதியுரை ஆணைக்குழு
  - அனைத்து அரச மற்றும் அரச துணை நிறுவனங்களுக்கும் தலைமை தொழில்நுட்ப அதிகாரி (CTO) பதவி ஒன்றை ஏற்படுத்தல்.
  - அரசாங்க நிர்வாகத்திற்கான செயற்கை நுண்ணறிவுடன் இணைந்த தொழில்நுட்பங்களையும் Big data "IoT " Blockchain போன்ற தொழில்நுட்பங்களுக்கான செயற்கை நுண்ணறிவு மற்றும் ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி சூட்டிகையான அரசாங்க முறைமையையும் அதனோடிணைந்த முறைமைகளையும் வழங்குதல்.

  - தற்போதுள்ள அரச மென்பொருள்களின் தொகுதிகளை மையப்படுத்திய ஒரு கட்டமைப்போடு இணைத்துவிடல்.

  - தரவுகளை அடையாளம் காணல், அவற்றை ஆராய்தல், முடிவெடுப்பதை எளிதுபடுத்தல், சமூக நலனோம்பலுக்காக செயற்கை நுண்ணறிவை ஈடுபடுத்தல் என்பன நோக்கில் ஏனைய மென்பொருள்களுக்கான தொகுதியொன்றை உருவாக்குதல்.

  - பிறப்பு முதல் இறப்பு வரை அனைத்து சமுதாய விஞ்ஞானத் தரவுகளையும் சமூக-பொருளாதாரத் தரவுகளையும் ஒன்றிணைப்பதற்கு தேசிய அடையாள அட்டை இலக்கத்தைக் கையாளல்.

  - 5 ஆண்டு காலத்துள் 5G தொழில்நுட்பத்திற்குரிய உட்கட்டமைப்பு வசதிகளைப் பூர்த்தி செய்தல்.

- சிறுவயதிலிருந்தே குழந்தைக்கு தகவல் தொழில்நுட்பக் கல்வியை வழங்குவதுடன், முறைசாரா கல்வியைப் பயன்படுத்தி வயதுவந்தோருக்கும் இக்கல்வியை வழங்குதல்.

- நாட்டில் புத்தாக்கத்தை ஒரு புதுப்பாணியாக மாற்றுதல். புதிதாக ஒன்றைப் புனைதல், ஆக்கவுரிமை உரிமம் பெறல் என்பவற்றை ஒரு புதுப்பாணியாகவே மாற்றுவதற்கு புத்தாக்கங்களுக்கான போட்டிகளையும் பெறுமதியான பரிசில்களையும் வியாபார வாய்ப்புக்களையும் நிதியுதவிகளையும் வழங்குதல். அதேபோல் அந்தந்த காலத்திற்கு இசைவாக புத்தாக்கங்களை புதுப்பாணியொன்றாக மாற்றுவதற்கு எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் அரசாங்க தகவல் தொழில்நுட்பக் கட்டமைப்பினுள் இடம்பெறும்.

- பொது சேவைகளை வழங்கும்போது ஏற்படும் தேவையற்ற செலவினங்களைக் குறைப்பதற்கும் செயல்திறனை மேம்படுத்துவதற்கும் புதிய தொழில்நுட்பப் பிரயோகங்களைப் பயன்படுத்துவதற்கு தேவையான அரச கட்டமைப்புசார் மாற்றங்களை மேற்கொள்ளலும் அத்தகைய தீர்வுகளை இலங்கைக் கம்பனிகள் ஊடாக பெற்றுக்கொள்ளலும்.

- நாளாந்த வாழ்வை தகவல் தொழில்நுட்பத்தின் அடிப்படையில் ஒழுங்கமைத்தல். e-paying flatform மூலம் 5 ஆண்டுகளில் நாளாந்த கொடுக்கல் வாங்கல்களில் 25 ஐயேனும் கையாளும் ஆற்றலை வழங்குதல்.

- வீட்டு நடடிவக்கைகளை எளிதுபடுத்தும் தகவல் தொழில்நுட்ப உதிரிப்பாகங்களை அறிமுகப்படுத்தல்.

- சுதந்திர (freelance) தகவல் தொழில்நுட்பவியலாளர்களின் எண்ணிக்கையும் தரத்தையும் அதிகரித்தலும் அவர்களுக்கு தொழில்சார் பாதுகாப்பை ஏற்படுத்தலும்.

- உலகில் காணப்படும் வியாபாரத் தேவைப்பாடுகளுக்கு அமைய,
  செயற்கை நுண்ணறிவுசார் பிரயோகங்கள் - Machine learning
  முறைமைகளும் தரவுப் பகுப்பாய்வும் - Security
  மெய்நிகர் யதார்த்தம்/ முன்னேற்றிய யதார்த்தம்/ கலப்பு யதார்த்தம்/ விரிவாக்கிய யதார்த்தம் - XR/VR/ARvMR/XR)
  பல்வேறு விடயங்களில் இணையப் பயன்பாடு - IOT
  பாரியளவு தரவுகளைக் கையாளலும் பகுப்பாய்வும் - BigData
  ஆகிய துறைகளின் அறிவு முன்னேற்றப்படும்.

- Industrial 4.0 இன் கீழ் இலத்திரனியல் கழிவுப்பொருள்கள் அதிகரிப்பதன் காரணமாக அவற்றை மீள்சுழற்சி செய்யக்கூடிய தொகுதிகளை அனைத்து கைத்தொழில் பூங்காக்களிலும் நகரங்களிலும் நிறுவுதல்.

- இலங்கை உருவாக்கிய உலகின் முதல் 2 அனர்த்த முகாமைத்துவ முறைமைகளின் இலத்திரனியல் இணையப் பிரயோகங்களை (IOT) தானியங்கி தரவுப் பகுப்பாய்வாளர்கள் வரை நீடித்து உலகின் வினைத்திறனான அனர்த்த முகாமைத்துவ முறைமையாக மாற்றுதல்.

- உள்நாட்டு முதலீட்டாளர்களுக்கான உள்ளூரில் புதிய கூட்டுமுயற்சி ஆரம்பிப்பாளர்கள் மற்றும் புத்தாக்குநர்களை நேரில் சந்திக்கக்கூடிய மன்றங்களை Venture Capital Forums .

- இலங்கையை தகவல் தொழில்நுட்பத் துறையில் சிறந்த, நம்பகமான மற்றும் அதிநவீன தீர்வுகளை வழங்கும் நாடாக மாற்றுதல்.

- உலக வர்த்தக மற்றும் தொழில்நுட்ப மன்றங்களுடன் (World Trade and Technological Forums) சமூக வலைப்பின்னலுடனான தொடர்பை ஊக்குவித்தல் (World Trade and Technological Forum).

- "Silicon valley", Beijing","Shanghai"," Singapore", "Barcelona" போன்ற நகரங்களைத் தெரிவுசெய்து சர்வதேச மட்டத்தில் பிரசாரங்களை முடுக்கிவிடல்.

- பிராந்திய மற்றம் உலக மாநாடுகளுக்கு அரசு மட்ட வசதிகளை வழங்குதலும் ஊக்குவித்தலும்.

- உலகின் பிரதான தகவல் ஆராய்ச்சி நிறுவனங்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளை வழங்கி அவற்றின் கிளைகள் இந்நாட்டில் ஆரம்பிக்கப்படுவதை ஊக்குவித்தல்.

## விஞ்ஞானம், தொழில்நுட்பம், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி

விஞ்ஞானம், தொழில்நுட்பம், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தித் துறையானது இலங்கையின் சமூக பொருளாதார அபிவிருத்தியில் புறக்கணிக்கப்பட்ட ஒரு துறையாகும். அரசாங்கம் வருடாந்தம் மொத்தத் தேசிய உற்பத்தியில் 0.16% அளவை ஒதுக்குவதிலிருந்து இது நன்கு தெளிவாகின்றது. அதன் காரணமாகவே மக்களின் உணர்ச்சியில் பின்னடைவொன்றையும் பொருளாதார செயற்பாட்டில் உற்பத்திகளிலும் ஆரம்பநிலையொன்றை பெரிதும் காண முடிகிறது. மறுகோணத்தில் இத்துறையில் மேற்கொள்ளப்படும் ஆராய்ச்சிகளின் பெறுபேறுகளை மக்கள் வாழ்வை மேம்படுத்துவதற்கு அல்லது பொருளாதாரத் துறையின் தரத்தை உயர்த்துவதற்கு பெரிதும் பங்களிப்புச் செய்வதில்லை.

மக்கட் சமூகத்தின் கற்பனா சக்தியை மேம்படுத்தி உயரிய மனித சமூகமொன்றை ஏற்படுத்துவதற்கும் பொருளாதார உற்பத்திகளின் பண்புத்தரத்தையும் விளைதிறனையும் மேம்படுத்துவதற்கும் குறிப்பாக முதனிலை உற்பத்திகளின் சேர்க்கப்பட்ட பெறுமானங்களை அதிகரிப்பதன் மூலம் அதன் பெறுமதியை அதிகரிப்பதற்கும் விஞ்ஞானம், தொழில்நுட்பம் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தித் துறையை பெருமளவில் பயன்படுத்திக்கொள்ள முடியுமென்பது எமது நம்பிக்கையாகும்.

## நோக்கங்கள்

- சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்திக்காக விஞ்ஞானம், தொழில்நுட்பம், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தித் துறை முக்கிய பங்களிப்பாற்றும் ஒரு துறையாக மாற்றுதல்.

- விஞ்ஞான, தொழில்நுட்பத் துறையின் பண்புத்தரமுள்ள ஆராய்ச்சிக் கலாசாரத்தை ஏற்படுத்தி அதன் பெறுபேறுகளை சமூக அபிவிருத்திக்கு பயன்கூர் விதத்தில் ஈடுபடுத்திக்கொள்ளல்.

- விஞ்ஞானம், தொழில்நுட்பம், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தித் துறையில் மக்கள் வாழ்வில் வினைத்திறன் மறறும் உற்பத்திகளின் விளைதிறனை மேம்படுத்துவதற்கு

பயன்படுத்திக்கொள்வதன் மூலம் சிறந்த வாழ்வு நிலையொன்றை மக்களுக்கு வழங்குதல்.

## செயற்பாடுகள்

வருடந்தோறும் குறைந்தபட்சம் மொத்தத் தேசிய உற்பத்தியில் 2% சதவீதத்தை விஞ்ஞானம், தொழில்நுட்பம், ஆராய்ச்சி, அபிவிருத்தி ஆகிய துறைகளுக்கு ஒதுக்கீடுசெய்வதை இலக்காகக் கொண்டு தொடக்கத்தில் மொத்தத் தேசிய உற்பத்தியில் 75% சதவீதத்தை ஒதுக்கீடுசெய்தல்.

- அரச மற்றும் தனியார் துறையின் பங்களிப்புடன் விஞ்ஞானம், தொழில்நுட்பம், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பணிகளுக்கான தனியானதொரு நிதியத்தை நிறுவுதல்.
- விஞ்ஞானம், தொழில்நுட்பம், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கான மதியுரை, ஒழுங்குபடுத்தல், ஊக்குவிப்பு என்பவற்றுக்காக விஞ்ஞான, தொழில்நுட்பம், ஆராய்ச்சி முகவராண்மை என்ற பெயரில் புதியதொரு நிறுவனத்தை நிறுவுதல்.
- விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சித் துறைகளுக்கும் கைத்தொழில்களுக்கும் இடையில் சிறந்ததொரு ஒருங்கிணைப்பை ஏற்படுத்தி நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கும் வேலைவாய்ப்பு உருவாக்கத்திற்கும் கிராமிய மற்றும் நகர்ப்புற மக்கள் வாழ்வின் பண்புத்தரத்தை மேம்படுத்துவதற்கும் பயன்கூர் தன்மையை மேம்படுத்துவதற்கும் பேண்தகு அபிவிருத்திக்கும் குறித்த முகவராண்மையை ஈடுபடுத்திக்கொள்ளல்.
- வெளிநாடுகளுக்குப் புலம்பெயர்ந்துள்ள புகழ்பெற்ற விஞ்ஞானிகளுக்கும் ஆராய்ச்சியாளர்களுக்கும் மீண்டும் தமது சொந்த நாட்டுக்குத் திரும்புமாறும் முகவராண்மையுடன் இணைந்து பணியாற்றுமாறும் அழைப்பு விடுத்து அவர்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் பெற்றுக்கொடுத்தல்.
- துறையின் ஆராய்ச்சி முடிவுகளைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் புத்தாக்கங்களை ஏற்படுத்தலும் உற்பத்திகளின் பண்புத்தரத்தை அதிகரிப்பதற்கு அரச மற்றும் தனியார் துறையின் பங்களிப்பை வழங்குவதில் தலையீடுசெய்தல்.
- விவசாயம், கடற்றொழில் போன்ற துறைகளில் புதிய தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துவதற்கும் அவற்றின் உற்பத்திகளின் விளைதிறனை அதிகரிப்பதற்கும் தேவையான ஆராய்ச்சியை துரிதப்படுத்துதல்.
- அடுத்த 10 ஆண்டுகளில் துறையின் இலக்குகள் மற்றும் வேலைத்திட்டத்தை அடையாளம் கண்டு குறித்த வேலைத்திட்டத்தை அமுல்படுத்துவதற்குத் தேவையான மனித மற்றும் பௌதிக வளங்களையும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகளையும் வழங்குதல்.
- தற்போதைய அனைத்து ஆராய்ச்சி நிறுவனங்களின் செயற்பாடுகளையும் அவற்றின் சுதந்திரத்திற்கும் அடையாளத்திற்கும் ஊறு விளையாதவாறு ஒன்றிணைப்பதன்மூலம் மூலம் ஒரு பொதுவான தேசிய வேலைத்திட்டத்தை நோக்கியதாக இலக்கிடல்.
- அரச மற்றும் தனியார் துறைக்கு பயன்படுத்தக்கூடிய நவீன ஆய்வுகூடங்களையும் ஆராய்ச்சி வசதிகளுடன்கூடிய நிறுவனங்களையும் மாவட்டந்தோறும் நிறுவுதல்.
- விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சித் துறையை ஊக்குவிக்குமுகமாக தொழில்முயற்சிகளாக ஆய்வுகூடங்களையும் ஆராய்ச்சிக்கான வசதிகளையும் நிறுவுவதற்கு வரிச் சலுகைகள் உள்ளிட்ட ஊக்குவிப்புக்களை வழங்குதல்.
- பல்கலைக்கழகங்கள் உள்ளிட்ட மூன்றாம்நிலைக் கல்வி நிறுவகங்களினால் மேற்கொள்ளப்படும் விஞ்ஞான ஆராய்ச்சிகளுக்கு உதவுமுகமாக அவற்றுக்கு வழங்கப்படும் நிதித் தொகைகளை அதிகரித்தல்.

- விஞ்ஞான அறிவை மக்கள் மத்தியில் கொண்டு செல்வதற்கும் அதன்மூலம் சமூக அபிவிருத்திக்கு குந்தகம் விளைவிக்கும் மூட நம்பிக்கைகளை ஒழிப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல்.
- விஞ்ஞான, தொழில்நுட்ப அறிவு மற்றும் ஆராய்ச்சி முடிவுகளை பயன்கூர் வகையில் பொதுமக்களுக்குத் தொடர்பாடல் செய்வதற்கு ஊடகவியலாளர்களுக்கு பயிற்சியளித்தல் அடங்கலான புதிய முறைமைகளை அறிமுகப்படுத்தல்.
- புலமைச்சொத்து உரிமையை உறுதிசெய்வதற்காக தற்போதுள்ள சட்டங்களில் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கும் புதிய சட்டங்களை அறிமுகப்படுத்துவதற்கும் ஆக்கவுரிமையைப் பெற்றுக்கொள்வதில் உதவுவதற்கும் நாட்டுக்கு சிறப்பாயமைந்த இயற்கை வளங்களின் ஆக்கவுரிமையை உறுதிப்படுத்துவதற்கும் துரித நடவடிக்கை எடுத்தல்.
- விஞ்ஞானம், தொழில்நுட்பம், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி துறைகளில் சிறப்பான திறமைகளையும் கண்டுபிடிப்புக்களையும் மேற்கொள்ளும் விஞ்ஞானிகளை ஊக்கப்படுத்தி மதிப்பிடுவதற்கான தேசிய தொழில்நுட்ப விருதுகளை வருடந்தோறும் வழங்குதல்.
- சர்வதேச உயிரியல் தொழில்நுட்பம் மற்றும் ஏனைய துறைகளுக்கு ஏற்புடைய ஆராய்ச்சி நிறுவனங்களின் கிளைகள் ஆரம்பிக்கப்படுவதை ஊக்குவித்தல்.
- சர்வதேச ஆராய்ச்சி நிறுவனங்களுக்கு இந்நாட்டின் கல்விமான்களுடன் தொடர்புகொள்வதற்கு அவசியமான இராஜதந்திர ரீதியான ஒத்துழைப்புக்களை வழங்குதல்.

# 02

# முழுநிறைவான ஒரு தேசம்

# சுகாதாரம்

## தரமான சுகாதார சேவையும் நலமான பிரஜையும்

உலக சுகாதார அமைப்பின் (WHO) பொருள்கோடலின்படி, ஆரோக்கியம் என்பது நோய்கள் அல்லது இயலாமைகளற்ற, பூரண உடல் மற்றும் உள ரீதியான சமூக நல்வாழ்வைக் குறிக்கின்றது. எந்தவொரு சமூகத்திலும் பிரஜையொருவரின் வாழ்க்கைத்தரத்தின் உயர்நிலையை அளவிடும்போது பிரஜையின் ஆரோக்கியம் முக்கிய காரணியாக அமைந்துள்ளது. ஆரோக்கியமான பிரஜைக்கு நல்லதொரு குடும்பத்தில் மகிழ்ச்சியாக வாழ்வதற்கான உரிமை கிடைப்பதன் மூலம் சமூக அபிவிருத்திக்கு பங்களிப்பு செய்கின்றார். ஆயினும், இன்று எமது சுகாதாரத்துறை ஆரோக்கியமான பிரஜையொருவரை உருவாக்கத் தவறியுள்ளதால் பல நெருக்கடிகள் எதிர்நோக்கியுள்ளன.

பிரித்தானியர் காலனித்துவ ஆட்சியிலிருந்து சுதந்திரமடைந்ததன் பின்னர், முதல் சில தசாப்தங்களுக்குள் இந்நாட்டில் செயற்படுத்தப்பட்ட சுகாதாரம் மற்றும் கல்வி உள்ளிட்ட சமூக நலன்புரி நடவடிக்கைகளின் பயனாக அன்று கடும் சுகாதார பிரச்சினைகளாகக் காணப்பட்ட தொற்று நோய்கள், தாய்-சேய் தொடர்பான நோய்கள் மட்டுமன்றி, ஊட்டச்சத்துக் குறைபாடுகளைக் களைந்து பெரும்பாலான நாடுகள் மத்தியில் எமது சுகாதார சேவைக்கு உயர் வரவேற்பொன்று கிடைத்தமைக்குக் காரணம், அக்காலத்துக்குள் அந்தச் சேவை இலவச சுகாதார சேவையாக முறைப்படியா் பராமரிக்கப்பட்டு பொதுமக்கள் மத்தியில் மிகவும் நெருக்கமான சேவையாக விளங்கியமையாலாகும். இந்த நிலைமை தற்போது மிகவும் மோசமடைந்துள்ளது. உலக சுகாதார அமைப்பின் அண்மைக்கால தரவரிசைப்படுத்தலின்படி, சுகாதார சேவைகளை வழங்கும் ஒட்டுமொத்த தழுவுமளவில் (Universal Health Coverage) இலங்கை 103 வது இடத்தில் உள்ளது.

எனினும், கடந்த அண்மைய சில தசாப்தங்களுக்குள், சுகாதார சேவையானது பல கடும் நெருக்கடிகளை எதிர்நோக்கியுள்ளது. இதன் பெறுபேறாக, எமது தேசத்தின் சுகாதாரத் துறைக்கு நாட்டு மக்கள் மத்தியிலும் வெளிநாட்டவர்கள் மத்தியிலும் காணப்பட்ட நம்பிக்கையும் இழக்கப்பட்டதுடன் மட்டுமன்றி, தற்போது சுகாதாரத் தேவைகளை நிறைவேற்ற முடியாதளவு மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

இன்றைய நாட்டின் சனத்தொகை 21 மில்லியனாகும். வயதுவந்தோரின் சனத்தொகை அதிகரித்து சனத்தொகைக் கட்டமைப்பில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. 2012 சனத்தொகை மற்றும் வீட்டுக் கணக்கெடுப்பின்படி, 60 வயதிற்கு மேற்பட்ட சனத்தொகை 12.4% ஆகும். இது 2041 ஆம் ஆண்டில் 24.8% ஆக இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது. நோய்வாய்ப்படும் தன்மையிலும் மாற்றம் ஏற்பட்டுள்ளது. உலகளாவிய ரீதியில் நோக்கும்போது மருத்துவவியல் தொழில்நுட்ப ரீதியாக முன்னேற்றமடைந்திருப்பினும், நுண்ணுயிர்க்கொல்லி தடுப்புத் திறன், காலநிலை மாற்றங்கள், உலகளாவிய ரீதியில் பரவும் நோய்த் தொற்றுகள் என்பன காரணமாக தொழில்நுட்ப மற்றும் சுற்றுச்சூழல் சீரழிவு தொடர்பான சவால்கள் மிகவும் தீவிரமாகி வருகின்றன. மக்களின் சுகாதாரம் குறித்த எதிர்பார்ப்புகளும் அதிகரித்துள்ளன. அவ்வப்போது காணப்பட்ட அரசாங்கங்களினால் எமது சுகாதார சேவையிலும் நாம் அறியாமலே பல மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. சுமார் 80 தசாப்தம் வரையில், முழுமையாக அரசாங்க பொறுப்பில் இயங்கிய சுகாதார சேவையிலிருந்து படிப்படியாக அரசாங்கம் விலகி அல்லது போதியளவு தலையீடு செய்யாமல் அச்சேவையை சந்தையின் பொறுப்பில் விட்டு வருகிறது. சுகாதாரப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான முறைப்படியான திட்டம் இல்லாமையால் அவற்றைத் தீர்ப்பதற்காக அரச தலையீடு எந்தவிதத்தில் போதுமானதாக இல்லாதிருப்பதால் எழுந்துள்ள நெருக்கடியை பல்வேறு பிரிவுகளினால் தமது வியாபார நோக்கங்களை அடைந்துகொள்வதற்காக பயன்படுத்தப்பட்டு வருகிறது. குறைந்தபட்ச

ஆபத்துடன்கூடியதாக இலகுவான முறையில் அதிக இலாபத்தை அடையக்கூடிய ஒரு துறையாக சுகாதார முதலீட்டாளர்களினால் அடையாளம் காணப்பட்டுள்ளது. வரி செலுத்தியதன் பின்னர் ஒருவர் அவரது சட்டைப் பையிலிருந்து சுகாதார சேவைக்காக செலவிடும் தொகை (Out of pocket expenditure) 50% ஐத் தாண்டியுள்ளது.

கடந்த 71 ஆண்டு காலத்துள் ஆட்சிக்கு வந்த எந்தவோர் அரசாங்கமும் தேசிய சுகாதாரக் கொள்கையொன்றை உருவாக்கி அதற்கமைய நடவடிக்கைகளை எடுப்பதற்குச் செயலாற்றவில்லை என்பதுடன், அரசாங்க அலுவலர்களினால் அவ்வப்போது உருவாக்கிய கொள்கைகளையும் திட்டங்களையும் அமுல்படுத்துவதன் மீது ஆர்வம் காட்டவில்லை. இதன் காரணமாக ஆட்சிமாற்றம் ஏற்படும்போது மட்டுமல்லாமல், அமைச்சர்கள் மாறும்போதுகூட அரசாங்கக் கொள்கைகளிலும் மாற்றங்கள் ஏற்பட்டன.

ஆதலால், அரசாங்கம் அல்லது அமைச்சர்களில் மாற்றம் ஏற்பட்டபோதும் மாற்றமடையக்கூடாத ஒரு தேசிய சுகாதாரக் கொள்கையை வகுப்பதற்கும் அதனை கல்விமான்களுடனும் பொதுமக்களுடனும் கலந்தாலோசித்து உடன்பாடொன்றை எய்தி எதிர்காலத்தில் ஆட்சியில் அமர்த்தப்படும் மக்கள் அரசாங்கமொன்றின் மூலம் அமுல்படுத்துவதும் இந்த கொள்கைத் திட்டமிடலின் அடிப்படை நோக்கமாகும்.

## இலங்கை மக்கள் எதிர்நோக்கியுள்ள தீவிர சுகாதார பிரச்சினைகள்

### ஆரம்பநிலை சுகாதார சேவைகளின் வீழ்ச்சிநிலை

- போதுமான மருத்துவர்கள், மருந்துகள், உபகரணங்கள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் இன்மை காரணமாக பல நோயாளிகள் ஆரம்பநிலை சுகாதார நிலையங்களை (கிராமப்புற மற்றும் பகுதியளவு நகர்ப்புற) தவிர்த்து, உயர்நிலை மற்றும் மூன்றாம் நிலை சுகாதார நிலையங்களுக்கு (முக்கிய நகரங்களில்) சிகிச்சை பெற வருகின்றனர். இதற்கு இந்த பொருளாதார முறையின் கீழ் ஏற்படும் ஏனைய சமூக மற்றும் மனப்பாங்குசார் மாற்றங்களும் தாக்கத்தினை ஏற்படுத்தியிருப்பினும் மக்கள் எதிர்பார்க்கும் சேவை கிராமத்திலோ அல்லது பகுதியளவு நகர்ப்புறங்களில் அமைந்துள்ள வைத்தியசாலைகள் மூலம் கிடைக்காமை முக்கியமாக தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

- தொலைதூரப் பிரதேசங்களிலிருந்து உயர்நிலை மற்றும் மூன்றாம்நிலை நிறுவனங்களுக்கு (நகர்ப்புறங்களில்) ஏராளமான நோயாளிகள் வருகின்றனர். இதனால் பரபரப்பான சூழ்நிலை உருவாகியிருப்பதுடன் அதனைத் தவிர்க்கும் பொருட்டு அரசாங்கமும் அந்த நிறுவனங்களுக்கு அதிகளவு உத்தியோகத்தர்களையும் வசதிகளையும் வழங்கி வருகிறது. இறுதியில் இதன் காரணமாக ஆரம்பநிலை சுகாதார வைத்தியசாலைகளிலிருந்து போதுமான சேவைகளை வழங்கப்படுவதில்லை.

- இதற்கு மேலதிகமாக, குறைந்த வசதிகள் மற்றும் தொலைதூர இடங்களிலிருந்து வந்திருப்பதனாலும் அத்தகைய பணியிடத்தில் பணிபுரிவது தொடர்பில் பாராட்டு அல்லது வேறு மதிப்பு, மேலதிக தகைமையாக கருதுதல் அல்லது மேலதிக நன்மைகள் கிடைக்காமையால் ஆரம்பநிலை நிறுவனங்களுக்கு நியமிக்கப்பட்ட அதிகாரிகள் நியமனம் செய்யப்பட்ட நாளிலிருந்து இடமாற்றத்தைத் தேடிய வண்ணம் இருக்கின்றனர். ஆகையால் தற்போதைய ஆட்சேர்ப்புசெய்யப்படும் இடங்கள், இடமாற்றங்கள் மற்றும் பதவி உயர்வு வழங்கும் முறையின் கீழ் எத்தனை மருத்துவர்களுக்கு பயிற்சியளிக்கப்பட்டாலும், வைத்தியசாலைகளின் செயல்திறனில்

அதிகரிப்போ, சிறந்த சேவைகளை வழங்குவதில் மேம்பாடோ, பொது மக்களுக்குக் கிடைக்கக்கூடிய பொதுவான நன்மைகளில் அதிகரிப்போ ஏற்படுவதில்லை.

- சுகாதார அமைச்சின் 2016 புள்ளிவிவரங்களின் அடிப்படையில் மருத்துவ நிபுணர்களில் 27% மற்றும் மருத்துவமனைச் சேவை மருத்துவர்களில் 19% கொழும்பு மாவட்டத்தில் பணிபுரிவதையும் மற்றும் மருத்துவ நிபுணர்களின் மொத்த எண்ணிக்கையில் இன்னும் 25% சதவீதமானோர் கம்பஹா, காலி, களுத்துறை போன்ற கூடுதலாக நகர்ப்புறங்கள் சார்ந்த மாவட்டங்களில் பணிபுரிவதைக் காணக்கூடியதாகவுள்ளது.

- மற்றைய தரங்களைச் சேர்ந்த சுகாதாரப் பணியாளர்களில் கணிசமான சதவீதத்தினர் இந்த மாவட்டங்களிலேயே பணிபுரிகின்றனர்.

## சுகாதார சேவைகளை வழங்கும் சுகாதார நிறுவனங்களில் நிர்வாக செயலிழப்பு

பெரும்பாலான சுகாதார சேவை நிறுவனங்கள் குறைந்த அளவிலான செயல்திறனைக் கொண்டுள்ளன. நோயாளி ஒருவர் தனது அல்லது குடும்பத்தின் ஒருவரின் அறிவுக்கு ஏற்ப எடுக்கப்பட்ட முடிவின் அடிப்படையிலே மருத்துவமனைக்கு வருகிறார். பெரும்பானோர் மருத்துவமனைக்குச் செல்வதற்கு முன்பு தங்களுக்குத் தெரிந்த ஒருவரின் உதவியை நாடுகிறார்கள். அவ்வாறல்லாத பட்சத்தில், சிகிச்சை பெறவேண்டியது வெளி நோயாளர் பிரிவிலா, தங்கியிருந்தா, குறித்த நோய்க்கு அம்மருத்துவமனையில் சிகிச்சை பெற முடியுமா, உரிய வசதிகள் உண்டா, மருத்துவர்கள் இருக்கிறார்களா என்பது போன்ற மிக அத்தியாவசியமான தகவல்களைக்கூட எந்த ஒருவருக்கும் அறிந்துகொள்ள வாய்ப்பில்லை. நோயாளிகளால் மிகவும் நிர்க்கதியான நிலையில் வெளி நோயாளர் பிரிவில் கியூவரிசையில் நின்று எவரேனும் ஒரு மருத்துவரினால் வழங்கப்படும் ஏதேனுமொரு சிகிச்சையைப் பெற்றுக்கொள்ள நேர்ந்துள்ளது. பெரும்பாலான சந்தர்ப்பங்களில் தேவையான மருந்துப் பொருள்களை அருகிலுள்ள தனியார் மருந்தகத்திலிருந்து கொள்வனவுசெய்வதற்கும், பரிசோதனைகளை வெளிநிலை ஆய்வுக்கூடமொன்றின் மூலம் மேற்கொள்வதற்கும் நேரிடும்.

மருத்துவமனையொன்றிலிருந்து சிகிச்சை பெறும் நோயாளி தொடர்பில் இடம்பெறுகின்ற பின்தொடர் நடவடிக்கை மிகவும் ஒழுங்கற்றதாகும். நோய்த்தடுப்பு, தாய், சேய் ஆரோக்கியம், விசேட சிகிச்சைக் களங்களில், புற்றுநோய் சிகிச்சைகள் போன்ற குறித்துரைக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் தவிர்ந்த வேறு சந்தர்ப்பங்களில் நோயாளிக்கு வழங்கப்பட்ட சிகிச்சைகளை சரியான முறையில் பெற்றுக்கொண்டுள்ளாரா? பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டனவா? போன்ற விடயங்கள்கூட மீண்டும் நோயாளி மருத்துவமனைக்குத் வருகை தரும் பட்சத்திலேயே மட்டுமே கவனத்திற்கு உட்படும். குறித்த நோயாளி ஓரிடத்திலிருந்து சிகிச்சைபெற்றதன் பின்னர் வேறு ஒருவரிடம் சிகிச்சை பெற்றுள்ளாரா? குணமடைந்துள்ளாரா? ஏதேனும் சிக்கல் ஏற்பட்டுள்ளதா? அல்லது இறந்தாரா? என்பது போன்ற விடயங்கள் எவை குறித்தும் விசாரிக்கப்படுவதில்லை.

தூர பகுதிகளிலுள்ள வைத்தியசாலைகளில் கடுமையான ஊழியர் பற்றாக்குறையும் மருந்துப்பொருட்கள் மற்றும் உபகரணங்களுக்கான பற்றாக்குறையும் காணப்படுகிறது. உரிய நேரத்தில் சேவைகள் வழங்கப்படுவதுமில்லை. நிர்வாக அலுவலர்களும் அங்கில்லை.

## சுகாதாரத்திற்கான மொத்த செலவினத்தில் அரசாங்கம் ஈடுபடுத்தும் அளவு

சுகாதாரத்திற்கான மொத்தச் செலவில் அரசாங்கம் ஈடுபடுத்தும் அளவு படிப்படியாக குறைந்து மக்கள் தனிப்பட்ட முறையில் பிள்ளைகளுக்கு மேற்கொள்ளும் செலவு அதிகரித்துள்ளது.

உலக சுகாதார அமைப்பின் கருத்துப்படி, சுகாதாரத்திற்கான அரசாங்க செலவினம் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 5% க்கும் குறைவாக இருக்கும்போது, சுகாதார சேவையின் கட்டாய பண்பொன்றான சமூகத்திலுள்ள ஒவ்வொரு நபருக்கும் தடங்கலின்றி பலன்களைப் பெற முடியுமான சுகாதார சேவையொன்றை முன்னெடுத்துச் செல்வது கடினமான காரியமாகும். சுகாதார சேவை போன்ற தீர்மானகரமான துறைக்கு மிகவும் உறுதியானதும் நம்பகரமானதுமாக இருப்பது அரசாங்கத்தினால் வழங்கப்படும் நிதி ஒதுக்கீடுகள் வழங்கப்படுவதாகும். இலவச சுகாதாரம் பற்றி நாம் உயர்வாக பேசியபோதும், சுகாதாரத்துக்காக ஏற்படும் செலவில் 50.2% ஆன பகுதியை பொதுமக்கள் தங்கள் சொந்த செலவில் ஏற்பதாகத் தெரிய வந்துள்ளது. எமது நாட்டுக்குள் சுகாதார சேவைக்காக மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வருடாந்தம் ஒதுக்கப்படுகின்ற அளவு பொதுவாக 3% ஆக இருப்பினும் அதற்கான அரசாங்க பங்களிப்பு மொத்த உள்நாட்டு உற்பத்தியல் சதவீத அடிப்படையில் குறைவடைந்து வருகிறது. இது, 2007 ஆம் ஆண்டில் 1.68% ஆக இருந்ததுடன், 2017 ஆம் ஆண்டில் 1.48% ஆக இருந்தது.

## தேசிய சுகாதார முறைமையில் வளர்ச்சி பின்னடைவு

சுமார் 80 தசாப்தங்கள் வரை குறிப்பிடத்தக்களவு வளர்ச்சி எய்திய இலங்கை சுகாதார சேவை நவ-லிபரல்வாத பொருளாதார நடைமுறைகளைப் பின்பற்றியதைத் தொடர்ந்து பல பாரதூரமான பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்துள்ளது. மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சைப்பெறும் நோயாளிகளில் சுமார் 5-10% அளவானோரும் வெளி நோயாளர்களில் 50% வீதமானோரும் தனியார் சிகிச்சை நிலையங்களில் சிகிச்சை பெறுகின்றனர். அரச துறையிலும் தனியார் மருத்துவ சேவையிலும் பணிபுரியும் இலங்கை மருத்துவ சபையில் உரிய முறையில் பதிவுசெய்துகொண்டுள்ள மருத்துவர்கள்கூட தமது அறிவையும் அனுபவங்களையும் பயன்படுத்தியே சிகிச்சையளிக்கின்றனர். வேறு முன்னேறிய நாடுகளில் போல் மருத்துவ சிகிச்சை வழிகாட்டல் நெறிமுறைகள் பின்பற்றப்படுவதில்லை. எனவே, பயிற்சியில் பல ஒற்றுமைகள் காணப்பட்டபோதும் நடைமுறையில் குறிப்பிடத்தக்க வித்தியாசங்கள் காணப்படுகின்றன.

## நோயாளிகள் தொடர்பில் மையப்படுத்தப்பட்ட தகவல் முறைமை இல்லாமை

ஒரே நோயாளி வெவ்வேறு நிறுவனங்களிலிருந்து ஒரே நோய்க்கு சிகிச்சைபெறும்போது, பல நோயாளிகளாகப் பதிவு செய்யப்படுகின்றனர். நோயாளி இரண்டாவது அல்லது மூன்றாவது முறையாக வரும்போது, சிகிச்சை நிலையமொன்றில் பதிவுசெய்த நோயாளியைத் தவிர்ந்த முன்பு இருந்த நோய் நிலைமைக் காட்டுகின்ற அறிக்கைகள் எல்லா நேரங்களிலும் பரிசோதிக்கப்படுவதில்லை. பெரும்பாலும் ஒரே மருத்துவரால் அரிதானதாகவே பரிசோதிக்கப்படுகின்றார். நவீன தொழில்நுட்பத்தைக் கையாண்டு துல்லியமான தகவல்கள் திரட்டப்படுவதில்லை.

## சுகாதாரக் கல்வியின் தரம் மிகவும் குறைவானதாகக் காணப்படல்

70, 80 ஆம் தசாப்தங்களில் மிகச் சிறந்ததொரு சேவையினை ஆற்றிய சுகாதாரக் கல்வி புதிய தாராண்மைப் பொருளாதார வடிவத்தைத் தொடர்ந்து பெரிதும் வீழ்ச்சி அடைந்துள்ளது. சுகாதாரக் கல்வியை வழங்குவதில் சுகாதார அமைச்சு மற்றும் கல்வி அமைச்சின் தலையீடு மிகவும் பலவீனமான நிலை காணப்படுகிறது. அதற்குப் பதிலாக 50 இற்கும் அதிகமான பல்வேறுபட்ட ஊடக நிறுவனங்கள் போட்டிபோட்டுக்கொண்டு அப்பணியில் ஈடுபட்டுள்ளன. பல்வேறு ஊடகங்களில் வைத்தியர்கள், ஏனைய சுகாதார ஊழியர்கள் மற்றும் வர்த்தக விளம்பரங்கள் ஆகியவற்றின் மூலம் கிடைக்கப் பெறும் தகவல்கள் ஒன்றுக்கொன்று முரண்படுவதன் காரணமாக மக்கள் தாம் விரும்பியவாறு அவர்களால் வழங்கப்படும் ஆலோசனைகளுக்கு பழக்கப்பட்டுள்ளனர். அதன் காரணமாக அபாயகரமான விளைவுகளை அனுபவித்து வருகின்றனர். இதன் காரணமாகவும் சந்தையில் உள்ள தரமற்ற நுகர்வுப்

பண்டங்கள், உணவு வகைகள், பான வகைகள் மற்றும் மருந்துப் பொருள்கள் காரணமாகவும் மக்கள் பல்வேறுபட்ட நோய்களுக்கு ஆளாகி வருகிறார்கள்.

## தொற்று நோய்களைக் கட்டுப்படுத்தத் தவறுதல்

70, 80 ஆம் தசாப்த காலம் வரை பலம்பொருந்தியதாக விளங்கிய சுகாதாரப் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டம், திறந்த பொருளாதாரம் அறிமுகப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து நோய்த் தடுப்பு சேவைகளை விடவும் நோய்க்கான சிகிச்சைச் சேவைகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டதன் காரணமாகவும் சுகாதார சேவைகளை வழங்குதலானது போட்டித்தன்மை வாய்ந்த விதத்தில் சந்தையில் நுழைவிக்கச் செய்யப்பட்டதைத் தொடர்ந்து ஏற்பட்ட தனியார் மருத்துவ சேவைகளில் ஈடுபடுவதற்கு அரசாங்க சேவையிலுள்ள வைத்தியர்களுக்கு இடமளிக்கப்பட்டமை காரணமாகவும் படிப்படியாக வீழ்ச்சி கண்டது.

ஆரம்ப காலங்களில் இடப்பட்ட பலமான அத்திவாரம் காரணமாக மகப்பேற்று மற்றும் குழந்தை மருத்துவ சேவைகள் ஓரளவுக்கு பாதுகாக்கப்பட்டுள்ளதுடன் தாய் மரணம், சேய், சிறுவர் மரணம் ஆகியன குறைவடைந்துள்ளன. நோய்த்தடுப்பு பெறுமானங்கள் இன்னும் உயர்ந்த நிலையில் காணப்படுகிறது. சிறிது காலத்திற்கு முன்பு பாரதூரமான சுகாதாரப் பிரச்சினையாகக் காணப்பட்ட போலியோ, ஈர்ப்பு வலி, குக்கல், தொண்டைக்கரப்பன், சிறுவர்கள் மத்தியில் காணப்படும் காச நோய், சின்னமுத்து, ருபெல்லா, பூச்சிநோய், வயிற்றோட்ட நோய், மலேரியா நோய், ஆணைக்கால் நோய், தொழுநோய் மற்றும் ஜப்பானிய மூளைக்காய்ச்சல் போன்ற நோய்கள் ஒழிக்கப்பட்டு அல்லது மேலும் பொதுச் சுகாதாரப் பிரச்சினைகளாக அமையாமல் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

ஆயினும் போட்டித்தன்மை வாய்ந்ததொரு சமூகத்தில் வாழும் அனைவரதும் பங்களிப்பு தேவைப்படுகின்ற டெங்கு ‘லேப்டோஸ்பிரோய்ஸ்’ மற்றும் வயதுவந்தவர்கள் மத்தியில் காணப்படும் காச நோய் போன்ற சுற்றாடலுடன் பின்னிப்பிணைந்து காணப்படும் தொற்று நோய்கள் இதுவரை கட்டுப்படுத்தப்படவில்லை. ‘இன்புளுவன்ஸா’ போன்ற தொற்று நோய்களும் அடிக்கடி கொள்ளை நோயாக மாற்றம் பெற்று மரணமடைதல் மற்றும் அதிகளவினர் ஒரே நேரத்தில் நோய் வாய்ப்படல் (கொள்ளை நோய் நிலைமை) இடம்பெறுகிறது. 2017 ஆம் ஆண்டில் மாத்திரம் 186,000 இற்கும் மேற்பட்ட நோயாளிகளும் 400 இற்கும் மேற்பட்ட மரணங்களும் டெங்கு நோய் காரணமாக இடம்பெற்றுள்ளன.

## தொற்றா நோய்கள், போசாக்கு மற்றும் ஏனைய பாரதூரமான சுகாதாரப் பிரச்சினைகளின் பரவுகை

■ சரியான சுகாதாரக் கல்வி அறிவு இல்லாமை காரணமாகவும் கவனயீனம் காரணமாகவும் வாழ்க்கை முறையில் ஏற்படுத்தப்பட்டுள்ள மாற்றங்கள் காரணமாகவும் பெரும்பாலோனோர் உயிர் வாழும் மொத்த ஆயுட் காலத்தில் 1/3 பகுதி பல்வேறுபட்ட தொற்றா நோய்களுக்கு ஆளாகி நோயாளர்களாக காலம் கடத்துகின்றனர். பின்வரும் விடயங்கள் இதன் மீது செல்வாக்குச் செலுத்துகின்றன:-

■ கல்வியின் ஊடாக பலதரப்பட்ட விடய அறிவினைப் பெற்றுக்கொண்டுள்ளபோதும் சிறந்த உடலாரோக்கியமான வாழ்க்கையினை அனுபவிப்பதற்குத் தேவையான அறிவு பெரும்பாலானோரிடத்தில் காணப்படுவதில்லை. பெரும்பாலோனோர் வீட்டில் சமைத்த உணவுகளுக்குப் பதிலாக பல்வேறு சுவையூட்டிகள் மற்றும் நீண்டகாலம் பழுதடையாமல் வைத்திருப்பதற்கு பயன்படுத்தப்படும் இரசாயனப் பொருள்கள் உள்ளடங்கிய உணவகங்களில் தயாரிக்கப்படும் சமைத்த உணவுகளுக்குப் பழக்கப்பட்டுள்ளார்கள்.

■ பெரும்பாலானோர் உடல் உழைப்பு மூலமான நடவடிக்கைகளில் இருந்து விலகி அலுவலக உத்தியோகங்களில், ஆவணங்கள் அல்லது கணினி மூலம் மேற்கொள்ளப்படும் தொழில்களில் ஈடுபடுவதன் காரணமாக அவர்களின் உடற் பருமன் அதிகரித்துக் காணப்படுகிறது.

■ குடிமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தினால் 2016 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட மேற்குறித்த ஆய்வின் பிரகாரம் இலங்கையில் 60 வயதிற்கு மேற்பட்ட சனத்தொகையில் 17 சதவீதத்தினர் (ஆறு நபர்களில் ஒருவர்) ஏதேனும் ஒருவகை இருதய நோயினாலும் 30

சதவீதம் உயர் குருதி அமுக்கத்தினாலும் (மூன்று பேரில் ஒருவர்) 16 சதவீதம் நீரிழிவு நோயினாலும் (ஆறு பேரில் ஒருவர்) மேலும் 16 சதவீதம் (ஆறு பேரில் ஒருவர்) 'கொலொஸ்டெரோல்' அதிகரிப்பினாலும் பீடிக்கப்பட்டிருந்தனர்.

■ 2012 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் பிரகாரம் 60 இற்கு மேற்பட்ட சனத்தொகை 12.4 சதவீதமாகக் காணப்பட்டதுடன் 2041 ஆம் ஆண்டில் இது 24.8 சதவீதமாக அதாவது சனத்தொகையில் 1/4 பகுதியாக அமையும் என மதிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே தொற்றா நோய்க் கட்டுப்பாடு தொடர்பில் முறையான சமுதாயத்தை அடிப்படையாகக் கொண்ட நோய்த் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாவிடின் 2041 ஆம் ஆண்டளவில் இம் மொத்தத் தொகையினர் ஏதோ ஒரு தொற்றா நோய்க்கு ஆளாவதன் காரணமாக சுகாதாரத்திற்காக அரசாங்கத்திற்கும் மக்களுக்கும் பெருந்தொகை நிதியைச் செலவிட வேண்டி ஏற்படும்.

## போசாக்கின்மை மற்றும் ஏனைய போசாக்குப் பிரச்சினைகள்

குடிமதிப்பு, புள்ளிவிவரத் திணைக்களத்தினால் 2016 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் பிரகாரம் இலங்கையில் எடை குறைவாகப் பிறக்கும் குழந்தைகளின் எண்ணிக்கை 15.7 சதவீதமாக அமைந்தது. (பிறக்கின்ற 7 குழந்தைகளுள் ஒன்று) வயதுக்கு ஏற்ற எடையினை விடக் குறைவான எடையினைக் கொண்ட குழந்தைகளின் எண்ணிக்கை 17.3 சதவீதமாக காணப்பட்டதுடன் அது நுவரெலியா மாவட்டத்தில் 32.4 சதவீதமாக (ஒவ்வொரு மூன்று குழந்தைகளில் ஒருவர்) காணப்பட்டது. மெலிந்த குழந்தைகளின் எண்ணிக்கை 15.1 சதவீதமாக அமைந்ததுடன் மொணராகலை மாவட்டத்தில் அது 25 சதவீதமாகக் காணப்பட்டது.

வயதுக்கு ஏற்ற எடையினை விடக் குறைவான எடையினைக் கொண்டிருந்த குழந்தைளின் எண்ணிக்கை 20.5 சதவீதமாக அமைந்ததுடன் நுவரெலியா மாவட்டத்தில் அது 29.6 சதவீதமாக அதாவது ஒவ்வொரு மூன்று குழந்தைக்கும் ஒரு குழந்தை வயதிற்கு ஏற்ற எடையை விடக் குறைவான எடையினைக் கொண்டிருந்தது.

## திடீர் விபத்துக்கள்

இலங்கை பொலிஸ் அறிக்கைகளின் பிரகாரம் 2018 ஆம் ஆண்டு வீதி விபத்துக்கள் காரணமாக மாத்திரம் 3,550 பேர் மரணமடைந்துள்ளதுடன் 2016 ஆம் ஆண்டு சுகாதார அமைச்சின் புள்ளிவிபரங்களின் அடிப்படையில் திடீர் விபத்துக்கள் காரணமாக 01 மில்லியன் பேர் வைத்திசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டோரில் 19 சதவீதம் ஆகும். அதாவது ஐந்தில் ஒன்று ஆகும்.

## போதைப்பொருள்கள் மற்றும் புகைத்தலுக்கு அடிமையாதல்

தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் அறிக்கைகளின் பிரகாரம் 2016 இல் நாடு பூராவும் போதைப்பொருளுக்கு அடிமையான 2,355 பேருக்கு சிகிச்சையளிக்கப்பட்டுள்ளது. அவற்றுள் 826 பேருக்கு (35 சதவீதம்) அந்த நிறுவனத்தால் நடாத்திச் செல்லப்படும் சிகிச்சை நிலையங்களில் இருந்தும் 684 பேருக்கு (29 சதவீதம்) சிறைச்சாலைகளில் உள்ள சிகிச்சை நிலையங்களிலும் 474 பேருக்கு (20 சதவீதம்) அரச சார்பற்ற நிறுவனங்களின் சிகிச்சை நிலையங்களிலும் 371 பேருக்கு (6 சதவீதம்) கந்தகாடு சிகிச்சை மற்றும் புனர்வாழ்வு நிலையங்களிலும் சிகிச்சை வழங்கப்பட்டுள்ளது. இவற்றுள் 51 சதவீத்தினர் கொழும்பு மாவட்டத்தில் பதிவாகி உள்ளதுடன் 62 சதவீதத்தினர் 30 வயதிற்கு மேற்பட்ட நபர்கள் ஆவார்கள்.

## மனநோய்

பத்தரமுல்ல ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தினால் 2007 ஆம் ஆண்டு சுகாதார அமைச்சுடன் நாட்டின் அனைத்து மாவட்டங்களும் உள்ளடங்கும் வகையில் (வடக்கு கிழக்கு தவிர்ந்த) மேற்கொள்ளப்பட்ட மனநோய் தொடர்பான ஆய்வின்போது சனத்தொகையில் 10 சதவீதத்தினர் ஏதோ ஒரு வகையான மனநோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாக அடையாளம் காணப்பட்டுள்ளது.

## நாட்பட்ட சிறுநீரக நோய்

வட மத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களின் பல மாவட்டங்களில் பதிவாகியுள்ள நோய் பீடிக்கப்பட்டுள்ளமைக்கான உறுதியான காரணங்கள் நிச்சயித்துக் கூறக் கூடியதாக இனம் காணப்படாத நாட்பட்ட சிறுநீரக நோய் தொடர்பான விஞ்ஞான ரீதியிலான தகவல்கள் இதுவரை பூர்த்தி செய்யப்படவில்லை. இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ள ஆராய்ச்சி முறைமைகள் தொடர்பாக பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. ஆகவே தரம் கூடிய முடிவுகளின் செவ்வைத் தன்மை பற்றி நம்பிக்கை அளிக்கக்கூடிய ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்கான தேவைப்பாடு இன்னமும் காணப்படுகிறது.

ஆயினும் குறித்த பிரதேசங்களில் சிறுநீரக நோய்க்கு சிகிச்சை வழங்குவதற்கான வசதிகள் இதுவரை போதுமானதாக இல்லை. அப் பிரதேசங்களில் சுகாதார மற்றும் சமூக சேவைகளை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் போதுமானதாக இல்லை. சிறுநீரக நோய்க்கு சிகிச்சை வழங்கும் முறைகளுக்கிடையிலும் வித்தியாசம் காணப்படுவதுடன் சுகாதார சேவையில் உள்ள அனைத்துப் பிரச்சினைகளும் இந்த நோய்க்கு சிகிச்சை வழங்குவதிலும் மாற்றமின்றி காணப்படுகிறது. ஏற்புடைய சுகாதார ஊழியர் பற்றாக்குறையை நீக்குவதற்கு, ஆளணியினருக்கு முறையான பயிற்சியை வழங்குவதற்கு, ஊழியர்களின் அறிவினை இற்றைப்படுத்துவதற்கு, ஆராய்ச்சிகளை மேம்படுத்துவதற்கு, சமூக நலன்புரி நடவடிக்கைகளை முறையாக மேற்கொள்வதற்கு, நோயாளர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்களின் அடிப்படைத் தேவைகளை சரியாக இனங்கண்டு அவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு ஒதுக்கப்பட்டுள்ள ஒதுக்கீடுகளைச் உரிய முறையில் பயன்படுத்துவதற்குப் பொருத்தமான பொறிமுறை ஒன்றின் தேவைப்பாடு இதுவரை இனங்காணப்படவில்லை.

# சுகாதாரக் கொள்கை

**நோக்கம் - நிறைவான இலங்கையை கட்டியெழுப்புவதற்குத் தேவையான நோயற்ற மனித வளத்தை நோக்கமாகக் கொண்ட பலம் பொருந்திய ஆரோக்கியம் நிறைந்த பிரசைகளை உருவாக்குவதற்காக சமமான பிரவேசங்களுடன் கூடிய தரமான மற்றும் உயர்ந்தபட்ச வினைத்திறன் கொண்ட பூரணத்துவம் பெற்ற சுகாதார சேவையினை நிலைநாட்டுதல்.**

## தேசிய சுகாதாரக் கொள்கையினைக் கட்டியெழுப்புவதற்கு அடிப்படையாக அமைந்த கோட்பாடுகள்

■ நோய்களுக்கு சிகிச்சையளிப்பதை விட நோய்களைத் தடுப்பதற்கும் அனைத்து பிரசைகளுக்கும் சிறந்த வாழ்க்கை ஒன்றை வழங்குவதற்கும் தேவையான செயற்பாடுகளுக்கு முன்னுரிமை வழங்குதல்.

■ அனைத்து விதமான பூகோள மற்றும் சமூகப் பிரிவினைகள் (ஆண்-பெண் பால் வேறுபாடு, வருமான நிலைமை, தொழிலின் தன்மை, தனிப்பட்ட நட்புறவு) காரணமாக ஏற்பட்டுள்ள சமத்துவமின்மையை நீக்குதல் அரசாங்கத்தின் கடப்பாடு எனக் கருதுதல், சமத்துவமின்மையை நீக்குதல் தொடர்பாக நோய் நிலைமைகளினால் உருவாகும் துன்பங்களை அகற்றி மக்களின் சுகாதாரத் தேவைகளைப் பேணுதல் அரசாங்கத்தினால் முன்னுரிமை வழங்கப்பட வேண்டிய ஒரு பொறுப்பு எனக் கருதுதல் மற்றும் அதற்குத் தேவையான ஒதுக்கீடுகளை வழங்குதல்.

■ சுகாதார சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்காக ஏதேனும் ஒரு குடும்பத்தினால் குடும்ப வருமானத்தில் இருந்து ஒதுக்கப்படும் வீதத்தினை திட்டமிட்ட ரீதியில் குறைப்பதற்காக நீண்டகால வேலைத்திட்டம் ஒன்றைத் தயாரிப்பதற்கு முன்னுரிமை வழங்குதல்.

■ சுகாதார சேவைகளின் தரம் மற்றும் அளவு ரீதியான நிலைமைகளை மேம்படுத்துவதன் மூலம் அரச சுகாதார சேவை தொடர்பாக வீழ்ச்சியடைந்துள்ள நம்பிக்கையினை மீண்டும் உறுதி செய்தல்.

■ மக்களிடம் அறவிடப்படும் வரியினைப் பயன்படுத்துதல் மற்றும் சுகாதார சேவையின் செயற்றிறன் தொடர்பான பொறுப்புக்களை வெளிப்படைத் தன்மையுடன் நிறைவேற்றுதல் மற்றும் சுகாதாரத்திற்கு ஒதுக்கப்படும் நிதி துீ்பிரயோகம் செய்யப்படுவதைத் தடுத்தல்.

■ மேம்பட்ட சுகாதார சேவையினை வழங்குவதற்கான அனைத்து உயர்கல்வி நிறுவனங்கள், அரச சார்பற்ற சேவை வழங்கும் நிறுவனங்கள் மற்றும் இலாப நோக்கமற்ற சேவை வழங்கும் நிறுவனங்களின் பங்களிப்பினைப் பெற்றுக் கொள்ளுதல் மற்றும் ஒருங்கிணைப்புச் செய்தல் ஆகியன அரசாங்கத்தின் பொறுப்பு எனக் கருதுதல்.

■ மக்கள் தாம் விரும்பியவாறு பல்வேறுபட்ட சுகாதார விதிமுறைகள் (மேற்கத்திய மருத்துவம், ஆயுர்வேதம், சித்த வைத்தியம், யூனானி மருத்துவம், ஹோமியோபதி) மூலம் தேவையான சேவைகளைத் தெரிவுசெய்வதற்கு மற்றும் பயன்படுத்துவதற்கான உரிமையை ஏற்றுக் கொள்ளல், அதற்குத் தேவையான வசதிகளை வழங்குதல், அனைத்து சுகாதார விதிமுறைகளையும் ஒழுங்குபடுத்தல், தேவையான விஞ்ஞான ஆராய்ச்சிகளுக்கான வசதிகளை வழங்குதல் மற்றும் மேற்பார்வை செய்தல்.

■ சுகாதார சேவைகளை செயற்றிறன் வாய்ந்ததாக பேணிச் செல்லல், பராமரித்தல், அபிவிருத்தி செய்தல், அனைத்து சேவை பெறுநர்கள் மற்றும் நன்மை பெறுவோரின் பொறுப்பும் கடமையும் எனக் கருதி சுகாதார சேவைகள் தொடர்பாக தீர்மானம் மேற்கொள்ளல் மற்றும் நடைமுறைப்படுத்துவதனை பாரியளவு மக்கள் பங்கேற்புடன் பேணிச் செல்லல் அரசாங்கத்தின் பொறுப்பு எனக் கருதுதல்.

■ தனக்கு வழங்கப்படும் சுகாதார சேவைகள் தொடர்பாக தீர்மானம் மேற்கொள்வதற்கு பொதுமக்களுக்கு உள்ள உரிமையினை ஏற்றுக்கொள்ளல் மற்றும் அந்த உரிமையினைப் பெற்றுக்கொள்வதற்கு இடமளிப்பதற்குப் பொருத்தமான பொறிமுறை ஒன்றை சுகாதாரப் பிரிவு மட்டத்தில் ஏற்படுத்துதல்.

■ அடிக்கடி இற்றைப்படுத்தப்படும் சர்வதேச மற்றும் தேசிய சுகாதாரம் தொடர்பான புதிய அறிவினை செயலூக்கம் கொண்டதாக எமது நாட்டின் சுகாதாரத் திட்டமிடலுக்காக உடனடியாக பயன்படுத்துவதற்கு முடியுமான நிபுணர்களை உள்ளடக்கிய தேசிய குழுவொன்றை நிறுவுதல் மற்றும் அதனை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான அரச அனுசரணையை வழங்குதல்.

■ சரியான மருந்துப் பாவனையினைப் பிரபல்யப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் நோய் பற்றிய தீர்மானம் மேற்கொள்ளத் தேவையான அனைத்து பரிசோதனைகளுக்கான செலவினை அரசாங்கம் பொறுப்பேற்றல்.

■ நோய்களுக்கு வழங்கப்படும் சிகிச்சைகளுக்காக சுகாதார ஊழியர்கள் மற்றும் பொதுமக்களுக்குத் தேவையான விடயத்தினை அடிப்படையாகக் கொண்ட சுகாதாரக் கல்வி அறிவை வழங்குவதற்கு முன்னுரிமை வழங்குதல் – சுகாதாரப் பிரச்சினைகளுக்கான ஆலோசனையின் போது மற்றும் சுகாதார சேவைக்கும் நன்மை பெறுவோருக்கும் இடையிலான இடைத்தொடர்புக்காக புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தல். (e-health system)

■ மிகச் சிறந்த உடல் உள சுகாதார நிலைமையினைப் பேணிச் செல்வதனை மேம்படுத்துவதற்காக ஊக்குவித்தல். (Rewarding healthy behaviour)

■ நோய்களுக்கு சிகிச்சை வழங்கும் போது சுகாதார சேவையின் அனைத்து நிறுவனங்களுக்கும்கூ சுகாதார குழுக்களுக்கும் சிகிச்சை வழிகாட்டியை வழங்குவதற்காக நிபுணத்துவ தொழில்சார் நிறுவனங்களின் ஆலோசனைகள் மற்றும் விஞ்ஞான ரீதியிலான சாட்சியங்களை அடிப்படையாகக் கொண்ட சிகிச்சை வழிகாட்டி ஒன்றை தயாரித்தல். வைத்தியர்களுக்கான ஒழுக்கநெறி முறைமை ஒன்றுடன் கூடியதாக அதனை நடைமுறைப்படுத்துவதற்கு முன்னுரிமை வழங்குதல்.

## ஆரம்ப செயற்பாடுகள்

■ ஒவ்வொரு பிரசையும் ஆரோக்கியமாக வாழ்வதற்குத் தேவையான காரணியாக உள்ள தொற்றும் மற்றும் தொற்றா நோய்களைத் தடுப்பதற்குத் தேவையான நோய்த் தடுப்பு ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வதற்கு, விபத்து அல்லது நோய் ஏற்படும்போது தாமதம் இன்றி தேவையான சிகிச்சைகளைப் பெற்றுக்கொள்வதற்கு, அவ்வாறான ஒன்றின் பின்னர் தேவையான தரமான புனர்வாழ்வுச் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கான உரிமையினை அனைவருக்கும் சமமான முறையில் அரசாங்க செலவில் இலவசமாக பெற்றுக்கொள்வதனை உறுதி செய்வதற்கு அந்த உரிமைகளை அடிப்படை மனித உரிமைகளாக அரசியலமைப்பில் உள்ளடக்குவதற்கு.

■ சுகாதாரத்திற்காக மொத்த தேசிய உற்பத்தியில் 5 சதவீதத்தை முதலீடு செய்வதனை இலக்காகக் கொண்டு எதிர்வரும் ஐந்து ஆண்டுகளில் அதனை 3 சதவீதமாக அதிகரித்தல்.

■ அனைத்து அரச கொள்கைகளிலும் மக்களின் சுகாதாரத் தேவைப்பாடுகளை உறுதிசெய்து பாதுகாப்பதற்காகவும் சுகாதார மேம்பாட்டுக்காகவும் ஏற்புடைய அனைத்து அமைச்சுக்களையும் ஒன்றிணைக்கும் தேசிய சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தை நிறுவுதல் (National Health Promotion Bureau)

■ ஆரம்ப வைத்தியசாலைகள், பிரதேச, ஆதார, மாகாண, பொது வைத்தியசாலைகள் மற்றும் போதனா வைத்தியசாலைகளுக்கு இடையில் முறையான ஓர் ஒருங்கிணைப்பு நிலவும் விதமாக மற்றும் சிகிச்சை சேவைகளுக்காக முன்னிலைப்படுத்தலை முறைமைப்படுத்துவதற்காக மற்றும் விசேட நிபுணத்துவ சேவைகளை வழங்குவதற்கான பொறிமுறை ஒன்றைத் தயாரித்தல்.
(Satellite specialized services)

■ வைத்தியசாலைகளுக்கு இடையில் தொழில்நுட்ப அறிவினைப் பரிமாற்றுதல் வுநடநஅநனளைஉளைநெ போன்ற தொழில்நுட்பங்கள் அறிமுகப்படுத்தப்படும். இனம் காணப்பட்ட ஆரம்ப, இரண்டாம்நிலை மற்றும் மூன்றாம்நிலை வைத்தியசாலைகளை ஒன்றுடன் ஒன்று இணைத்து அவற்றில் உள்ள வசதிகள் மற்றும் விசேட நிபுணத்துவ சேவைகளில் மிகவும் செயற்றிறனுள்ள சேவையைப் பெற்றுக்கொள்வதற்கான பரிமாற்றல் முறையினை ஏற்படுத்தல் (shared care cluster system)

■ ஆரம்ப வைத்தியசாலைகளில் இருந்து இரண்டாம்நிலை மற்றும் மூன்றாம்நிலை வைத்தியசாலைகளுக்கு நோயாளர்களை அனுப்புவதற்கு மற்றும் குணமடைந்த பின்னர் நோயாளர்களை முதலாவது வைத்தியசாலை வரை கொண்டு செல்வதற்குப் பொருத்தமான பிணியாளர் காவு வண்டிச் சேவையும் அவசர நிலைமைகளின் போது நோயாளர்களை வீட்டில் இருந்து போக்குவரத்து செய்வதற்குப் பொருத்தமான சேவையாகவும் காணப்படும் பிணியாளர் காவு வண்டி சேவைகளை விருத்திசெய்தல். (Efficient Referral system) பிணியாளர் காவு வண்டிச் சேவைக்காக (திடீர் விபத்து முகாமைத்துவத்திற்காக) தொழில்நுட்ப உத்தியோகத்தர் உள்ளடங்கிய குழு ஒன்றை நியமித்தல் - (Emergency Medical Technesian)

■ தேவைக்கு ஏற்ப ஒவ்வொரு நபருக்கும் அரசாங்கம் சார்பில் பொறுப்புக் கூறும் குடும்பத்தின் மருத்துவர் ஒருவரின் பாதுகாப்பினை வழங்குவதற்கான நீண்டகால வேலைத்திட்டம் ஒன்றைத் திட்டமிடல். ஏற்புடைய அனைத்து நபர்கள்கூ குடும்பங்களைப் பதிவுசெய்தல். (Community Doctor with a Supporting Team). முதலாம் சுற்றில் அனைத்து மாகாணங்களும் உள்ளடங்கும் வகையில் தெரிவுசெய்யப்பட்ட பிரதேச செயலகப் பிரிவுகளில் உள்ள 1,000 குடும்பங்களுக்காக குடும்ப வைத்தியர் ஒருவரை உள்ளடக்கிய குழுவொன்றை நியமித்தல். தொற்றா நோய்களைத் தடுத்தல் மற்றும் தேவையான சிகிச்சைகளை வழங்குதல் தேவையான இடங்களுக்கு அனுப்பப்பட்டதன் பின்னர் விசாரித்தலை அக் குழுவின் பொறுப்பாக மாற்றுதல்.

■ அனைத்து சுகாதார உத்தியோகத்தர்களதும் செயலாற்றுகை மதிப்பீட்டுக்கான வேலைத்திட்டம் - நோய்க் கட்டுப்பாட்டுடன் இணைந்த ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள்கூ பதவியுயர்வுகள்கூ நன்மைகள் (Apprasial system & rewarding mechanism)

■ சிகிச்சை வழிகாட்டலைத் (Clinical Guidelines) தயாரிப்பதற்கு, அனைத்து வைத்தியசாலைகளுக்கும் அவற்றை அறிமுகப்படுத்துவதற்கு மற்றும் ஒழுங்குபடுத்துவதற்கு தேசிய ரீதியிலான குழுவொன்றை நியமித்தல்.

■ நோயாளர்களின் உரிமைகள் தொடர்பான சாசனம் ஒன்றைத் தயாரித்து பாராளுமன்றத்தில் சட்டமாக்குதல். (Patient Charter)

■ வைத்தியசாலைகளின் சேவைகளை ஒழுங்குபடுத்துவதற்காக சுயாதீன சபை ஒன்றை நியமித்தல். (External Accreditation Council)

■ கைத்தொழில்சாலைகள் மற்றும் சேவை நிலையங்களில் இடம்பெறும் தொழில் ரீதியான விபத்துக்கள் மற்றும் சுகாதாரப் பிரச்சினைகளை ஒழுங்குபடுத்தல் மற்றும் தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அதிகார சபை ஒன்றை தாபித்தல்.
(Occupational Health Authority)

■ பொதுச் சுகாதார சேவைகள் தொடர்பான அனைத்து சட்டங்களையும் இற்றைப்படுத்தல்.

■ சுகாதாரத்தைப் பேணும் மக்கள் சமூகம் ஒன்றை கட்டியெழுப்புவுதற்கான சுகாதாரத்தை அபிவிருத்தி செய்தல் தொடர்பான ஆராய்ச்சிகளை ஒருங்கிணைப்புச் செய்வதற்கு சுகாதார அமைச்சுடன் இணைந்த புறம்பான ஆராய்ச்சிப் பிரிவு ஒன்றை ஏற்படுத்தி அனைத்து விஞ்ஞான ரீதியிலான ஆராய்ச்சி நிறுவனங்களையும் ஒன்றிணைத்து அதன் மூலம் மிகவும் பொருத்தமான பரிகார – நோய்த் தடுப்பு முறைகளை பிரபல்யப்படுத்தல் மற்றும் விருத்தி செய்வதனை ஊக்குவித்தல்.

■ மேற்கத்திய மற்றும் ஆயுர்வேத மருத்துவம், ஹோமியோபதி, சித்த வைத்தியம், யூனானி மற்றும் உள்நாட்டு மருத்துவம் போன்ற பல்வேறு மருத்துவ முறைகளை விஞ்ஞான அடிப்படையில் ஒன்றிணைந்த சேவைகளாக மக்களுக்கு வழங்குவதற்கான ஆற்றல் அத் துறைகளில் உள்ள விசேட நிபுணர்களின் உதவியுடன் கண்டறியப்படும். தற்போது தரமற்ற அனைத்து சிகிச்சை சேவைகள் மற்றும் மருந்து வகைகளை தரப்படுத்தலுக்கு உட்படுத்தல்.

■ உள்நாட்டு பாரம்பரிய மருத்துவ முறைகள் தொடர்பாக விரிவாக ஆய்வு செய்து அவ்வாறு பெற்றுக்கொள்ளப்பட்ட அறிவினை பாதுகாப்பதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளல்.

■ மேற்கத்திய மற்றும் ஆயுர்வேத மருத்துவம், ஹோமியோபதி, சித்த வைத்தியம், யூனானி மற்றும் உள்நாட்டு மருத்துவ சேவைகளின் நிர்வாகம் ஒரே அமைச்சின் கீழ் கொண்டு வரப்படும். ஏற்புடைய அமைச்சுக்களை ஒன்றிணைப்பதன் மூலம் பொதுச் சுகாதார சேவைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களால் வழங்கப்படும் சுகாதார சேவைகளை ஒருங்கிணைத்து மிகச் சிறந்த செயற்றிறன் வாய்ந்ததொரு சேவை அடிமட்டத்தில் வழங்கப்படுவதனை உறுதிசெய்தல்.

■ ஔடதச் சட்டத்தை மக்கள் நேயம் மிக்கதாக திருத்தி நடைமுறைப்படுத்தல்.

## ஆரம்பநிலை சுகாதார சேவைகளை மேம்படுத்துதல்

- அனைத்து மருத்துவமனைகளிலிருந்தும்/சுகாதார நிறுவனங்களிலிருந்தும் பெற்றுக் கொள்ள முடியுமான சேவைகள் தொடர்பான தகவல்கள் காட்சிப்படுத்துதல் - இணையத்தளத்தில் - தொலைபேசியின் மூலம் சேவைகள் தொடர்பாக அறிந்துகொள்வதற்கு வசதிகளை ஏற்படுத்துதல்.
- வேலைசெய்யும் மக்களுக்கு வெளிநோயாளர் பிரிவில் மற்றும் மருத்துவ சிகிச்சையை பெறுவதற்கு வசதியாக வார நாட்களில் காலை 8.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை மற்றும் ஞாயிற்றுக்கிழமையும் உள்ளடங்கும் வகையில் அச்சேவைகளை விரிவுபடுத்துவதற்கு நடவடிக்கையெடுத்தல்.

- சேவைகளைப் பெற்றுக்கொள்ளும்போது நேர அட்டவணைக்கமைய வழங்கப்படுகின்ற வாய்ப்புகள் உதாரணமாக காலை 8.30 முதல் 9.30 இடைப்பட்ட காலப்பகுதிக்குள் ஒரு மருத்துவருக்கு ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையிலான நோயாளிகளை வழங்குதல்.

- வரவேற்கும் அலுவலர் ஒருவர் மூலம் அனைத்து சேவைகளுக்காகவும் அனுப்புதல்- திசைகளை அடையாளமிடுதல்- மருந்தகம்/ஆய்வகம்/ குடிநீர்/ கழிப்பறை ஆகியவை தொடர்பாக விழிப்பூட்டல்.

- வெளி நோயாளர் பிரிவு மூலம் வழங்கப்படுகின்ற சிகிச்சை சேவைகள் - குறைந்தபட்சம் 12 மணித்தியாலங்கள் - தொலைபேசி மூலம் தொடர்படுத்தும் இயலுமை.

- நோயாளியொருவர் மருத்துவமனையில் சேர்க்கும்போது நோயாளிக்கு கட்டில் வழங்கப்படுவதை உறுதிசெய்வதற்காக பொறுப்பானதொரு அதிகாரியை நியமித்தல், உரிய நோயாளர் அறையில் உள்ள கட்டில்கள் எண்ணிக்கையை அல்லாது மருத்துவமனையிலுள்ள மொத்தக் கட்டில்களின் எண்ணிக்கையைக் கருத்திற் கொள்ளல்.

- ஒரு நோயாளி எவ்வாறு பரிசோதிக்கப்பட வேண்டும் என்பதற்கான நெறிமுறை முறைமையொன்றினை தயாரித்தல் - அதனை நோயாளிகள் அறியும் பொருட்டு காட்சிப்படுத்துதல் - ஒரு நோயாளி எவ்வாறு நடத்தப்பட வேண்டும் என்பதை எழுத்து மூலம் காட்சிப்படுத்துதல் - நோயாளிகள் எதிர்நோக்கும் சிக்கல்களுக்கு ஏற்ற துலங்களைக் காட்டுதல் - அவற்றினை செவிமடுத்தல்.

- குறிப்பிட்ட திகதிகளில சேவைக்கால எல்லைக்குள் சேவையில் ஈடுபட்டுள்ள சுகாதார ஊழியர்களின் பெயர்ப்பட்டியலைக் காட்சிக்கு வைத்தல்.

- நோய் தொடர்பில் சிகிச்சையளிக்கப்படுகின்ற திட்டத்தை மருத்துவரால் அல்லது தாதி மூலம் தெளிவுபடுத்துதல் - மீண்டும் சமூகமளிக்க வேண்டிய திகதி - நோய் குணமடையாது அதிகரித்திருப்பின் கடைப்பிடிக்கப்பட வேண்டியவைகளும், குணமடைந்ததன் பிறகு பின்பற்றப்படவேண்டியவைகள் - தேவைப்பட்டால் பரிசோதனைகளுக்கு உட்படுத்துதல் மற்றொரு மருத்துவரிடம் பரிந்துரைத்தல்/ மருந்துகளை வெளியிடும் அலுவலரிடம் மருந்துகள் கையாளுவது குறித்த மதியுரைகள்/ நிறுவனத்தில் கிடைக்காத சேவைகள்/ பரிசோதனைகள்/ மருந்துகள் பற்றியும் அச்சேவைகள் பெற்றுக்கொள்ளும் முறைத் தொடர்பான மதியுரைகளும்.

- நோய்களை கண்டறிவதற்காக மேற்கொள்ளப்படுகின்ற பரிசோதனைகள் உயர் தொழில்நுட்பம் கையாளப்பட்டு நவீனமயமாக்கப்படுவதுடன், பரிசோதனை முடிவுகள் குறித்து விளக்கமளிப்பதற்கு மருத்துவர் ஒருவரின் அல்லது தாதியர் ஒருவரது சேவை 24 மணி நேரத்திற்குள் வழங்குதல்.

- அனைத்து மருத்துவமனை ஆய்வுகூடங்களுக்காக சர்வதேச வகைப்படுத்தும் முறையினை அறிமுகப்படுத்துதல் (ISO standards)

- மருத்துவமனைகளில் அனைத்து சுகாதார சேவைகளின் தரத்தை பேணுவதற்காக உள்ளக குழுவொன்றினை நியமித்தல் (Active Internal Quality Assurance Unit )

- நோயாளி மருத்துவமனைக்கு வருகைத்தந்து மருந்தினைப் பெற்று வெளியேறும் வரையிலான அனைத்து நடவடிக்கைகள், நோய் பற்றிய வரலாறு, பரிசோதனைகள்,

நோய் கண்டறிவுகள், சிகிச்சை மற்றும் பின்தொடர்தல் திட்டம் தொடர் எண் வழங்கி கணினிமயமாக்கல். (e-health system)

- தூய அழகிய சுற்றாடல் - வாசிப்பதற்கு புத்தகங்கள் மற்றும் சஞ்சிகைகள்- குழந்தைகளுக்கு கூடி விளையாடுவதற்கான ஓர் இடம் - முக்கியமான சுகாதார தகவல்களை அறிந்து கொள்வதற்கான வாய்ப்புகள் / காணொளிக் காட்சிகள்.

- இரண்டாம்நிலை, மூன்றாம்நிலை மருத்துவமனைகளுக்கு அவசர நோயாளிகளை கொண்டுசெல்வதற்காக மருத்துவ ஊர்தியொன்று - மருத்துவ ஊர்தி மருத்துவமனையிலிருந்து வெளியே செல்லும் காலத்தைக் குறைப்பதற்கான நடவடிக்கைகள், ஆரம்பநிலை மருத்துவமனைகளுக்கு கொண்டுசெல்வதற்கும் மற்றும் குணமடைந்ததன் பின்னர் நோயாளிகளை மீண்டும் ஆரம்பத்தில் இருந்த மருத்துவமனைகளுக்கு கொண்டு செல்லல்.

- முறைப்பாடுகளை செய்வதற்கான வசதிகள் ஏற்படுத்தி சமர்ப்பிக்கப்படும் முறைப்பாடுகள் தொடர்பில் உடனடியாக நடவடிக்கைகள் எடுத்தல். உரிய தாபனத் தலைவரின் பொறுப்பாக கருதுதல், மேற்பார்வைக்காக குறிப்பிட்ட பிரதேசத்தின் நிபுணத்துவ அங்கத்தவர்களை உள்ளடக்கிய மருத்துவமனைக் குழு நியமித்தல்.

- நோயாளிகளுக்கு பொறுப்புகூற முடியுமான மருத்துவமனை முகாமைத்துவ சேவையை ஏற்படுத்துதல். அனைத்து மருத்துவ மனைகளிலும் இடம்பெறுகின்ற சிகிச்சை சேவைகள் அவற்றின் வெற்றியினை அளவிடும் பொருட்டு ஒழுங்குபடுத்துதல்.

- நற்பண்புகளையுடைய, நட்புறவு வினைத்திறன்மிக்க சேவைகளுக்காக பணியாளர்களை மதிப்பிடும் நிகழ்ச்சித்திட்டத்தைத் தயாரித்தல்.

## தீவிர சிகிச்சைகள்

- அவசர சுகாதாரத் தேவைகளுக்காக விசேடமாக ஒதுக்கப்பட்ட 24 மணித்தியாலங்கள் பூராவும் இயங்குகின்ற தொலைபேசி இலக்கம் அனைத்து மாவட்டங்கள், அடிப்படை மற்றும் மாகாண மருத்துவமனைகளுக்கும் அறிமுகப்படுத்தப்படுவதுடன் அந்தந்த தாபனங்கள் மூலம் அளிக்கப்படுகின்ற சுகாதார சேவைகள் குறித்த தகவல்களை வழங்கும் நிலையமொன்று அனைத்து மருத்துவமனைகளிலும் நிறுவுதல்.

- அனைத்து மருத்துவமனைகள், சுகாதார நிறுவனங்கள், பாடசாலைகள், அலுவலகங்கள், வேலைத்தலங்கள் மற்றும் பொது மக்கள் அதிகமாக நடமாடும் இடங்களுக்கு முதலுதவி/ அவசர சிகிச்சை சேவைகளை வியாபித்தல்.

- திடீர் ஆபத்தொன்றின்போது உயிரிழப்போரின் எண்ணிக்கை மற்றும் சிக்கல்களைக் குறைப்பதற்காக அனைத்து வைத்தியசாலைகளிலும் அக்காரணம் குறித்து திட்டமொன்றினைத் தயாரித்தல் மற்றும் வசதிகளை மேம்படுத்துதல்.

### மருந்துப் பொருள்களும் பரிசோதனைகளும்

- அரச துறையில் அத்தியவசியமான மருந்துப்பொருள் உபகரணங்கள் மற்றும் பரிசோதனை வசதிகளின் பற்றாக்குறை மற்றும் தரமற்ற நிலையை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன் அந்த அனைத்து பிரிவுகளுக்கும் தனியார் துறைக்கும் தாக்கம் விளைவிக்கக்கூடிய வகையில் தேசிய கொள்கையொன்றினைத் தயாரித்தல்.

- ஔடத சட்டத்தை மிகவும் மக்களுக்கு உகந்த வகையில் திருத்தி அமுலாக்கல், அனைத்து மருத்துவமனைகளையும் உள்ளடக்கும் வகையில் அத்தியாவசிய மருந்துப் பொருள்களின் பட்டியலை அறிமுகப்படுத்தல்.

- தரமான மருந்துப்பொருள்களை மட்டுமே சந்தைக்கு வழங்குவதுடன் மருந்துப்பொருள்களின் உள்ளடக்கம் மற்றும் அவற்றினால் ஏற்பட முடியுமான பக்க விளைவுகள் குறித்து விழிப்புணர்வை முறைசார்படுத்துதல். மருந்துகளின் தரத்தை பரிசோதிப்பதற்குப் போதுமான ஆய்வுகூட வசதிகள் ஏற்படுத்துதல்.

- மலிவு விலையில் தரமான மருந்துகளை பொதுமக்களால் பெற்றுக்கொள்ளக்கூடியவாறு அரச மருந்தகங்களின் அளவை அதிகரிப்பதுடன் இப்போதைக்கு போதியளவு வர்த்தக நிலையங்கள் இல்லாத பிரதேசங்களுக்கு முன்னுரிமையளித்தல்.

- மருந்துகள் மற்றும் சாதனங்களின் உள்நாட்டு உற்பத்தியை மேம்படுத்துவதற்காக அரசு மற்றும் அரசு சாரா மற்றும் தனியார் கூட்டு முயற்சிகளுக்கு ஊக்குவிப்பு வழங்குதல். அதற்காக அத்தகைய தயாரிப்புகளில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களுக்கு வரிச் சலுகைகளை வழங்குதல்.

## நாட்பட்ட நோய்களுக்கான சிகிச்சைகள்

தொற்றுநோய்கள் அல்லாத நோய்களின் பரவலைக் குறைப்பதற்கு கவனக் குழுக்களுக்காக தோனையிடல்களை அறிமுகப்படுத்தல்.

தற்போது வழங்கப்படுகின்ற சேவைகள் மறுசீரமைத்தல், அனைத்து நாட்பட்ட நோய்களுக்காக சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்வதற்கு உரிய சிகிச்சை சேவைகள் ஒழுங்குபடுத்துதல்.

I. 40 வயதுக்கு மேற்பட்ட அனைத்து நபர்களும் குறைந்தது வருடத்திற்கு ஒரு முறையாவது முழுமையான மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டும்.

II. தொற்றாத நோய்கள் (இதய நோய், உயர் இரத்த அழுத்தம், நீரிழிவு நோய், அதிக கொழுப்பு) காரணமாக ஏற்படும் சிக்கல்களைக் குறைப்பதற்கு சமூக அடிப்படை நிகழ்ச்சித்திட்டத்தினை அறிமுகம் செய்தல்.

III. சிறுநீரகம் மற்றும் புற்றுநோய் ஆகிய நோய்களுக்கு ஆளாகியுள்ள நோயாளிகளுக்காக சமூக பராமரிப்புச் சேவைகளை அறிமுகப்படுத்துதல். அந்த நோய்களைத் தடுப்பதுடன் தொடர்புடைய ஆராய்ச்சிகளுக்கு முன்னுரிமை அளித்தல். இதற்காக சர்வதேச ஆராய்ச்சிக் குழுக்களின் உதவியினைப் பெற்று அந்தப் பணிகளை விரைவுபடுத்தல்.

IV. திடீர் விபத்துக்கள் மற்றும் வீதி விபத்துக்கள் காரணமாக ஏற்படும் இயலாமை மற்றும் உயரிழப்புகளை குறைப்பதனுடன் தொடர்புடைய தாபனங்களுடன் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு நிலையான நிகழ்ச்சித்திட்டமொன்றினை தயாரித்தல்.

V. கண் நோய்களைத் தடுப்பதற்கும் சிகிச்சையளிப்பதற்கும் சுகாதார அமைச்சின் தொற்று நோயல்லாத நோய்கள் பிரிவுக்குள் பிரிதொரு தனிப்பட்ட அலகினை அமைத்தல்.

# நோய்த் தடுப்பு

- தாய், சேய் மற்றும் நோய்த்தடுப்பு சுகாதார சேவைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படுவதுடன், பாடசாலை மாணவர்களுக்கும் மற்றும் அனைத்து பிரஜைகளுக்கும் தற்போது அதிகமாக காணப்படுகின்ற நோய்களுக்கு பொருந்தும் அடிப்படை சுகாதாரக் கல்வியை வழங்குதல்.

- தரம் ஒன்றுக்கு மாணவர்களை சேர்க்கையில் ஒவ்வொரு மாணவருக்கும் உரிய மருத்துவ அறிக்கையொன்றினைத் தயாரித்தல் மற்றும் ஊனமுள்ள அல்லது சுகாதார ரீதியில் பிரச்சினைகள் உள்ள மாணவர்களுக்காக வழக்கமான பரிசோதனைக்குட்படுத்துதல்.

- இனப்பெருக்க சுகாதார மேம்பாட்டுக்காக இளைஞர் யுவதிகளுக்கு இலகுவில் அணுகக்கூடியவாறான சுகாதாரப் பராமரிப்பு முறைமையை ஏற்படுத்துதல்.

- உள்ளூராட்சி, வர்த்தகம், உணவு, விவசாயம் , கடற்றொழில், கால்நடைகள், கல்வி, ஊடகத்துறை, பொது நிதி, நீர், சுற்றாடல், தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சி உள்ளிட்ட பல்வேறு துறைகளில் அரச நிறுவனங்களைப் போன்று சிவில் சமூக அமைப்புகளிலும், பொது மக்களினதும் உள்நாட்டு மற்றும் சர்வதேச வல்லுநர்களின் மற்றும் அமைப்புகளினதும் பங்களிப்புடன் மற்றும் ஒத்துழைப்புடன் இப்போதைக்கு பரவலாக வியாபித்து வருகின்ற நோய்கள் மற்றும் விபத்துக்களை துரிதமாக கட்டுப்படுத்துவதற்காக இலக்குமயப்படுத்திய திட்டங்கள் செயல்படுத்தப்படுவதுடன் அதன் கீழ் டெங்கு நோய், எலிக்காய்ச்சல் மற்றும் வெறி நாய்க்கடி போன்ற நோய்கள் பொதுவான சுகாதார பிரச்சினை அல்லாத அளவுக்கு கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கையெடுக்கப்படும். தற்போது கட்டுப்படுத்தியுள்ள மலேரியா மற்றும் ஆணைக்கால் போன்ற நோய்கள் போன்று தலைவிரித்தாடாமல் இருக்கும் அளவுக்கு நீண்டகால நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

- டெங்கு நோய் கட்டுப்படுத்துவதற்கு முன்னுரிமை வழங்கப்படுவதுடன் சமூக அடிப்படையிலான கருத்திட்டங்கள் மூலம் கொசு அடர்த்தியினைக் கட்டுப்படுத்துவது உள்ளூராட்சி நிறுவனங்களின் முதன்மை நடவடிக்கையாக உருவாக்கி அதனை ஒழுங்குபடுத்துதல், சுகாதார அமைச்சின் தலைமைத்துவத்தில் இடம்பெறும்.

- போதைப்பொருள்களைத் தடுப்பதாயின் போதைப்பொருள்கள் இந்நாட்டிற்கு கொண்டு வருவதனைக் கட்டுப்படுத்துவதற்காக கடுமையாக சட்டதிட்டங்கள் முறைமையொன்று அறிமுகப்படுத்தப்பட வேண்டியதுடன் அதனால் வழக்குகளை விசாரணைகள் துரிதப்படுவத்துவதன் மூலம் அது நடைமுறையில் தொடர்ந்தும் ஈடுபட்டு வருபவர்களைக் குறைப்பதற்கு உதவும்.

- பொதுச் சுகாதாரத்துடன் தொடர்புடைய சுற்றுச்சூழல் சுத்தம் மற்றும் உணவு நலவியல் குறித்து விதிக்கப்பட்டுள்ள சட்டத்திட்டங்களை அமல்படுத்துவதன் மூலம் மக்களின் அடிப்படை சுகாதார உரிமைகளை பாதுகாத்தல்.

- தரமான மலசலகூடங்கள் இல்லாத அனைத்து குடும்ப அலகுகளுக்கும் உள்ளூராட்சி நிறுவனங்கள் மூலம் இலவசமாக மலசலகூடங்களை அமைத்தல்;, மக்கள் அதிகமாக நடமாட்டம் கொண்ட இடங்களில் பொது மலசலகூடங்களை அமைத்தல்.

- குழந்தைகள் மத்தியில் ஆரோக்கியமான உணவு பழக்கத்தை ஏற்படுத்தும் பொருட்டு உரிய தேசிய நிகழச்சித்திட்டமொன்று மற்றும் கல்வித் நிகழ்ச்சித்திட்டங்களை தயாரித்து செயற்படுத்துதல், இங்கு தொடர்புடைய அனைத்து அமைச்சுக்களை சரியான முறையில் ஒருங்கிணைத்தல்.

## தொற்றா நோய்த் தடுப்பு

தற்போது இதய நோய்கள் (அதிக கொழுப்பு, உயர் இரத்த அழுத்தம் போன்ற ஆரம்பத்திலே கண்டறிந்து கொள்ள முடியுமான அபாயம் விளைவிக்கின்ற), நீரிழிவு நோய், நாள்பட்ட சுவாச நோய், நாள்பட்ட சிறுநீரக நோய், பக்கவாதம், புற்றுநோய் மற்றும் மன நோய்கள் ஆகியவை நம் நாட்டு மக்கள் முகங்கொடுத்து வருகின்ற பிரதான தொற்றுநோயற்ற நோய்களாக மாறிவிட்டன. வயதுவயந்தோர் தொகையில் அதிகரிப்பு, திட்டமிடப்படாத நகரமயமாக்கல் மற்றும் வாழ்க்கை முறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் ஆகியவை தொற்றுநோயற்ற நோய்களின் அதிகரிப்புக்கு முக்கிய காரணங்களாகும். அதாவது புகைப்பழக்கம், மதுபானம் அருந்துதல், உடல் பருமன் மற்றும் ஆரோக்கியமற்ற உணவு ஆகிய காரணங்கள் தொற்றுநோயற்ற நோய்களுக்கான ஆபத்தை விளைவிக்கக்கூடிய காரணிகளாக மாறியுள்ளது. தொற்றுநோயற்ற நோய்களைத் தடுக்கவும், மாறக்கூடிய ஆபத்து காரணிகளைக் குறைக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

- இது உலக சுகாதார அமைப்பின் (Framework for convention of Tobacco control) அமைய செயற்பட்டு வருவதுடன் தேசிய புகையிலை மற்றும் மதுபான அதிகாரச் சட்டத்தை மேலும் வலுப்படுத்தல்.

- ஆரோக்கியமான உணவு மேம்படுத்துதல் கல்வி, விவசாயம் மற்றும் வர்த்தக கொள்கைகளில் முக்கிய நோக்காக உறுதிப்படுத்தப்படுவதுடன் அதற்காகத் தேவைப்படுகின்ற திருத்தமான முகப்புச் சீட்டு, நடைமுறை வழக்கங்களுக்கு அமைவான விளம்பரங்கள், துல்லியமான தகவல்களை வாடிக்கையாளர்களுக்கு வழங்குதல் பொறுப்புடனான வர்த்தகத்தினை வலுப்படுத்துதல்.

- கல்வி, விளையாட்டு மற்றும் போக்குவரத்து கொள்கைகளுக்குள் உடல் ரீதியான செயற்பாடுகளை மேமப்டுத்துவதற்காகத் தேவையான நடவடிக்கைகள் உள்ளடக்கப்படுவதுடன் உள்ளூராட்சி நிறுவனங்கள் மற்றும் பணிபுரியும் இடங்களில் கூடி நடந்துசெல்லல், சைக்கிள்களை ஓட்டிச் செல்லல் மற்றும் பல்வேறு விளையாட்டுக்கள் குறித்து வசதிகளை அறிமுகப்படுத்துதல்.

## உள ஆரோக்கியம்

தேசிய மனநல சுகாதார தரவுகளின்படி, ஒவ்வொரு பத்து பேரில் ஒருவர் ஏதேனும் ஒரு காரணம் தொடர்பில் உள ரீதியாக பாதிக்கப்படுகிறார்கள், அதில் சுமார் 20% பேர் மட்டுமே சிகிச்சை பெறுகின்றனர்.

- உள ரீதியான ஆரோக்கியத்தை மேம்படுத்துதல் மற்றும் மனநோயைத் தடுப்பதற்கும் ஒரு முறையான திட்டத்தை தயாரித்தல்.
- மனநலம் பாதிக்கப்பட்டவர்களின் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.
- மனநோய்க்கு சிகிச்சையளிக்கும்போது சமூக அடிப்படையிலான சிகிச்சைக்கு முன்னுரிமை அளித்தல்.

## உணவும் போசாக்கும்

தாயின் வயிற்றில் இருந்து மரணிக்கும் வரை உரியவாறு போசாக்கு கிடைக்கப் பெறல் ஆரோக்கியமாக வாழ்வதற்கான ஓர் அடிப்படைத் தேவையாக உள்ளது. இது சுகாதாரம், விவசாயம், வர்த்தகம் மற்றும் பொருளதாரம் ஆகிய துறைகளுடன் பின்னிப்பிணைந்துள்ளது. சுகாதாரமான உணவுப் பாதுகாப்பானது ஒட்டு மொத்த வாழ்க்கைச் சுற்றோட்டத்தினையும் உறுதி செய்வதற்கு வழிவகுக்கின்றது.

■ பழவகைகள் மற்றும் மரக்கறி உற்பத்தியின்போதும் விநியோகித்தல் மற்றும் விற்பனையின் போது சுகாதாரப் பாதுகாப்பு மற்றும் தரத்தினைப் பாதுகாத்தல்.

■ உணவு மற்றும் பான வகைகளைத் தயாரிக்கும் போது மற்றும் சந்தைப்படுத்தும்போது அதில் விசப் பொருட்களைக் கலத்தல் மற்றும் தரமற்ற வகையில் உணவு மற்றும் பானங்களை உற்பத்திசெய்யும் மற்றும் விற்பனைசெய்யும் நபர்களுக்கு எதிராக சட்டத்தை கடுமையாக நடைமுறைப்படுத்தல். அச்செயற்பாடுகளை பாரதூரமான குற்றச்செயல்களின் கீழ் உள்ளடக்குதல்.

■ சுத்தமானதாகவும் உயர்ந்த தரத்தைக் கொண்டதாகவும் உணவகங்கள் நடாத்திச் செல்லப்படுவதை உறுதிசெய்தல்.

■ சந்தை மற்றும் அனைத்து வீட்டு உணவுப் பொருள்கள் மற்றும் நீரின் பாதுகாப்பை உறுதிசெய்வதற்குத் தேவையான வெளிக்கள உத்தியோகத்தர்கள் மற்றும் ஆய்வுகூடங்கள் உள்ளிட்ட ஏனைய வசதிகளை விருத்திசெய்து முறைசார்ந்த ரீதியில் மேற்கொள்ளப்படும் மேற்பார்வைப் பொறிமுறை ஒன்று மூலம் ஒழுங்குபடுத்தல்.

■ பல்வேறு வயதுப் பிரிவுகளில் உள்ள நபர்களுக்கு பாதகமாக அமையக்கூடிய தொற்றா நோய்களுக்கு ஆளாகும் போக்கினை அதிகரிக்கும் உணவு வகைகள்கூபானங்கள் தொடர்பான விளம்பரங்களை முற்றாகத் தடைசெய்தல்.

■ குறுங்கால மற்றும் நீண்டகால போசாக்கின்மை மற்றும் உடற் பருமன் அதிகரிப்பினால் அவதிப்படும் சிறுவர்கள் மற்றும் நபர்களை இனம் கண்டு அவர்களுக்கான சமுதாயத்தை அடிப்படையாகக் கொண்ட மற்றும் முன்பள்ளி, பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்ட நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.

■ ஏற்புடைய அனைத்து நிறுவனங்களையும் ஒன்றிணைத்து தரமற்ற மற்றும் மக்கள் பாவனைக்குப் பொருந்தாத உணவு இறக்குமதி, விநியோகம், விற்பனை மற்றும் நுகர்வுக்கான சந்தர்ப்பத்தை முற்றாக தடுத்தல்.

## வயது மூப்படைதல் காரணமாக எதிர்நோக்கும் பிரச்சினைகள்

■ உற்சாகம் நிறைந்த உடல் உள சமநிலையுடன் கூடிய ஆரோக்கியமான முதுமைப் பருவத்தைக் அனுபவிக்கத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

■ வயதுவந்தோர் சனத்தொகைக்குத் தேவையான விசேட வசதிகளை அனைத்து அரச நிறுவனங்களிலும் துரிதமாக தாபித்தல்.

■ ஓய்வு காலத்தை அர்த்தமுள்ள வகையில் கடத்துவதற்காக ஓய்வூதியத்திற்கு முன்னரான ஆலோசனைச் சேவை ஒன்றை ஆம்பித்தல்.

■ சிரேஷ்ட பிரசைகளுக்கான பகல் நேர பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டம் மற்றும் நோய் வாய்ப்பட்ட நலிவடைந்த நிலையில் உள்ள முதியோருக்கு வதிவிட வசதிகளை வழங்க முடியுமான சமுதாயத்தை அடிப்படையாகக் கொண்ட கருத்திட்டங்களை அறிமுகப்படுத்தல்.

## தொழில்சார் சுகாதாரமும் பாதுகாப்பும்

■ சேவை நிலையங்களில் இடம்பெறும் தொழில் ரீதியான விபத்துக்கள் மற்றும் சுகாதாரப் பிரச்சினைகளை ஒழுங்குபடுத்தல் மற்றும் தடுப்பதற்கான அதிகார சபை ஒன்றை தாபித்தல்.

■ அனைத்து தொழில் புரியும் மக்களையும் ஆண்டு தோறும் பூரண மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தல்.

■ அனைத்து தொழிற்சாலைகளிலும் சுகாதார சிகிச்சை நிலையங்களையும் கட்டாயப்படுத்தல்.

■ தொழில் காரணமாக இடம்பெறும் திடீர் விபத்துக்களை குறைப்பதற்கு துரித நடவடிக்கை எடுத்தல். அதற்கான சட்டங்களை இற்றைப்படுத்தல்.

■ வெளிநாட்டு வேவை வாய்ப்பிற்காகச் செல்லும் நபர்கள் மற்றும் குடிபெயர்கின்ற நபர்களுக்கான விசேட சிகிச்சைகளை வழங்குதல்.

## சுகாதார ஆளணியினர்

■ சுகாதார ஆளணியினரின் தொழில்சார் திருப்தியை அதிகரிப்பதற்கான அறிவு மற்றும் திறன்களை இற்றைப்படுத்துவதற்கும் அவர்கள் எதிர்கொள்ளும் சம்பளம், படிகள், மற்றும் வீடின்மை, போக்குவரத்துப் பிரச்சினைகள் மற்றும் நலன்புரி குறைபாடுகள் உள்ளிட்ட தொழில் ரீதியான பிரச்சினைகளுக்கு நியாயமான தீர்வுகளை வழங்குவதற்கு உயர்ந்தபட்ச நடவடிக்கை எடுத்தல்.

■ மருத்துவக் கல்வி உள்ளிட்ட அனைத்து சுகாதார தொழில்சார் கல்வியினை அரச பல்கலைக்கழகம் மற்றும் அரச நிறுவனங்கள் மூலம் முறையாகவும் விரிவான முறையிலும் மேற்கொள்ளல். இதன் மூலம் பல்கலைக்கழக நுழைவுப் பரீட்சையில் சித்தியடையும் மாணவர்களுக்கு இத் தொழில்களைப் பெற்றுக்கொள்வதற்கு கூடுதல் வாய்ப்புக்களை வழங்குதல். தரப்படுத்தப்பட்ட கல்வியினை உறுதிசெய்வதன் மூலம் இத்துறைகளில் உள்ள கல்வி வாய்ப்புக்களை விரிவுபடுத்தி அரச தலையீட்டின் கீழ் வெளிநாட்டுத் தொழில்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

■ வைத்தியர், தாதியர் பங்கேற்பு சுதந்திரம், அதிகாரங்கள் மற்றும் வசதிகளை விரிவுபடுத்தி நாட்டிற்குள் கடமையில் ஈடுபட்டுள்ள அனைத்து சுகாதார தொழில்சார் நிபுணர்களும் உயர்வான அறிவு மற்றும் திறமை, ஒழுக்கம் நிறைந்த தன்மையுடையவர்கள் என்பதை மக்களிடையே உறுதிசெய்தல்.

■ பட்டப் பின் மருத்துவம் மற்றும் சுகாதாரத்துடன் தொடர்பான ஏனைய தொழில்நுட்ப உயர்கல்வி நிறுவனங்களின் பாடநெறிகளை இலங்கையில் சுகாதார சேவைகளை வழங்குவதற்கு மிக உகந்த வகையில் அபிவிருத்தி செய்தல். பல்வேறு விடயங்களுக்காக நடாத்தப்பட்டு வரும் மருத்துவ தொழிற் சங்கங்களுடன் கலந்துரையாடி தேவையான மாற்றங்களை மேற்கொள்ளல்.

■ அனைத்து சுகாதார ஊழியர்களுக்கும் முறையான பட்டப் பின் கற்கை வேலைத்திட்டம் ஒன்றைத் தயாரித்தல்.

■ சுகாதார சேவையின் ஆட்சேர்ப்புக்கள் மற்றும் பதிவியுயர்வுகளை நேரடியாக தெட்டத் தெளிவான விதமாக ஏற்கனவே இனங்கண்டு இணக்கம் தெரிவிக்கப்பட்ட பிரமாணங்களின் பிரகாரம் மேற்கொள்ளல்.

## சுகாதார வசதிகளுக்கான நிதி ஒதுக்குதலும் செலவிடலும்

■ ஒவ்வொரு ஆண்டும் அனைத்து சுகாதார நிறுவனங்களினாலும் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் தொடர்பாக செலவாகும் தொகை மற்றும் தேவையான வளங்களை மதிப்பீடு செய்து பூரணமான ஒரு திட்டத்தை வகுத்தல்.

■ இத் திட்டத்தை ஒவ்வொரு காலாண்டின் போதும் ஒழுங்குபடுத்தல்.

■ வருடாந்தம் பின்னாய்வினை மேற்கொள்ளல். தாமதங்கள், குறைபாடுகள், கவனயீனம் ஆகியன மீதான பொறுப்புக்களுக்கு ஏற்புடைய நிறுவனத் தலைவர் பொறுப்புக் கூறக் கூடிய ஒரு பொறிமுறையை வகுத்தல்.

## தனியார் சுகாதார சேவை

அனைத்து பிரசைகளினதும் ஆரோக்கித்தை உறுதிசெய்தல் அரசாங்கத்தின் ஒரு பொறுப்பாக கருதப்படுவதுடன் பொது தேசிய சுகாதார திட்டத்தின் பிரகாரம் தனியார் சுகாதார சேவைகளின் அனைத்து செயற்பாடுகளும் ஒழுங்குபடுத்தப்படும்.

சுகாதார சேவைகளை வர்த்தகப் பண்டங்களாக கருதுவதன் மூலம் சுகாதாரத்தின் உண்மையான நோக்கத்தை அடைந்துகொள்ள முடியாது என நம்புவதுடன் இந்த உத்தேச வேலைத்திட்டத்தின் மூலம் தனியார் சுகாதார சேவையின் தேவைப்பாடு படிப்படியாக குறைவடைந்து செல்லும். அந்த காலகட்டத்தில் தனியார் சுகாதார சேவையின் ஒழுங்குபடுத்தலை ஓர் இடைக்கால தொழிற்பாடாக மேற்கொள்வதற்கு யோசனை தெரிவிக்கப்படுகிறது.

# வீட்டு வசதிகள்

வாழ்வதற்கு உகந்ததொரு வாழிடத்தினை பெற்றுக்கொள்வது மானிடனாகப் பிறந்த அனைவரினதும் அடிப்படை உரிமையாகும். அதேபோன்று எந்தவொரு பிரஜையினதும் சமூக பொருளாதார பின்னணியினை முனைப்பாக கோடிட்டுக் காட்டுகின்ற குறிகாட்டியாக அவர்கள் வாழுகின்ற வீட்டுச் சூழல் கருத முடியும்.

2016 ஆம் ஆண்டில் வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சு வெளியிட்ட ஆராய்ச்சிக் கணக்கெடுப்பின்படி, இலங்கையின் சனத்தொகையில் 789,242 குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகள் இல்லை. சகல 3 வீடுகளிலும் ஒன்று பகுதியளவில் நிர்மாணிக்கப்பட்ட வீடுகளாகும். தற்காலிக வீடுகளில் வாழுகின்ற குடும்பங்களின் எண்ணிக்கை 278,192 ஆகும். காணி அல்லது சொந்த வீடு இல்லாத குடும்பங்களின் எண்ணிக்கை 166,841 ஆகும். தென்னம் ஓலைகள் அல்லது பனை ஓலைகளால் கூரையிடப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை 44,419 ஆகும்.

### நோக்கங்கள்

- அனைத்து குடும்பங்களுக்கும் சுத்தமான நீர், மின்சாரம், சுத்தமான காற்று, சுகாதாரம் வசதிகள், போதுமான இட எல்லை மற்றும் சரியான அணுகலுடன் கூடிய ஒரு நிரந்தர வீடொன்றில் வாழ்வதற்கான உரிமையை நிலைநாட்டல்.

- சுற்றுச்சூழலுக்கு உகந்த சிறந்த நில முகாமைத்துவ வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டமொன்றினைத் தயாரித்தல்.

### செயற்பாடுகள்

- ஐந்து ஆண்டுகளுக்குள் ஒவ்வொரு குடும்பத்திற்கும் சகல வசதிகளையும் கொண்ட வீட்டை வழங்குவதை நோக்கமாகக் கொண்ட ஒரு தேசிய திட்டம்.
- வீட்டுவசதி அபிவிருத்திக்காக ஒதுக்கப்படுகின்ற அரச செலவினங்களை 2% முதல் 4% வரை உயர்த்தல்.
- இப்போதுள்ள அரசியல்மயமாக்கப்பட்ட வீட்டுத் திட்டங்களுக்குப் பதிலாக, தேவைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் வீட்டு திட்டங்கள்.
- இப்போதுள்ள தெங்கு மற்றும் பனை ஓலைகளால் வேயப்பட்ட 45,000 வீடுகளை நிரந்தர வீடுகளாக மாற்றுவதற்கான விரைவானதொரு திட்டம்.
- அனைத்து தோட்ட தொழிலாளர்களுக்கும் ஒரு நிரந்தரமான வசதிகளைக் கொண்ட மற்றும் சொந்தமான மாடி வீடுகள் முறைமை.
- போரினால் முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ சேதமடைந்த 200,000 வீடுகளை உடனடியாக புனரமைக்கும் திட்டம்.
- நகர்ப்புற மற்றும் பகுதியளவு நகர்ப்புறங்களில் உள்ள தோட்டங்களிலும் சேரிகளிலும் வாழும் மக்களுக்கான கலாசார, சமூக மற்றும் நகர்ப்புற திட்டமிடலுக்கு தீங்கு விளைவிக்காமல் அவர்களுக்காக சிறப்பு மாடி வீட்டு முன்மொழிவுத் திட்டம்.
- போக்குவரத்து தூரம் மற்றும் நேரத்தைக் குறைக்கும் நோக்கில் அனைத்து அரச மற்றும் தனியார் துறை ஊழியர்களின் வீட்டு தேவைகளைப் பூர்த்திசெய்வதற்காக அனைத்து வசதிகளுடன் மாடி வீட்டு முன்மொழிவுத் திட்டம்.
- குறைந்த வருமானம் பெறும் இளைஞர்களுக்கும் மற்றும் பணிபுரியும் மக்களுக்கும் பகுதியாக செலுத்தி கொள்வனவு செய்துகொள்ள முடியுமான வீடமைப்பு முன்மொழிவுத் திட்டம்.
- வீடுகளற்ற வெளிநாட்டில் பணி புரியும் நபர்களுக்காக வீடுகளை வழங்குவதை அரசாங்கத்தின் பொறுப்பாகக் கருதி அவர்களுக்கு சலுகை அடிப்படையில் செலுத்தும் விதத்தில் (உழைக்கப்படும் வெளிநாட்டுப் பணத்திலிருந்து தவணைகளாக செலுத்தக்கூடிய) வீடுகளை வழங்கும் திட்டம்.
- குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களுக்கு வட்டி இல்லாத நீண்டகால கடன்களைக் கொண்ட வீட்டுத் திட்டம்.
- வீடுகளின் விலைகள் மற்றும் வாடகை ஒழுங்குபடுத்தும் நிகழ்ச்சித்திட்டமொன்று மற்றும் அதற்கு அவசியமான சட்ட அமுலாக்கல்.

# விளையாட்டு

விளையாட்டு மற்றும் உடற்கல்வியுடன் இணைந்த மானிட செயற்பாடுகள் ஒரு வளமான தேசத்தை உருவாக்குவதற்குத் தேவையான அடிப்படை விடயங்களுள் முக்கியமான விடயமாக அடையாளம் காணப்பட்டுள்ளது. உடல், உள ரீதியான மற்றும் ஆன்மீக ஆரோக்கியமான, சுறுசுறுப்பான பிரஜைகள் இருப்பார்களாயின், ஒரு நாடு மற்றும் ஒரு தேசத்தைக கட்டியெழுப்ப முடியும். எனவே, விளையாட்டை ஊக்குவித்தல், மேம்படுத்துதல் மட்டுமல்லாது விளையாட்டுகளில் ஈடுபடுவது மக்களின் அடிப்படை தேவைகளில் ஒன்றாகும். இந்த அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக ஒரு தேசத்துக்கு விளையாட்டு

கலாசாரமொன்றினைக் கட்டியெழுப்புவது அத்தியவசியமானதாகும். அதற்காக அறிவியல் ரீதியான, முறையான மற்றும் நிலையான விளையாட்டுக் கொள்கையை உருவாக்குதல் மற்றும் அதனை செயல்முறைப்படுத்துவது அரசாங்கத்தின் பொறுப்பு மற்றும் கடமையாகும்.

விளையாட்டு மூலம் இளைஞர் சமூகத்தை திருப்திப்படுத்துவதற்கும் அவர்களின் அபிலாசைகளை அடையப்பெறுவதற்கும், தேசிய எதிர்ப்பார்ப்புகளை எய்துவதற்காகவும், விளையாட்டுத் துறையில் தேவையற்ற அரசியல் தலையீட்டை நீக்கி நிலையான கொள்கை வரம்பினூடாக அறிவியல் ரீதியான அபிவிருத்தி திட்டங்களுக்குள் விளையாட்டினை கட்டியெழுப்புவது இந்த யுகத்தின் கடமைப் பொறுப்பாகும்.

## நோக்கங்கள்

- ஆரோக்கியமான மற்றும் ஒழுக்கமான பிரஜையை உருவாக்குவதனை நோக்காகக் கொண்ட சமூகமொன்றின் விளையாட்டு மேம்பாடு.
- இலங்கையின் புகழ் உலக முழுவதும் மேலோங்கச் செய்வதனை இலக்காகக் கொண்டுள்ள தேசிய மற்றும் சர்வதேச விளையாட்டுகளை அபிவிருத்தி செய்தல்.
- கலாசார விழுமியங்களைப் பாதுகாக்கும் பொருட்டு நாட்டுப்புற விளையாட்டுக்கள் அபிவிருத்தி.
- விளையாட்டுத்துறை பொருளாதாரத்திற்கு குறிப்பிடத்தக்க பங்களிப்புச் செய்யும் துறையாக மாற்றம் செய்தல்.
- சர்வதேச உறவுகளை வளர்ப்பதற்காக விளையாட்டை நிறுவன அடையாள தூதராகப் பயன்படுத்துதல்.
- விளையாட்டுக்குள் ஏற்பட்டுள்ள கடும் வர்த்தகமயமாக்கலைக் குறைப்பதற்கு நடவடிக்கையெடுத்தல்.

## செயற்பாடுகள்

- விளையாட்டு கல்வி, விளையாட்டு ஆராய்ச்சி மற்றும் அறிவியல் ரீதியிலான விளையாட்டுப் பயிற்சிக்கு மற்றும் விளையாட்டு துறைக்கான நடை ஒழுங்குமுறைமை ஏற்படுத்துவதற்குத் தேவையான சட்டங்கள் மற்றும் கொள்கைகளை வகுத்தல்.
- வருடாந்த விளையாட்டுப் போட்டி திட்டம் மற்றும் விளையாட்டு நாட்காட்டி.
- நாட்டுப்புற விளையாட்டு மற்றும் கலாசார விளையாட்டு அபிவிருத்தி மற்றும் பாதுகாப்புக் குறித்து அனைத்து மாகாணங்களுக்கும் ஒரு நிலையம்.
- விளையாட்டு வீரர்கள், பயிற்சியாளர்கள், விளையாட்டு ஆசிரியர்கள், விளையாட்டு அதிகாரிகள் மற்றும் தொழில்நுட்ப அதிகாரிகள், விளையாட்டு முகாமையாளர்கள் மற்றும் விளையாட்டு அனுசரணையாளர்களை பாராட்டி ஊக்குவிப்பதற்கு மற்றும் அரவணைப்பதற்கு அரச தலையீடு மற்றும் நிகழ்ச்சித் திட்டம்.
- விளையாட்டு, இலக்கியம், விளையாட்டுத் தரவுகளைத் திரட்டும் அலகு மற்றும் விளையாட்டு அருங்காட்சியகம்.
- அனைத்து வசதிகளையும் கொண்ட விளையாட்டு ஆராய்ச்சி பிரிவு.
- சுயாதீன தேசிய விளையாட்டு ஆணைக்குழு மற்றும் நிர்வாக அமைப்பு.
- கிராமப்புற மட்டத்திலிருந்து தேசிய மட்டம் வரை செல்கின்ற கூட்டு விளையாட்டுப் பயிற்சித் திட்டம்.

- ஒவ்வொரு மாகாணத்திற்கும் குடியிருப்பு வசதிகளுடன் கூடிய நவீன விளையாட்டு வளாகம்.
- ஒவ்வொரு பிரதேச செயலகத்திற்கும் அனைத்து வசதிகளையும் கொண்ட விளையாட்டு மைதானம்.
- ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு 03 படி 1000 சமூக உடற்கட்டு மையங்கள்.
- ஒவ்வொரு பாடசாலைகளுக்கும் விளையாட்டு ஆசிரியர்கள் மற்றும் பயிற்சியாளர்கள்.
- ஒவ்வொரு பாடசாலை மாணவருக்கும் யாதாயினுமொரு விளையாட்டை கட்டாயமாக்கல்.
- தேசிய விளையாட்டுப் பயிற்சிப் பாடசாலையை மையமாகக் கொண்ட மாகாண விளையாட்டு பயிற்சி பாடசாலைகளின் வலையமைப்பு.
- தேசிய விளையாட்டுக்கழக ஒழுங்குமுறை அதிகாரசரபை.
- தேசிய விளையாட்டுக் குழுவுக்கு உள்ளடக்கப்பட்ட அனைத்து விளையாட்டு வீரர்கள் வீராங்கனைகளுக்கு ஓய்வூதிய முறை மற்றும் காப்புறுதித் திட்டம்.

# கலையும் கலாசாரமும்

## சகோதர வேலைத்தளம் - புதிய கலாசார மனிதன்

பிரதேச மற்றும் தேசிய கலாசார மரபுரிமையை விமர்சனபூர்வமாக பாதுகாத்து திரட்டியெடுக்கும் அதேவேளை, உலகில் எவ்விடத்திலேனும் ஏற்படும் மேம்பட்ட கலாசார வெற்றிகளின் விமர்சனபூர்வமான முழுக் கருத்தேற்பறிவும் சிருஷ்டிப்பாற்றலும் (Creativity) கொண்டதும், தமது கலாசார மரபுரிமை (Cultural Heritage) பற்றிய கௌரவம் இருக்கின்றவிடத்தும், ஏனைய மனிதர்களின் கலாசார உரிமையைப் பாதுகாக்கும் எளிதில் இணங்கும் தன்மைகொண்டதும், பொதுவான மானிடப் பிரச்சினைகள் குறித்து தீவிரவாதமும் பிரதேசவாதமும் இன்றிய பரந்ததொரு கண்ணோட்டத்துடன் புரிந்துகொள்ளும் அதியுன்னதநிலை கொண்டதும், கலாசாரம் என்பது மானிட சமூகத்தை புறமும் மானிட மெய்யறிவை உள்ளும் பண்படுத்தும் ஒரு கருவி என்பதையறிந்த, பொது மானிட விடுதலைக்காக கலாசாரத்தைப் புத்துருவாக்குவதற்கான ஆவேசமும் சிருஷ்டிப்பாற்றல் கொண்டதும், பண்பட்ட நாகரிக நயமுள்ள ஒரு பிரஜையை உருவாக்குவதன் மூலம் நீடுநிலைப்பதும் பேண்தகு தன்மைகொண்டதுமான அபிவிருத்தியின் மூலம் ஒவ்வொரு மனிதனது உரிமைகளையும் அபிமானத்தையும் காக்கின்ற அமைதியான, சகவாழ்வுகொண்ட ஒரு நாட்டை உருவாக்க பங்களிப்புச்செய்வது எமது கலாசாரக் கொள்கையின் மைய நோக்கமாகும்.

### கலாசாரம் பற்றிய கருத்துப்படிவ ரீதியான அணுகுமுறை

அபிவிருத்தியடைந்ததும் சுபீட்சமானதும் மெய்ப்பொருளில் ஜனநாயகமயப்பட்டதுமான ஒரு சமூகத்தைக் கட்டியெழுப்பும் பணியில் கலை, கலாசாரத் துறைக்கு அளப்பரிய செயற்பணியொன்று உரித்தாகிறது. தனியே கலை மற்றும் கலாசாரத் துறையில் இல்லாத விருத்தியொன்று காணப்படலாமென நாம் எண்ணவில்லை. மானிட சமூகத்தில் ஏனைய துறைகளிலிருந்து பிரிந்த கலை-கலாசார வளர்ச்சி பற்றிய விசித்திரமானதும் உணர்வு மேலீடானதுமான நம்பிக்கையொன்றில் நாம் இல்லை. அடிப்படை மானிடத் தேவைகளினால் முழுநிறைவானதும், ஒப்பீட்டு ரீதியிலாயினும் சமத்துவமும் நியாயமானதுமான ஒரு சமூகத்தைக் கட்டியெழுப்புவதில் பொருளாதார வளர்ச்சியையும் அடிப்படை மனிதத் தேவைகளைத் தாண்டிய உடலியல்சார், புலமைசார், அறிவுசார் அபிவிருத்திக்காக கல்வி

சுகாதாரம் போன்ற துறைகளில் இடம்பெறும் வளர்ச்சியையும் நாம் உளப்பூர்வமாக வேண்டுகின்றோம். ஆதலால் தேசிய புத்திஜீவிகள் அமைப்பின் கலை, கலாசார உப குழுவில் நாம் ஏனைய குழுக்களின் கொள்கைப் பிரகடனங்களுக்கு குறைநிரப்பாக தொடர்புபட்டு இக்கொள்கை வெளியீட்டைத் தயாரிக்கின்றோம். மானிட சமூக அபிவிருத்தியில் வெறுமனே பொருளாதாரப் பெருமையை மட்டும் கருத்திற்கொள்ளாத முழுதளாவிய அபிவிருத்தி அணுகுமுறையொன்றில் கலாசாரம், பண்பாட்டுத்துவம் என்பவற்றை வளர்ப்பதும் இன்றியமையாதது என்பதை நாம் வலியுறுத்துகின்றோம்.

இருப்பினும் கலை மற்றும் கலாசாரத் துறைக்கு உண்மையாக ஜனநாயக சமூகமொன்றைக் கட்டியெழுப்புவதில் சிறப்பான ஒரு பங்குள்ளது. வேறெந்த விதத்திலும் செய்யமுடியாத மானிட மெய்யறிவில் வளர்ச்சியொன்றை ஏற்படுத்துவதற்கான ஆற்றல் கலை, கலாசார துறைக்கு உண்டு.

கலாசாரம் என்பது மனிதன் உலகில் தோற்றங்கொடுக்கும் ஒரு முறையாகும். அதாவது, மனிதனின் இருப்பு கலாசாரத்துள் இடம்பெறுகிறது. அதன் காரணமாகவே யாதேனும் ஒரு சமூகத்தின் அடையாளத்தில், உலகின் முன் தோற்றங்கொடுக்கும் 'முகச்சாயல்' கலாசாரத் தன்மையைப் பெறுகிறது. எமது நாட்டில் வாழும் அனைத்துச் சமூகங்களதும் இருப்பின் முகச்சாயல்கள், மாதிரி, அடையாளம் என்ற ரீதியில் நாம் அக்கலாசாரத்தைப் பாதுகாத்துக்கொள்ளும் உரிமை சார்பாக தோன்றுகிறோம். வேகமாக உலகமயமாக்கல் அடைந்துவரும் ஓர் உலகில் யாதேனும் மேலாதிக்க கலாசாரங்கள் (Hegemonic Cultures) காரணமாக சிற்சில சமூகங்களின் கலாசார அடையாளங்கள் காணாமல்போவதைத் தடுப்பதற்கு நாம் அர்ப்பணிக்கின்றோம். அது உலக பரிமாணத்திலும் தேசியளவிலும் எமது கொள்கையில் ஒரு கூறாகும்.

இருப்பினும் கலாசாரம் என்பது அடையாளம் மட்டுமன்று. அதேபோல் கலாசார அடையாளமென்பது ஒருபோதும் மாற்றமடையாத இரும்பினாலாய சுற்றுபொருள் அன்றி மிகவும் இயக்காற்றல் கொண்டதாகும். உள்ளூரிலும் உலகளவிலும் அனைத்துச் சமூகங்களதும் கலாசார அடையாளங்கள் பரிணாமமடைந்து வருகின்றன. ஆதலால், ஒவ்வொரு சமூகத்தினதும் கலாசார அடையாளத்தின் பேணுகையினதும் பரிணாமத்தினதும் உரிமையை நாம் ஏற்றுக்கொள்கின்றோம். இவ்விரண்டு விடயங்களிலும் அந்தந்த சமூகங்களுக்குள்ளிருந்தே எழுந்துவரும் உரையாடலின் வழியே அப்பேணுகையும் இக்கலாசாரமும் பரிமணாமமும் பற்றி தீர்மானிக்கும் உரிமையையும் நாம் ஏற்றுக்கொள்கின்றோம்.

அதேபோல் அடையாளத்தின் முகச்சாயல் போல் கலாசாரத்திற்குள்ள முக்கியத்துவத்தை ஏற்றுக்கொள்ளும் அதேவேளை, பண்பாட்டுத்துவத்தைக் கட்டியெழுப்புதல் என்பதும் கலாசாரத்தின் முக்கிய ஒரு கூறு என்பதை நாம் ஏற்றுக்கொள்கின்றோம். அதாவது, யாதேனுமொரு சமூகத்திற்கு ஏலவே உரித்தானதெனக் கருதப்படும் கலாசாரத்திலுள்ள வரம்புகள் குறித்து அச்சமூகம் விழிப்புடன் இருக்கும்போது அவ்வெல்லைகளிலிருந்து சுதந்திரத்தையும் விடுதலையையும் நோக்கி வளர்வதற்கு ஒவ்வொரு சமூகத்திற்கும் ஒரு தனி மனிதருக்கும் உள்ள உரிமையை நாம் ஏற்றுக்கொள்கின்றோம். அதாவது, மானிட சுதந்திரத்திற்கும் கலாசாரத்திற்கும் இடையில் சில வேளைகளில் முறுகல்கள் காணப்படுவதை நாமறிவோம். அவ்வாறு முறுகல்கள் ஏற்படுவதே கலாசாரத்தின் ஒரு கூறாகும். புரிந்துணர்வு எமது கொள்கையின் ஒரு கூறாகும். மனிதனை சில கலாசார சிறைக்குள்ளிருந்து விடுவித்தலென்பது கலாசாரத்தின் ஒரு கூறான கலையிடம் ஒப்படைக்கப்படுகின்ற ஒரு கருமம் என்பதையும் நாம் ஏற்றுக்கொள்கின்றோம்.

அது மட்டுமன்றி, கலாசாரம் என்பதால் 'பயிரிடுதல்', 'பண்படுத்துதல்', 'நல்லொழுக்கம் கற்பித்தல்' பொருள்கொள்ளப்படுகிறது என்பதை அறிந்த நாம், மனிதனின் வெளிநிலைச் சமூகத்தையும் மனிதனின் உள்ரங்கத்தையும் பண்படுத்த வேண்டும் என்றும், நல்லொழுக்கம் கற்பிக்கப்பட வேண்டும் என்றும் நம்புவதுடன் ஒரு கலாசார மனிதனை (Cultured Man)

உருவாக்குவதில் கலைக்கு ஆற்றக்கூடிய பங்கு அளப்பரியது, ஒப்புவமை அற்றது என்பதை நாமறிவோம்.

உள்ளூர் மற்றும் வெளிநாட்டுக் கலாசார ஞானத்தைக் கைக்கொண்டு நாகரிகமான பிரஜைவாழ்வொன்றைக் கழிக்கக்கூடிய, அறிவுள்ள, நல்லறிவுபடைத்த, உணர்வுபூர்வ இயல்திறனினாலும், நயப்பு சக்தியினாலும், சமநிலையான மனத்தினாலும் நல்லுறவினாலும் ஆட்கொள்ளப்பட்ட கொள்கைப் பிடிப்புள்ள ஒரு மனிதனை உருவாக்குவது எமது பணியாகும். இங்கு எமது உள்ளூர்க் கலாசாரங்களுக்குரிய ஆழமான கருத்துப்படிவங்களினாலும் பண்பாட்டுத்துவம் பற்றிய சர்வதேச உரையாடல்களில் உருவாகும் கருத்துப்படிவங்களினாலும் ஒளிர்வைப் பெறுகின்றோம். கலாரசனை எனும் கலாசார மரபுரிமையை எமது நாட்டுப் பிரஜைகளுக்கு கிட்டச்செய்யும்போதும், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கலைச் சித்தாந்தங்களிலும் கோட்பாடுகளிலும் கவனம் செலுத்த வேண்டுமென நாம் நம்புகின்றோம்.

மானிடத்தை விதைப்பது பற்றிய கருத்துக்களும் எமது கலை-கலாசாரக் கொள்கையின் ஒரு கூறாக இருக்க வேண்டும். அதாவது, மானிட உள்ரங்கத்தில் களைகள் பெருக இடமளிக்காமல் சிறந்த முன்மாதிரிகளினால் பயிரிடுவது கலையின் ஒரு கூறாகும். பண்பாட்டுத்துவம் அப்போதே ஏற்படும்.

கலாசாரம் என்ற கருத்துப்படிவத்தில் சுய பரிசோதனை எனும் பெருமையும் உள்ளது.ன. ஒரு சந்தர்ப்பத்தில் ஒரு சமூகத்தில் கலாசாரத்தில் இருக்கவேண்டிய ஒருரு கூறெனில், சுய பரிசோதனையாகும். குறித்த பிரசைகளுக்கு நீதி, நியாயம், ஒழுக்க பண்பாடுடைமை பற்றிய அடிப்படைச் சம்பிரதாயங்களுக்கேனும் மதிப்பளிக்கின்ற ஒரு சமூகமா என்பது குறித்து சதா விழிப்புடன் இருத்தல் என்பதே அதன் மூலம் கருதப்படுகிறது.. கலாசாரத்தின் ஒரு கூறு என்ற வகையில் கலையானது இங்கு சுய பரிசோதனையின் ஒரு கருவியாகும்.

பண்பட்ட கலாசார மனிதனுக்குள் கலாசாரப் பெருமிதம் குடிகொண்டிருக்க வேண்டும். தனது கலாசாரம் குறித்த விழிப்புநிலையான கௌரவம், உலக மானிட பண்பாட்டின் உயர்ந்த இடங்களைத் தொடக்கூடிய வெளிப்படைத்தன்மை ஆகிய இரண்டையும் கொண்டதாக இருப்பது பிரஸ்தாப புதிய கலாசார மனிதனின் முக்கிய அந்தஸ்தாகும்.

கலாசாரம் என்பது ஏகாதிபத்திய மேலாதிக்க சக்திகளினால் தமது அதிகார கருத்திட்டங்களுக்காகப் பயன்படுத்தப்படும் ஒரு மண்டலம் என்ற விடயம் குறித்தும் காலனித்துவவாதம் - கலாசாரம் என்பவற்றுக்கு இடையில் நிலவிய தொடர்பு குறித்தும் மிகவும் நனவுநிலையுடன் உலக முதலாளித்துவத்தினால் கலாசாரம் எனும் பரப்பைக் கீழ்ப்படுத்தும் சந்தர்ப்பங்கள் மீது ஒரு விமர்சனபூர்வமான பிரஜையை உருவாக்க அர்ப்பணிக்க வேண்டும். ஆயினும், வெளிநாட்டுக் கலாசார வெற்றிகள் யாவற்றையும் ஏகாதிபத்தியத்தின் அல்லது வெளிநாட்டினத்துவத்தின் பெயரால் நிராகரிப்பது எமது கொள்கையன்று. உலகின் எவ்விடத்தில் உருவானபோதும் மனிதனின் கலாசார வெற்றிகளை எமது வெற்றியாகவும் நாம் கருதுகின்றோம். அதேபோன்று கலையெனும் பரப்பில் ஏற்படக்கூடிய உலகளவிலான செல்வாக்கு, புதிய இலக்கிய கலை ஊடகங்கள் எமது தேசிய கலாசாரத்துடன் வந்திணைதல் முதலான இடைக் கலாசார தற்போசணை இன்றியமையாததென்று நாம் நோக்குகின்றோம்.

ஆதலால், வெளிநாட்டுக் கலாசாரக் கூறுகள் ‘வெளிநாட்டுடையவை’ என்ற ஒரே காரணத்திற்காக அவற்றை ஓரக்கண்கொண்டு பார்க்காத, அவை காரணமாக அச்சுறுத்தலுக்குள்ளாகாத, எளிதில் இணங்கும் உணர்வுகொண்ட ஒரு பிரஜையை சிருஷ்டிப்பதற்கும் அவ்வாறான பிரஜைகளின் கலாசாரமொன்றைச் உருவாக்குவதற்கும் நாம் அர்ப்பணிப்போம். அது மாத்திரமன்றி,எமது தேசிய கலாசாரங்களில் வரும் அதிசிறப்பான கூறுகளை உலகத்தாருடன் பகிர்ந்துகொள்ளும் ஆவேசமும் திறனும் படைத்த பிரஜைக் கலாசாரத்தைக் கட்டியெழுப்புவதற்கும் நாம் அர்ப்பணிப்போம்.

கலாசாரம் என்பது மாற்றமடையாததும் நிலையமைதிப் பண்புடையதுமான ஒன்றல்லாத, மிகவும் இயக்காற்றல் கொண்டதும் மாறுமியல்பு கொள்டதும் இயங்குவிசையாற்றல் கொண்டதுமான ஒன்றெனக் கருதும் நாம், கலாசார பரிணாமத்தைக் காப்போம். அது யாதேனும் கலாசாரமொன்றில் உள்ளிருந்து எழும் உரையாடல் பாங்கான ஒரு மாறுதலாக இடம்பெறும் பரிணாமம் போல் இடம்பெறத் தேவையான வாயப்பைப உருவாக்க அர்ப்பணிக்க வேண்டும் என்பதை நாம் ஏற்றுக்கொள்கின்றோம். இங்கு அரசுக்கு குறித்த ஒரு பணி இருப்பதுடன், கலாசார சுதந்திரத்துடன்கூடிய ஒரு சமூகம் காணப்பட வேண்டுமென்றும் நாம் நம்புகின்றோம்.

எமது தேசிய அரசினுள் வாழும் அனைத்து மனிதர்களது கலாசார அடையாளங்களுக்கும் சமமான வரவேற்புக் கிடைக்கின்ற, கலாசார பன்மைத்துவத்தைப் போற்றுகின்ற ஒரு சமூகத்தைக் கட்டியெழுப்புவது அவசியமாகும். இங்கு தேவைப்படும் பண்பாட்டுத்துவத்தைக் கட்டியெழுப்பி முன்னகர்த்துவதற்கு அரசாங்க நிறுவனங்களுக்கும் ஊடக நிறுவனங்களுக்கும் சிறப்பான ஒரு பொறுப்புள்ளது.

இங்கு எமது அரசினுள் வாழும் மிகச் சிறு இனக்குழுமங்களின் கலாசாரங்கள் மறைந்துபோகும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருப்பின், அவற்றைப் பாதுகாத்துக் கொள்வதற்கு அவர்களுக்குள்ள உரிமை ஏற்றுக்கொள்ளப்படும் அதேவேளை, அவர்களுக்கு தமது சில கலாசாரக் கூறுகளைக் கைவிடுவதற்கான தேவையிருப்பின் அதற்கான உரிமையையும் ஏற்றுக்கொள்கின்றோம். அதாவது, யாதேனுமோர் இனக் குழுமத்தை ‘வாழும் கலாசார நூதனசாலை’ போன்று பேணிச்செல்ல அரசு அல்லது வேறு அதிகார மையங்கள் தலையிடலாகாதென நாம் நம்புகின்றோம்.

அந்தந்த இனக் குழுமங்களுக்கிடையில் மட்டுமன்றி, உள்ளுக்குள்ளும் கலாசார பல்லினத்தன்மைக்குள்ள இடத்தைப் பாதுகாக்கும் கலாசார ரீதியாக எளிதில் இணங்குந்தன்மை காணப்பட வேண்டும். எடுத்துக்காட்டாக, சிங்கள இனப்பிரிவினுள் கூட கலாசார பல்லியத்தன்மையொன்று இருப்பதை ஏற்றுக்கொள்ளும் நாம், குறித்த பல்லினத்தன்மையை ஒரு பெறுமானமாகவே நோக்குகின்றோம். இந்நிலை அனைத்து இனக் குழுமங்களிலும் காணப்படுகின்றதென்பதை நாம் ஏற்றுக்கொள்கின்றோம்.

கலாசார ரீதியாக எளிதில் இணங்குந்தன்மை ஒவ்வொரு சமூகத்தினுள்ளும் பரவிவரும் மத தீவிரவாதத்தை எதிர்கொள்ளும்போது தேவைப்படும். எமது கலாசாரக் கொள்கை இவ்விடயத்தின் மீதும் கவனம் செலுத்தியுள்ளது, எந்தவொரு சமூகத்தினதும் மத அடையாளம் ஏற்றுக்கொள்ளப்பட்டபோதும் வாழ்வில் எல்லாப் பரப்புகளிலும் மத தீவிரவாதம் பரவுவதைத் தடுப்பதற்கு உகந்ததான ஒரு கலாசார வேலைத்திட்டம் தேவைப்படுகிறது.

அதேபோல், ஓர் இனப்பிரிவின் கலாசார வெற்றிகளுக்கு மற்றுமோர் இனப்பிரிவு பங்களிப்பாற்றி இருக்க முடியும் என்பது அசல் கலாசார மனிதனின் புரிந்துணர்வில் ஒரு கூறாக இருக்க வேண்டும். எடுத்துக்காட்டாக, சிங்கள மக்களின் கலாசார வெற்றிகளுக்கு சிங்களவர்கள் அல்லாத மனிதர்கள் பங்களிப்பாற்றியிருப்பது எவ்வாறு? தமிழ் மக்களின் கலாசார வெற்றிகளுக்கு தமிழர்கள் அல்லாத மனிதர்கள் பங்களிப்பாற்றியிருப்பது எவ்வாறு? என்ற அடிப்படையில் மனித கலாசாரத்தை உருவாக்கும் கதையை மிகவும் முழுதளாவிய கோட்பாடாகப் புரிந்துகொள்வதற்கு நாம் முயற்சிப்போம்.

அதேபோல், அந்தந்த கலாசாரத்திலுள்ள பெறற்கரிய அறிவுத்தொகுதிகளும் வாழ்வுப் பார்வைகளும் மங்கி மறைந்துவிட இடமளிக்காமல், அவற்றின் மூலம் எமது இன்றைய அறிவு ஞானத்தை ஊட்டம்பெறச் செய்ய முடியுமா என்பதைப் பரிசோதிப்பது அவசியம் என்பதை நாம் ஏற்றுக்கொள்கின்றோம். இயற்கையும் மானுட உலகும் பற்றிய நவீன மனிதன் மறந்துபோன அறிவுத்தொகுதிகள் எமது தொன்மையான கலாசாரங்களினுள் புதைந்து காணப்படலாமென்பது எமது நம்பிக்கையாகும. குறிப்பாக சுற்றாடலுக்கும் மனிதனுக்கும் இடையில் நிலவவேண்டிய உரையாடல் தொடர்பு குறித்து அவ்வாறான தொன்மையான ஞானத் தொகுதிகள் எமது மரபுரிமையாக இருக்க வேண்டுமென நாம் நினைக்கின்றோம்.

கலாசாரம் எனும் பரப்பினுள் கலாசாரத்தின் பெயரால் நிலவும் பல்வேறு இம்சைகள், ஓரங்காட்டல்கள், இழிவுபடுத்தல்கள் போன்ற அழியாயங்கள் காணப்படுவதை நாமறிவோம். அவ்வாறான அநியாயங்களை கலாசாரத்தின் பெயரால் சகித்துக்கொள்வது கலாசார வயப்பட்ட ஒரு சமூகத்தின் பண்பன்று. ஆதலால், தொடர்ச்சியான கலாசாரத் திறனாய்வு அவசியமாகின்றது. கலையும் கல்வியும் அக்கலாசாரத் திறனாய்வில் ஒரு கூறாகும்.

இங்கு பெண்களுக்கு கலாசாரத்தின் பெயரால் சிற்சில இம்சைகள் திணிக்கப்படுகிறதா என்பது விசே கவனத்திற்கு உள்ளாக்கப்படவேண்டியுள்ளது. கலாசாரத்தின் பெயரால் பெண்கள்மீது கட்டவிழ்த்து விடப்படும் இம்சைகளைத் தடுப்பது குறித்து உலகளவிலான உரையாடலொன்றுள்ளது. உலக சனத்தொகையில் இடம்பெறும் முதலாவது பிரிப்பான ஆண்-பெண் என்ற பிரிப்பில் அதில் ஒரு பகுதியினர் தமது பால்நிலை அடையாளம் காரணமாகவே இம்சைக்கு உள்ளாகின்றனரா என்பது குறித்து தொடர்ந்தும் விழிப்புடன் காணப்படுவது ஒரு பண்பாட்டுத்துவ சமூகத்தின் பண்பாகும். மறு பாலடையாளங்கள் கொண்ட மனிதர்களுக்கு அன்றேல் பாலியல் ரீதியில் சொற்பளவான மனிதர்களுக்கும் பரிபூரணமான மனிதர்கள் போல் பெருமையுடன் கவனிப்பது எமது கலாசாரக் கொள்கையின் ஒரு கூறாகும். அவ்வாறான கருப்பொருள்களைக் கொண்ட கலைப் படைப்புக்கள் மூலம் மானிட மெய்யறிவின் வளர்ச்சிக்கு பங்களிப்புச்செய்ய முடியும் என நாம் நம்புகின்றோம்.

கலாசாரம் என்பதன் மூலம் சமய வழக்காற்று முறைகளையும் சமய நம்பிக்கைகளையும் மட்டும் கருதுவது கலாசாரம் என்பது மிகக் குறுகிய பொருளிலான பயன்பாடு என்பதை நாம் நம்புகின்றோம். கலாசாரம் என்பதிலுள்ள ஆழமான உலோகாயத அர்த்தத்தை நன்கறிந்த நாம், பல்வேறு உலோகாயத கலாசாரக் கூறுகள், கலாசார சந்தர்ப்பங்கள், கலாசார வழக்காறுகள் முதலானவற்றில் இருப்பின் உரிமையை ஏற்றுக்கொள்கின்றோம்.

அதேபோல், ஒரு சமூக வகுப்பில், குழுமத்தில் அல்லது பிரதேசத்தில் 'கலாசாரம்' எனக் கொள்ளப்படுவன ஏனைய கலாசாரங்களுக்கு ஒப்பீடாக மேலாதிக்கத்திற்கு உள்ளாவதைத் தடுப்பதும் அனைத்து பின்புலங்களுக்குரிய மக்கட் பிரிவைச் சார்ந்த அர்த்தமுள்ள வழக்காறுகள் உள்ளன என்பதை உறுதிப்படுத்துவதும் எமது எதிர்பார்ப்பாகும். கலாசார விடயங்கள் சம்பந்தமாக ஒரு சாரார் தற்செருக்கு கொண்டிருப்பதும் மற்றுமொரு சாரார் தாழ்வுமனப்பான்மையுடன் இருப்பதும் அர்த்தமுள்ள ஒரு ஜனநாயக நாட்டில் காணப்படலாகாது என்றே நாம் நம்புகின்றோம்.

கலை போன்ற ஒருசில கலாசார வெளியீடுகள் கலைவண்ண சிறப்புநிலை, அழகியற் பண்பு என்பவற்றின் அடிப்படையில் மற்றுஞ்சில கலைப்படைப்புகளை விட உயர்வானவையாக இருக்கலாம் என்பதைப் புரிந்துகொள்ளும் அழகியல் தீர்ப்பிடல் கல்வியின் ஒரு கூறாக இருக்க வேண்மென நாம் நம்புகின்றபோதும், சில கலாசார வெளியீடுகள் மட்டும் 'விழிப்புணர்வுடையவை' அல்லது 'மேம்பட்டவை' எனக் கருதி அதீத தீர்ப்பிடுவதும் சில கலை வெளியீடுகளை 'விழிப்புணர்வற்றவை' எனக் கருதி குறைத்து மதிப்பிடுவதும் எமது அணுகுமுறையாகாது. அனைத்து கலாசார வெளியீடுகளின் ஒப்பீட்டுப் பெறுமானத்தைப் புரிந்துகொள்ளும் எளிதில் இணங்கும் தன்மைகொண்ட உணர்வு, முன்னேறிய மனித சமூகமொன்றில் காணப்பட வேண்டும் என்றே நாம் நோக்குகின்றோம். ஆதலால், 'தேர்ச்சிபெற்ற கலாசாரம்' எனக் கருதி சில கலாசாரங்களைச் சிறப்பித்துக் காட்டுவதும் 'ஜனரஞ்சக கலாசாரம்' எனக் கருதி சில கலாசாரங்களை இழிவுபடுத்துவதும் எமது கொள்கையன்று.

ஜனரஞ்சக கலாசாரம் என்பதால் குறிக்கப்படும் பரப்பினுள் வெளியிடப்படும் மனிதப் படைப்பு ஆற்றலுக்கு மதிப்பளிக்கும் நாம், சில பிரபுத்துவமற்ற கலை வெளியீடுகள் ஜனரஞ்சக கலாசாரத்தில் காணப்படுகின்றன என்றும் அத்தகைய பிரபுத்துவமற்ற மக்கட் பிரிவுகளில் படைப்பாற்றலும் படைப்பாளரின் உழைப்புக்கும் உரிய மதிப்பீடு கிடைக்க வேண்டும் என்றெண்ணுகின்றோம். அதேபோல், 'ஜனரஞ்சன கலாசாரம்'', ''வர்த்தக கலாசாரம்'' ஆகிய இரண்டிற்கும் இடையிலான வித்தியாசத்தை தெளிவுபடுத்திக்கொள்ள வேண்டும்

என்றெண்ணுகின்றோம். ஐயரஞ்சக கலாசாரம் என்பது யாதேனும் இனப் பிரிவினரின் வாழ்வுடன் குறித்தவொரு சேதனத் தொடர்பைக் கொண்டுள்ளதென்றும் வர்த்தக கலாசாரம் என்பது இலாபமீட்டலின் பொருட்டு வெளியிலிருந்து செய்யும் ஒன்றென்றே நாம் கருதுகின்றோம். ஆதலால், கலாசாரம் எனும் பரப்பிற்கு ஏற்படும் வர்த்தக ஆக்கிரமிப்பு தொடர்பாக திறனாய்வுபூர்வமாக இருக்க வேண்டும் என்பது எமது கொள்கையாகும்.

கலாசாரமென்பது சந்தையினால் ஆக்கிரமிக்கப்பட்ட ஒரு துறையாகும். ஆதலால், இலாமீட்டல் நோக்கில் காணப்படும் கலாசார உற்பத்திகளை தலைசிறந்த கலாசார உற்பத்திகளிலிருந்து பிரித்தறியக்கூடியதாக கலாசார அறிவை வளர்ப்பது எமது கொள்கையின் ஒரு கூறாகும்.

அதேபோல் தற்கால வெகுஜனத்தொடர்பு சாதனங்கள்மூலம் மிகவும் நுட்பமான முறையிலும் ஆக்கிரமிப்புத் தன்மையுடனும் இன்பவாதத்தையும் (Hedonism) தனியன் கொள்கையையும் (Individualism) மையமாகக்கொண்டு பயனீட்டுவாதத்தைப் (Consumerism) பரப்பி முன்னெடுத்துச் செல்லப்படுகிறது. கூட்டுணர்வுக் கலாசாரமொன்றுக்குப் பதிலாக கடும் தனியன் கொள்கையொன்று பரவியுள்ளது. ஆதலால், நாகரிகமான மானிட ஒழுக்கநெறிகளைச் சூழ கூட்டுணர்வுக் கலாசாரமொன்றை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு கலாசாரம் எனும் பரப்பைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்பது எமது கொள்கையாகும்.

கீழ்மட்ட மனிதத் தொடர்புகள் இன்று உழைப்புத் தொடர்புகள், பொருளாதாரத் தொடர்புகள் அல்லது கட்சி அரசியல் தொடர்புகள் என்ற அடிப்படையில் மாத்திரம் காணப்படுகின்றதாயின், நாம் மனிதர்களுக்கு இடையில் அவ்வாறான தொடர்புகளுக்கு நாகரிகத்தைச் சேர்த்து அவற்றை மனித-மனித தொடர்புகளாக உயர்த்திவிடுவது எவ்வாறு? அத்தகைய தொடர்புகளுக்கு ஒழுக்கநெறிசார் மற்றும் கொள்கைசார் அடிப்படையொன்றைக் கட்டியெழுப்பிக் கொள்வது எவ்வாறு? இதுவும் தேசிய கலை-கலாசாரக் கொள்கையொன்றில் ஒரு கூறாக இருப்பது அவசியமாகும்.

அதேபோல், கலாசார செல்வம் அன்றேல் கலாசார உற்பத்தி ஒப்பீட்டு நியாயத்துடன் பகிர்ந்துசெல்ல வேண்டுமென நாம் நம்புகின்றோம். பல்வேறு மொழிகள், அறிவுத்தொகுதிகள், கலை மரபுரிமை முதலியன ஒரு சமூகத்தில் வாழும் அனைவருக்கும் நெருங்கக்கூடிய மட்டத்தில் காணப்பட வேண்டும். அதாவது இலங்கையின் எந்தவொரு கிராமத்தில், நகரத்தில் அல்லது பிரதேசத்தில் வாழும் ஒரு பிள்ளைக்கு யாதேனுமொரு சர்வதேச மொழியைக் கற்றுக்கொள்வதற்கான தேவை இருப்பின், அதற்கு வாய்ப்பிருக்க வேண்டும். யாதேனுமொரு இசைச் சம்பிரதாயத்தை அல்லது நடன சம்பிரதாயத்தைக் கற்றுக்கொள்வதற்கான தேவை இருப்பின், அதற்கு வாய்ப்பிருக்க வேண்டும். இவ்வாறான சந்தர்ப்பங்களை உருவாக்குவது குறித்த வேலைத்திட்டம் எமது கொள்கையில் அடங்கும்.

கலாசார அபிவிருத்தியில் அரசுக்கு பாரிய ஒரு பணி உரித்தாகின்றபோதும், கலாசாரம் என்ற பரப்பு அரசிலிருந்து ஒப்பீட்டு ரீதியில் விடுவிக்கப்பட்டிருப்பது அவசியமென நாம் நம்புகின்றோம். அதாவது கலாசாரம் என்பது அரசில் அரசியல் அல்லது கருத்தியல்வாத மேலாதிக்க நிலைக்குட்பட்ட ஒன்றல்ல. கலாசாரத் துறையில் மனிதப் படைப்பொன்றின் ஆற்றல் பயன்கூர் விதத்தில் வெளிப்படுத்தப்படுவதற்கெனில், அது அரசிலிருந்து விடுபட்ட ஒரு பரப்பாக அமைந்திருக்க வேண்டும். கலையின் வளர்ச்சிக்கும் அத்தகைய சுதந்திரம் இன்றியமையாததெனக் கருதும் நாம், அச்சுதந்திரத்தை எமது கொள்கைப் பிரகடனத்தில் மிகவும் பொறுப்புணர்வுடன் பதிவுசெய்கின்றோம்.

இறுதியாக, செழிப்பான மனித வாழ்விற்காக அர்த்தமுள்ள கலாசார வாழ்வொன்றும் இருக்க வேண்டுமென நம்பிக்கை கொண்டுள்ள நாம் மனிதர்களின் உணர்வுசார், புலமைசார், நயப்புசார் இயல்திறனை வளர்ப்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்றோம். மனிதர்கள் தத்தமது தொழில்களில் ஈடுபட்டு தமது உழைப்பை விதைத்து மேற்கொள்ளும் பொருளாதாரப் பணிக்கு உரிய பெறுமதியை வழங்கும் நாம், உரிய முறையில் அபிவிருத்தியடைந்த ஒரு நாட்டில் மனிதருக்கு அர்த்தமுள்ள ஓய்வொன்றும் இருக்க வேண்டும் என நம்புகின்றோம். எமது

நோக்கிற்கமைய அர்த்தமுள்ள ஓய்வையும் இளைப்பாறலையும் தருவதில் கலாசாரமெனும் பரப்பிற்கு, அதனைவிட கலையெனும் பரப்பிற்கு ஆற்றக்கூடியவை ஏராளமுள்ளன.

நாம் இதுகாறும் முன்வைத்த விடயங்கள் கலாசாரம் தொடர்பாக ஒரு நாட்டின் தேசிய, கலாசாரக் கொள்கை எவ்வாறமைந்திருக்க வேண்டும் என்பது குறித்த கோட்பாட்டு ரீதியான கலந்துரையாடலாக இருக்க வேண்டும். அக்கலந்துரையாடல் எப்பொழுதும் மாற்றமடைந்து புதுவடிவம் பெற வேண்டும். இங்கு, எமது நாட்டுக் கலாசார வரலாறு குறித்தும் பொதுவாக மனித சமூகம் அடைந்துகொண்டுள்ள கலாசார வெற்றிகள் குறித்தும் கவனம் இருப்பது அவசியமாகும்.

ஒரு நாட்டின் அடிப்படைச் சட்ட முறைமைக்கு மதிப்பளித்தல், ஆய்வுபூர்வமாக அவற்றைப் பரீட்சித்து திருத்துதல், அரசியலமைப்புமுறை ஒழுக்கம் என்பவற்றினால் உருவான கொள்கைப் பிடிப்பு கலாசார மனிதனின் ஓர் இயல்பு என்பதையறிந்த நாம், அந்த கலாசார உணர்ச்சியை வளர்ப்பதற்கு பிரயாசைப்படுகின்றோம்.

அழகைச் சிருஷ்டித்தல், அழகைப் போற்றுதல், பொருள் கற்பித்தல் கலாசாரத்தினதும் கலாசாரத்தின் ஒரு கூறு என்ற வகையில் கலையினதும் ஒரு பணியாகும். அழகை மனித நாகரிகத்தின் கட்டாயமான ஒரு கூறாக முன்னெடுத்துச் செல்வது பண்பாட்டுத்துவத்தின் ஒரு கூறாகும்.

அதேபோல், ஒரு சமூகத்தில் நீதி, நியாயம், அடிப்படை ஜனநாயக பெறுமானத்தொகுதிகள், மானுடத்தின் மாண்பு, அபிமானத்துடன் வாழும் உரிமை முதலியவற்றை ஏற்றுக்கொள்ளும் ஒரு பிரஜையாக வளர்வது பண்பாட்டுத்துவத்தின் ஒரு கூறாக இருப்பதுடன், அவ்வாறான பிரஜைகளின் வாழ்வுக்குத் தூண்டுதலளிக்கும் ஒரு சமூகத்தை உருவாக்குவதும் பண்பாட்டுத்துவத்தின் ஒரு கூறாகும். ஆதலால், கலாசாரப் பிடிப்புள்ள பிரஜையொருவரை உருவாக்குவதென்பது ஓர் அரசியல் போராட்டம் என்ற விடயம் குறித்து மிகவும் நனவுநிலையுடன் நாம் அதற்காக அர்ப்பணிப்போம். அவ்வாறு அர்ப்பணிக்குமாறு நாம் அனைவருக்கும் அறைகூவல் விடுக்கின்றோம்.

## கலாசாரத்தின் முக்கிய ஓரங்கமாக கலை…

'கலாசாரம்' என்பதால் கலை மட்டும் பொருள்கொள்ளப்படாதபோதும் எமது கொள்கைப் பிரகடனத்தின் மூலம் கற்பனை செய்யப்படும் புதிய கலாசார மனிதனைக் கட்டியெழுப்பும்போது கலை தீர்மானகரமான ஒரு பரப்பாக அமைவதால், அனைத்துக் கலைத் துறைகளையும் ஒட்டிய விரிவான ஒரு வேலைத்திட்டம் தயாரிக்கப்பட்டது. அவ்விரிவான வேலைத்திட்டத்தின் ஒரு பொழிப்பு கீழ் விபரிக்கப்படுகிறது:-

## பொதுவில் கலை-கலாசாரத் துறைகளில் இடம்பெறும் செயற்பாடுகள்

- கல்வித்துறை என்பதை கலாசாரப் பிரஜையை உருவாக்குவதற்கு அடித்தளமிடும் முக்கிய சந்தர்ப்பமாகக் காணும் நாம் பாடசாலைகள், ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகள் மற்றும் பல்கலைக்கழகங்களின் ஆதரவுடன் பண்பாட்டுத்துவத்தை வளர்ப்பதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை ஆரம்பிப்பதற்கும் அவற்றை முனைப்பாக முன்னெடுத்துச் செல்வதற்கும் அர்ப்பணிப்போம்.

- முகநூல் (FB) போன்ற சமூக ஊடக வலையத்தளங்களை உபயோகித்து நூல்களை வாசித்தல், கலை நயப்பு பற்றிய பொதுமக்கள் இடப்பரப்பில் உரையாடலை முனைப்பாக்கி இருபத்தோராம் நூற்றாண்டின் கலாசாரப் பிரஜையை உருவாக்குவதற்கு அர்ப்பணிப்போம்.

- கலாசார வாலிபனுக்கு நெருக்கமான நுட்பமுறைகளைக் கற்பனைசெய்தலும் பாடசாலை முறைமையுடன் முன்னெடுக்கக்கூடிய செயற்பாடுகளைத் திட்டமிட்டு உடனடி பயனீட்டு மகிழ்ச்சியை வாழ்வின் முன்னுதாரணமாக மாற்றிக்கொண்டு இருப்பதாகத் தோன்றும் வாலிபப் பராயத்தினருக்கும் நெருக்கமாகி புதிய கலாசாரப் பிரஜையை உருவாக்க முயற்சிப்போம்.

- உத்தியோகபூர்வ கல்வி முறைமையில் கலை-கலாசாரப் பாடங்களைக் கற்பிப்பது கவர்ச்சிகரமானதும் அறிவு மறுமலர்ச்சிக்குத் தூண்டுதலளிப்பதுமான முறையில் கற்பித்தல் பற்றிய முறையான ஒரு பயிற்சியை ஆசிரியர்களுக்கு வழங்குவதற்கான செயலமர்வுகளையும் தொடர் கருத்தரங்குகளையும் உள்ளுயிர்ப்புடன் நடாத்திச் .செல்வதற்கான நிறுவனங்களை ஆரம்பிப்போம்.

- கலாசார மனிதனை உருவாக்கும் உள்ளார்ந்த ஆற்றலுள்ள மொழி-இலக்கிய ஆசிரியர்களின் அறிவு, புரிந்துணர்வு, பயிற்சி என்பவற்றை வளர்ப்பதற்கான செயற்பாடுகளை ஒழுங்குபடுத்தல்.

- கலாசாரம் என்பது மதத்துடன் மட்டும் மட்டுப்படுத்தப்பட்டதல்ல என்றும் அதுவொரு லௌகீகப் பரப்பு என்றும் சுட்டிக்காட்டும் கல்விக் கொள்கையொன்றை பாலர் பாடசாலைகள் தொட்டு ஏற்படுத்துவதற்கு அவசியமான பாடத்திட்டங்களை விரிவுபடுத்தல்.

- அழகியல் பாடம் சார்ந்த முறைசாராக் கல்வி வாய்ப்புக்களை நகரங்கள் தோறும் ஏற்படுத்துவதன் மூலம் பாடசாலை ஆசிரியர்கள் போன்றவர்களுக்கு மேலதிக அறிவு வாப்புக்களை உருவாக்குவதற்கு அவசியமான நடவடிக்கைகளை எடுத்தல்.

- கலை-கலாசாரத் துறையில் அரச நிறுவனங்கள் எடுக்கும் தீர்மானங்களும, அந்நிறுவனங்களின் கொள்கைசார் முன்னெடுப்புக்களும் சிக்கலுக்குள்ளாகும் சந்தர்ப்பங்களில் உடனடியாக மாற்றுக் கருத்துக்களை முன்வைத்து அது சார்ந்த உரையாடலொன்றை ஏற்படுத்தல்.

- பல்வேறு மாகாணங்களில் முன்வைக்கக்கூடிய கலை-கலாசார நிகழ்ச்சித்திட்டமொன்றை உடனடியாக அமுல்படுத்தி அதனை கிராமம் கிராமமாக எடுத்துச்செல்வதற்கான ஒரு பொறிமுறையை ஏற்படுத்தல்.

- ஒவ்வொரு பிரதான நகரத்திலும் கலை-கலாசார நடவடிக்கைகளுக்கான நிறுவனங்கள் அமைந்துள்ள வலயமொன்றைக் கட்டியெழுப்பி அவ்வலயத்திற்கு பிரஜைகளை தொடர்ச்சியாக கவர்ந்துகொள்ளக்கூடிய நிகழ்ச்சித்திட்டங்களை முடுக்கிவிடுதல்.

- மொழியறிவு கலாசார மனிதனை உருவாக்கும்போதும், கலை நயத்தைக் கட்டியெழுப்பும்போதும் இன்றியமையாததாகும். நகரங்கள் தோறும் தேசிய மொழி மற்றும் சர்வதேச மொழிகளைக் கற்றுக்கொள்ளும் சந்தர்ப்பங்களை ஏற்படுத்துவது அவசியமென்பதை நாம் உணர்ந்துள்ளோம். ‘இரவு நேர மொழிப் பாடசாலை’ முறைமையொன்றை ஏற்படுத்துவதன்மூலம் வயதுவந்தவர்களுக்கும் மொழிகளைக் கற்றுக்கொள்ளும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்தல்.

- பலமான புலமைச்சொத்துக்கள் சட்டமொன்றை உருவாக்கி கலைஞர்களின் படைப்புக்களின் உரிமையை உறுதிப்படுத்தல்.

- அனைத்து கலைத்துறைகளையும் ஒட்டியதாக தேசிய புத்திஜீவிகள் விருது வழங்கல் விழாவொன்றை ஒழுங்குசெய்து அனைத்துக் கலைகளுக்கும் கவனயீர்ப்பை வென்றுகொடுத்தல்.

- அனைத்து நுண்கலைகளுக்கும் அவசியமான உபகரணங்கள் முதலியவற்றுக்கு விதிக்கப்படும் வரிகளைக் குறைத்து அத்தகைய கலைகளுக்கு அரசாங்க ஆதரவைப் பெற்றுக்கொடுத்தல்.

- அனைத்து கலைத்துறைகளிலும் துறைபோந்தவர்களதும் ஓய்வுபெற்றவர்களதும் நலனோம்பல் கருதி உறுதிப்பாடான ஒரு வேலைத்திட்டத்தை அமுல்படுத்துதல்.

## அந்தந்த கலைத்துறைகளின் வளர்ச்சிக்காக எடுக்கப்படக்கூடிய நடவடிக்கைகள்

### இலக்கியத்துறை

- இலக்கியத்துறையின் வளர்ச்சிக்கு அவசியமான பொருள்சார் வசதிகளை அளித்தல் - கடதாசி மற்றும் ஏனைய அச்சீட்டு மூலப்பொருள்களுக்கு இலக்கிய நூல்களின் உற்பத்தியின்போது வரி விலக்களித்தல்.

- வருடாந்தம் வெளியிடப்படும் இலக்கிய நூல்களில் கலையாம்ச ரீதியில் மேம்பட்ட நூல்களைக் கொள்வனவுசெய்து பாடசாலை நூலகங்களுக்கும் பொது நூலகங்களுக்கும் விநியோகித்தல்.

- நகரங்கள்தோறும் அல்லது உப நகரங்கள்தோறும் முன்னேற்றகரமான நூலகங்களை உருவாக்கி முனைப்பான வாசகர் வட்டங்களை ஏற்படுத்தல்.

- நகரங்கள்தோறும் வருடாந்தம் அல்லது அரையாண்டுக்கு ஒருமுறை இலக்கிய தினமொன்றை ஒழுங்குசெய்து அதன் சுற்றயலிலுள்ள கலை இரசிகர்களின் இலக்கிய, கலை ரசனையை வளர்த்தல்.

- பிள்ளைகளை இலக்கிட்டதாக இலக்கிய ஆர்வத்தை அதிகரிப்பதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்.

- இலக்கியத் திறனாய்வுக்கும் நயப்புக்கும் ஒதுக்கப்பட்ட சஞ்சிகைக் கலாசாரமொன்றை மீண்டும் ஏற்படுத்தல்.

- பாடசாலை ஆசிரியர்களையும் மாணாக்கர்களையும் இலக்கிட்டதாக இலக்கிய நயம்சார்ந்த நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்குசெய்வதன்மூலம் புதிய இரசிகர்களை உருவாக்குதல்.

- சிறுவர்களின் மனதை வாய்மையை உணர்ந்தறிவதற்குத் திறந்துவிடக்கூடியதும் மாயையின் பிடியில் சிக்கிவிடாதிருப்பதற்குத் தூண்டுதலளிப்பதுமான உலக புகழ் இலக்கிய நூல்களைத் தெரிவுசெய்து அவற்றை சிங்களத்திலும் தமிழிலும் மொழிபெயர்த்தல்.

- இலக்கியக் குருகுலங்களின் கருத்தியல்களுடன் பயன்கூர் விதத்தில் சந்திப்புகளைப் பெற்றுக்கொள்வதற்கு அவசியமான வாய்ப்புகளை உருவாக்குதல்.

- உலகப் பரிமாணத்தில் வெளிவரும் தலைசிறந்த இலக்கிய நூல்களை சிங்களத்திலும் தமிழிலும் மொழிபெயர்க்கும் நிகழ்ச்சித்திட்டங்களை உருவாக்குதலும் அத்தகைய மொழிபெயர்ப்புப் பணியில் ஈடுபடுவோருக்கு ஊக்குவிப்பளித்தலும்.

- மாவட்ட மற்றும் தேசிய எழுத்தாளர் பெயர்ச்சுட்டியொன்றை முறையாகப் பேணி அவர்களின் பங்கேற்புடனான இலக்கியக் கலைக் கருத்தாடல்கள் முதலியவற்றை உருவாக்குதல்.

### *நாடகத்துறை*

- நாடகத் தயாரிப்புக்கும் காட்சிப்படுத்தலுக்கும் நிதி உதவிகளை வழங்குதல்.

- பூரண வசதிகளுடன்கூடிய நாடகங்களை மேடையேற்றும் கலையரங்குகளை பிரதான நகரங்கள் தோறும் உருவாக்குதலும் தற்போதுள்ள நாடகக் அரங்குகளுக்கு ஏற்படும் செலவை ஈடுசெய்துகொள்வதற்கு நிவாரணங்களை வழங்குதல், முதற்கட்டமாக மாவட்ட கலையரங்கத் தொகுதியொன்றை ஏற்படுத்தல்.

- நாடகம் பயிலும் சந்தர்ப்பங்களை சலுகை விலையில் பெற்றுக்கொள்ளக்கூடியவாறு பிரதான நகரங்களில் அல்லது கூடுதலாக நாடகங்கள் தயாரிக்கப்படும் தலைநகரில் ஏற்படுத்திக்கொடுத்தல்.

- தற்கால உலக நாடகங்களை மொழிபெயர்ப்பதற்கும் தயாரிப்பதற்கும் ஊக்குவிப்பளித்தல்.

- நாடகக்கலை இரசணையை வளர்ப்பதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை நகரங்கள்தோறும் ஏற்படுத்தல்.

- நாடகங்களைத் தயாரிப்பதற்கும் காட்சிப்படுத்துவதற்கும் உரிய வரிகளைக் குறைத்தல்.

- சமகால நாடகக் கலை பற்றிய தேசிய ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக்கான ஒரு நிறுவனத்தை நிறுவுதல்.

- இலங்கை பூராவும் பரந்துள்ள கலாசார நிலையங்களின் வலையமைப்பை மீள் கட்டமைத்தல்.

- சருவதேச கலாசார உறவுகளை முன்னேற்றுவதை இலக்காகக்கொண்ட வெளிநாட்டுச் சுற்றுலாக்கள் மற்றும் பயிற்சிகளுக்கு அதிக வாய்ப்புகளை உருவாக்குதல்.

### சினிமா மற்றும் தொலைக்காட்சி நாடகத் துறை

- ஒவ்வொரு சினிமா படைப்பையும் விநியோகிக்கும்போது நியாயமான ஒழுங்குவரிசையைப் பின்பற்றுதலும் முன்னுரிமைப்படுத்தலும்.

- அனைத்து விதமான தணிக்கைக் கொள்கைகளையும் அகற்றி சினிமா படைப்புக்களை வகைப்படுத்தும் சபையொன்றின்மூலம் தரநியமப்படுத்தல்.

- திரையரங்குகளின் தொழில்நுட்பத்தையும் வசதிகளையும் முன்னேற்றுவதற்கு நிதியுதவி அளித்தலும் அவற்றை அபிவிருத்திசெய்தலும்.

- சருவதேச திரைப்பட விழாவொன்றை ஆண்டுதோறும் ஒழுங்குசெய்தல்.

- தலைசிறந்த சினிமா படைப்புகளைக் காட்சிப்படுத்துவதற்கான நிலையங்களை கிராம மட்டத்தில் ஏற்படுத்தி, அதன் துணையுடன் தொடர்ந்தும் சினிமா கலைசார் உரையாடல்களை ஏற்படுத்தல்.

- பயிற்சிபெறும் சினிமா கலைஞர்களுக்காக தேசிய சினிமா கற்கை நிறுவகமொன்றை நிறுவுதலும் தேசிய சினிமா காப்பகமொன்றை நிறுவுதலும்.

- தொலைக்காட்சி நாடகத் துறையை தரப்படுத்தலுக்கு உட்படுத்தக்கூடிய நிறுவனங்களை உருவாக்குதல் - அதற்காக கலைஞர்கள் சிலரால் ஏற்கனவே தயாரிக்கப்பட்டுள்ள தொலைக்காட்சி நாடகங்கள் தரப்படுத்தலுக்கும் அபிவிருத்திசெய்வதற்குமான நிறுவனச் சட்டத்தை செயல்வலுப்படுத்துவதற்கு அவசியமான நடவடிக்கைகளை எடுத்தல்.

## நடனத் துறை

- சம்பிரதாய நடனத்தைப் பாதுகாப்பதையும் ஊக்குவிப்பதையும் நோக்காகக்கொண்ட நிறுவகமொன்றை நிறுவுதல்.
- இலங்கையின் கிராமிய நடனங்களின் ஆராய்ச்சியை ஊக்குவித்தல்.
- இனரீதியான அடையாளத்துடன்கூடிய நடன சம்பிரதாயங்களை ஊக்குவித்தல்.
- அரசாங்கத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட நடன கலாலயங்களின் வலையமைப்பைக் கட்டியெழுப்புவதற்கான விசேட நடவடிக்கை அலுவலகமொன்றை மாகாண மட்டத்தில் நிறுவுதலும் வருடாந்தம் உதவிகளை வழங்குதலும்.
- கல்வி மறுசீரமைப்புக்கள் இடம்பெறும் வேளைகளில் நடனக் கல்வி சம்பந்தமான நிறுவனங்களையும் துறைபோந்தவர்களையும் தொடர்புபடுத்திக்கொள்ளும் பொறிமுறையொன்றை உருவாக்குதல்.
- புதிய நடன போக்குகள் குறித்த கற்கை மற்றும் பேணுகைக்கான அலகொன்றை நிறுவுதல்.
- நடனம் பற்றிய சருவதேச கற்கைகளுக்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக்கொடுத்தல்.
- நடன பாடம் பற்றி மும்மொழிகளிலும் செம்மொழி நூல்களை அச்சிடுவதற்கு ஊக்குவிப்பு வழங்குதல்.

## கட்புல, சிற்ப மற்றும் புகைப்படக் கலைத்துறை

- ஓவிய மற்றும் கட்புலக் கலையின் நவீன போக்குகள் குறித்து ஆய்வுசெய்வதற்கான ஒரு நிறுவனத்தை நிறுவுதல்.
- பல்வேறு துறைகளிலும் பிரபல்யம்பெற்ற கட்புலக் கலைத்துறைகளை அடையாளம் காணலும் அவற்றை ஊக்குவித்தலும்.
- மாகாண ரீதியாக கலையரங்குகளை நிறுவுதலும் படைப்புகளை காட்சிப்படுத்துவதற்கு சகாய விலையில் கலையரங்குகளை வழங்குதலும்.
- சருவதேச மாநாடுகளுக்கும் கண்காட்சிகளுக்கும் படைப்பாளிகளை அனுப்பிவைத்து உதவுதல்.

- வருடாந்தம் படைப்பாளிகளுக்கு “தேசிய புத்திஜீவிகள் மதிப்பீட்டுச் சபை விருதை’ வழங்குதல்.
- மாகாணங்களை மையமாகக்கொண்டு பயிற்சி நிறுவனங்களை நிறுவுதல்.
- கட்புலக் கலைப் படைப்புகளை சந்தைப்படுத்துவதற்காக தேசிய மற்றும் சர்வதேச படைப்புகளின் சந்தையை விருத்திசெய்தல்.
- கலாசார நிலையங்களின் வலையமைப்பை முறைசார்ந்த விதத்தில் அமுல்படுத்தல்.
- சமகால படைப்பாளிகளின் ஆராய்ச்சிகளுக்கான நவீன கலையரங்கொன்றை உருவாக்குதல்.

## இசை மற்றும் பாடலாக்கத் துறை

- இசைச் சம்பிரதாயங்களைப் பேணிக் காப்பதற்கும் அதன் ஊக்குவிப்பிற்கும் தேசிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தலைமையில் நிறுவனமொன்றை நிறுவுதல்.
- இலங்கையின் கிராமிய இசை ஆராய்ச்சிகளின் ஊக்குவிப்பும் பேணுகையும்.
- அரசாங்கத்தின் பதிவுசெய்யப்பட்ட கலாலயங்களின் வலையமைப்பைக் கட்டியெழுப்புவதற்கு விசேட நடவடிக்கை அலுவலகமொன்றை நிறுவுதல்.
- கல்வி மறுசீரமைப்புச் சந்தர்ப்பங்களில் இசைக் கல்வி சம்பந்தப்பட்ட நிறுவனங்களையும் துறைபோந்தவர்களையும் தொடர்புபடுத்திக்கொள்வதற்கான ஒரு பொறிமுறையை ஏற்படுத்தல்.
- புதிய இசைக் போக்குகள் பற்றிய கற்கை மற்றும் பேணுகைக்கான அலகொன்றை நிறுவுதல்.
- பாடல்களும் இசையும் பற்றிய புலமைச்சொத்து சட்டதிட்டங்களை விருத்திசெய்தல்.
- சருவதேச கற்கை ஆய்வுகளுக்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக்கொடுத்தல்.
- அரச இசைக் குழுவை இசைத்துறையில் புதிய ஆராய்ச்சிபூர்வ படைப்புகளில் ஈடுபடுத்தல்.
- நாளாந்தம் ஒலிப்பதிவு செய்யப்படும் ஒவ்வொரு பாடல் மற்றும் இசைப் படைப்பின் மூலப் பிரதியைப் பேணிப் பாதுகாக்கும் கணினித் தகவல் அலகொன்றைப் பேணுதல்.

## தொலைக்காட்சி, வானொலி, பத்திரிகை, சமூக ஊடகங்கள் உள்ளிட்ட ஊடகத்துறை

- அரச கேந்திர பிரதான ஊடகத்துறை வலையமைப்பொன்றைப் பேணுதலும் முறையான மற்றும் சட்டபூர்வ தனியார் முயற்சியாண்மைக்கும் வாய்ப்பளித்தல்.

- அனைத்து ஊடகங்களையும் தமது கருத்து வெளிப்பாட்டின்போது நியமமான, சொல் திறம் மிக்க மொழியை (use of standard & eloquent language) பயன்படுத்தல்.

- யாதேனுமோர் இனப்பிரிவுக்கு, நபருக்கு, மத நம்பிக்கைக்கு அல்லது ரசனைக்கு இழிவை ஏற்படுத்தக்கூடியவற்றைப் பிரசாரம் செய்யாதிருத்தலும் முழுதும்அளாவிய மானுட கௌரவம் பாதுகாக்கப்படுகின்றவாறு ஊடகத்துறையில் ஈடுபடுதலும்.

- அனைத்து ஊடகங்களும் நாட்டின் பொது நியமம்பெற்ற சட்டத்திற்குக் கீழ்ப்படிதல்.

- சமூக ஊடகங்களில் கருத்துவெளியீட்டுச் சுதந்திரம், படைப்பாற்றல், முன்னேறிய கற்பனையுடன்கூடிய பிரயோகமொன்றுக்கு இடமிருப்பதுடன் அத்தகைய சகல

சந்தர்ப்பங்களையும் கடும் பதில்கூறும் பாங்கு, சுய ஒழுக்கம் மூலம் சாதகமானதாக மாற்றுதல்.

- ஊடகவியலாளன் யாதேனும் அரசியல் கட்சியொன்றின் செயற்பொறுப்பை நிறைவேற்றும் அரசியல் ரீதியான ஒரு பாத்திரமாகவன்றி சமநிலையான, நியாயமான ஊடக வகிபாகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துதல்.

- இலாபம், பிரபல்யம், துரித திருப்தி அல்லது களிபேருவகையின் பொருட்டு ஊடகத் தொழிலை பயன்படுத்தாதிருத்தல்.

# 03

# இடரச்சமில்லாத ஒரு தேசம்

# ஓர் உந்து சக்தியாக பெண்

ஒட்டுமொத்த சமூக அமைப்பெங்கும் பரந்து விரிந்துள்ள முக்கிய சக்தியொன்றாக பெண்களை நாம் கருதுகின்றோம். இச்சந்தர்ப்பத்தில் சமூகத்தினுள் காணப்படும் நெருக்கடியைப் புரிந்துகொள்ளும்போது சமூக, பொருளாதார, அரசியல் மற்றும் கலாசார ரீதியாக பரந்துபட்ட பல்வேறு பிரச்சினைகளை நாம் அடையாளம் காண்கின்றோம். அவை ஊடறுத்துச் செல்கின்ற விதமாக இடை தொடர்புகளையும் மாற்றங்களையும் கொண்டதாகவும் அதாவது சுயாதீனமாகவும் வெளிப்படையாகவும் காணப்படுகின்றன. பெண்ணியக் கண்ணோட்டத்தில் இதை நாம் நோக்குவோமாயின், அப்பிரதான சமூக-பொருளாதார, கலாசார மற்றும் அரசியல் செயல்முறையிலிருந்து பெண் ஓரங்கட்டப்பட்டிருப்பதன் காரணமாக அநீதிக்கும் சரிசமமற்ற நிலைக்குத் தள்ளிவிட்டு தொடர்ந்தும் அவர்களை சமூகம் புறக்கணித்து வருகிறது,

ஆதலால், ஆழமான சரிசமமின்மைகளுடன்கூடிய இந்த சமூக நிலைமையை நிராகரித்து அனைவருக்கும் சுதந்திரமும் சமத்துவமும் உறுதிப்படுத்தப்பட்ட, துன்புறுத்தலும் வன்முறையும் அற்றதாக வாழக்கூடிய ஒரு சமூகத்தை உருவாக்குவதில் பெண்களின் பங்களிப்பை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

### நோக்கங்கள்

- ஆபத்தான பொருளாதாரக் குழுக்களுக்கும் முறைசாரா பொருளாதாரத் துறை மீதமைந்த ஒரு பொருளாதாரத்திற்கு நிலையான தீர்வுகளை வழங்குதல்.
- உழைப்பாளர் சேனைக்கு பெண்களின் பங்களிப்பைப் பெற்றுக்கொள்வதிலுள்ள தடைகளை அகற்றுதலும் இனப்பெருக்க விடயங்களுடன் சம்பந்தப்பட்ட வகிபாத்திரங்களை சமூகப் பொறுப்பொன்றாக் கருதி அதனடிப்படையில் குறித்த பாத்திரங்களை முன்னெடுத்துச் செல்வதற்கு வசதியளித்தலும்.
- தொழில்களுக்காக புலம்பெயரும்போது குறித்த உழைப்பாளர்களுக்குரிய பயிற்சியை புலம்பெயர்வதற்கு முன்னர் வழங்குதலும் நாட்டுக்கு அந்நியச் செலாவணியை ஈட்டித் தருபவர்கள் என்ற வகையில் அவர்களுக்கும் அவர்களின் குடும்பத்தவர்களுக்கும் தேவைப்படும் பாதுகாப்பையும் வசதிகளையும் ஏற்பாடுசெய்யும் முறைகளை வகுத்தலும்.
- தனது உடலும் பிள்ளைகளைப் பெற்றெடுக்கும் உரிமையும் பெண்களுக்குரிய ஓர் உரிமை என்பதை ஏற்றுக்கொண்டு அதற்கமைய ஏற்புடைய சட்டங்களைத் திருத்துதல்
- தனி மனித உரிமைகள் உறுதிசெய்யப்படுகின்ற விதத்தில் விவாக சட்டங்களையும் விவாகரத்துச் சட்டங்களையும் திருத்துதல்
- சட்ட முறைமையைப் பயன்படுத்தி சிறுபான்மையினரின் உரிமைகளைக் குறைப்புச் செய்வதை எதிர்த்தல்.
- வரதட்சணை, பெண் மற்றும் ஆண் பிறப்புறுப்பு சேதனம் போன்ற பாரம்பரிய நடைமுறைகள் காரணமாக அடக்குமுறைக்கும் துன்புறுத்தலுக்கும் உள்ளாதலைத் நிறுத்துவதற்கான சட்டங்களை ஆக்குதல்.

- பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பாக நிலவும் புனர்வாழ்வு மற்றும் பாதுகாப்புச் சேவைகளில் நிலவும் குறைபாடுகளை அகற்றி வினைத்திறனான முறையில் சட்டத்தை வினைப்படுத்தல்.

- பாலியல் தொடர்பிணைவையும் சமூகநிலை அடையாளத்தையும் குற்றவியலுக்கு உள்ளாக்கும் சட்டங்களைத் திருத்துதலும் தேர்ந்தெடுத்த தொழில் எதுவாயினும் அதற்குத் தேவைப்படும் சமூக் பாதுகாப்பை ஏற்படுத்துதலும்.

- அலைந்துதிரிவோர் கட்டளைச்சட்டத்தை ஒழித்தல்.

- பெண் குடும்பத் தலைவிகளின் காணி உரித்து உறுதிப்படுத்தப்படும்படியாக சட்டங்களைத் திருத்துதல்.

- ஒரு பிள்ளை என்பதை 18 வயதுக்குக் குறைந்த ஆளொருவராகக் கருதி அதற்கமைவாக அனைத்துச் சட்டங்களையும் ஆக்குதல்.

- பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவம், பங்கேற்பு மற்றும் வகிபாகம் குறித்து கலந்துரையாடுவதற்கு அரசியல் ரீதியான ஆதரவை வழங்குதல்

- பெண்களை அரசியல் கட்சிகளில் முடிவெடுக்கும் வகிபாகத்தில் பங்கேற்கச்செய்வதற்கு முனைப்பான வழிமுறைகளை அரசியல் கட்சிகளினுள் உருவாக்குதல்.

- வன்செயலையும் துன்புறுத்தலையும் முன்னிலைப்படுத்திய அரசியல் கலாசாரத்தை மாற்றியமைப்பதன் மூலம் பெண்களை அரசியல் நீரோட்டத்திற்குள் எடுப்பதற்கு உதவுதல்.

- அனைத்துத் தேர்தல்களிலும் பெண் வேட்பாளர்களுக்கு 50% அனுமதிப்பங்குமுறையை அமுல்படுத்துதல்.

- நாட்டின் முக்கிய முடிவெடுக்கும் நிறுவனங்களில் பெண்களின் பிரதிநிதித்துவத்தைக் கட்டாயமாக்குதல்.

- நிறுவன ரீதியான துன்புறுத்தல் கட்டமைப்புக்கள் அடங்கலான அனைத்து விதமான துன்புறுத்தல்களையும் எதிர்த்துநிற்றலும் பாலியல் இம்சை, இல்லத்து இம்சை, பகிடிவதை, பணிபுரியும் இடத்திலும் போக்குவரத்துச் செய்யும்போதும் ஏற்படும் துன்புறுத்தல்களுக்கு எதிரான சட்டங்களை நிகழ்நிலைப்படுத்தல்.

- கல்வி, மதங்கள், வெகுஜன ஊடகங்கள் போன்ற பல்வேறு நிறுவனங்களினால் மீளுருவாக்கி முன்னெடுத்துச்செல்லப்படும் பால்நிலை தொடர்பான ஒருசமச்சீர்த்தன்மைகளின் பிற்போக்குவாத இயல்புகளை எதிர்த்து நிற்றலும் மாற்றுக் கருத்தியல்வாதங்களைக் கட்டியெழுப்புதலும் பெண்களினாலும் ஆண்களினாலும் உச்சிமேல் வைக்கப்படும் பிற்போக்குவாத, மரபுரீதியான நம்பிக்கைகள், உளப்பாங்குகள், மூடக் கொள்கைகளின் பொல்லாங்குகளை எதிர்த்துப் போராடுவதற்குத் தேவைப்படும் தலையீடுகளை மேற்கொள்ளல்.

- அதிகரித்துவரும் மத மற்றும் இனவெறியைத் தோற்கடிப்பதற்காக பல்வேறு இனக் குழுக்களிடையே புரிந்துணர்வு வளர்வதற்கான வேலைத்திட்டமொன்றை வகுத்தலும் அவ்வாறான செல்நெறிகளுக்கு எதிராக பெண்களை வலுவூட்டலும்.

# நாட்டின் எதிர்காலமும் சிறுவர் பரம்பரையும்

எந்தவொரு சமுதாயத்தின் எதிர்காலமும் சிறுவர் பரம்பரையினரின் பண்புத்தரமான வளர்ச்சியில் தங்கியுள்ளது. கல்வி போன்ற சமூகப் பாதுகாப்பு கட்டமைப்புகளின் எதிர்பார்ப்புகள் முறிவடைவதன் காரணமாக சிறுவர் பரம்பரையும் இளைஞர்களும் தமது எதிர்காலமும் சமூக நிறுவனங்களும் பற்றிய நம்பிக்கையை இழந்து அழிவுகர பாதையில் இட்டுச்செல்லப்படுவர். சமூகப் பாதுகாப்பு மற்றும் உதவுமுறைகளும் வீழ்ச்சியடைவதன் காரணமாக துன்புறுத்தலுக்கும் சூறையாடப்படுவதற்கும் வன்செயலுக்கும் புறக்கணிப்புக்கும் ஆளாகின்றனர். வயதுவந்தவர்களில் உலகில் பிரவேசிப்பதற்கு அவசியான அனைத்துவிதமாக கல்வி மற்றும் உளப்பாங்குகளும் தன்னம்பிக்கையும் பெறுவதில்லை. இந்நிலையைத் தடுப்பதற்கு கல்வி, சுகாதாரம், பொருளாதாரக் முறைமையிலும் அவர்களின் பாதுகாப்புக்கான நேர்ப்படியான பொது மாற்றங்களும் ஏற்படுத்தப்பட வேண்டும்.

- சிறுவர்களும் இளைஞர்களும் மீதான அரசாங்க நிறுவனங்களில் பொறுப்புக்களையும் செயற்பாடுகளையும் தனித்தனியாக அடையாளம் கண்டு மீள ஒழுக்கமைத்து பலப்படுத்துதல்.

- துன்புறுத்தல், புறக்கணிப்பு, வன்செயல், சட்டத்துடன் முரண்பட நேரிடும் பிள்ளைகள், வாலிபர்கள், குடும்பம் மற்றும் சமூகத்தில் காத்துக்கொள்வதற்கும் புனர்வாழ்வளிப்பதற்கும் முன்னுரிமையளித்து குடும்பத்திலும் சமுதாயத்திலும் பராமரிக்கும் கட்டமைப்புகளைப் பலப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

- அத்தியாவசிய காரணங்களின் அடிப்படையில் மட்டும் குடும்பம் அல்லது சமூகத்திற்கு உள்ளிருந்து பிரிக்கப்படும் பிள்ளைகளை நிறுவனமயப்படுத்துவதற்கு நேரிடுமாயின், அந்நிறுவனங்களினுள் இருக்கவேண்டிய ஆகக்குறைந்த நியமங்களை அடையாளம் கண்டு சட்டவாக்கப்படுத்தி அந்நியமங்களை முன்னெடுத்துச்செல்வதற்குத் தேவைப்படும் ஒத்துழைப்பை உறுதிப்படுத்தி அந்நிறுவனங்களினுள் அத்தகைய நியமங்களை தொடர்ந்தும் கண்காணிப்புக்கு உட்படுத்துதல்.

- பல்வேறு காரணங்களின் அடிப்படையில் சட்டத்துடன் முரண்படும் அல்லது சட்டத்தின் முன் தோன்றுகின்ற பிள்ளைகளுக்கும் வாலிபர்களுக்கும் சட்டத்தின் பாதுகாப்பை வழங்குதல்.

- தெருவோரச் சிறுவர்களுக்கு கல்வி, சுகாதாரம் மற்றும் ஏனைய சேவைகளின்போது சமமாக அணுகும் வாய்ப்புகளை வழங்கி அவர்களை சமூகமயப்படுத்துவதற்கான விசேட நிகழ்ச்சித்திட்டங்களைத் தயாரித்தல்.

- பிள்ளைகளுக்கெதிரான துன்புறுத்தல்கள் பற்றிய சட்டத்தை வினைப்படுத்துவதற்கு விசேட மேல்நீதிமன்றத் தொகுதியொன்றை நிறுவுதல்.

- மனித உரிமைகள் ஆணைக்குழுவில் சிறுவர் மனித உரிமைகள் பற்றிய ஆணையாளர் பதவியொன்றை ஏற்படுத்தல்.

- தற்போதுள்ள சிறுவர்களுக்குரிய சட்டதிட்டங்களை நான்காண்டு காலத்துள் திருத்தி அமைத்தல்.

- சிறுவர்களுக்கு ஊடக ஒழுங்குபடுத்தல் முறைமையொன்றைத் தயார்செய்தல்.

## உழைப்பின் கௌரவம்

உழைப்பு என்பது சமூக வளர்ச்சியின் உந்துசக்தியாகும். எனினும் தற்கால அர்த்தத்தில், உழைப்பாளருக்கு உரித்தாக வேண்டிய சமூகநிலையிலும் முக்கியத்துவத்திலும் குறைத்து மதிப்பிடும் நிலை காணப்படுகிறது. எனினும், பெரும்பான்மையான உழைக்கும் மக்களுக்கு அவர்களின் பொருளாதார, சமூக கலாசார வாழ்வு பற்றி கரடுமுரடான அனுபவங்களே காணப்படுகின்றன. எனவே உழைப்பிற்குரிய மரியாதையும் வரவேற்பும் கிடைக்கின்ற விதத்திலும் அனைத்துத் தரங்களைச் சேர்ந்த உழைப்பாளர்களையும் சமத்துவக் கொள்கையின் அடிப்படையில் கவனிப்பதற்கும் இயலுமான விதத்தில் உருமாதிரிக் கட்டமைப்புக்களை உருவாக்கி தொழில்தருநர் - தொழிலாளர், அரசாங்கம் - உழைப்பாளர் சேனை, சமூகம் - உழைப்பாளர் ஆகியோருக்கிடையிலான இடைத்தொடர்பு வலையமைப்பை மனித நேயப்படுத்துவதற்கு செயலாற்றுவது மிக முக்கியமானதாகும்.

- அனைத்து விதமான உழைப்புகள், உடலியல் மற்றும் உளவியல் இடையிலான சமூகப் பிரிப்புக்கள் மற்றும் பாரபட்சங்களை ஒழிப்பதற்கு கல்விப் பொறிமுறையின் மூலம் உழைப்பின் சமத்துவத்தைப் பற்றிய கோட்பாட்டை மக்களுக்கு வழங்கும் செயன்முறையொன்றை உருவாக்குதல்.
- சட்ட விதிமுறைகளினால் உழைப்புக்கு எதிராக பாகுபாடு காட்டப்படுதல், உரிமைகளை நீக்குதல், மனித கௌரவம் மற்றும் உரிமைகளை வழங்காதிருப்பதற்கு எதிரான சட்டச் சட்டகத்தைப் பலப்படுத்தி உருவாக்குதல்.
- அரசாங்கம் தலையிட்டு தனியார்துறை உழைப்பாளர் சேனைக்கு கிடைக்கவேண்டிய நலனோம்பல் மற்றும் சம்பள அளவுத்திட்டங்கள் பற்றிய ஆகக்குறைந்த தராதரங்களை நிர்ணயித்தல்.
- சர்வதேச தொழிலாளர் சாசனத்தை மதித்து, உள்நாட்டில் இத்தரங்களைப் பின்பற்றி உழைப்பாளின் உரிமைகளைப் பாதுகாக்கும் வேலைத்தளத்தை நிறுவுதல்.
- உழைப்பாளருக்கும் தொழில்தருநருக்கும் இடையிலான தொழிலாளர் பிணக்குகளைத் தீர்க்கும் பொறிமுறைகளைப் பலப்படுத்துதலும் தொழிலாளர் சாசனமொன்றை உருவாக்கி அமுல்படுத்துதலும்.
- தொழிற்கற்கைகள் பற்றிய கற்கைநெறிகளை பல்கலைக்கழக மட்டத்தில் ஏற்படுத்தலும் தொழிலாளர்களுக்கு தமது கல்வியை முன்னெடுத்துச் செல்வதற்கு இலவச அரச கல்வி நிறுவகங்களை ஏற்படுத்தலும்.
- உழைப்பாளர்களுக்கு உற்பத்திகளின் நன்மைகள் கிடைக்க வேண்டும் என்ற கொள்கையை ஏற்றுக்கொண்டு அனைத்துக் கம்பனிகளின் உரிமையில் ஒரு பங்கை உழைப்பாளர்களுக்கு இலவசமாக உரிமைமாற்றம்செய்யும் ஒரு முறையை ஏற்படுத்துதல்.

# வாலிபமும் சமூக முன்னேற்றமும்

இளைஞர்களின் பிரச்சினைகளுக்கு பதிலளிப்பதும் அவற்றுக்கான மூல காரணங்களைக் கவனிப்பதும் சமூக பொருளாதார அபிவிருத்தியிரல் இன்றியமையாத ஓரங்கமாகும். இளைஞர்களை சமூக-அரசியல் செயன்முறைகளின் ஊடாக வெளியேற்றும் பழைமை பேணும் அணுகுமுறைகளிலிருந்து விடுபட்டு சமூக ஒருமைப்பாட்டுக்கும் அபிவிருத்திக்குமான கட்டமைப்புசார் அணுகுமுறைகளைப் பலப்படுத்துவதற்கும், அத்தகைய செயன்முறையினுள் அவர்களின் பயன்கூர் பங்களிப்பைப் பெற்றுக்கொள்வதற்கும் நடவடிக்கை எடுப்பது இன்றியமையாததாகும்.

- இளைஞர் யுவதிகளின் சர்வதேச மொழிகள் பற்றிய அறிவையும் தகவல் தொழில்நுட்பம் பற்றிய அறிவையும் வளர்த்துக்கொள்ளக்கூடிய வகையில் இரவு நேர பாடசாலைகளை ஏற்படுத்துதல்.
- கல்விச் செயற்பாட்டைப் பூர்த்திசெய்யாத இளைஞர் யுவதிகளுக்கு தொழிற்பயிற்சி அளிப்பதற்கான ஐந்தாண்டுத் திட்டம்.
- அனைத்து அரச மற்றும் பதிவுசெய்யப்பட்ட தனியார் மற்றும் நிறுவனங்களுக்கான சுயாதீனமானதும் வெளிப்படைத் தன்மைவாய்ந்ததுமான ஓர் ஆட்சேர்ப்பு நடைமுறை.
- இளம் தொழில்முனைவோருக்கு சுயதொழில் கருத்திட்டங்களுக்குத் தேவைப்படும் வழிகாட்டல்களையும் ஒத்தாசையையும் வழங்கும் தனியானதோர் இளைஞர் அபிவிருத்தி வங்கி (Youth Development Bank)
- இளம் கலைஞர்களுக்கும் மாற்றுத்திறனாளிகளான இளைஞர் யுவதிகளுக்குமான சுயதொழில் வாய்ப்புக் கருத்திட்டங்கள், இலகு கடன் திட்டங்கள், பயிற்சி அளித்தல், உற்பத்திகளை சந்தைப்படுத்தும் நிலையம்.
- மக்கள் பிரதிநிதித்துவ நிறுவனங்களில் இளைஞர் பிரதிநிதித்துவத்தைக் கட்டாயப்படுத்துவதற்கான இடஒதுக்கீடு.
- இளம் அரசியல் செயற்பாட்டாளர்களின் மேம்பாட்டுக்கான அரச மற்றும் அரச சார்பற்ற ஒழுங்கமைப்புகளுடன் ஒன்றிணைந்த வலுவூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள்.
- அமைதி, நல்லிணக்கம் மற்றும் மீள்கட்டுமான உபாயமுறைகளில் இளைஞர்களை இணைத்துக்கொள்வதற்கான ஒரு முறைமை.
- சைபர் வெளி மூலம் கல்வி நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கான ஐந்தாண்டு டிஜிட்டல் முறை கல்வி நிகழ்ச்சித் திட்டங்கள் (Digital Education Programmes)
- நாடுமுழுவதிலுமுள்ள அனைவருக்கும் இணைய வசதிகளை வழங்கக்கூடிய விதத்தில் உட்கட்டமைப்பு வசதிகளை முன்னேற்றுதல்.
- அனைத்துத் துறைகளிலும் இளம் கண்டுபிடிப்பாளர்களை ஊக்குவிக்கும் திட்டம்.
- ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவிலும் ஏற்படுத்தப்படும் சமுதாயக் கல்வி நிலையங்களில் இளைஞர்களுக்குத் தேவையான கலாசார வாழ்வை விரிவுபடுத்தும் கலை கலாசார நிறுவனமொன்று.
- இளம் படைப்பாளிகளை மதிப்பீடுசெய்வதற்கும் அவர்களுக்கு வாய்ப்பளிப்பதற்கும் இலங்கையின் பல்வேறு துறைகளை உள்ளடக்கும் தேசிய இளைஞர் திறமைகளை மதிப்பிடும் ஒரு விருது விழா.
- இளைஞர் யுவதிகளின் கூட்டு நடவடிக்கை மற்றும் படைப்பாற்றலை ஆதரிக்கும் ஒரு நிதியம்.
- இளைஞர்களுக்கான விளையாட்டு அணுகலை உறுதிசெய்வதற்காக அனைத்து பிரதேச செயலகப் பிரிவுகளிலும் விளையாட்டரங்குகளை நிறுவுதல்.
- ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிலும் அரசாங்கத்தின் தேகாரோக்கிய சேவைகளை வழங்கும் 5 நிறுவனங்கள் வீதம் நிறுவுதலும் அவ்வாறான சேவைகளை வழங்கும் நிறுவனங்களை உருவாக்கும் அமைப்புக்களுக்கும் தனியார் நிறுவனங்களுக்கும் சலுகை வட்டி வீத அடிப்படையில் கடன் வசதிகள்.
- தேசிய மற்றும் சர்வதேச விளையாட்டில் ஈடுபடும் திறமையான விளையாட்டு வீர வீராங்கனைகளுக்கு அவர்களின் விளையாட்டு நடவடிக்கைகளுக்கு அரச அனுசரணையை வழங்கும் முறையை முறைவலுப்படுத்தி நிகழ்நிலைப்படுத்தல்.
- இளைஞர்கள் சந்திக்கும் பிரச்சினைகளின்போது தலையீடுசெய்யும் குறைகேள் அதிகாரி (Ombutsman) ஒருவரை நியமித்தல்.
- வரதட்சணை முறையை தடைசெய்தலும் குழந்தை வளர்ப்பு பற்றி தீர்மானமெடுக்கும் முழு உரிமையையும் பெண்களுக்கு வழங்குதலும்.
- பால்நிலை சமத்துவம் பற்றிய கருத்தியல்வாத, காலங்கடந்த காலனித்துவ ஆட்சிக் கால சட்டங்களை ஒழித்தல்.
- சுற்றுச்சூழல் பாதுகாப்பில் இளைஞர்களின் பங்கேற்பை இலக்காகக்கொண்ட கல்வி நிகழ்ச்சித்திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தல்.

# முதியோர் சனத்தொகை

தமது வாழ்நாளில் பெரும்பகுதியை தமது குடும்பம் உள்ளிட்ட சமூக-பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிப்புச்செய்த முதியவர்களை அவர்களது வாழ்வின் அந்திம காலத்தில் பேணிப் பராமரிப்பது ஒரு சமூகப் பொறுப்பாகும். ஒருசில கொள்கை வகுப்பாளர்கள் ஒட்டுமொத்த சனத்தொகையில் முதியோர் சனத்தொகை அதிகரிப்பதை ஒரு பிரச்சினையாக அடையாளம் காட்டுகின்றபோதிலும், பொறுப்புடன் அந்நிலையைப் புரிந்துகொண்டு முதியோருக்கு விசேட கவனிப்புடன் பணியாற்றுவது ஒரு சமூகப் பொறுப்பாகும். 2012 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட சனத்தொகைக் கணிப்பின்படி (60 வயதுக்குமேற்பட்ட) முதியோர் சனத்தொகை மட்டும் 2.5 மில்லியனாக காணப்பட்டது. அது, இன்றைய மொத்த சனத்தொகையில் 12.4% ஆகும். இலங்கையின் மக்கட் சமூகத்தில் நிலவும் கலாசார குணவியல்பிற்கமைய குடும்பத்திலுள்ள பிள்ளைகளும் உறவினர்களும் மூலம் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியிலும் வயதுமுதிர்ந்தவர்கள் கவனிக்கப்படுகின்றபோதும், அக்கலாசாரப் பெறுமானங்களை முன்னெடுத்துச்சென்று முதியோரைப் பேணிப் பராமரிப்பது ஒட்டுமொத்த சமூகத்தின் பொறுப்பு என்றே நாம் நம்புகின்றோம்.

## செயற்பாடுகள்

- வீட்டினுள் முதியவர்களைப் பேணிப் பராமரிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் சந்தர்ப்பத்தில் அதற்கவசியமான அடிப்படை வசதிகளை இலவசமாக வழங்குதல்.
- வீட்டினுள் இருக்கின்ற முதியவர்களின் சுகாதார நடவடிக்கைகளை மாதாந்தம் கவனிப்பதற்கு சுகாதாரக் குழுக்களை ஈடுபடுத்தல்.
- முதியோர் பராமரிப்பு நிலையங்களில் காணப்படவேண்டிய ஆகக்குறைந்த வசதிகளை நிர்ணயித்து ஒவ்வொரு உள்ளூராட்சி அதிகாரப் பிரதேசத்தினுள்ளும் சர்வதேச தராதரங்களுக்கு அமைய அமைக்கப்பட்ட 02 முதியோர் பராமரிப்பு நிலையங்கள் வீதம் நிறுவுதல்.
- சிறந்த மனோநிலையைப் பேணிவருவதற்கும் சமூக உரையாடலை ஏற்படுத்துவதற்கும் முதியோரை ஆக்கபூர்வமான பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடுத்தும் ஒரு நிகழ்ச்சித்திட்டம்.
- அரசியல் அல்லது வேறு நட்புத் தொடர்புகளுக்கு அப்பால் முதியோரின் அனுபவங்களையும் அறிவையும் உபதேசங்களாகப் பெற்றுக்கொள்வதற்கான ஒரு முறைசார்ந்த திட்டம்.
- முறைசாரா தொழில் துறைகளில் ஈடுபடுபவர்களுக்கான ஒரு சமூகப் பாதுகாப்பு வேலைத்திட்டம்.
- ஓய்வூதியம் கிடைக்காத அரச மற்றும் தனியார் துறையைச் சேர்ந்த அனைவருக்கும் பங்களிப்பு ஓய்வூதியம்.
- அனைத்து முதியவர்களுக்கும் பாதுகாப்புக் கிடைக்கின்ற காப்புறுதி உத்தரவாதமொன்றை அமுல்படுத்துவதற்கு நிதியமொன்றை நிறுவுதல்.
- முதியோரின் நாளாந்த வாழ்வை சுதந்திரமான ஒரு சூழலில் மகிழ்ச்சியுடன் கழிப்பதற்கும் நடைபாதைகள், மத வழிபாட்டுத்தலங்கள், சுற்றயலில் விடுமுறை விடுதிகள் என்பவற்றை ஏற்படுத்துவதற்கும் ஊக்குவிப்பளித்தலும் அரசாங்கம் தலையிட்டு அவற்றை நிர்மாணித்தலும்.
- முதியோருக்கும் மாற்றுத்திறனாளிகளுக்கும் பொதுப் போக்குவரத்துச் சேவைகளை இலவசமாக வழங்குதல்.
- பொதுச் சேவைகள் வழங்கப்படும் இடங்களில் முதியோருக்கு முன்னுரிமை வழங்கும் ஒரு நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்தல்.
- சிரமமுள்ள முதியவர்களுக்கு வாழ்க்கைச் செலவுக்கேற்ற நிதிசார் கொடுப்பனவொன்றை வழங்குதல்.

- முதியோரையும் மாற்றுத்திறனாளிகளையும் பராமரித்தல் தொடர்பான தொழில்சார் பாடநெறிகளை ஏற்படுத்தல்.
- முதியோர் சனத்தொகையில் நலனோம்பல், பராமரிப்பு ஆகியவற்றுக்கான அரச நிறுவனமொன்றை நிறுவுதல்.

# மாற்றுத் திறனாளிகள்

இலங்கையின் சனத்தொகையில் சுமார் 8% சதவீதத்தினர் மாற்றுத் திறனாளிகளாவர். இவர்களில் 57% சதவீதமானவர்கள், மாற்றுத் திறனாளிகளான பெண்களாவர். இவர்களில் 15-19 வயதிடைப்பட்டவர்களான 30,308 பேர் எந்தவொரு கல்விசார் பணியிலும் ஈடுபடுவதில்லை. 16 வயது வரையான சிறுவர்களுக்கு கட்டாயக் கல்வி உரித்தாக வேண்டுமென்றபோதும், இவர்களில் 5-9 வயதிடைப்பட்ட 31,545 சிறுவர்களில் 6,404 (20%) பேர் கல்வி பெறுவதில்லை. பொருளாதாரக் கருமங்கள் எவற்றிலும் ஈடுபடாத மாற்றுத் திறனாளிகளின் எண்ணிக்கை 71% சதவீதம் போன்ற பாரிய அளவாகும். மாற்றுத் திறனாளிகளின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக நிறைவேற்றப்பட்ட பல்வேறு சட்டங்களும் ஒழுங்குவிதிகளும் காணப்பட்டபோதும் எமது நாட்டில் மாற்றுத் திறனாளிகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் இன்னும் உருவாக்கப்படவில்லை. மாற்றுத் திறனாளிகளுக்கு தமக்குத் தேவைப்படும் சுகாதார வசதிகளைப் பெற்றுக்கொள்ளல், கல்விக்கான வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்ளல், தொழிலொன்றைப் பெற்றுக்கொள்ளல் உள்ளிட்ட சுதந்திரமாக வாழ்நாளைக் கழிப்பதற்கு எடுக்கும் முயற்சிகளின்போது அநேகமான உளப்பாங்குசார், கலாசாரம்சார், சமூக மற்றும் அரசியல்சார் பிரச்சினைகளுக்கும் சவால்களுக்கும் முகங்கொடுக்க நேரிடும்.

## நோக்கங்கள்

- மாற்றுத் திறனாளிகளுக்கும் ஏனைய பிரஜைகளுக்குரிய வாய்ப்புகளையும் சிறப்புரிமைகளையும் உரிமைகளையும் சரிசமமாக அனுபவிப்பதற்குள்ள உரிமையை ஏற்றுக்கொள்ளல்.
- சுகாதாரம், கல்வி, போக்குவரத்து போன்ற சேவைகளை வழங்கும்போது மாற்றுத் திறனாளிகளின் சிறப்பான தேவைகள் மீது கவனம் செலுத்தி அவர்களுக்கு சிறப்பான நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துதல்.
- மாற்றுத் திறனாளிகளை சமூகத்தில் சிறப்புத் தேவையுள்ள நபர்களாகக் கருதி அவர்களின் நலன்புரியைக் கவனிப்பதையும் பராமரிப்பதையும் அரசாங்கத்தின் ஒரு கடமையாகக் கருதுதல்.

## செயற்பாடுகள்

- மாற்றுத் திறனாளிகளின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு வரையப்பட்டுள்ள சட்டமூலத்தை மாற்றத் திறனாளிகளுக்கு வாய்ப்பான விதத்திலும் அவர்களின் அடிப்படை உரிமைகள் பாதுகாக்கப்படுகின்ற விதத்திலும் மீண்டும் ஏற்படுத்தி பாராளுமன்றத்தில் நிறைவேற்றுதல்.
- ஐக்கிய நாடுகள் சமவாயத்தின் (UNCPRD) 33 ஆம் பிரிவின (i) உப பிரிவிற்கமைய அரசாங்கத்தின் மிக்குயர் அரசியல் தலைமைத்துவத்தினால்

நெறிப்படுத்தப்படும் ஒருங்கிணைப்புப் பொறிமுறையொன்றையும் அச்சமவாயத்தின் (ii) உப பிரிவுக்கு அமைய அரசாங்கத் தலையீடுகளுக்கு அப்பாற்பட்ட சுயாதீன மேற்பார்வைப் பொறிமுறையொன்றையும் நிறுவுதல்.

- மாற்றுத் திறனாளிகளின் உரிமைகள் பற்றி நீதிமன்ற முறைமையின் அனைத்துப் பிரிவுகளையும் அறிவுறுத்துவதும் சமுத்துவம் உரிய முறையில் அமுல்படுத்தப்படுவதை உறுதிப்படுத்துதலும் அதற்கு உகந்த நடவடிக்கைகளை மேற்கொள்வதும் அவற்றை தொடர்ச்சியாகக் கண்காணிப்பதும் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட வேண்டும்.
- பாடசாலை செல்லவேண்டிய வயதுப் பராயத்திலுள்ள அனைத்து மாற்றுத் திறனாளி சிறார்களுக்கும் கல்வி பெறுவதற்குள்ள உரிமையை ஏற்றுக்கொண்டு கல்வி இடையீட்டு முறைமையை பாடசாலைக் கல்வி முறைமையில் உட்படுத்துதல்.
- தாம் விரும்பும் எந்தவொரு பாடத்துறையிலும் உயர்கல்வியைத் தொடரும் வாய்ப்பை மாற்றுத் திறனாளிகளுக்கும் வழங்குவதுடன், அதற்கு வசதியளிப்பதற்கு விசேட புலமைப்பரிசில் திட்டமொன்றை அமுல்படுத்துதல்.
- மாற்றுத் திறனாளிகளுக்கு அவர்களின் மாற்றுத் திறனின் தன்மைப்படி ஈடுபடக்கூடிய தொழிற்றுறைகளை அடையாளம் கண்டு அதற்குத் தேவைப்படும் தொழிற்பயிற்சியை வழங்குதலும் அதற்கான விசேட பயிற்சி நிலையங்களை நிறுவுதலும்.
- மாற்றுத் திறனாளி பிள்ளைகளுக்கு கல்வி வாய்ப்பளிக்கும் விசேட வதிவிட கல்வி நிறுவகங்களில் பண்புத்தரத்தை முன்னேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல்.
- அரசாங்க மற்றும் தனியார்துறை வேலைவாய்ப்புகளுக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படும்போது மாற்றுத் திறனாளிகளுக்கு சம வாய்ப்பளிப்பதுடன் அரச துறை வேலைவாய்ப்புகளை வழங்கப்படும்போது தற்போது காணப்படும் அனுமதிப்பங்கு முறையை 2% இலிருந்து 5% வரை அதிகரிப்பதுடன், தனியார் துறைக்கும் குறித்த அனுமதிப்பங்கு முறையை அறிமுகப்படுத்தல்.
- மாற்றுத் திறனாளிகளுக்கு பொது இடங்களுக்கும் பொதுக் கட்டிடங்களுக்கும் உட்பிரவேசிப்பதற்கான வசதிகளை வழங்குவதற்காக இயற்றப்பட்ட 2006 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க உட்பிரவேச வசதிகள் ஒழுங்குவிதிகளை செயல்வலுவாக்கம் செய்வதுடன், அத்தகைய ஒழுங்குவிதிகளை அமுல்படுத்துவதைக் கட்டாயமாக்குதல்.
- மாற்றுத் திறனாளிகளின் வாக்குரிமையை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான வசதிகளை அரசாங்கத் தலையீட்டுடன் பெற்றுக்கொடுத்தல்.
- மாற்றுத் திறனாளிகளுக்கு மருத்துவமனைகளில் ஏற்படக்கூடிய அசௌகரியங்களைக் குறைப்பதற்கும் அவர்களுக்குத் தேவைப்படும் சேவைகளை தாமதமின்றி வழங்குவதற்கும் ஒவ்வொரு மருத்துவமனையிலும் மைய இடமொன்றை அத்துடன்/ அல்லது உதவிக் கருமபீடங்களை அறிமுகப்படுத்தல்.
- அரச மருத்துவமனைகளின் சேவைகள் பற்றிய செவிப்புல, கட்புல தொடர்பாடல் பலகைகளை நிறுவுவதற்கும் பௌதிக பிரவேச வசதிகளை முன்னேற்றுவதற்கும் சைகை மொழிபெயர்ப்பாளர்களின் சேவையைப் பெற்றுக்கொள்வதற்கும் உரிய நடவடிக்கை எடுத்தல்.
- பெற்றோர் இறந்த பின் தமது பாதுகாப்பும் பராமரிப்பும் இல்லாமல் செல்வதால், புலமைசார் குறைபாடுகளும் பலவித ஊனங்களுடன்கூடியவர்களுக்கு பாரதூரமான சட்டம்சார் மற்றும் வேறு பிரச்சினைக்குரிய நிலைமைகளுக்கு முகங்கொடுக்க நேரிடுவதால், அவர்களுக்கான விசேட சமூகப் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துவதுடன், விசேடமாக பெற்றோரை அடுத்து பாதுகாவல் உரிமைளிக்கும்போது சட்ட ஏற்பாடுகளை ஏற்படுத்துதல்.
- மாற்று ஊடகங்கள் வாயிலாக தொடர்பாடல் மேற்கொள்ளும் வசதி நீதிமன்ற தொகுதியில் காணப்படாமையால் மாற்றுத் திறனாளிகளை (குறிப்பாக

செவிப்புலனற்றோர் மற்றும் மூளை வளர்ச்சிக் குறைபாடுள்ளவர்கள்) பாதிக்கப்பட்டவர்களாக இருக்கும்போதும் சார்த்தப்பெற்றவர்களாகும்போதும் சட்டத்தின் உதவியின்றி பல்வேறு வகையான பாரபட்சங்களுக்கு முகங்கொடுப்பதைத் தடுப்பதற்கு நீதிமன்றத் தொகுதியின் அனைத்துப் பிரிவுகளையும் அறிவுறுத்துவதும், சமத்துவம் உரிய முறையில் அமுல்படுத்தப்படுவதை உறுதிப்படுத்துவதும் அதற்கு ஏற்ற நடவடிக்கைகளை மேற்கொள்வதும் அதனை தொடர்ந்தும் கண்காணித்தலும்.

- மாற்றுத் திறனாளிப் பெண்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகளுக்கான தீர்வு யோசனைகளை முன்வைப்பதற்கு மாற்றுத் திறனாளிகள் அங்கம் வகிக்கும் முழுஅதிகாரம் பொருந்திய குழுவொன்றை நிறுவுதல்.

# திருநங்கையர் சமூகம்

சில பழைமைபேணும் சமூக கலாசார உளப்பாங்குகள் காரணமாக திருநங்கையர் சமூகம் பாரபட்சத்திற்கு உள்ளாகியிருப்பதுடன், அச்சாராரை நெருக்குதலுக்கு உட்படுத்தும் காலனித்துவ ஆட்சிக் கால சட்ட பணிச்சட்டகங்களை மேலும் பேணிவருவது இந்நிலையை மேலும் பாரதூரமானதாக மாற்றும். இவ்வினப் பிரிவினரின் உயிரியல் விஞ்ஞான ரீதியான வித்தியாசங்களை ஏற்றுக்கொண்டு அவர்களின் உரிமைகளைக் காப்பதற்கும் பிரதான சமூக நீரோட்டத்தினுள் ஓரங்கட்டப்படுவதற்கு இடமளிக்காமல் நடவடிக்கை எடுப்பதும் அத்தியாவசியமாகும்.

## செயற்பாடுகள்

- இலங்கையின் தண்டனைச் சட்டக்கோவையின் 365, 365 அ பிரிவுகளை திருநங்கையர் சமூகத்திற்கு ஏற்புடையதாக அல்லாதவாறு திருத்தி அவற்றை வயதுவந்தவர்கள் மத்தியில் சுய விருப்புடன் பிரத்தியேக வெற்றிடத்தில் இடம்பெறும் பாலியல் செயற்பாடுகளாக ஏற்றுக்கொள்ளல்.
- திருநங்கையர் சமூகம் மீது பாகுபாடு காட்டி தான்தோன்றித்தனமான விதத்தில் கைதுசெய்து தண்டனை விதிப்பதைத் தடுப்பதற்கு உரிய கட்டளைச்சட்டத்தைத் திருத்துதல்.
- திருநங்கையர் சமூகத்தை சட்டத்தின் முன்னிலையில் சமமான கவனிப்பைப் பெறுறுவதை உறுதிப்படுத்தும் அதேவேளை, திருநங்கையர் சமூகத்திற்கு சிறப்பாயமைந்த உரிமைகளை அடையாளம் கண்டு அவற்றை செயல்வலுவாக்கப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்.
- திருநங்கையர் சமூகத்திற்கு எதிரான வெறுப்பூட்டும் பேச்சுக்களையும வன்செயலையும் தடுப்தபற்கான ஒரு விசேட சட்டத்தை நிறைவேற்றுதல்.
- திருநங்கையர் சமூகத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கும் அச்சமூகத்தின் மனக்குறைகளைக் கவனிக்கக்கூடிய உரிய அதிகாரம்பொருந்திய செயலகமென்றை நிறுவுதல்.

# 04

# என்றென்றும் பசுமையான ஒரு தேசம்

# சுற்றுச்சூழல்

## இயற்கை வனப்புமிகு ஒரு தேசம்

என்றென்றும் பசுமையும் குளிர்ச்சியும் வனப்பும் நிறைந்த மரஞ்செடிகள் கொடிகளும் உயிர் பல்வகைமையும் கொண்ட இந்நாட்டை தூய உணவு, கிராமப்புற மற்றும் நகர்ப்புற அழகூட்டல், வானத்தின் அமைப்பு முதலிய அனைத்துப் பகுதிகளையும் மிகத் தூய்மையுடன் கூடிய மேம்பட்ட மட்டத்தில் வைத்துப் பேணுதல் எமது பொறுப்பாகும். பிரசையானவர் வாழ்வதற்காக உள்ள இந்த வானம், பூமியையும் தாவர இனங்களையும் பாதுகாப்பிற்குள் பூகோள வெப்பம் பற்றிய பிரச்சினையைக் குறைத்துக் கொண்ட அழகிய சுற்றுப்புறம் எமக்கு எஞ்சும்.

சுத்தமான நிலத்தில் நீலம் போர்த்திய நீர்த்தொகுதியையும் தூய வளிக் கோளத்துடன் கூடியதும் சுத்தமானதுமான உணவு பானங்களைக் கொண்டதுமான மனித வாழ்விற்குத் தேவையான தூயதொரு வாழ்விடத்தையும் சேவை நிலையத்தையும் உருவாக்குவதற்கும் ஒரு நாடென்ற வகையில் அழகு நிறைந்த ஒரு சூழலை உருவாக்குதலும் எமது எதிர்பார்ப்பாகும்.

இத்தகைய ஒரு நிலைமையை உருவாக்கும்போது நாடு எதிர்கொண்டுள்ள நெருக்கடிகளை இனங்காண வேண்டும். கடந்த காலத்தில் இந்நாட்டில் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை திட்டமிடும்போது சுற்றாடல் காரணிகள் கவனத்தில் கொள்ளப்பட்டாலும் தற்காலத்தில் அது படிப்படியாக மாற்றமடைந்து நிதி மற்றும் பௌதிக காரணிகளை அடிப்படையாகக் கொண்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் தயாரிக்கப்படுவதைக் கவனத்திலெடுப்பதுடன் சுற்றாடல் பாதுகாப்பின்மை தீவிரமடைந்து அது மனித வாழ்விற்கும் உயிரினங்களின் வாழ்விற்கும் சவால்விடும் அளவிற்கு விருத்தியடைவதற்கு வழிவகுக்கப்பட்டுள்ளது.

பாராமுகமாக மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் அபிவிருத்தியென பொருள்படுத்தப்பட்டுள்ள ஒரு சூழலில், சமூக, பொருளாதார அபிவிருத்தி இன்றியமையாததென ஏற்றுக்கொள்ளும் நாம், நீண்டகால ரீதியில் அபிவிருத்திக்கு உதவக்கூடிய இயற்கை வளங்களை மீள்நிறுவகக் கூடிய விதத்தில் பயன்படுத்தி அபிவிருத்திசெய்து உயர்ந்த மட்டத்தில் வைத்துப் பேணுவதற்கும் அதன் நிலைபேறான தன்மையை பாதுகாப்பதற்குமாக உயிரினத் தொகுதியை பாதுகாத்துக்கொண்டு சுற்றாடல் நட்புறவுமிக்க அபிவிருத்திச் செயற்பாட்டிற்கு நாட்டினை திசை திருப்புவோம்.

இலங்கையின் இடஅமைவும், அதன் புவியியல் அமைப்புகளும் ஆண்டு முழுவதிலும் நன்கு கிடைக்கின்ற சூரிய ஒளியும் இரு வகையான காற்றோட்டங்களும் விலைமதிப்பிட முடியாத மழை வளத்தையும் சுத்தமான கனிய வளங்களையும் உலகில் அதிசிறந்த உயிர்ப் பல்வகைத் தன்மையின் உரிமையையும் கருத்திற்கொள்ளும்போது ஒவ்வொன்றுடன் இணைந்த விசேடமான சுற்றாடல் தொகுதியின் உரிமையும் மிக முன்னேற்றகரமான அத்துடன் அசல் அபிவிருத்தியை நோக்கி நாட்டை திசைதிருப்பக்கூடிய இயலுமையைச் சுட்டிக் காட்டுகின்றது.

தூய்மையானதோர் இலங்கையைக் கட்டியெழுப்புவதற்கான எமது முக்கிய நோக்கமாவது தற்கால மற்றும் எதிர்கால மனித வாழ்விற்காகவும் உயிரினங்களின் வாழ்விற்காகவும் சுற்றாடலை முகாமைசெய்யும் பொருட்டு அரசாங்கத்தின் அர்ப்பணிப்பு நாம் கட்டியெழுப்பும் தேசிய சுற்றாடல் கொள்கையின் முக்கிய தேவையாக கருதுவதுடன் நிலைபேறான அபிவிருத்திச் சட்டகத்தின் கீழ் நாட்டில் சீரான சுற்றாடல் முகாமையை உறுதிப்படுத்த எதிர்பார்க்கப்படுகிறது. ஒட்டுமொத்த சுற்றாடல் தொகுதிகளை பாதுகாப்பதற்கும்

முகாமைசெய்வதற்கும் வழிகாட்டுவதற்கு எதிர்பார்க்கப்படுவதுடன், அனைத்து அரச சார்புள்ள, அரச சார்பற்ற நிறுவனங்களும், ஆட்களும் இதன் அடிப்படை நோக்கிற்கமைய வழிநடத்தப்படுகின்றனர். அதற்காக சிறப்பான 5 நோக்குகளை நாம் தயாரித்துள்ளோம்.

1. இலங்கையில் சமூக-பொருளாதார வளர்ச்சி மற்றும் சுற்றுச்சூழலுக்கு இடையில் சமநிலையைப் பேணக்கூடியவாறு இயற்கை வளங்களையும் சுற்றுச்சூழல் முகாமையையும் மேம்படுத்துதல்.

2. சுற்றுச்சூழல் மற்றும் இயற்கை வளங்களின் நிலையான முகாமையின் போதும் திட்டமிடுதலின்போதும் ஒருங்கிணைந்த அணுகுமுறையைப் பயன்படுத்துதல்.

3. சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்காக நிறுவனங்களுக்கிடையில் சிறந்த ஒருங்கிணைப்பையும் நல்லாட்சிக் கொள்கைகளையும் அமல்படுத்துவதன் மூலம் சுற்றுச்சூழல் சட்ட மற்றும் நிறுவனக் கட்டமைப்பை வலுப்படுத்துதல்.

4. சுற்றாடல் முகாமையின்போது தற்காலத்தில் எதிர்கொண்டுள்ள வறுமையை ஒழித்தல் மற்றும் காலநிலை மாற்றத்தின் விளைவாக தற்போது உருவாக்கப்பட்டுள்ள பல்வேறு சூழல் நெருக்கடிகளைத் தணித்தல்.

5. சுற்றாடல் பாதுகாப்பை உறுதிசெய்வதற்கான அறிவையும் உளப்பாங்குகளையும் வளர்ப்பதை நோக்காகக்கொண்ட ஒரு மனித கலாசாரத்தை உருவாக்குதல்.

## தூய்மையான சுற்றாடலைக் கொண்டதோர் இலங்கையை உருவாக்குவதற்கான கோட்பாடுகள்

தூய்மையான சுற்றுச்சூழலைக் கொண்ட இலங்கையை உருவாக்குவதற்கான கோட்பாடுகளையும் எதிர்கால வாழ்வுகளின் பண்புத்தரத்தை உயர்த்துவதையும் நோக்காக்கொண்டு நாம் அந்நோக்கங்களை எய்துவதற்காக பின்பற்றுகின்ற செயற்பாடுகளும் 11 கோட்பாடுகள் ஊடாக திட்டமிடப்படுகின்றன. இக்கோட்பாடுகளுக்கு நேரொத்ததாக வருங்கால கொள்கைச் செயற்பாடுகள் வரிசைப்படுத்தப்படும்.

1. **சுற்றுச்சூழல் நீதி**: சுற்றுச்சூழலைப் பாதுகாத்து, முழுநிறைவான சூழலை உருவாக்குவது இலங்கையின் ஒவ்வொரு பிரசையினதும் பொறுப்பாகும். அதன் பிரதிபலன்கள் மனித இனத்தினதும் உயிரினங்களினதும் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும்.

2. **சுற்றாடல் மற்றும் அபிவிருத்திக்கிடையிலான சமநிலையை உறுதி செய்தல்:** அபிவிருத்தித் திட்டங்களின்போது சுற்றுச்சூழலில் ஏற்படும் தாக்கத்தை குறைத்தலும் வளங்களின் நிலையான அத்துடன் வினைத்திறமையான பயன்பாட்டை உறுதிசெய்தலும்.

3. **சுற்றாடல் அணுகுமுறை**: சுற்றாடல் வளங்களின் வளர்ச்சி, முகாமைத்துவம் மற்றும் பாதுகாப்பின்போது இணைந்த சுற்றாடல் தொகுதி அணுகுமுறையைப் பயன்படுத்தல்.

4. **நிலைபேறான வள பயன்பாடு**: சுற்றாடல் வளங்களைப் பயன்படுத்தும் போது அவற்றின் பண்புத்தரம் மற்றும் பெறுமதிக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் எதிர்கால மனித இருப்பு பாதுகாக்கப்படும் வகையில் பயன்படுத்தல்.

5. **நியாயம்:** இயற்கை வளங்களை பயன்படுத்தும்போது மனித சமநிலைப்பாட்டை பேண வேண்டியதுடன், எல்லா உயிரினங்களின் இருப்புக்கும் ஆபத்து விளைவிக்காமை.

6. **மக்கள் பங்கேற்பு:** சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் முகாமையின்போது பங்கேற்பு அணுகுமுறையை மேம்படுத்துதல்.

7. **முன்பாதுகாப்பு நடவடிக்கை:** ஏதேனும் செயற்பாட்டினால் முழுமையாக மதிப்பிடமுடியாத சுற்றாடல் அச்சுறுத்தல் இருக்கும்போது, அதனைத் தீர்ப்பதற்கு முன் அச்செயற்பாட்டைத் தடைசெய்வதற்கு அல்லது மட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

8. **மாசுபடுத்துபவர் பூர்த்திசெய்ய வேண்டும்:** சுற்றாடலை மாசுபடுத்துபவர் எவராக இருப்பினும் குறித்த மாசுபடுத்தலை நீக்கும் பொறுப்பை அவரே ஏற்றல்.

9. **சுற்றாடல் நல்லாட்சி:** சுற்றாடல் சட்டங்கள், சுற்றாடல் முகாமை நிலையங்கள் மற்றும் அவற்றின் வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல், மனித உரிமைகளுக்கான மதிப்பு, சமூகப் பங்களிப்பு முதலியன சுற்றாடல் முகாமையின்போது உள்ளீர்க்கப்படுவதை உறுதி செய்தல்.

10. **சமுதாய வலுவூட்டல்:** சுற்றாடல் தொகுதிகளுடன் வாழ்கின்ற மக்களுக்கு தேவையான அறிவினையும் அதற்கான கலாசாரத்தையும் உருவாக்கி அதன் நிலைபேறான இருப்பை உறுதிப்படுத்துதல்.

11. **சுற்றாடல் பாதுகாப்பு:** மனித செயற்பாடுகள் மற்றும் இயற்கைச் செயற்பாடுகளினால் எழுகின்ற சுற்றாடல் இடையூறுகளிலிருந்து சுற்றாடல் தொகுதியைப் பாதுகாத்தல்.

## தூய்மையானதோர் இலங்கையைக் கட்டியெழுப்புவதற்கான பெறுமதிவாய்ந்த மூலதனம்

1. 65,612 சதுர கி.மீ. பரப்பைக்கொண்ட பல்வேறு புவியியல் வேறுபாடுகளுடன்கூடிய நிலப் பகுதியையும் அதேபோன்று ஏழு மடங்கைத் தாண்டிய வளங்கள் நிறைந்த கடல் வலயத்தையும் கரைக்கும் கடலுக்குமிடையே பல்வேறுபட்ட சுற்றாடல் தொகுதிகளுடன் தொடர்புபட்ட தனிச் சுற்றாடல் தொகுதியைக் கொண்டதுமான நாம் இலங்கையை அடையாளம் காண்கின்றோம்.

2. நாட்டின் முழுமொத்த நிலத்தைக் கருத்திற்கொள்ளும்போது 4 மீற்றர் அண்ணளவான கனத்தைக்கொண்ட மண் படலம் நாட்டுக்கு உள்ளது. இப்படலத்தில் மிகப் பெறுமதி வாய்ந்த பகுதியாக மேற்பரப்பிலிருந்து 35 அளவான மண்டலம் கருதப்படுகிறது. இந்தப் படலமானது மென் சேதனப் பொருள்கள் நிறைந்த ஹியுமஸ் பரப்பைக் கொண்டுள்ளதுடன், உட்புற மண்ணும் கற்களும் மேற்பரப்பின் தாவரங்கள் மற்றும் உயிரினங்களும் உள்ளடங்கும் உயிரின மண்டலமும் வளி மண்டலமும் நீர்த்தொகுதியும் பெறுமதிவாய்ந்த உயிரினத் தொகுதியாகும். தற்போது இப்படலம் உள்ளிட்ட மண் படலமானது கடும் ஆபத்தான நிலையை எதிர்நோக்கியுள்ளது. முறையற்ற கட்டுமானங்கள் மற்றும் விஞ்ஞான ரீதியாக தயாரிக்கப்பட்ட தேசிய நிலப் பயன்பாட்டுத் திட்டம் செயற்படுத்தப்படாத தவறினால் சுமார் 4 மீற்றர் அண்ணளவான தடிப்பைக் கொண்ட செழிப்பான மண் படலம் தற்போது பெரும் பாதிப்பை

எதிர்கொண்டுள்ளது. கடுமையான மண் அரிப்பு, முறையற்ற கட்டுமானங்கள் மற்றும் நிலத்தின் கனிய வளங்களை தவறாக பயன்படுத்தல் என்பன காரணமாக மண் சரிவுகள் அதிகரித்து செழிப்பற்ற நிலத்தைப் போன்று பாலைவனமாகும் அடிப்படை இலட்சணங்கள் பிரதேசத்திலிருந்து தென்படுவதையும் பெரும் சவாலாக இனம் காண்கின்றோம்.

3. முனைப்பான 2 பருவ மழை மற்றும் இடைக்கால பருவ மழைகள் இரண்டினைக்கொண்ட எமது நாட்டிற்கு வருடமொன்றில் அண்ணளவாக 111,250 கன மீற்றர் மழைவீழ்ச்சி கிடைக்கின்றது. அத்துடன் 103 ஆற்றுப் பள்ளத்தாக்குகளையும் கரையை அண்மித்ததாக 94 சிறிய ஆற்றுப் பள்ளத்தாக்குகளையும் எமது நாடு கொண்டுள்ளது. ஒருவேளை கடும் சேதங்களை ஏற்படுத்தும் வெள்ளத் தாக்குதலுக்கும் இன்னுமொரு வேளை பாரிய வரட்சிக்கும் ஆளாதலும் நீரற்ற வளமான நீர் வளம் மாசடைந்து பாதக விளைவுகளை ஏற்படுத்தும் வகையில் வளர்ச்சியடைதலையும் மற்றுமொரு சவாலாக இனம் காண்கின்றோம்.

அதேபோன்று நாட்டின் கங்கைகள், ஆறுகள் முதலியன உள்ளடங்கும் ஆற்றுப் பள்ளத்தாக்குகள் அண்மைக்கால அபிவிருத்தி எனும் பெயரில் கொண்டு வரப்பட்ட கருத்திட்டங்கள் காரணமாக கடும் சேதங்களுக்கு உட்பட்டு நாட்டுக்கு பாதக விளைவுகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன. குறிப்பாக வலுசக்தி உற்பத்தி மற்றும் நீர்ப்பாசனத் தேவைகளுக்கென எடுத்துக் காண்பித்துக் கொண்டு மத்திய மலையகத்தில் மேற்கொண்டுள்ள பல சிறிய மின்னுற்பத்தி நிலையங்கள் தொடக்கம் பாரிய அளவிலான கருத்திட்டங்களினால் நாடு அடைகின்ற பொருளாதார இலாபங்களைப் பார்க்கிலும் நிகழ்ந்துள்ள அழிவின் பெறுமானமும் எதிர்காலப் பாதக அச்சுறுத்தல்களும் கணிப்பிட முடியாதளவில் உள்ளதென்பது எமது நம்பிக்கையாகும். ஆகையால், இனிவரும் காலத்தில் அத்தகைய சேதங்களுக்காக இடமளிக்கப்பட மாட்டதென்பதுடன் நாட்டின் வலுசக்தி தேவைகளுக்காக குறைந்த செலவின் கீழ் கூடிய நன்மைகளை பெற்றுத்தரக்கூடிய காற்று, சூரிய சக்தி என்பவற்றின்மீது நாடு கவனம் செலுத்தும்.

4. மனிதர்கள் மற்றும் உயிரினங்களின் வாழ்விற்கு பெரும் உதவியான வளி மண்டலம் முறையற்ற தொழில்நுட்பமயத்திலிருந்து வெளியேறுகின்ற பச்சைவீட்டு மற்றும் மாசடைந்த வளியினாலும் முறையற்ற போக்குவரத்துத் தொகுதியின் மூலம் வெளியேற்றப்படுகின்ற மாசடைந்த வளியினாலும் தீ வைப்புகளைப் போன்று தீப்பிடிப்புகள் அதிகரிப்பதால் ஏற்படும் அழுத்தம் காரணமாகவும் பூகோள வெப்பத்தினை அதிகரிப்பதற்கு நாமும் பங்களிப்புச் செய்துள்ளோம். ஆதலால், சூழல்ரீதியாக ஏற்படும் பாதக விளைவுகள் காரணமாக நாளாந்த ஆவியுயிர்ப்பு இரு மடங்காதல், சுற்றாடல் வெப்பநிலை அதிகரித்தல், வரட்சிநிலை ஏற்படுதல், திடீரெனப் பெரும் மழைகள் சிறிய நிலப் பகுதிகளில் பெய்தல், இயற்கை அனர்த்தங்கள் மற்றும் சுகாதார அச்சுறுத்தல்களை எதிர்கொள்ளலும் தூய்மையான இலங்கையைக் கட்டியெழுப்பும்போது முன்வரும் சவால்களாக இனம் காண்கின்றோம்.

5. நாட்டில் காணக்கூடிய புவியியல் வேறுபாடுகள் மற்றும் எமது நாட்டுக்குக் கிடைக்கின்ற மழை வீழ்ச்சியின்படி விசேடமான பல சுற்றாடல் தொகுதிகளுக்கு நாம் உரித்தாளிகளாவோம். அதனாலேயே மாபெரும் உயிர்ப்பல்வகைத் தன்மை இருப்பதை பெரும் பாக்கியமாக கருதப்படுகிறது. நாட்டினுள் இனங்காணப்பட்ட 3150 பூக்கும் தாவரங்களில் எமக்கே உரித்தான 894 பூக்கும் தாவரங்களும் இலங்கையினுள் இனங்காணப்பட்ட 972 உயிரினங்களும் அவற்றில் எமக்கே உரித்தான 330 உயிரினங்களும் உள்ளன.

6. தூய்மைமிக்க இலங்கையைக் கட்டியெழுப்பும் போது குறித்த உயிரினப் பல்வகைமையை ஒரு செல்வமாகக் கருதும் எமது நாட்டில் மேற்கொள்ளப்படுகின்ற காடழிப்பும், நடாத்திக்கொண்டு வரும் கொள்கை ரீதியான பொருளாதார முறையினுள் நிகழும் மரபணுக் கொள்ளையும் எமது காடுகளைப் போன்று உயிரினங்களின் வாழ்விற்கு பாதகமாக பாதிப்புச் செலுத்துகின்ற ஆக்கிரமிப்புத்தன்மைவாய்ந்த தாவரங்களும் செய்யும் உயிரின மற்றும் தாவர வகைகளின் விஸ்தரிப்பும் சமநிலையற்ற சூழல் நிலைமைகளை உருவாக்குகின்றது. சுற்றாடல் அழிவுடன் வன விலங்குகள், கரைகளையும் நகரங்களையும் நோக்கி வருதலும் சூழல் சமநிலை சீர்குலைவதால் பல்வேறு உயிரினத் தொகுதிகளின் சாகியம் அதிகரித்தலும் ஒரு சவாலாக இனம் காணப்படுகிறது. இது சூழல் ரீதியான பொருளாதார சமூக, நெருக்கடிகள் ஏற்படுவதற்கும் பெரும் சவாலாக அமைவதை நாம் இனங்காண்கின்றோம்.

7. எமக்கு உரித்தான சமுத்திர வலயத்தை இனங்காணும்போது 18,060 சதுர கிலோ மீற்றர் அளவிலான பிரதேசம் சமுத்திரத்திற்கும் அதை அண்மித்ததாகவுள்ள 19,620 சதுர கி.மீற்றர்களைக் கொண்டதொரு சமுத்திர வலயத்திற்கும் தற்போது இனம் காணப்பட்டுள்ள 437,400 சதுர கிலோ மீற்றர் புறநீங்கலான (தனித்துவமான) பொருளாதார வலயத்திற்கும் உரித்துடையவர்களாவோம். இம் முழுமொத்த சமுத்திர வலயம் மற்றும் அதற்கு அப்பாலுள்ள மரஞ்செடிகள், உயிரினங்கள், கனிப்பொருள்கள் கொண்ட நிலங்கள் என்பவற்றிற்கு உரித்துடையவர்களாக இருந்தபோதும், அது தொடர்பான காத்திரமான ஓர் ஆய்வு இதுவரையில் மேற்கொள்ளப்படவில்லை. புகைமறைவான இத்தகைய செல்வத்திற்கு உரித்தாளிகளான நாம் அதனை உரியவாறு எல்லை நிர்ணயம் செய்யாமையினாலும் மனிதர்களின் செயல்கள் காரணமாக கடலில் விழும் கழிவுப்பொருள்கள் காரணமாகவும் சமுத்திர வலயமானது பாரிய விபத்துக்களை எதிர்கொண்டுள்ளது என்பதை நாம் இனங்காண்கின்றோம்.

8. ஒரு நாடென்ற வகையில் நாம் எதிர்கொள்ளும் சவால்களுள் ஆள்பவர்களை விடைதெரியாதவர்களாகக் செய்த குப்பைகூளங்கள் பாரிய நெருக்கடியாகவுள்ளது. ஒழுங்கற்ற திட்டங்கள் மற்றும் வாழ்க்கைமுறையின் சிக்கலான தன்மையினாலும் இலாபம் பெறுவதை அடிப்படை நோக்கமாகக் கொண்ட பொருளாதாரச் செயன்முறை காரணமாகவும் இலங்கையில் அன்றாடம் குவியும் குப்பைகூளங்களின் அளவு 7,000 மெ.தொன்களாகக் கிட்டியுள்ளது. நீர், வளி, மண் என்பன மாசடைந்து சூழல், பொருளாதார, சுகாதார மற்றும் சமூகப் பிரச்சினைகளை உருவாக்குதலானது தூயதோர் இலங்கையைக் கட்டியெழுப்பும்போது சவாலாக உள்ளதென்பதை நாம் இனம் காண்கின்றோம்.

9. இலங்கைக்கு சிறப்பாயமைந்த யானை இனம் சூழலை அழகூட்டும் வகையில் பொருளாதாரத்திற்கு பணம் ஈட்டித்தரும் உபாயமாகவும் பயன்படுத்தக்கூடியதாக இருக்கும்போது யானையினால் ஒரு மனிதன் கொல்லப்படும்போது மனிதர்களால் மூன்று யானைகள் கொல்லப்படும் விகிதாசாரம் வரை பிரச்சினை தீவிரமடைந்திருத்தலும் நாடு முழுவதிலும் இப்பிரச்சினை வியாபகமடைந்திருத்தலும் அதற்குக் கையாளப்படும் செயன்முறைகள் வெற்றிகரமற்றவையாக அமைவதும் நாம் தூயதோர் இலங்கையைக் கட்டியெழுப்பும்போது எதிர்கொள்ளும் சவாலாக இனம் காண்கின்றோம்.

10. நீண்டகாலமாக சுற்றாடலுடன் செய்யப்படும் எதிர்மறையான கொடுக்கல் வாங்கல்களின் தவறு பல திசைகளிலும் காணப்படுகின்ற தற்காலத்தில் நாடு முழுவதிலும் பரவுகின்ற மரணம் விளைவிக்கும் சிறுநீரக நோயும், டெங்கு பேரிடரும், புற்றுநோய், சுவாச நோய் முதலிய நோய்களும் வெறும் சுகாதாரப் பிரச்சினைகளாக மேலோங்கிச் சென்ற தவறான சுற்றாடல் பாவனையும் என்பவற்றினால் எழுந்த சவால்களாக நாம் இனம்

காண்கின்றோம். அதேபோல் வரலாற்றில் இயற்கை அனர்த்தங்களாகக் கருதப்பட்ட வெள்ளப்பெருக்கு, வரட்சி, மண் சரிவுகள் முதலிய தவறான சுற்றாடல் கொள்கைகள் மற்றும் தவறான அபிவிருத்தி உபாயமுறைகளும் நாகரிகமற்ற மனிதச் செயற்பாடுகளதும் முன்னிலையில் இன்று உயர் மட்டத்திலுள்ள பிரச்சினைகளாக இருப்பதை நாம் இனம் காண்கின்றோம்.

# தூய்மையானதோர் இலங்கையைக் கட்டியெழுப்புவதற்கான பிரேரணைகளும் தீர்வு யோசனைகளும்

## சட்டதிட்டங்களும் சமவாயங்களும்

சுற்றாடல் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்காக தற்போது விதிக்கப்பட்டுள்ள சட்டங்களின் பலவீனங்கள் குறைபாடுகள் என்பவற்றை நீக்குவதற்காகவும் தேவையான புதிய சட்டங்களை ஆக்குவதற்காகவும் குறித்த துறைகளின் நிபுணர்களை கொண்ட அடிப்படை ஆணைக்குழுவொன்று தாபிக்கப்படும். ஆகையால் குழுவின் முக்கிய பணிப்பொறுப்பு பொதுமக்களின் எண்ணக்கருத்துக்களை ஒன்று சேர்த்தலாவதுடன் அதற்காக தகுந்த வேலைத்திட்டமொன்றும் தயாரிக்கப்படும் புதிய சட்டதிட்டங்களை இயற்றும்போது சர்வதேசத்துடன் செய்யப்பட்டிருந்த உடன்படிக்கைகள் மற்றும் சமவாயங்களின்பால் கவனம் செலுத்தப்படுவதுடன் அதிலுள்ள முக்கிய விடயங்கள் நாட்டின் பாதுகாப்புக்காக உள்ளீர்க்கப்படும். இதனைப் பூர்த்திசெய்வதற்காக ஆகக்கூடியது ஒரு வருட காலம் இலக்கிடப்படும். நிறைவேற்றப்படும் சட்டவிதிகள் மற்றும் சமவாயங்களை தொடர்புடைய நிறுவனங்களும் பொதுமக்களும் அறியாத நிலையில் இருப்பதை பாரதூரமான குறைபாடாக காண்கின்ற நாம், அவை நிறைவேற்றப்பட்டு 3 மாத காலத்திற்குள் பொதுமக்கள் உள்ளிட்ட அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் அவற்றை அறிந்துகொள்ளக்கூடியவாறு நிகழ்ச்சித்திட்டமென்று செயற்படுத்தப்படும்.

ஒரு நாடென்ற வகையில் சர்வதேச ரீதியாக ஏற்படுத்திக்கொண்டுள்ள ஒப்பந்தங்களும் சமவாயங்களும் மூலம் தூய்மையான இலங்கை நாட்டைக் கட்டியெழுப்புவதற்காக ஏற்படும் தடைகளை நீக்குவதற்கும் சுற்றாடல் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கும் தகவல்களை பெற்றுக்கொள்ளும் நோக்கத்துடன் தகைமைவாய்ந்த சபையொன்றின் மூலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்படும். அதன் அறிக்கையின் அடிப்படையில் முன்கூறிய நோக்கங்களை அடையவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

# திட்டமிட்ட நிலப் பாவனை

1. விவசாய செயற்பாடுகள் காரணமாக நிகழும் மண் அரிப்புக்களை தடுப்பதை நோக்கமாகக் கொண்டு, விவசாயிகளுடன் இணைந்து விசேட கருத்திட்டமொன்று செயற்படுத்தப்படும். இதில் மத்திய மலைநாட்டின் பிரதேசங்களின் ஆற்றுப் பள்ளத்தாக்குகளிலும் ஏனைய கடும் பள்ளத்தாக்குகளிலும் அமைந்துள்ள விவசாய நிலங்களினால் ஏற்படும் மண் அரிப்புக்களை தடுப்பதை முக்கிய செயற்பாடாகக் கருதி விசேட கருத்திட்டமொன்று முதல் ஆறு மாதங்களுக்குள் ஆரம்பிக்கப்படுவதுடன், நாடு முழுவதிலும் மண் அரிப்பைத் தடுப்பதை நோக்கமாகக்கொண்ட விசேட கருத்திட்டத்திற்காக புதிய அரச பிரிவொன்று நிறுவப்படும்.

2. அபிவிருத்திக் கருத்திட்டங்கள் மற்றும் ஏனைய கட்டுமானங்களினால் ஏற்படும் மண் அரிப்புக்களைத் தடுப்பதற்காக அவற்றை திட்டமிடும்போது புதிய விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் விதிக்கப்படும்.

3. மணல் மண் மற்றும் கனிப்பொருள் அகழ்வுகளின்போது நிகழும் மண் அரிப்புக்களைத் தடுப்பதை நோக்காகக்கொண்டு திட்டமிடல் ஆரம்பத்திலேயே புதிய சட்ட ஒழுங்குவிதிகள் மற்றும் நிபந்தனைகள் உள்ளடக்கப்படும். அபிவிருத்திப் பணிகள் மற்றும் கட்டுமானப் பணிகளுக்காக உலகின் நவீன தொழில்நுட்ப மூலோபாயங்களை ஊக்குவிப்பதுடன் மாற்று பொருள்களை அறிமுகப்படுத்துவதன் மூலம் கல், மணல் மண் அகழ்வுகளினால் ஏற்படும் சுற்றாடல் பாதிப்புகளை மட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

4. இதுவரை மண் அரிப்புக்கள் காரணமாகவும் முறையற்ற மற்றும் கவனமற்ற விதமாக மேற்கொள்ளப்பட்ட அகழ்வுகள் மற்றும் கட்டுமானப் பணிகள் காரணமாகவும் பாதிக்கப்பட்ட செழிப்பிழந்த மற்றும் சேதமடைந்த காணிகளை மறுசீரமைப்பதை அரசாங்கம் முக்கிய பொறுப்பாகக்கொண்டு செயற்படும்.

5. மண் அரிப்புகளுக்கு முக்கியமானதொரு காரணமாக அமையும் நாட்டுக்கு உரித்தானதல்லாத பயிர்ச்செய்கைகளை படிப்படியாக அகற்றுவதற்கும், அக்காணிகளில் இயற்கை வனங்களை ஏற்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். இது ஐந்தாண்டு கால திட்டமொன்றாவதுடன், மத்திய மலைநாட்டுப் பிரதேசங்களில் இயற்கை வனங்களை ஏற்படுத்துவது முன்னுரிமைப் பணியாக கருதி செயற்படுத்தப்படும்.

6. ஆற்றுப் பள்ளத்தாக்குகள் மற்றும் நீரேந்து பகுதிகளில் மண் அரிப்புக்களைத் தடுக்கும் நோக்குடன் எமது நாட்டிற்கு உரித்தான இயற்கை வனங்களை உண்டாக்குவதற்காக செயலாற்றப்படும்.

7. நாட்டின் வருங்கால நிர்மாணத்துறையை நோக்கமாகக்கொண்ட பாராங்கற்களின் வலயங்களின் மற்றும் மண்ணின் இரசாயனங்கள் விஞ்ஞான ரீதியாக அடையாளம் காணப்படும். கீழே குறிப்பிட்டுள்ள காணிப் பாவனைத் திட்டத்திற்கு அது உபயோகப்படுத்தப்படும்.

8. நாட்டின் மொத்த நிலப்பரப்பையும் சரியான, விஞ்ஞான ரீதியான காணிப் பாவனைத் திட்டமொன்றிற்கமைய செயற்படுத்தப்படும். அதில் குடியிருப்புக்கள், நகரங்கள், விவசாய நிலங்கள், தொழில்நுட்ப நிலங்கள், பாதுகாக்கப்பட்ட ஒதுக்கு நிலங்கள் போன்றதாக அடிப்படை வலயங்களாக எடுத்துக் கொண்டு செயற்படுவதுடன், அக்காணிப் பாவனைத் திட்டத்திற்கமைய நாட்டின் எதிர்கால அபிவிருத்தி பணிகள் மற்றும் எதிர்கால இருப்பு தீர்மானிக்கப்படும். ஒட்டுமொத்த காணிப் பாவனைத் திட்டத்திற்காக பல்வேறு விடயங்களை ஒன்றிணைத்து காணிப் பாவனை முறைமையொன்றை ஏற்படுத்துவதுடன், மூன்று கட்டங்களின் கீழ் (குறுகிய, நடுத்தர, நீண்ட) ஐந்து வருடங்களில் இறுதித் திட்டங்கள் உருவாக்கப்படும்.

9. தீவிர நில அரிப்புகளையும் தீவிர நிலச் சரிவுகளையும் எதிர்நோக்கியுள்ள நாட்டின் பெறுமதிமிக்க பூமி வலயமொன்றான மத்திய மலைநாட்டுப் பிரதேசங்களில் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக தற்போது மேற்கொண்டுள்ள ஆராய்ச்சிகளையும் தரவுகளையும் உபயோகித்து புதிய விஞ்ஞான ரீதியான ஆய்வொன்றின் மூலம் உறுதிப்படுத்திக் கொண்ட பின் புதிய பாதுகாக்கப்பட்ட வனப் பிரதேசங்கள் உருவாக்கப்படும்.

# எதிர்கால இருப்பிற்கு நீர்

1. மத்திய மலைநாட்டிலும் ஆற்றுப்பள்ளத்தாக்குகளிலும் மழை நீரைச் சேமிக்கும் ஆற்றல் உரிய கொள்கையும் முகாமைத்துவமும் இல்லாமை காரணமாக மிகவும் பலவீனமடைந்துள்ளது. அதன் விளைவாக சில சந்தர்ப்பங்களில் கடும் வரட்சியையும் இன்னும் சில சந்தர்ப்பங்களில் கடும் வெள்ளப்பெருக்கையும் எதிர்நோக்க நேர்ந்துள்ளது. உயிர் மற்றும் பொருளாதார சேதங்களுக்கு முகங்கொடுக்கும் தன்மை படிப்படியாக அதிகரித்துள்ளது. இந்நிலைமையைக் கட்டுப்படுத்தும் மற்றும் முகாமை செய்யும் நோக்குடன் ஆற்றுப்பள்ளத்தாக்குகள் மற்றும் மத்திய மலைநாட்டில் மழைநீரைச் சேகரிக்கும் கொள்ளளவைக் கணிப்பிடுவதுடன், மேற்புறத்திலுள்ள நீரேந்துகள் மற்றும் கற்பாறைகளுள் உள்ள நீரேந்துகளை மீள்நிரப்புதலுக்காக விஞ்ஞான ரீதியான முறைமைகள் உருவாக்கப்படும். அதற்குத் தேவையான பொருத்தமான வனப்போர்வையொன்றை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

2. இலங்கையின் அனைத்து நீர்வளமூலங்களையும் பகுப்பாய்வொன்றின் கீழ் நிலஅளவை செய்து வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிட்ட பின் இரண்டு வருட காலத்திற்குள் பாதுகாக்கப்படும்.

3. நீர்த்தொடர் பெருக்கத் தொகுதிகளை (எல்லங்கா) செயற்படுத்தக்கூடிய ஆற்றுப்பள்ளத்தாக்குகளை முனைப்பாக்குவதன் மூலம் திடீர் வெள்ளப்பெருக்கினாலும் வரட்சியினாலும் ஏற்படக்கூடிய தாக்கங்களைக் குறைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

4. இலங்கையின் பொருளாதார, சமூக, வரலாற்று அமைப்பில் முக்கிய அம்சமான நீர்ப்பாச பாரம்பரியத்தை எதிர்கால சந்ததியினருக்காக பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டு முறையான நீர் மற்றும் நீர்ப்பாசன நூதனசாலையொன்று 3 ஆண்டுகளுக்குள் நிர்மாணிக்கப்படும்.

5. மேல்மட்ட மற்றும் நிலத்தடி நீர் மாசடையும் சகல காரணிகளையும் அடையாளங்கண்டு விஞ்ஞானரீதியான முறைமையொன்றின் மூலம் நீரின் தூய்மையான தன்மையை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதுடன், நீர் மாசடைவதற்கு ஏதுவாக அமையக்கூடிய காரணிகளைத் தடுப்பதற்கும் அகற்றுவதற்கும் திட்டங்கள் உருவாக்கப்படும்.

6. தொழில்நுட்ப, விவசாய மற்றும் வேலைத்தளங்களில் பாவனையின் பின் சுற்றாடலுக்கு விடுவிக்கப்படும் நீரை சரியான, விஞ்ஞானரீதியான முறையில் சுற்றாடலுக்கு விடுவித்தல் கட்டாயப்படுத்தப்படும்.

7. நீர்ப் பாவனையின்போது ஏற்படும் விரயமாக்குதல் மற்றும் மாசடைதல், அதிகளவில் நிலத்தடி நீரை பாவித்தல் மூலம் ஏற்படக்கூடிய சிக்கல்களை முகாமைசெய்வதற்காக விஞ்ஞான ரீதியான நீர் முகாமைத்துவ திட்டமொன்றை உருவாக்கி செயற்படுத்தப்படும்.

# எழில்மிகு உயிரினப் பல்வகைமையை பாதுகாப்போம்

1. வனசீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்பு திணைக்களத்தினால் இறுதியாக வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட நில வலயங்களில் அச்சுறுத்தலுக்குள்ளான பிரதேசங்கள் மீண்டும் அவ்வலயத்திற்குள் உள்வாங்கப்பட்டு பாதுகாக்கப்படும்.

2. சர்வதேச சுற்றாடல் சமவாயங்களுக்கு அமைவாக தொழில்நுட்ப, நகர்ப்புற, குடியிருப்புக்கள் மற்றும் மலைப் பிரதேசங்களில் தனித்தனியாக இருக்கவேண்டிய வன அடர்த்தியின் சதவீதத்தை நிலைநாட்டிக் கொள்வதற்காக புதிய வனப் பிரதேசங்களை உருவாக்கி பாதுகாக்கப்படும்.

3. ஒட்டுமொத்த இலங்கையின் சுற்றாடல் தொகுதியினுள் சீவராசிகளின் இருப்புக்கு ஆபத்தான நிலையை ஏற்படுத்தும் ஆக்கிரமிப்புத் தாவர வகைகள் நாட்டிற்குள் ஊடுருவுவதைத் தடுப்பதற்கு விஞ்ஞான ரீதியான முறையொன்று செயற்படுத்தப்படும். இலங்கையின் சிறப்பான பெறுமதிமிக்க தாவரங்கள் மற்றும் உயிரின மரபணுக்கள் பல்வேறு குறுகிய பொருளாதார நோக்கங்களுக்காகவும் ஒருசில நபர்களின் ஆதாயத்திற்காகவும் கடத்தப்படுவதைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் அவை தேசிய பெறுமானமாக விலை மதிக்கப்படும். நாட்டின் சுற்றாடல் தேவைகள் மற்றும் எதிர்கால வாழ்வைத் திடப்படுத்தும் நோக்கத்துடன் முதல் ஐந்தாண்டுகள் முடிவடையும்போது நாட்டின் பாதுகாக்கப்பட்ட வன அடர்த்தியை மொத்த நிலப்பரப்பில் 35% வரை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அதில் மத்திய மலைப்பிரதேச வனத் தொகுதிகள் மீது முக்கிய கவனம் செலுத்துவதற்கும் இலங்கையின் உயிரின பல்வகைமையின் தேவைகளுக்கேற்ப தாவரத் தொகுதிகளை பாதுகாக்கப்பட்ட நிலப்பரப்புகளுக்குள் தாபிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

   சுற்றாடல் பாதுகாப்பையும் மக்களின் பொருளாதார அபிவிருத்தியையும் நோக்கமாகக்கொண்டு சுற்றாடல் வனச்செய்கை மற்றும் மூலிகைச் செய்கை திட்டமொன்றை முதல் ஐந்தாண்டு காலத்திற்குள் ஐந்து இலட்சம் ஏக்கர் நிலப்பரப்பில் மேற்கொள்வதற்கும் திட்டங்கள் செயற்படுத்தப்படும். இதற்காக மக்களுக்கு வழிகாட்டல், நிதியுதவி மற்றும் சந்தை வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் அடிப்படை பொறுப்பு அரசினால் நிறைவேற்றப்படும்.

4. இலங்கைக்கு சிறப்பாயமைந்த விலங்குகளுக்கும் தாவர வகைகளுக்கும் மனிதச் செயற்பாடுகளின் காரணமாக ஏற்பட்டுள்ள அச்சுறுத்தலை இல்லாதொழிப்பதற்கு திட்டங்களை வகுப்பதுடன் இயற்கைச் சுற்றாடல் தொழிற்பாடு காரணமாக அழிவைச் சந்தித்துவரும் அச்சுறுத்தலை எதிர்கொள்கின்ற உயிரினங்களை இனங்கண்டு வருங்காலச் சந்ததிக்காக பாதுகாக்கும் செயன்முறையொன்று முன்னெடுக்கப்படும்.

5. சுற்றாடல் சமநிலையைச் சீர்குலைத்து குறிப்பிட்ட சில உயிரினங்கள் அதிகூடிய அளவில் பெருகுவதை சுற்றாடல் இடையூறாக இனங்காண்பதுடன் அவ்வாறு பெருகுவதற்கான உயிரியல் விஞ்ஞான ரீதியான காரணங்களைக் கண்டறிந்து இயற்கை முறைகளினால் விஞ்ஞானரீதியாக கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

6. மனித வாழ்வையும் சுற்றாடலையும் பலப்படுத்தும் நோக்கில் புதிய எண்ணக்கருவாக சுற்றாடல் ரீதியான குடியேற்றங்கள், சுற்றாடல் ரீதியான நகரமயமாக்கல் எனும் எண்ணக்கருக்களை அறிமுகப்படுத்தி முதல் 05 வருட காலத்திற்குள் தெரிவுசெய்யப்பட்ட 10 நகரங்களை நிபுணர்களின் திட்டங்களுக்கமைய மாதிரி பச்சைவீட்டு நகரங்களாக நிர்மாணித்து மக்களிடம் கையளிக்கப்படும்.

7. முழு உயிரினங்களும் வாழக்கூடியதாக உலகினதும் வளி மண்டலத்தினதும் உயிரின வாழ்வை நன்கு பேணுவதற்காக பெருமுதவியாகவுள்ள நுண்ணுயிரிகள் அழிவடையச்செய்யும் மனிதர்களின் செயற்பாடான செயற்கை இரசாயன வகைகள் சுற்றாடல் பகுதிகளுக்கு வெளியேற்றப்படுதல் முறைசார் விஞ்ஞானரீதியான வேலைத்திட்டத்தின் மூலம் கட்டுப்படுத்தப்படும்.

## தூய்மையானதொரு மூச்சு

1. தேசிய மற்றும் சர்வதேச ரீதியிலும் வளி மண்டலம் கடுமையாக மாசடைந்துள்ளது. அதன் விளைவாக சுகாதார மற்றும் பொருளாதாரப் பிரச்சினைகள் உருவாகிக் கொண்டிருக்கின்றன. ஆகையால் அனைத்து மனிதச் செயற்பாடுகளினால் வளி மண்டலத்திற்கு வெளியேற்றப்படும் அனைத்து வாயு வகைகள் மற்றும் நுண் திண்மத் துகள்கள் தொடர்பான கணக்காய்வொன்று மேற்கொள்ளப்படும். அதற்குத் தேவையான சுற்றாடல் கணக்காய்வுக் கூறொன்றும் தாபிக்கப்படும். மேற்கூறிய கணக்காய்வானது ஏனைய சுற்றாடல் காரணிகளின் பண்புசார் தன்மையை உறுதிப்படுத்த உதவியாகவிருக்கும்.

2. வளி மண்டலத்திற்கு வெளியேற்றப்படும் மாசுக் காரணிகளான வாயு வகைகளிலிருந்து பக்க உற்பத்திகளை ஏற்படுத்தும் அல்லது அகற்றிவிடும் புதிய தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்த அல்லது வெளியேற்றப்படாத முறைகளை அணுகுவதற்காக அரசாங்க அனுசரணை வழங்குவதன் மூலம் கட்டுப்படுத்துவதற்கான திட்டங்கள் தயாரிக்கப்படும்.

3. வளி மண்டலத்தினுள் இரசாயனப் புகைகள் உருவாகி மனித வாழ்வுக்கு சவால்விடும் அளவுக்கு உச்ச கட்டத்தை அடைந்துள்ளது. நகரங்களை அடையாளம் கண்டு துரிதமாக அத்தகைய புகைகளை அகற்றுவதற்காக புதிய தொழில்நுட்ப உயிரியல் முறைகள் பயன்படுத்தப்படும்.

   கண்டி நகரம் போன்ற கடும் வளி மாசடைவுக்கு இரையாகியுள்ள இரண்டு நகரங்களைத் தெரிவுசெய்து முன்னோடிக் கருத்திட்டமொன்றாக தூய் வளியுடன் கூடிய நகரங்களாக ஒரு வருட காலத்திற்குள் மாற்றும் செயன்முறைகள் ஆரம்பிக்கப்படும்.

4. வளி மண்டலத்தின் பச்சைவீட்டு வாயு அகத்துறிஞ்சல் மற்றும் வெளியேற்றம் செயன்முறையை சமநிலையில் பேணுவதற்காக காபன்களை வகைப்படுத்தும் உச்சகட்ட இயலுமையுடைய துரிதமாக வளரும் சுற்றாடலுக்கு உகந்த மர வகைகள் அறிமுகப்படுத்தப்படும். அதிலிருந்து வர்த்தக உற்பத்திகளை மேற்கொள்ளும் கைத்தொழில்களுக்காக அரசாங்க அனுசரணை வழங்கப்படும்.

## எழில்மிகு கரையோரமும் தூய்மையான கடலும்

1. கரைப்பகுதிக்கு அல்லது கடலுக்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாக கழிவுப் பொருள்கள் வெளியேற்றப்படுதல் முற்றுமுழுதாக நிறுத்தப்படும்.

2. கரைப் பகுதியின் அதிகூருணர்ச்சியுடன்கூடிய சுற்றாடல் தொகுதிகளை கண்டறிந்து குறித்த சுற்றாடல் தொகுதிகளை பாதுகாப்பதற்குத் தேவையான குறைந்தபட்ச எல்லைக்குள் மனிதச் செயற்பாடுகள் நிறுத்தப்படும்.

3. மற்றைய கடலோரப் பகுதிகளின் கரையோர பாதுகாப்பு குறைந்தபட்ச எல்லை விஞ்ஞான ரீதியாக தீர்மானிக்கப்படுவதுடன் அது சரியாகவும் சீராகவும் அளவை செய்யப்பட்டு அடையாளமிடப்படும். குறித்த எல்லையினுள் புதிய கட்டுமானங்கள் இடைநிறுத்தப்படுவதுடன் தற்போது இருக்கின்ற கட்டிடங்களுக்கு முறையான மாற்றுவழிகளை அறிமுகப்படுத்தி அகற்றுவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும். 03 வருட காலத்துள் இப் பணி முடிவுறுத்தப்படும்.

4. மீன் வளம் உள்ளிட்ட ஆழ்கடலிலுள்ள இயற்கை வளங்களை பயன்படுத்துவதற்கும் அவ்வளங்களைப் பாதுகாப்பதற்கும் கடல் மாசடைவதை குறைப்பதற்காக சர்வதேச விதிகளுக்கு இணையாக சுற்றாடல் சட்டத்தொகுதியொன்று உருவாக்கப்படும். ஒரு வருட காலத்துள் இப் பணி முடிவுறுத்தப்படும்.

5. இலங்கை மக்களுடன் கலாசார ரீதியில் இணைந்திருக்கின்ற பல கடற்கரைகள் மற்றும் உல்லாசப் பிரயாணிகளை கவர்ந்துள்ள பல கரையோரப் பகுதிகள் 3 வருட காலத்திற்குள் அனைத்து வசதிகளும் கொண்ட, எழில்மிகு சுற்றாடல்சார் கரையோரங்களாக அமைக்கப்படும்.

## குப்பைகூளங்கள் அற்ற ஒரு நாட்டின் மரபுரிமை

1. ஆரம்ப கட்ட கழிவுப் பொருள் முகாமையை கழிவுப் பொருள்கள் சேர்கின்ற இடங்களிலிருந்து அதாவது மனைக் கைத்தொழில்கள், வர்த்தக நிலையங்கள் மற்றும் நிறுவனங்களிலிருந்து ஆரம்பிப்பதற்கான முறையான திட்டமொன்று வகுத்தமைக்கப்படும்.

2. உற்பத்தியாளர், வியாபாரி, பாவனையாளர் ஆகியோர் ஒன்றுசேர்ந்து சுற்றாடலுக்கு விடுவிக்கப்படும் கழிவுப் பொருள்கள், சமூக ரீதியான ஒரு பொறுப்புடன் அகற்றப்படும் திறமுறையொன்றுக்கு உட்படுத்தப்படும்.

3. இலத்திரனியல் சார்ந்த அத்துடன் மின்சாரக் கழிவுப் பொருள்கள் உள்ளடங்கிய திண்மக் கழிவுப் பொருள்களை மீள்சுழற்சி செய்வதற்காக தரிவு செய்யப்படும் சில இடங்களில் அதற்குரிய நிலையங்கள் நிறுவப்படும்.

4. அரசாங்க மற்றும் தனியார் துறைகளின் பங்குபற்றுதலுடன் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒன்று வீதம் உயிர் இரசாயன கழிவுப்பொருள் முகாமைத்துவ தொழிற்சாலைகளைத் தாபிப்பதன் வாயிலாக சேதன உர உற்பத்தியிலும் ஈடுபடும்.

## பிழையான உபயோகங்கள் மூலம் உருவாகும் சூழல் ரீதியான பிரச்சினைகளை ஒழிப்போம்

1. நாட்டிலுள்ள பிரதான வனசீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்பு வலயங்களை ஒன்றிணைக்கக்கூடிய இடங்களை அடையாளங்கண்டு புதிய இடங்களை நிறுவத் திட்டமிடப்படும்.

2. வன விலங்குகள் கிராமங்களுக்கு நகர்தல் மற்றும் பயிர் நிலங்களுக்குச் செய்கின்ற அழிவுகளை தவிர்த்துக் கொள்வதையும் வன விலங்குகளின் உணவுத் தேவைகளைப் பூர்த்தி செய்வதையும் நோக்காகக் கொண்டு காட்டு யானைகள் மற்றும் காட்டு விலங்குகளுக்காக வனங்களிலுள்ள உணவுத் தேவைகளைப் பூர்த்திசெய்யும்

வகையில் தொடர்புடைய சுற்றாடல் தொகுதிகளை உருவாக்குவதற்குத் திட்டங்கள் வகுக்கப்படும்.

3. யானைத் தந்தங்கள், யானை முத்துக்கள், யானை உரோமங்கள் தொடர்பாக சமூகத்தின் மத்தியில் நிலவும் மூட நம்பிக்கைகள் மற்றும் பெறுமானங்களை அகற்றுவதற்காக விழிப்புணர்வு ஊட்டப்படும்.

4. கிராமங்கள் மற்றும் நகரங்களுக்குள் காட்டு யானைகள் நுழைவதை தடுப்பதற்காக மின்சார வேலித்தொகுதிகள் அமைக்கப்படுவதுடன் அதற்காக அலகொன்று தாபிக்கப்படும். அதேபோன்று உயிரியல் விஞ்ஞான ரீதியான புதிய தொழில்நுட்ப முறைகள் மற்றும் மக்களின் பங்குபற்றுதலுடன்கூடிய நிகழ்ச்சித்திட்டங்கள் மூலம் யானைகளுக்கும் மனிதர்களுக்கும் இடையிலான மோதல்கள் தவிர்க்கப்படும்.

5. சுற்றாடல் நட்புறவுடனான மனித வாழ்வுக்கு ஏற்ற வகையில் சமூகத்தை ஒழுங்குமுறையாக அதில் உட்புகுத்தி சுற்றாடலினால் மனிதனுக்கு ஏற்படுத்தப்பட்டுள்ள சிறுநீரக நோய்கள், டெங்கு நோய், புற்றுநோய் மற்றும் சுவாச நோய் முதலிய சுகாதாரப் பிரச்சினைகளை வெறுமனே சுகாதாரப் பிரச்சினைகளாக மட்டும் எடுத்துக் கொள்ளப்படாததுடன் பிழையான சூழல் பாவனை மற்றும் ஒழுங்கற்ற அபிவிருத்தி நடவடிக்கைகள் காரணமாக எழுந்த பிரச்சினைகளாக நாம் இனம் காண்பதுடன், அத்தகைய பிரச்சினைகளை ஒழித்துக்கட்டுவதற்காக கல்விசார் மற்றும் சூழல் ரீதியான கலாசாரத்தை உருவாக்குவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

6. மனித வாழ்விடங்களான வீடுகள் மற்றும் வேலைத்தலங்களை சுகாதாரப் பாதுகாப்புடைய சூழல் நேயமிக்க இடங்களாக மாற்றியமைக்கும் வகையில் சமுதாய பங்களிப்புடன் அரசு அதில் தலையிட்டு திட்டங்களை வகுக்கும்.

7. மக்களின் பாவனைக்காக சுத்தமான பண்புத்தரமிக்க உணவுகளைப் போன்று ஏனைய பௌதிகப் பொருள்களை சூழல் நேயமிக்க வடிவத்திற்குக் கொண்டுவருவதற்கும் அதற்காக அறிவூட்டுவதற்கும் அதற்கான கலாசாரத்தை உருவாக்கவும் அரசு நடவடிக்கை எடுக்கும்.

# 05

# செழிப்பான ஒரு தேசம்

# விரிவாற்றலுடைய பொருளாதாரம் பண்புத்தரமுடைய வாழ்க்கை -

**பொருளாதார ஜனநாயகம், நவீன தொழில்நுட்பம், புத்தறிவு என்பவற்றின் மீதமைந்த பண்புத்தரமுள்ள வாழ்க்கை மற்றும் தாக்குப்பிடிக்கும் விரிவாற்றலுள்ள பொருளாதாரம் என்பது எமது பொருளாதாரக் கொள்கையின் கருப்பொருளாகும் என்பதுடன் பின்வரும் அடிப்படைப் பண்புகளின் பிரகாரம் அது அடையாளம் காணப்படும்:-**

- பொருளாதார அபிவிருத்தியை எய்துவதற்கான தொடர் பொருளாதார விருத்தியைப் பேணி வருகின்ற உறுதிப்பாடான ஓர் உற்பத்திப் பொருளாதாரம்.
- உற்பத்திச் செயன்முறையுடன் எல்லாப் பிரஜைகளும் தொடர்புபட்டு பெறுமதி சேர்க்கப்படும் மக்கள் பங்கேற்புடனான சமுதாய அடிப்படையிலான ஒரு பொருளாதாரம்.
- வருமானச் சமமின்மையும் பிரதேச பொருளாதார ஏற்றத்தாழ்வுகளும் குறைந்த, வறுமையை பூண்டோடு ஒழித்துக்கட்டும் ஒரு பொருளாதாரம்.
- நவீன தொழில்நுட்பத்துடன் பொருளாதார செயற்பாடுகளில் வினைத்திறனும் விளைத்திறனும் உயர்மட்டத்தில் நிலவுகின்ற ஒரு பொருளாதாரம்.
- பொருளாதாரத்தின் அனுகூலங்கள் பொதுமக்களிடையே நியாயமான விதத்தில் பகிர்ந்துசெல்லும் ஒரு பொருளாதாரம். தேவையான நாணயக் கொள்கைகளையும் வரிக் கொள்கைகளையும் நிறுவனக் கட்டமைப்பையும் சட்டம்சார் கட்டமைப்பையும் வகுத்தல்.
- உரிய முகாமைத்துவத்தின் கீழும் சம உரிமைகளின் கீழும் அனைவரும் பங்கேற்கத்தக்க முறையான நாணக் கொள்கைகளும் வரிக் கொள்கைகளும் நிறுவனக் கட்டமைப்புகளும் சட்டம்சார் கட்டமைப்புகளும் கொண்ட, ஜனநாயக ரீதியான ஒரு பொருளாதாரம்.
- திட்டமிட்ட பொருளாதார இலக்குகளை எய்துவதற்குத் தேவைப்படும் பலவித தேர்ச்சிகள் நிரம்பிய உயர் மனித வளமொன்றைக் கொண்ட அறிவை அடிப்படையாகக்கொண்ட ஒரு பொருளாதாரம்.

## பொருளாதார விருத்தியும் உறுதிநிலைப்பாடும்

- 8,000 ஐ.அ.டொலர் தலா மொத்தத் தேசிய உற்பத்தி தனியார்துறை செயற்பாட்டு பங்குதாரரொருவராக பொருளாதார செயன்முறைடன் தொடர்புறும் உற்பத்திப் பொருளாதாரமொன்றின் ஊடாக 2025 ஆம் ஆண்டில் தலா மொத்தத் தேசிய உற்பத்தியை இரட்டிப்பாக்குவதற்கான (8,000 ஐ.அ.டொலர்) வழிகாட்டல்களும் ஊக்கப்படுத்தல்களும் உள்ளிட்ட உட்கட்டமைப்பு வசதிகளுடனும் வரிச் சலுகைகளுடனும்கூடிய உபாயமுறை ரீதியான தேசிய பொருளாதாரத் திட்டமொன்றிற்கு அமைய பொருளாதாரத்தை வழிநடாத்துவதற்கு தொழில்வாண்மையினரைக் கொண்ட சுயாதீன நிறுவனமொன்றை நிறுவுதல்.
- உள்நாட்டுத் தேவைகளையும் வெளிநாட்டுச் சந்தையையும் இலக்கிட்டு உள்நாட்டு உள்ளீடுகளைப் பயன்படுத்துவதற்கு முன்னுரிமையளிக்கும் சிறிய, நடுத்தர மற்றும் நுண்பாக கைத்தொழில்களை ஊக்கப்படுத்தல்.
- சிறிய, நடுத்தர மற்றும் நுண்பாக கைத்தொழில்கள் தொடர்பில் செயலாற்றுவதற்காக தனியானதோர் அமைச்சை நிறுவுதல்.

- இத்தகைய கைத்தொழில்களுக்கு தனியார்துறையை ஈடுபடுத்திக்கொள்வதற்கு வர்த்தக அறிவு, வழிகாட்டல், உட்கட்டமைப்பு வசதிகள், நிதி வசதிகள் என்பவற்றை வழங்குதல்.
  அனைத்து மாவட்டங்களும் உள்ளடங்கக்கூடிய விதத்தில் அரச முதலீடுகளுடனான 100 உற்பத்தித் தொழிற்சாலைகளை நிறுவுதல்.
- உரித்தில் ஒரு பங்கை ஊழியர்களுக்கு பெற்றுக்கொடுத்தலும் வியாபார முகாமைத்துவத்துடன் ஊழியர்களை தொடர்புபடுத்திக்கொள்வதற்கான ஊக்குவிப்புகளை வழங்குதலும் அக்கம்பனிகளின் பங்குகளைக் கொள்வனவு செய்வதற்குத் தேவையான நிதியியல் வசதிகளை ஊழியர்களுக்கு வழங்குதலும்.
- வியாபார நடவடிக்கைகளை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்வதற்கு உசாவுகை, வழிகாட்டல், துணைநிலைச் சேவைகளை வழங்குதல், கண்காணிப்பை மேற்கொள்ளல் என்பவற்றுக்காக பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் அமைச்சுடன் இணைக்கப்பட்ட தனியான அலகுகளை நிறுவுதல்.
- கிராமிய உள்ளார்ந்த ஆற்றல்களையும் வளப் பரம்பலையும் கவனத்திலெடுத்து நுண்பாக, சிறிய, நடுத்தர அளவான கைத்தொழில்களின் வலையமைப்புடன் தொடர்புற்ற கிராமியக் கைத்தொழில்களை ஆரம்பிப்பதற்குத் தேவையான ஊக்குவிப்புகளையும் வசதிகளையும் வழங்கி 'செல்வச்செழிப்பான கிராமமொன்றை' படிப்படியாகக் கட்டியெழுப்புதல்.
- தற்போதுள்ள கிராமிய வங்கிகளையும் பிரதேச அபிவிருத்தி வங்கிகளையும் தொடர்புபடுத்திக் கொண்டு, தேவைப்படும் நிதி வசதிகளை வழங்குவதற்கு விசேட அரச வங்கியொன்றை நிறுவுதல்.
- புத்தாக்க மற்றும் முளைய உற்பத்தியாளர்களுக்கு வரிச் சலுகை வழங்குதலும் தொழில்முயற்சியாண்மை வழிகாட்டல் மூலம் உற்பத்திகளை ஊக்குவித்தலும்.
- பணப் பயிர்களையும் விவசாய உற்பத்திகளையும் முதனிலை உற்பத்திகளாக ஏற்றுமதி செய்வதற்குப் பதிலாக பெறுமதிசேர்க்கப்பட்ட, உற்பத்திகள் ஏற்றுமதி பல்வகைப்படுத்தலை அடிப்படையாகக்கொண்ட விவசாய உற்பத்திக் கிராமங்கள் மூலம் வலையமைப்புடன் இணைக்கப்பட்ட விவசாயத்தை அடிப்படையாகக்கொண்ட கைத்தொழில் முறைமையொன்றை (Agro based Industries) நிறுவுவதற்காக விவசாயிகளையும் ஊழியர்களையும் முதலீட்டாளர்களையும் தொடர்புபடுத்திக் கொள்ளல்.
- கடற்றொழிலில் ஈடுபடும் சமுதாயத்தினரை இலக்காகக்கொண்டு மீன் பிடித்தல், மீன் வளர்ப்பு, மீன்பிடி உபகரணங்கள், படகுகள், தொழில்நுட்பம், நவீன மீன்பிடி முறைகள், மீன் உற்பத்திகள், நீண்டகாலம் பேணக்கூடிய முறைகள், களஞ்சியப்படுத்தல், உள்ளூர் சந்தையில் விநியோகித்தலும் வெளிநாட்டுச் சந்தைக் கேள்வியும் ஏற்றுமதி வாய்ப்புக்களும் என்பவற்றைக் கவனத்திலெடுத்து துறையுடன் தொடர்புபட்ட அனைத்துத் தரப்புக்களும் ஒன்றாக இயங்கும் நீண்டகாலத் திட்டமொன்றைத் தயாரித்தல்.
- வளங்கள் வாய்த்தல், மூலப்பொருள்களைப் பெற்றுக்கொள்ளும் சாத்தியப்பாடு என்பவற்றின் அடிப்படையில் அடையாளம் காணப்பட்ட ஒரு பிரதேசத்திற்கு ஒரு உற்பத்திப் பண்டம் (One Region One Product) என்ற தொனிப்பொருளின் கீழ் பண்ட உற்பத்திக்குத் தேவையான வசதியை வழங்குதல். உற்பத்தியின் தொடக்க கட்டத்திலிருந்து வெளிநாட்டுச் சந்தையில் பண்டங்களை சந்தைப்படுத்துவதற்குத் தேவைப்படும் ஒருங்கிணைப்பையும் வழிகாட்டலையும் வழங்குதல்.
- விவசாயம் மற்றும் ஏனைய கைத்தொழில்களில் கையாளப்படும் சிறு உபகரணங்கள் உள்ளூரில் உற்பத்திசெய்யப்படுவதை ஊக்குவித்தலும் அவ்வாறான முதலீட்டாளர்களுக்குத் தேவையான நிதி வசதிகளையும் வரி நிவாரணங்களையும் வழங்குதலும்.
- உள்நாட்டுக் கைத்தொழில்கள், விவசாயம் மற்றும் உணவு உற்பத்திக்குத் தடங்கலாக அமையும், அத்தியாவசியமற்ற இறக்குமதிகளை மட்டுப்படுத்தும் அதேபோல் ஏற்றுமதி

மற்றும் முதலீட்டுக் கைத்தொழில்களுக்கான உள்ளீடுகளாக பயன்படுத்தப்படும் இறக்குமதிகளுக்கு முந்துரிமையளிக்கும் புதிய தேர்வு அடிப்படையிலான தீர்வைகளையும் இறக்குமதி நிருவாக நுட்பமுறைகளையும் அறிமுகப்படுத்தல்.

- நவீன தொழில்நுட்பத்தையும் கருவிகளையும் கொண்டமைந்ததாக கிளிநொச்சி, அம்பாறை, அம்பாந்தோட்டை ஆகிய பிரதேசங்களில் 03 பால் உற்பத்தித் தொழிற்சாலைகளை ஆரம்பித்தலும் விவசாயிகள் அமைப்புக்களை வழங்கற் சங்கிலியின் முனைப்பான பங்குதாரர்களாக மாற்றுதலும்.
- பாதணிகள், பயணப் பைகள் உள்ளிட்ட தோல் பொருள்களின் உற்பத்தி மீது பாதிப்புச்செலுத்தும் மூலப்பொருள்களைப் பெற்றுக்கொள்ளும் பிரச்சினைகள், இறக்குமதியுடன் தொடர்புபட்ட வரிப் பிரச்சினைகளை நீக்கி அரசாங்கத்தின் வழிகாட்டலின் கீழும் உட்கட்டமைப்பு வசதிகளைப் பெற்றுக்கொடுத்து பல்வேறு துறைகளை வலையமைப்புடன் இணைத்து கைத்தொழில் முறைமையொன்றுக்குள் கொண்டுவருதல்.
- கல்சியம் காபனேற்றை (சுண்ணாம்பு) மூலப்பொருளாகக் கொண்டு பற்பசைகள் உட்பட பல்வேறு உற்பத்திகளில் ஈடுபடும் கைத்தொழில்களை வலையமைப்பில் இணைத்து, பலாங்கொடை பகுதியிலுள்ள கல்சைட் சுரங்கத்தைப் பயன்படுத்திக் கொண்டு கல்சியம் காபனேற்று தொழிற்சாலையொன்றை நிறுவுதல்.
- நவீன தொழில்நுட்ப முறைகளுடனும் மீள்சுழற்சியுடனும் தொடர்புபட்ட தொழில்முயற்சிகளுக்கான விசேட வரிச் சலுகைகள், வழிகாட்டல்கள், ஊக்குவிப்புக்களை வழங்குதல்.
- இலங்கையை கப்பற் சேவைகளை வழங்கும் கேந்திரஸ்தானமாக மாற்றியமைத்தல்.
- குறித்த இலக்கை அடைதற்கான நீண்டகால உபாயமுறைத் திட்டமொன்றை வகுத்தல்.
- கொழும்புத் துறைமுகத்திற்கு முன்னுரிமையளிப்பதுடன் அனைத்து பிரதான துறைமுகங்களையும் தொழில்நுட்பத்தின் அடிப்படையில் இயங்கும் வசதிகளை வழங்கும் ஒரு துறைமுகங்களாக நவீனமயப்படுத்தல்.
- கப்பல் கட்டுதலுக்கும் புனரமைத்தலுக்கும் உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தல்.
- கப்பற் பாதுகாப்புச் சேவைகளையும் ஏனைய சேவைகளையும் வழங்குதல்.
- தற்போது இலங்கை ஊடாக பயணிக்கும் 400க்கும் அதிகமான கப்பல்களையும் தாய்லாந்து ஊடாக தற்போது நிர்மாணிக்கப்பட்டு வரும் “க்ரா” கால்வாயின் நிர்மாணப் பணிகள் பூர்த்தியடைந்ததன் பின்னர் கடல் மார்க்கம் குறுகுவதன் காரணமாக ஏற்படக்கூடிய அனுகூலமான நிலைமைகளையும் கவனத்திலெடுத்து, கப்பல் எண்ணெய் வர்த்தகம் மூலம் பிரதானமாக அந்நியச் செலாவணியை ஈட்டக்கூடிய மார்க்கமொன்றை ஏற்படுத்துதல்.
- கொழும்புத் துறைமுகத்தை முன்னிலைப்படுத்தி குறைந்த செலவில் உயர் வினைத்திறனான சேவைகளை வழங்கக்கூடிய கொள்கலன்கள் கையாளல் மத்தியநிலையமொன்றாக இலங்கையை மாற்றுவதற்குத் தேவையான அபிவிருத்தித் திட்டங்களை அறிமுகப்படுத்தலும் உட்கட்மைப்பு வசதிகளை வழங்குதலும்.
- திருகோணமலை எண்ணெய்த் தாங்கி தொகுதியை நவீனமயப்படுத்தி சர்வதேச கனியநெய் களஞ்சியப்படுத்தும் மத்தியநிலையமாக மாற்றுதல்.
- சபுகஸ்கந்தை எண்ணெய் சுத்திகரிப்புத் தொகுதியை நவீனமயப்படுத்தலும் புதிதாக எண்ணெய் சுத்திகரிப்பு மேடையொன்றை நிர்மாணிப்பதன் மூலம் கனியநெய் சார்ந்த உற்பத்திகளுக்கான பிராந்தியத்தின் பிரதான வழங்குநரொருவராக மாறுதலும்.
- விளைதிறனையும் நிருவாக வினைத்திறனையும் அதிகரிப்பதற்காக நிறுவனங்களுக்கு ஊழியர் கூட்டுறவுகள் (Worker Coops) அரச, தனியார், பொதுமக்கள் கூட்டுப்பங்காண்மைகள் (PPPPs) என்ற கட்டமைப்புக்களை அறிமுகப்படுத்தல்.

## பொது தொழில்முயற்சிகள்

- நட்டத்தில் இயங்கும் பொது தொழில்முயற்சிகளை இலாபமீட்டும் நிலைக்குக் கொண்டுவருவதற்கு பின்வரும் பிரிவுகள் அடங்கிய முன்னுரிமை அடிப்படையிலான உபாயமுறை வேலைத்திட்டமொன்றை அமுல்படுத்துதல்.
- பல்வேறு மாதிரிகளின் கீழ் அரச, தனியார் மற்றும் மக்கள் உரித்துநிலையை ஏற்படுத்துதல்.
- பொறுப்புக்கூறலின்கீழ் தொழில் தகைமைகளும் திறன்களும் கொண்ட சுகாதீன முகாமைத்துவமொன்றின் கீழ் நிருவாகத்தைக் கொண்டுவருதல்.
- தீர்மானங்களை நிறைவேற்றுவதற்கு வசதியான விதத்தில் வெளிப்படைத்தன்மைகொண்ட தகவல் அறிக்கையிடல் முறையொன்றைப் பேணுதல்.
- இலங்கை மின்சார சபை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் அவற்றோடிணைந்த நிறுவனங்களை ஒன்றிணைந்த அரச தொழில்முயற்சியொன்றாக மாற்றுவதன் மூலம் அவற்றின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் வினைத்திறனை அதிகரித்தல்.
- ஸ்ரீ லங்கன் விமான சேவைகள் கம்பனி, நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை போன்ற நிறுவனங்கள் ஒன்றிணைந்த அரச வங்கிகளிலிருந்து பெற்றுக்கொண்ட கடன்களைத் தீர்த்து செயற்பாட்டு நடவடிக்கைகளை எளிதுபடுத்துவதற்காக அத்தகைய வங்கிகளுக்கு அந்தந்த நிறுவனங்களின் பங்குரிமையை வழங்குதல்.
- உள்நாட்டுப் பொருளாதாரத்தை பாதாளத்தில் தள்ளிவிடும், சொந்த நலன்களுக்காக அரச சொத்துக்களைக் கையாள்வதற்கு இடமளிக்கும் எந்தவிதமான உள்நாட்டு, வெளிநாட்டு முதலீடுகளுக்கும் பொது தொழில்முயற்சிகளை முன்னகர்த்தாதிருத்தல்.
- புதிய பொது தொழில்முயற்சிகளை ஆரம்பித்தல் அல்லது தற்போதுள்ள தொழில்முயற்சிகளை மீள்கட்டமைத்தல் என்ற பெயரளவிலான லேபல்களின் கீழ் அரச சொத்துக்களை சூறையாடுவதற்காகக் கையாளப்படும் சந்தர்ப்பவாத தொழில்முயற்சிகளுக்காக (Specific purpose Enterprises) உடந்தையாக இராமல் இருத்தலும் அதற்குப் பதிலாக பொதுமக்கள் நலனுக்கு முன்னுரிமையளித்த முதலீட்டு உரித்து மற்றும் முகாமைத்துவ மாதிரிகளின் கீழ் மட்டும் பொது தொழில்முயற்சிகளை முன்னெடுத்துச் செல்லலும்.
- இரத்தினக் கற்கள், கனிய மணல், திரிகைக்கல், பொஸ்பேற், இரசாயனப் பதார்த்தங்கள் போன்ற இயற்கை வளங்களை வினைத்திறனாகவும் பேண்தகு அடிப்படையிலும் பயன்படுத்தி பெறுமதி சேர்க்கப்பட்ட பண்டங்களின் உற்பத்தியை ஊக்குவிப்பதற்கு தற்போது மூடப்பட்டுள்ளதும் வினைத்திறன் அற்ற விதத்தில் இயங்குவதுமான பொது தொழில்முயற்சிகளை நவீனமயப்படுத்தி புதிய நிருவாகக் கட்டமைப்பொன்றின் கீழ் முன்னெடுத்துச் செல்லலும் புதிய உற்பத்தித் தொழில்சாலைகளை ஆரம்பித்தலும். (இதன்போது உரிமை மற்றும் முகாமைத்துவத்திற்கு ஊழியர்களை இணைத்துக்கொள்வதன் மூலம் உற்பத்தி விளைவு, வினைத்திறன் என்பவற்றை அதிகரிக்க எதிர்பார்க்கப்படுகிறது.)
- உபயமுறை ரீதியாக புவியியல் அமைவைப் பயன்படுத்தி கனிநெய் (பெற்றோலியம்) சுத்திகரிப்பு மற்றும் கனியநெய் சார்ந்த உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தலுக்கான ஆசியாவின் கேந்திரஸ்தானமாக இலங்கையை மாற்றுதல். முதற்கட்டத்தில், தற்போதுள்ள எண்ணெய் சுத்திகரிப்புத் தொகுதியை நவீனமயப்படுத்துதலும் நவீன கூறுகளுடன்கூடிய புதிய பெற்றோலிய உற்பத்திகளுக்கான இயந்திர கூடமொன்றை நிர்மாணித்தலும்.
- பொது தொழில்முயற்சிகளுக்கு ஊழியர்களை ஆட்சேர்ப்புசெய்வதை அரசியல் தலையீடுகளிலிருந்தது முற்றாக விடுவித்து தொழில் தகைமைகள் மற்றும் திறன்கள் அடிப்படையில் மாத்திரம் மேற்கொள்ளல்.

# வறுமைநிலையை ஒழித்துக்கட்டல்

- சமுர்த்தி பயனாளிகளை வறுமைநிலையிலிருந்து மீட்டெடுத்தல்.
- தற்போது உதவிபெறும் அனைத்து சமுர்த்தி பயனாளிகளும் முகங்கொடுக்கும் அசல் சமூக பொருளாதாரப் பிரச்சினைகளும் குறித்து ஆராய்ந்து தீர்வுகளை வழங்குவதற்கான தொழில்வாண்மையினரைக் கொண்ட குழுவொன்றை நியமித்தல்.
- சமுர்த்தி பயனாளிகளுக்கு வலுவூட்டி பொருளாதார ரீதியில் சுயாதீனத்தன்மையை அடைந்துகொள்ளும் வரை கீழ்மட்ட வருமானம் பெறும் ஆறு இலட்சம் குடும்பங்களுக்கு விசேட முயற்சியாண்மைத் திட்டமொன்றுடன் சமுர்த்தி கொடுப்பனவை மாதமொன்றுக்கு 10,000 வரை அதிகரித்தல்.
- ஒரு பூர்வாங்க நடவடிக்கையாக ஒரு வருடத்தினுள் சமுர்த்தி பயனாளிக் குடும்பங்களில் க.பொ.த. (உயர்தரம்) சித்தியடைந்தவர்களுக்கும் பட்டதாரிகளுக்கும் வேலைவாய்ப்பு வழங்குதல் அல்லது முயற்சியாண்மை மாதிரித் திட்டங்கள மூலம் நிரந்தர வருமானமொன்றை உறுதிப்படுத்தல்.
- நிவாரண உதவிகளின் பேரில் நிரந்தரமாக வறுமைநிலையில் சிறைப்பட்டு தங்கிவாழ்வோராக (Dependants) வாழ்க்கைச் சக்கரத்தை ஓட்டுவதற்குப் பதிலாக, தமது வாழ்நிலையை படிப்படியாக தரமுயர்த்தி பேண்தகு வருமானமீட்டுவோராக மாற்றும் முயற்சியாண்மை வழிகாட்டலொன்றை வழங்குதல்.
- ஐந்து வருடங்களுக்குள் அனைத்து சமுர்த்தி பயனாளிகளையும் பெருமிதத்துடன் வாழக்கூடிய, நிதிச் சுதந்திரம் கொண்ட பிரஜைகளாக மாற்றுதல்.
- விவசாய நடவடிக்கைகள் அல்லது வியாபார நடவடிக்கைகளுக்காக அரச வங்கிகளிலிருந்து பெற்றுக் கொண்ட சிற்றளவு கடன் செலுத்தும் பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்துள்ள நபர்களின் கடனை முறையான விசாரணையொன்றை அடுத்து பதிவழித்து, மீண்டும் உற்பத்திச் செயன்முறையில் விளைதிறன் கொண்டவர்களாக அவர்களை இணைத்துக்கொள்வதற்குத் தேவையான ஆலோசனைகளையும் வசதிகளையும் வழங்குதல்.
- ஏறத்தாழ 2,400,000 பெண்கள் உள்ளிட்ட 2,800,000 பேர் கடன் பெற்றுக்கொண்டுள்ள, தற்போது சுமார் 190 பேர் தற்கொலை செய்துகொண்டுள்ள ஒரு நெருக்கடியாக மாறியுள்ள நுண்பாக நிதிக் கடன் பொறியிலிருந்து மக்களை விடுவித்துக்கொள்வதற்கான ஒரு முறையான வேலைத்திட்டத்தை அமுல்படுத்துதல்.

அதற்கமைய :

- இலங்கை மத்திய வங்கியின் அனுமதித்த வட்டி வீதங்களைத் தாண்டி அறவிடப்படும் அனைத்து அநீதியான வட்டிகளையும் பதிவழித்தல்.
- இலங்கை மத்திய வங்கியின் அனுமதித்த வட்டி வீதங்களின்கீழ் செலுத்தப்பட வேண்டிய எனினும் செலுத்த முடியாதுள்ள கடன் வட்டியை அரசாங்கம் செலுத்துதல்.
- கடன் பெறுநர்கள் பயன்கூர் தொழில்முயற்சியொன்றில் ஈடுபடுவதற்குத் தேவைப்படும் வழிகாட்டலின் கீழ் அரச மற்றும் தனியார் நிதித் துறைகள் ஒன்றிணைந்த சமுதாய அடிப்படையிலான கடன் திட்டமொன்றின் மூலம் செலுத்தப்படாத கடனை மீள்நிரப்பல்செய்து அவர்களுக்கு புதிய தொழில்முயற்சிகளை ஆரம்பிப்பதற்கு மூலதனத்தை ஏற்பாடுசெய்து கொடுத்தல்.
- ஆரம்பிக்கப்படும் புதிய தொழில்முயற்சிகளை எமது கைத்தொழில் கொள்கையின் கீழ் முன்மொழியப்பட்டுள்ள நுண்பாக கைத்தொழில்கள் மற்றும் தொழில்முயற்சிகளின் வலையமைப்புடன் இணைத்துவிடல்.
- கடன் மீளளிக்காமை காரணமாக ஏற்கனவே வழக்குத் தொடரப்பட்டுள்ள நபர்களுக்கு அத்தகைய வழக்குகளை இணக்கப்படுத்திக் கொள்வதற்குத் தேவைப்படும் சட்ட உதவிகளை வழங்குதல்.

- கடன் மீளளிக்காமை காரணமாக பாலியல் ரீதியான இம்சைகள் அடங்கலான அநேகமான தொந்தரவுகளுக்கு முகங்கொடுக்க நேரிட்டுள்ள அனைவருக்கும் அது தொடர்பாக முறைப்பாடு செய்வதற்கும் முறையான விசாரணையொன்றை மேற்கொள்வதற்கும் பூரண அதிகாரம் கொண்ட அதிகாரசபையொன்றை நிறுவுதல்.
- தற்போதைய விவசாயக் காப்புறுதித் திட்டத்திலுள்ள பிரச்சினைகள் குறித்து ஆராய்ந்து, விவசாயி எதிர்நோக்கும் ஆபத்தை முற்றாக மீள்நிரப்பல்செய்யக்கூடிய விதத்திலும் விவசாயிக்கு அநாவசியமான நிதிச் சுமையொன்றை சுமத்தாத விதத்திலும் விவசாயக் காப்புறுதித் திட்டத்தை பூரண மறுசீரமைப்பொன்றுக்கு உட்படுத்துதல்.
- மகளிர் தொழில்முயற்சியாண்மையை ஊக்குவிப்பதற்குத் தேவைப்படும் பயிற்சியுடனும் மூலதன வசதிகளுடனும்கூடிய கிராம மட்ட 15,000 நுண்பாக கொத்தணிக் கம்பனிகளை நிறுவி அவற்றை ஏனைய கைத்தொழில்களுடனும் சந்தைகளுடனும் இணைத்துவிடல்.

## விவசாயமும் கால்நடைவளர்ப்பும்

- உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்தலும் உற்பத்திகளின் விளைதிறனை அதிகரிப்பதற்கான மூலோபாயங்களையும் சட்டதிட்டங்களையும் வகுத்தலும்.
- சூட்டிகையான கட்டுப்பாட்டு முறைமைகளை உபயோகித்து உரிய வழிகாட்டல்களுடன்கூடியதாக பயிர் நிலங்களைத் தெரிவுசெய்தல், பயிர்களைத் தெரிவுசெய்தல், விதைகளை உருவாக்குதல், உரம் மற்றும் பூச்சிநாசிப் பாவனை, அறுவடை செய்தல், பின்னைய அறுவடை முகாமைத்துவம், சந்தை ஒருங்கிணைப்பு பற்றிய தகவல்களை சூட்டிகையான கட்டுப்பாட்டு முறையொன்றின் துணையுடன் தராதர அறிக்கைளைப் பெற்றுக்கொடுத்து விவசாயத்தை வினைத்திறன் வாய்ந்த, பயன்கூர் கைத்தொழிலொன்றாக மாற்றுதல்.
- சிறு பயிர் நில உரித்தாளிகளின் உரிமையைக் காப்பாற்றுகின்றவாறு நிருவாகத்தையும் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளையும் வினைத்திறன் உடையதாக மாற்றுவதற்காக பாரிய பொதுக் கம்பனிகளை நிறுவுதல்.
- ஏற்றுமதி நோக்கிலான விவசாயப் பயிர்களின் உற்பத்தி பல்வகைப்படுத்துகை.
- விவசாய அறுவடையை முக்கிய உள்ளீடுகளாகக் கையாளும் விவசாயத்தை அடிப்படையாகக்கொண்ட உற்பத்திக் கைத்தொழில் முறைமையொன்றை நிறுவுதலும் அதற்காக தனியார் முதலீடுகளை ஊக்குவித்தலும்.
- பால் விவசாயிகளுக்குத் தேவையான உயர் தரம்வாய்ந்த கன்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கு இறக்குமதி செய்யப்பட்ட விலங்குகளுடன்கூடிய மையக் பண்ணையை ஏற்படுத்துதல்.
- உயர் தரம்வாய்ந்த மாமிசம் உற்பத்திசெய்யும் நிறுவனங்களின் ஏற்றுமதியை ஊக்குவித்தல், வரிச் சலுகை மற்றும் ஊக்குவிப்புகளை வழங்குதல், மாமிச உற்பத்திக்குத் தேவையான உள்ளீடுகளை குறைந்த விலையில் பெற்றுக்கொள்வதற்கான ஒரு வேலைத்திட்டத்தை வகுத்தல்.
- கால்நடை வளர்ப்புத் துறையில் அனைத்து நிறுவனங்களும் கைத்தொழில்களும் ஒன்றோடொன்று பிணைக்கப்பட்டதாக தரமான மாமிச உணவு மற்றும் பாலுணவு உற்பத்திக் கைத்தொழில் முறைமையொன்றை நிறுவுதல்.

## டிஜிட்டல் பொருளாதாரமொன்றாக மாற்றியமைத்தல்

- தொழில்நுட்பத்தின் புதிய போக்குகளை அடையாளம் கண்டு மனித வாழ்வின் பண்புத்தரத்தை அதிகரிப்பதும் பொருளாதார வளர்ச்சியை துரிதப்படுத்துவதற்காக எதிர்வரும் 30 வருடங்களுக்கான தொழில்நுட்ப வழிகாட்டியைத் (Technological Road Map) தயாரித்து ஒட்டுமொத்த பொருளாதாரச் செயன்முறையை அதனோடு தொடர்புபடுத்துதல்.
- மனித வளத்தை முன்னேற்றுவதன் பெறுபேறொன்றாக வளர்ச்சியடையும் மென்பொருள் உற்பத்தி, தொழில்நுட்பத் தீர்வுகளை வழங்குதல் மற்றும் தொழில்நுட்பத் திறன்கள் கொண்ட மனித வளத்தை வெளிநாட்டு வேலைவாய்ப்புச் சந்தைக்கு அனுப்பிவைத்தல் என்பவற்றின் ஊடாக முழுதும்அளாவிய பொருளாதாரத்தில் டிஜிட்டல் துறையின் பங்களிப்பை அதிகரித்தல்.
- தகவல் தொழில்நுட்பத் துறையில் பண்புத்தரமுள்ள, நம்பகரமான, அதிநவீன தீர்வுகளை வழங்கும் தரச் சின்னமாக இலங்கையை மாற்றியமைத்தல்.
- ஒழுங்கமைவான தகவல் தொழில்நுட்பத் தீர்வுகளை வழங்கக்கூடிய தகவல் தொழில்நுட்பப் பூங்காக்களை (IT Parks) இடஅமைவான சாத்தியப்பாட்டின் அடிப்படையில் நிர்மாணித்தல்.
- 5 வருட காலத்துள் தகவல் தொழில்நுட்ப மென்பொருள்களையும் இலத்திரனியல் துறையில் 2,000 புதிய கம்பனிகளையும் ஏற்படுத்துதலும் 06 தகவல் தொழில்நுட்ப நகரங்கள் உருவாக்குவதன் மூலம் 300,000 நேரடி வேலைவாய்ப்புகளையும் 10,00,000 மறைமுக வேலைவாய்ப்புகளையும் 3,000 பி.ரூ. வருடாந்த வருமானமொன்றையும் எதிர்பார்த்தல்.
- முழு (Knowledge Process Outsourcing) மற்றும் BPO (Business Process Outsourcing) என்பவற்றுக்கான வாய்ப்புகளை உருவாக்கிக்கொடுத்தலும், தேவைப்படும் ஊக்குவிப்புகளை வழங்குதலும்.
- பயன்பாட்டு மற்றும் சேவை வசதிகளுக்கு கொடுப்பனவுகளை மேறகொள்வதற்கு தனியார் துறையையும் அரச துறையையும் இணைத்துக்கொண்டு வலையமைப்பாக்க டிஜிட்டல் கொடுப்பனவு மேடைகளை (Digital Paying Platforms) உருவாக்குதல்.
- ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு வரிச் சலுகைகளையும் ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளையும் வழங்குதல்.
- ஆக்கவுரிமை உரிமங்களைப் பெற்றுக்கொண்டு புதிய உற்பத்திகளை மேற்கொள்வதற்கு முன்வரும் தொழில்முயற்சியாளர்களுக்கு விசேட வரிச் சலுகைகளை வழங்குதலும் அத்தகைய உரிமங்களைப் பெற்றுக்கொள்ள செலவிடப்பட்ட எல்லாத் தொகைகளையும் மீள்நிரப்பல் செய்தலும்.
- தற்போது 76 ஆவது இடத்திலுள்ள இலங்கையின் வலையமைப்பாக்கத் தொழில்நுட்பத் தயார்நிலைச் சுட்டியையும் (Technology Readiness Index) அதேபோல் 117 ஆவது இடத்திலுள்ள இலங்கையின் தகவல், தொடர்பாடல் தொழில்நுட்ப அபிவிருத்திச் சுட்டியையும் (ICT Development Index) முதல் 50 ஆவது இடத்துக்குள் கொண்டுவருதல்.

## உள்நாட்டு வர்த்தகமும் சேவைகளும்

- உணவு உற்பத்திகளை சந்தைப்படுத்துவதற்கும் விநியோகிப்பதற்கும் ஏற்றுமதிசெய்வதற்கும் தேவைப்படும் வங்கி மற்றும் ஏனைய வசதிகளுடன்கூடியதாக விவசாயியையும் உற்பத்தியாளரையும் சந்தையுடன் நேரடியாகத் தொடர்புபடுத்தும் 24 மணி நேரமும் திறந்திருக்கும் பாரியளவான 24 வர்த்தக நிலையங்களை மாவட்டத்திற்கு ஒன்று என்ற அடிப்படையில் ஆரம்பித்தல்.

- வர்த்தக நிலையங்களை வழங்குதலும் வரி அறவீட்டுப் பிரச்சினைகள், வர்த்தகத்திற்கு தேவைப்படும் வசதிகள் உள்ளிட்ட சிற்றளவு வர்த்தக சமூகம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து பகுத்தாராய்ந்து வர்த்தகத்தின் வினைத்திறனையும் அச்சமூகத்தின் முன்னேற்றத்தையும் அடைந்துகொள்ளக்கூடிய முறைமையொன்றை அறிமுகப்படுத்தல்.
- மையப்படுத்திய தகவல் முறைமையொன்றின் ஊடாக பண்புத்தரமுள்ள பொதுச் சேவை வசதிகளை வழங்குதல், மேற்பார்வை செய்தல் மற்றும் கண்காணிப்புச் செய்வதற்கு ஒன்றிணைந்த சூட்டிகையான ஆளுகை முறைமையொன்றை (Integrated Smart Governance System) நிறுவுதல்.
- தனிப்பட்ட வகையில் நிர்மாணிக்கப்படும் தனி உட்கட்டமைப்பு வசதிகளுக்குப் பதிலாக, ஒன்றிணைந்த அபிவிருத்தித் திட்டமொன்றுக்கு அமைய முன்னுரிமையின் அடிப்படையில் வினைத்திறனான சேவைகளை வழங்கக்கூடிய உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்திசெய்தல்.
- உற்பத்திக்கும் வர்த்தகத்திற்கும் தேவைப்படும் நிதி, வங்கி, போக்குவரத்து, காப்புறுதி, தகவல் பரிமாற்றம், பொதியிடல், களஞ்சியப்படுத்தல் போன்ற துணைநிலைச் சேவைகளை வினைத்திறனான விதத்தில் பெற்றுக்கொள்ளக்கூடிய ஒன்றிணைந்த முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டமொன்றை அமுல்படுத்துதல்.
- நீர், மின்சாரம், எரிபொருள் மற்றும் எரிவாயு போன்ற பயன்பாட்டுச் சேவைகள் தொடர்ச்சியாகவும் வினைத்திறனாகவும் நியாய விலைகளிலும் விநியோகிக்கப்படுவதை உறுதிப்படுத்தல்.
- வர்த்தக வினைத்திறனையும் வசதியையும் அதிகரித்தலும் இணைய வழி வர்த்தகத்தையும் M வர்த்தகத்தையும் (M Commerce) ஊக்குவித்தலும்.
- பண்ட உற்பத்தி முதல் விநியோகித்தல் வரை இடம்பெறும் அநாவசியமான இடையீட்டுச் செயற்பாடுகளை நீக்கி இடையீட்டாளரை பெறுமதியை ஏற்படுத்தும் ஒருவராக மாற்றியமைத்தல்.
- போட்டிகர சந்தையில் நுகர்வோர் உரிமைகள் பாதுகாக்கப்படும் விதத்தில் சட்டங்கள் அமுல்படுத்தப்படுவதை மேற்பார்வைசெய்வதற்காக வலுவூட்டப்பட்ட பலம்பொருந்திய ஒரு பொறிமுறையை ஏற்படுத்தல்.

## வெளிநாட்டு வர்த்தகம்

- 0.14% வீதமான இலங்கையின் உலக வர்த்தகப் பங்கை முதற் கட்டத்தில் 2.0% வரை வளர்ச்சியடையச் செய்வதற்கு தேவைப்படும் வழிகாட்டல்களையும் வரி நிவாரணங்களையும் ஊக்குவிப்புக்களையும் உட்கட்டமைப்பு வசதிகளையும் வழங்குவதற்காக பின்வரும் துறைகளின் ஏற்றுமதிகளை ஊக்குவித்தல்:
- தெரிவுசெய்யப்பட்ட உலகளாவிய வழங்கற் சங்கிலிகளுக்கான (Global Supply Chains) பண்டங்கள் சேவைகளின் உற்பத்தி.
- தகவல் தொழில்நுட்பத் தீர்வுகள் மற்றும் மென்பொருள்களின் விருத்தி.
- சம்பிரதாயமல்லாத பணப் பயிர்களின் பயிர்செய்கை ஊக்குவிப்பு.
- முதனிலை உற்பத்திகளை ஈடுபடுத்தி பெறுமதி சேர்க்கும் ஏற்றுமதிப் பண்டங்களின் உற்பத்தி.
- வர்த்தகக் கணக்கிலுள்ள பற்றாக்குறையை 05 வருடங்களுக்குள் மேன்மிகையாக மாற்றுவதற்கு ஏற்றுமதி பல்வகைப்படுத்தல் மற்றும் பதிய சந்தைகளைத் தேடிப்பெறல். உலகளாவிய வழங்கற் சங்கிலிக்குத் தேவைப்படும் பண்டங்களையும் சேவைகளையும் உற்பத்திசெய்தல், இறக்குமதி முகாமைத்துவ உபாயமுறைத் திட்டமொன்றைத் தயாரித்தல்.

- உள்நாட்டு உற்பத்தியாளர்களின் பாதுகாப்பு, உணவுப் பாதுகாப்பு, நியாய வர்த்தகம், அத்தியாவசிய நுகர்வு மற்றும் முதலீட்டுப் பண்டங்களுக்கான முன்னுரிமை என்ற மூலக் கோட்பாடுகளின் அடிப்படையில் இறக்குமதி வர்த்தகக் கொள்கையை அமுல்படுத்தல்.
- கொட்டிக் குவிப்பெதிர்ப்பு (Anti Dumping) சட்டதிட்டங்களைப் பலப்படுத்தலும் நியாயமான வர்த்தகம் (Fair – trading) பற்றிய புதிய சட்டதிட்டங்களை அறிமுகப்படுத்தலும்.
- மீள் ஏற்றுமதி மற்றும் இறக்கியேற்றும் வியாபாரத்தை (Entrepot Trade) நோக்காகக்கொண்ட இறக்குமதிகள் தொடர்பாக உள்நாட்டு உற்பத்திகளின் அடையாளத்திற்கும் தரச் சின்னத்துக்கும் ஊறுவிளையாதவாறு அவ்வர்த்தக நடவடிக்கையின் ஊடாக மேலதிக அந்நியச் செலாவணியை ஈட்டுதல்.
- தேசிய பொருளாதாரத்திற்கு ஊறுவிளையாத விதத்தில் சர்வதேச வர்த்தகத்தின் ஒப்பீட்டு அனுகூலங்களை (Comparative Advantages) அடைந்துகொள்ள நடவடிக்கை எடுத்தல்.
- பாரியளவான தரவுப் பகுப்பாய்வு (Big data Analysis) மூலம் புதிய ஏற்றுமதிச் சந்தைகளைத் தேடிப் பெறுதலும், புதிய ஏற்றுமதிப் பண்டங்களை அடையாளம் காணலும், சந்தைப் போக்குகள், நுகர்வோர் விருப்புக்கள், மறைவான வர்த்தகக் கோலங்கள் என்பவற்றை அடையாளம் காணலும் அதற்கு பண்டங்களை உற்பத்திசெய்வதற்கு உள்நாட்டு தொழில்முயற்சியாளரை ஊக்குவித்தலும் வழிகாட்டலும்.
- கேள்வி நெகிழ்ச்சி (Elasticity of Demand) மற்றும் வெளிநாட்டுச் சந்தைகளில் நிலவும் கேள்வி குறித்து பகுத்தாராய்வதன் ஊடாக மதிநுட்பம் வாய்ந்த விதத்தில் ஏற்றுமதித் தீர்வை வரிகளை அறவிடுதலும் தேவைப்படும் வரி விலக்களிப்பை (வுயஒ நுஒநஅிவழைெ) வழங்குதலும்.

## முதலீடுகளையும் தொழில்முயற்சிகளை மேற்கொள்வதற்கான வசதியை ஏற்படுத்துதல்

- வெளிநாட்டு வர்த்தக நடவடிக்கைகளை வினைத்திறனுடையதாக்குவதற்கு ஏற்றுமதி - இறக்குமதி வங்கியொன்றை (EXIM) நிறுவுதல்.
- அரசியல் தலையீடுகளின்றி அபிவிருத்தி இலக்குகள் மீது தேவைப்படும் முதலீடுகளை ஊக்குவிப்பதற்காக இலங்கை முதலீட்டுச் சபையை (BOI) மறுசீரமைத்து சுயாதீனமானதாக மாற்றுதல்.
- ஐந்து வருடங்களுக்குள் உபாயமுறை ரீதியாக முக்கியத்துவம் பெறும் துறைகளுக்கு முன்னுரிமையளித்து பல்வேறு முதலீடுகளையும் உரிமையாண்மை வடிவத்தின்கீழ் வெளிநாட்டு முதலீடுகளை வரவழைக்கும் வெளிநாட்டு முதலீட்டு அளவை மொத்தத் தேசிய உற்பத்தியில் (GDP) 10% வரை அதிகரித்தல்.
- முதலீட்டு ஊக்குவிப்பையும் பொருளாதார உறுதிப்பாட்டையும் இலக்காகக்கொண்ட நியாயமானதும் எளியதுமான வரியிறுப்பு முறையொன்றை அறிமுகப்படுத்துவதற்காக வருமான வரிச் சட்டத்தில் திருத்தம் கொண்டுவருதல்.
- மூலதனச் சந்தை நடவடிக்கைகளை வினைத்திறனுடையதாக்குதலும் பொதுமக்கள் கூட்டு முதலீடுகளுக்கு அழைக்கக்கூடிய வகையில் முதலீட்டாளர்களின் நம்பிக்கையை உறுதிப்படுத்துவதற்கும் முறைகேடான கொடுக்கல்வாங்கல்களையும் மோசடிகளையும் தடுப்பதற்கும் ஏற்ற விதத்தில் நிறுவன முறைமையை மீள்கட்டமைத்தலும் பிணைய செலாவணிச் சட்டங்களை மாற்றுதலும்.
- முதலீட்டாளர்களைக் கவர்வதற்காக உலகளாவிய போட்டிச் சுட்டியையும் (Global Competitiveness Index) முதலீட்டாளர்கள் முகங்கொடுக்கும் சிரமங்களைக் குறைப்பதற்கு மிகவும் வினைத்திறனானதும் பண்புத்தரத்தைப் பிரதிபலிக்கும் வியாபாரங்களைப் புரியும்

வசதியின் சுட்டியை (Ease of doing Business Index) முதல் 50 இடங்களுக்குள் கொண்டுவருவதற்கான திட்டங்களை வகுத்தல்.

- கிறீன் பீல்ட் (Green Field) மற்றும் பிரவுன் பீல்ட் (Brown Field) முதலீட்டு வடிவங்களின் ஊடாக பேண்தகு, சுற்றாடல் நட்புறவான வெளிநாட்டு முதலீடுகளை ஊக்குவித்தல்.
- சூட்டிகையான ஆளுகை (Smart Governance), வலையமைப்பாக்கங்கள் மூலம் பிறப்பிலேயே வழங்கப்படும் தனிநபர் சூட்டிகை அடையாள இலக்கமொன்றின் அடிப்படையில் அனைத்துப் பொதுச் சேவைகளையும் பெற்றுக்கொள்ளக்கூடிய விதத்தில் சூட்டிகையான ஆளுகையை (Smart Governance) அறிமுகப்படுத்தல்.
- விலைகளை மாற்றுதல் (Transfer Pricing) ஊடாக அந்நியச் செலாவணியை வெளிக்கொண்டு செல்லும் சந்தர்ப்பவாத வெளிநாட்டு முதலீடுகளைத் தடுத்தலும் நீண்டகால அடிப்படையில் பரஸ்பர அடிப்படையில் நன்மைகள் சமமாகப் பகிர்ந்துசெல்வதை ஊக்குவிக்கும் வெளிநாட்டு முதலீடுகளுக்கு முன்னுரிமையளித்தல்.
- உபாயமுறை ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த துறைகளுக்கு முன்னுரிமையளித்து அரச, தனியார் மற்றும் பொதுமக்கள் கூட்டுப் பங்காண்மைகள் (PPPPs) அடங்கலான பல்வேறு முதலீட்டு உரித்து மாதிரிகளின் கீழ் வெளிநாட்டு முதலீடுகளை அழைத்தல்.
- கம்பனிப் பங்குகளில் முதலீடுசெய்வதற்கு ஊழியர்களுக்கு வாய்ப்பு இருக்கும்போது அப்பங்குகளைக் கொள்வனவுசெய்வதற்குத் தேவையான கடன் வசதிகளை வழங்குவதற்கு விசேட கடன் நிதியமொன்றை நிறுவுதல்.

## பொது நிதியும் வரிகளும்

- நியாயமான, எளிய மூலக்கோட்பாடுகளின் அடிப்படையில் வரிக் கொள்கையில் தற்போது காணப்படும் சிக்கல்களை நீக்கி வரி இறுத்தல் வினைத்திறனை அதிகரிப்பதற்கு வரிக் கொள்கையை மீளாய்வுசெய்து தேவைப்படும் திருத்தங்களை மேற்கொள்ளல்.
- மொத்தத் தேசிய உற்பத்தியின் சதவீதமாக அரச வருமானத்தை 20% - 25% மட்டம் வரை கொண்டுவருவதற்கு முறையான ஒரு திட்டத்தைத் தயாரித்து அமுல்படுத்தல்.
- வருமானப் பகிர்வின் நியாயபூர்வதன்மையும் பொருளாதார விருத்தியும் மீது நேரடியாக தாக்கம் செலுத்தும் நேரில் வரிகளுக்கும் (Indirect Taxes) நேர் வரிகளுக்கும் (னுசைநஉவ வுயஒநள) இடையிலான விகிதம் தற்போது நிலவும் 82 – 18 என்ற மட்டத்திலிருந்து 40 – 60 வரை படிமுறையாகக் கொண்டுவருவதற்கான நீண்டகாலத் திட்டமொன்றை அமுல்படுத்தல்.
- தற்போது அடையாளம் காணப்பட்டுள்ள வருமான வரி செலுத்துவோரிடமிருந்து அறவிடப்படும் வரிகளை அதிகரிப்பதற்குப் பதிலாக நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர அளவான கைத்தொழில்களையும் தொழில்முயற்சியாண்மை முன்னேற்றமும் இலாபமும் ஊடாக வரி இறுக்கும் அடிப்படையை விஸ்தரித்தல்.
- உணவுகள், மருந்துகள், சுகாதார சேவைகள் உள்ளிட்ட அடையாளம் காணப்பட்ட அத்தியாவசிய பண்டங்களுக்கும் சேவைகளுக்கும் ஏயுவு வரி விலக்களித்தல்.
வரவுசெலவுத்திட்ட பற்றாக்குறையை 5% அளவில் பேணுதல்.
- பிறப்பிலேயே விநியோகிக்கப்படும் தனிநபர் அடையாள அட்டையொன்றை அடிப்படையாகக் கொண்டு வினைத்திறனாகவும் சிக்கனமாகவும் வரி இறுத்தலும் முகாமைசெய்தலும்.
- வருமான மட்டத்தின் மீது வரி விழுப்பாட்டை (Tax incidence) சீராக்குதலும் படிமுறையாக வரி வீதங்களை ஈடுபடுத்திக்கொள்ளலும் வரி எல்லைகளை குறிப்பான காலப்பகுதிகளினுள் மீளாய்வு செய்தலும் தேவைப்படும் திருத்தங்கள் மூலம் வரிஇறுப்பின் நியாயபூர்வதன்மையை உறுதிசெய்தலும்.

- வெளிப்படைத்தன்மையும் (Transparency) பொதுமக்களுக்கு பொறுப்புக்கூறும் தன்மையும் (Accountability) பாதுகாக்கப்படும் விதமாக தற்போது அமுலிலுள்ள நிதிச் சட்டதிட்டங்களையும் ஒழுங்குவிதிகளையும் நிகழ்நிலைப்படுத்தலும் புதிய பொருளாதாரக் கொள்கைகளை அமுல்படுத்துவதற்கு வசதியான விதத்தில் புதிய நிதிச் சட்டங்களை அறிமுகப்படுத்துவதன் ஊடாக நிதி ஒழுக்காற்றைப் பலப்படுத்துதலும்.
- தனிப்பட்ட சேமிப்புகளை ஊக்கப்படுத்துவதற்கு நிதி வைப்புக்களின் பாதுகாப்பு உறுதிப்பாட்டுக்கான விசேட வைப்பு காப்பு முறைமையொன்றை மத்திய வங்கியின் நேரடி தலையீட்டின் பேரில் மேற்கொள்ளல்.
- பணவீக்கத்தை முகாமைசெய்தலும் நிதி வழங்கலைக் கட்டுப்படுத்துவதற்கு வட்டி வீதங்களை தொடர்ந்தும் மீளாய்வுசெய்தலும் உரிய முறையில் சீராக்கம் செய்தலும்.
- வங்கி முறையில் கடன்களுக்கு அறவிடப்படும் வட்டி வீதங்களுக்கும் வைப்புக்களுக்குச் செலுத்தப்படும் வட்டி வீதிங்களுக்கும் இடையிலான வெற்றிடத்தை இழிவளவில் பேணுவதற்கு தொடர் மீளாய்வு செய்தல்.
- நாணயமாற்று விகித ஆபத்துக்களைக் குறைப்பதற்கும் புதிய தொழில்நுட்ப மாற்றங்களுக்கு அமைவான விதத்தில் கிறிப்டோ நாணயம் போன்ற தோற்றநிலையான (Virtual) முறைமைகளை அறிமுகப்படுத்துவதன் பொருத்தப்பாடு பற்றி ஆராய்தலும் உசிதமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இலங்கை மத்திய வங்கிக்கு தேவைப்படும் சுயாதீனத்தன்மையை வழங்குதலும்

## பொதுப் படுகடன்

- அபிவிருத்தி இலக்குகளையும் பொருளாதாரத் திட்டங்களையும் நிதியீட்டம்செய்தலும் புதிய தொழில்நுட்பத்தை அடைந்துகொள்வதற்குத் தேவைப்படும் கடன்களைப் பெற்றுக்கொள்வதற்கு மத்திய வங்கியின் கீழுள்ள அரச படுகடன் திணைக்களத்தை முறையற்ற அரசியல் தலையீடுகளற்ற, சுயாதீனமான முகாமைத்துவ அலகொன்றாக மாற்றியமைத்தலும்.
- தற்போது பெறப்பட்டுள்ள வெளிநாட்டுக் கடன்களின் மீளச் செலுத்துவதற்கான காலத்தை நீடித்துக் கொள்ளக்கூடிய விதத்தில், கடன்களை மீள பட்டியல்படுத்துவதற்கும் நிவாரணங்களைப் பெற்றுக்கொள்வதற்கும் கடன் வழங்கிய நிறுவனங்களுடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுதல்.
- பொருளாதாரத்தில் ஏற்படும் விரிவாக்கத்தினதும் ஏற்றுமதி வருமானத்தினதும் விளைவாக அந்நியச் செலாவணி ஈட்டலின் மூலம் கடன் செலுத்தும் அழுத்தத்தைக் குறைத்துக்கொள்ளல்.
- அரச படுகடன் தொடர்பான வெளிப்படைத்தன்மையைக் காப்பதற்காக உரிய எந்தவொரு தகவலையும் பொதுமக்கள் பெற்றுக்கொள்வதை அடிப்படைச் சட்டமொன்றின் மூலம் உறுதிப்படுத்துதல்.
- எமது பொருளாதாரக் கொள்கைளின் தொழிற்பாடடின் பேரில் உருவாகும் அந்நியச் செலாவணியை கடன்களை தீர்ப்பதற்குப் பயன்படுத்தல்.

# நிர்மாணத்துறை

- சுற்றாடல் நட்புறவான, பேண்தகு மூலக்கோட்பாடுகளைப் பின்பற்றி நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்திக்குத் தேவைப்படும் வழிகாட்டல்களுக்குரிய ஒழுக்கநெறிக் கோவையொன்றை அறிமுகப்படுத்தல்.
- பொருளாதாரத்தின் ஒட்டுமொத்த திட்டத்துக்கு ஒருங்கியையாக நிர்மாணத் துறையை திட்டமிடுவதற்காக முன்னுரிமைகளை அடையாளம் காண்பதற்கும் உரிய முடிவுகளை எடுப்பதற்கும் நியதிச்சட்ட அதிகாரம் பொருந்திய துறையில் நிபுணத்துவம் வாய்ந்தவர்களையும் தொழில்வாண்மையினரையும் கொண்ட, அநாவசியமான அரசியல் தலையீடுகள் அற்ற ஒரு சுயாதீன நிலையத்தை நிறுவுதல்.
- நிர்மாணத் துறையில் வேலைவாய்ப்புகள்: 2 வருட காலத்துள் நிர்மாணத் துறையில் அடையாளம் காணப்பட்ட 54 தொழில் வகைகளின் கீழ் தொழில்வாண்மையினரை 200,000 ஐப் பயிற்றுவித்து உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொழிற்சந்தைக்கு அனுப்பிவைத்தல்.
- நிர்மாணக் கைத்தொழிலுக்கு சிறப்பாயமைந்த பிரச்சினைகளை நிவர்த்திசெய்து கொள்வதற்காக புதிதாக நீதிமன்றமொன்றை நிறுவுதல்.
- கொத்தனார்கள், தச்சுத்தொழிலர்கள், மின்னிணைப்புத் தொழில்நுட்பவலர்கள், நீர்க்குழாய் பொருத்தும் தொழில்நுட்பவலர்கள் உள்ளிட்ட துறையுடன் தொடர்புபட்ட தொழிற்றுறையாளர்களுக்கு அவசியமான பயிற்சியையும் திறன்களையும் NVQ பாடநெறிகள் மூலம் வழங்குவதற்கான ஒரு வேலைத்திட்டத்தை அமுல்படுத்தல், பங்களிப்பு ஓய்வூதியத் திட்டமொன்றை அறிமுகப்படுத்தல், திறன்களின் அடிப்படையில் அதிக வருமானம் ஈட்டக்கூடியவாறு டிஜிட்டல் தொழிலாளர் அட்டைகளை அறிமுகப்படுத்தல்.
- நிர்மாணச் செயன்முறையில் வினைத்திறனை அதிகரிப்பதற்காக அவற்றுடன் தொடர்புறும் அரச மற்றும் ஏனைய நிறுவனக் கட்டமைப்பையும் சட்ட சட்டகத்தையும் பலப்படுத்துதல்.
- நிர்மாணங்களுக்கான பெறுகைச் செயன்முறையில் Unsolicited விலைகுறித்தல் முறையைத் தடை செய்தலும் போட்டிநிலைக்கு தடங்கலாக அமையாத விதத்தில் உள்நாட்டு ஒப்பந்தக்காரர்களுக்கு முன்னுரிமையளிக்கும் அளவுகோல்களை அறிமுகப்படுத்தலும்.
- இலஞ்சம் மற்றும் ஊழலை நிறுத்துவதற்கும் நிர்மாணக் கைத்தொழிலின் வேலைகளை வினைத்திறனாக்குவதற்கும் உந்துகையொன்றாக அரச நிர்மாணங்களுக்கு இலத்திரனியல் பெறுகை முறையை (e-Procuement) அறிமுகப்படுத்தல்.
- மெய்யியல்புடைய (realistic) பொறியியல் மதிப்பீடுகளைத் தயாரித்தலும் சுற்றாடல் தாக்க மதிப்பீட்டாய்வுகள் போன்ற நடவடிக்கைககளை வினைத்திறனாகவும் மெய்யியல்புடையதாகவும் மேற்கொள்வதற்கு துறையில் இருக்கின்ற அலுவலர்களுக்கு தேவைப்படும் பயிற்சியை வழங்குவதும் நவீன தொழில்நுட்ப அறிவை வழங்குதலும்.
- தொழிற்பாதுகாப்பை உறுதிப்படுத்தலும் ஊழியர் நலன்புரி நடவடிக்கைகளை முறைவலுப்படுத்தலும், வழிகாட்டல்களை வழங்குதலும் பயிற்றப்பட்ட உழைப்பாளர்களை உருவாக்குவதற்கு நிறுவனக் கட்டமைப்புகளை நிறுவுதலும்.

# சுற்றுலாக் கைத்தொழில்

- சமுதாய அடிப்படையிலான சுற்றுலாக் கிராமங்களைக் கொண்ட, சுற்றாடல் நட்புறவான சுற்றுலா சேரிடங்களாக (Eco-friendly Tourism Destinations) இலங்கையை மாற்றியமைப்பதற்காக கரையோரங்கள், மலைநாடு, வனப் பூங்காக்கள், தொல்லியல்

மற்றும் கலாசார ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் சார்ந்ததாக சமுதாய அடிப்படையிலான 200 சுற்றுலாக் கிராமங்களை நிறுவுதல்.

- பொருளாதார, கலாசார, சுற்றாடல் மற்றும் சமூகப் பிரச்சினைகள் அற்ற ஆசியாவின் மனங்கவர் சுற்றுலாத் தலமாக இலங்கையை மாற்றியமைத்தல்.
- கிராமத்திற்கு நன்மைகள் கிட்டக்கூடியதும் சுற்றுலாப் பயணிகளைக் கவரக்கூடியதுமான சமுதாய அடிப்படையிலான சுற்றுலாத் தொழில்முயற்சியை உருவாக்குதல்.
- கலாசார, சமூக, சுற்றாடல் மற்றும் தொல்லியல் அடிப்படையில் நாட்டில் சுற்றுலா வலயங்களை வகைப்படுத்தலும் ஊக்குவித்தலும்.
- சுற்றுலா வழிகாட்டுநர்கள் அடங்கலான ஏனைய சேவை வழங்குநர்களை ஒரே வலையமைப்பில் இணைத்துக்கொள்ளலும் அங்கீகாரம்பெற்ற பிரயோகங்கள் மற்றும் ஒழுக்கநெறிக் கோவையொன்றில் அடிப்படையில் அவ்சேவைகளை வழங்குதல்.
- சம்பிரதாய மருத்துவ முறைகள், உடல் தேய்த்துப் பிசைந்துவிடும் முறைகள், உள்ளூர்க் கலைப் படைப்புக்கள், உள்ளூர் உணவுகள் இலங்கைக்கு சிறப்பாயமைந்த ஏனைய துறைகளின் அடிப்படையில் சுற்றுலாப் பயணிகளிடையே பிரபல்யப்படுத்த நடவடிக்கை எடுத்தல்.
- பொலிஸ் மற்றும் சமூகத்தை இணைத்துக்கொண்டும் சூட்டிகையான நிர்வாகக் கட்டமைப்புக்களைப் பயன்படுத்தியும் அனைத்து பாத்தியதையுடையவர்களதும் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும் விதமான ஒரு வேலைத்திட்டத்தை அமுல்படுத்துதல்.

## வேலைவாய்ப்புகளும் உழைப்புச் சந்தையும்

- விஞ்ஞான ரீதியான அடிப்படையில் பூரண வேலைவாய்ப்பை அடைவதற்கு அறிவு, திறன்கள், உளப்பாங்குகள், உயர் மானிடப் பண்புகள் நிரம்பிய, முன்னேறிய மனித வளத்தை உருவாக்குவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்வதற்கு கல்விக் கொள்கையையும் கூட்டிணைந்த தொடர் தொழில் விருத்திக்கான வாய்ப்புக்களையும் வழங்குதல்.
- பெண்கள் நிறைவேற்று மற்றும் முகாமைத்துவத் துறைகளில் பயன்கூர் விதத்தில் தொழிலில் ஈடுபடுவதிலுள்ள தடைகளை நீக்கி அவர்களின் சேவையை பயன்கூர் விதத்தில் பொருளாதாரத்திற்குப் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான வசதிகளை அளித்தலும் ஊக்குவித்தலும்.
- முரண்பாடுகளினால் சிக்கலடைந்துள்ள சம்பளக் கட்டமைப்புக்கள் குறித்து ஆராய்ந்து கல்விமான்கள் உள்ளிட்ட துறையுடன் தொடர்புடைய அனைத்து பாத்தியதையுடையவர்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் குழுவொன்றின் ஊடாக நியாயமான, சம்பள முரண்பாடுகளைக் குறைக்கும், ஊழியரை ஊக்குவிக்கும் தேசிய சம்பளக் கட்டமைப்பொன்றைத் தயாரித்தல்.
- தொழிற்சந்தையில் பிரவேசிப்பதற்கு சிரமமுள்ள அல்லது அதற்கு விருப்பம் காட்டாத பெண்கள், ஓரளவு வலதுகுறைந்த சமூகக் குழுக்களை அவர்களின் விருப்பின் அடிப்படையில் உற்பத்திச் செயன்முறையுடன் தொடர்புபடுவதற்குத் தேவையான வாய்ப்புக்களை விஸ்தரித்தல்.
- தரவுப் பகுப்பாய்வின் மூலம் பொதுமக்களின் வேலைசெய்வதற்கான காலத்தை படிமுறையாகக் குறைத்தலும் வீட்டிலிருந்தே வேலைசெய்யக்கூடிய வாய்ப்புக்களை உருவாக்கிக் கொடுப்பதன் ஊடாக எஞ்சும் காலத்தை வேறு சமூக, கலாசார மற்றும் பொது வேலைகளுக்கு ஈடுபடுத்துவதற்கு வாய்ப்பளித்தல்.

- தகைமைகள், திறமைகள், திறன்களை அடிப்படையாகக்கொண்டு அரச கூட்டுத்தாபனங்கள், கூட்டிணைக்கப்பட்ட நிறுவனங்கள், ஏனைய அரசதுறை நிறுவனங்களுக்காக அரசியல் தலையீடுகள் அற்றதாக ஊழியர்களை ஆட்சேர்ப்புசெய்யும் கொள்கையொன்றை அமுல்படுத்துதல்.
- தொழில்நுட்ப முன்னேற்றத்துடன் பல்வேறு திறன்கள் (multi skilled) மீது கூடிய கேள்வி அதிகரிக்கும் உலக தொழில் வாய்ப்புகளுக்காக வழிகாட்டலும் தேவைப்படும் கல்வி மற்றும் திறன்களை வளர்ப்பதற்குத் தேவையான தலையீட்டை பாடசாலைக் கல்வியிலிருந்தே அமுல்படுத்துதலும் சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட தொழிற்பயிற்சியொன்றை வழங்குதலும்.
- மத்திய கிழக்கு நாடுகளுக்கு வேலை நாடிச் செல்லும் பயிற்றப்படாத உழைப்பாளர்களுக்குப் பதிலாக திறன்கள் நிரம்பிய, பயிற்றப்பட்ட உழைப்பாளர்களை அனுப்பிவைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளையும் அரச தலையீடுகளையும் மேற்கொள்ளல்.
- வேலைவாய்ப்புகளுக்குத் தேர்ந்தெடுக்கும்போது பாரபட்சம் காட்டாதிருக்கும், அனைவருக்கும் சம வாய்ப்பளிக்கும் கொள்கையைப் பின்பற்றுதல்.
- சிறப்பான காரணங்களுக்காக இன்னும் உழைப்பாளர் சேனைக்குள் உள்வாங்கப்பட முடியாமல் போன அனைவருக்கும் அடிப்படைத் தேவைப்பாடுகளை நிறைவேற்றிக்கொள்வதற்கு தேவையான கொடுப்பனவொன்றை வழங்குதல்.
- உழைப்பை வினைத்திறனான விதத்தில் பயன்படுத்தக்கூடிய விதத்தில் காணப்படும் அனைத்து சட்டதிட்டங்களையும் சட்டங்களையும் நிகழ்நிலைப்படுத்தலும் புதிய சட்டங்களை அறிமுகப்படுத்தலும்.
- தனியார்துறையின் அனைத்துப் படிநிலைகளிலும் உழைப்பாளர்களை உள்ளடக்கக்கூடிய விதத்தில் சுகாதாரம் / ஆயுள் காப்புறுதித் திட்டமொன்றை அறிமுகப்படுத்தல்.
- அனைத்து உழைப்பாளர்களும் உள்ளடங்கும் சமூகப் பாதுகாப்பு நிதியமொன்றை நிறுவுதல்.
- தற்போது காணப்படும் ஓய்வூதியத் திட்டங்களில் காணப்படும் முரண்பாடுகளை நீக்குதலும் புதிய சட்டங்களை அறிமுகப்படுத்தலும்.
- வெளிநாட்டு வேலைவாய்ப்புகளில் ஈடுபட்டு மீண்டும் எமது நாட்டுக்கு வருகைதரும், அவர்கள் உழைக்கும் பணத்தை உரிய முறையில் முகாமைசெய்வதற்கு அவர்களின் பங்களிப்புடன் வேறொரு வீடமைப்புத் திட்டம் அறிமுகப்படுத்தப்படும்.
- வெளிநாட்டு உழைப்பாளர்கள் இலங்கைக்கு பணம் அனுப்பும்போது அறவிடப்படும் அனைத்து வரிகளையும் நீக்கி ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளை வழங்குதல்.
- ஐந்து வருடங்களுக்குக் கூடுதலான காலமாக வெளிநாட்டு சேவையில் ஈடுபட்டு மீண்டும் நிரந்தர வதிவுக்கு இலங்கை திரும்புவோர் வாகனமொன்றைக் கொள்வனவுசெய்யும்போது தீர்வை வரி நிவாரணமொன்றை வழங்குதல்.
- வெளிநாட்டு உழைப்பாளர்கள் சம்பாதிக்கும் பணத்தை முதலீடுசெய்வதற்கு விசேட நன்மைகளுடன்கூடிய முதலீட்டுத் திட்டங்களை முன்மொழிதலும் தொழில்முயற்சிகளை ஆரம்பிப்பதற்கு நிதி வசதி அளித்தலும்.

# விவசாயம்

## நிறைவான விவசாய வாழ்வு – பேண்தகு விவசாயம்

நீர்வள நாகரிகத்தை அடிப்படையாகக் கொண்டு கட்டியமைக்கப்பட்ட புராதன இலங்கை உணவில் தன்னிறைவடைந்து கீழ்த்திசையின் தானியக் களஞ்சியமென உலகம் பூராகவும் பிரசித்தம் பெற்று இருந்தது, விவசாயம் காரணமாகவே. உயர் நீர்ப்பாசன தொழில்நுட்பம் கொண்ட குளங்களைச் சூழ கட்டியெழுப்பப்பட்ட வாழ்க்கை முறையும் சிறப்பான கலாசாரம் ஒன்றை தோற்றுவிக்க தூண்டுகோலாக அமைந்தது. எனினும், இலங்கையின் இன்றைய விவசாயத்துறையானது அதன் முக்கிய நோக்கங்களை அடைந்துகொள்வதற்கும் அக்கைத்தொழிலில் ஈடுபடும் மக்களின் வாழ்நிலையை சிறந்ததோர் நிலைக்குக் கொண்டுவருவதற்கும் துணியவில்லை.

இலங்கை இன்னும் ஒரு விவசாய நாடு என குறிப்பிடப்படுகின்றபோதும் நாட்டின் உணவுத் தேவையினை நிறைவேற்றிக்கொள்ள வருடம் ஒன்றிற்கு 1.8 பில்லியன் டொலர் அதாவது மொத்த இறக்குமதிச் செலவில் சுமார் 10% செலவாகின்றது. இறக்குமதி செய்யப்படும் சில உணவு வகைகளை (மரக்கறி வகை (வருடாந்த செலவு 368 மில்லியன் டொலர்), பாலுணவு (வருடாந்த செலவு 315 மில்லியன் டொலர் என்பவற்றை) உள்;ரில் உற்பத்தி செய்யக்கூடியவையாக இருப்பதானது விவசாயத்தின் செயற்திறன் அற்ற தன்மையைச் சுட்டிக்காட்டுகின்றது.

பல ஆண்டுகளாக மொத்த தேசிய உற்பத்திக்கு விவசாயத் துறையின் பங்களிப்பு மிக துரிதமாக வீழ்ச்சியடைந்து வருகின்றது. 1977 ஆம் ஆண்டில் இது 31மூ வீதமாக இருந்ததுடன் 2017 ஆம் ஆண்டாகும்போது அது 7.2% வீதம் வரை வீழ்ச்சியடைந்து வருகின்றது. 1977 ஆம் ஆண்டில் விவசாயம் மொத்த ஏற்றுமதி வருமானத்தில் 74% வீதமாக இருந்ததுடன் அது 2017 ஆம் ஆண்டில் 15% வீதம் வரை வீழ்ச்சியடைந்துள்ளது. நாட்டில் உழைப்பாளர் சேனையில் 28.4% வீதமானோர் விவசாயத் துறையில் ஈடுபட்டு வருகின்றபோதும், அச்சேவையில் ஈடுபடுபவதன் மூலம் நாட்டின் மொத்த தேசிய உற்பத்திக்கான பங்களிப்பு சுமார் 7% வீதம் மட்டுமே என்ற வீதத்தில் இருப்பதிலிருந்து அத்துறையில் ஏற்பட்டுள்ள பலவீனமாக நிலையை அவதானிக்கலாம். இந்த குறைந்த விளைவுப்பெருக்கம் காரணமாக இத்துறையில் சேவையில் ஈடுபட்டிருக்கும் மக்களின் வாழ்நிலை மிகவும் தாழ்ந்த நிலையை அடைந்துள்ளது. கிராமிய வறுமைநிலை நோக்கும்போது பெரும்பான்மையானவர்கள் விவசாயிகளாக இருப்பதிலிருந்து இதனைத் தெளிவாக உணரலாம்.

### நோக்கங்கள்

- தரமான உணவு உற்பத்தியொன்றின் மூலம் ஆரோக்கியமான ஒரு சமூகம்.
- உணவு பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்ட ஒரு நாடு.
- விவசாய உற்பத்திகளுக்கு நியாய விலையும், நிலையான சந்தையொன்றின் மூலம் விவசாயிகளுக்கு உயர் வாழ்க்கைத் தரமும்.
- வாடிக்கையாளரின் கைக்கு நிலையான விலையில் விவசாய உற்பத்திகள்.
- வினைத்திறனும் பயன்கூர் தன்மையையும் கொண்ட விவசாயத்தின் மூலம் மொத்த தேசிய உற்பத்திக்கு உயர் பங்களிப்பு.
- மக்களுக்கு நச்சுக் கலப்பற்ற ஓர் உணவு வேளை.

# கொள்கைப் பணிச்சட்டகம்

விவசாய மற்றும் கால்நடை வளர்ப்புத் துறையில் பேண்தகு அபிவிருத்தியொன்றுக்காக காணி, நீர், கால்நடைவளர்ப்பு என்பவற்றை சிறப்பாகவும் சுற்றாடல் நட்புறவானதாகவும் பயன்படுத்தி போதுமானளவிலும், பண்புத் தரத்துடனும், வாடிக்கையாளர்களுக்கு சுமக்கக்கூடிய விலையிலும் உள்;ர் உணவுத் தேவையை நிறைவேற்றுவதும் பிழைப்பூதிய விவசாயத்தில் ஈடுபட்டிருக்கும் விவசாயிகளை அதனூடாக விடுவித்து வர்த்தக மற்றும் பூரண வர்த்தக விவசாயம் ஒன்றாக மாற்றியமைப்பதற்கும் அவசியமான விவசாய கொள்கைப் பணிச்சட்டமொன்றுக்காக பின்வரும் முக்கிய செயற்பாடுகள் பின்பற்றப்படுகின்றன:-

# செயற்பாடுகள்

- ஐந்தாண்டு காலத்துள் இணைந்த திட்டத்தை அமுல்படுத்துவதன் மூலம் விவசாயத்துறையில் ஒரு பசுமை மாற்றம் (Green revolution).
- ஓராண்டு காலத்துள் செய்மதித் தொழில்நுட்பத்தை உபயோகித்து இலங்கையின் அனைத்து விவசாய நிலங்களையும் வகைப்படுத்தலும் வரைபடமாக்கலும்.
- ஒவ்வொரு போகத்திற்கும் அந்தந்த விவசாயி பயிரிட்ட பயிர், அதன் வகை, நிலத்தின் விஸ்தீரணம், அதற்கான செலவு, எதிர்பார்க்கப்படும் சந்தை விலை முதலியன அடங்கிய தேசிய ஒருங்கிணைந்த விவசாயத் திட்டம்.
- ஒன்றிணைந்த விவசாயத் திட்டத்திற்கமைய செயலாற்றப்படுவதை உறுதிசெய்வதற்காக விவசாயத் திணைக்களம், மாகாண விவசாயத் திணைக்களம், நீர்ப்பாசனத் திணைக்களம், காணி அபிவிருத்தித் திணைக்களம், கமநல சேவைகள் திணைக்களம் ஆகிய திணைக்களங்கள் அடங்கிய ஒன்றிணைந்த தேசிய கண்காணிப்புக் குழுவொன்று.
- ஒன்றிணைந்த தேசிய கண்காணிப்புக் குழு, மாவட்டக் கண்காணிப்புக் குழு, பிரதேச கண்காணிப்புக் குழு, வட்டாரக் கண்காணிப்புக் குழு, விவசாய அமைப்புக்களின் கண்காணிப்புக் குழு.
- உற்பத்தி அடிப்படையிலான உர மானியத் திட்டம்.
- ஒவ்வொரு கமநல சேவைகள் அலகிலும் அரசாங்கமும் தனியார் இயந்திர உபகரண உரிமையாளர்கள் ஒன்றிணைந்து முன்னெடுக்கும் ஓர் இயந்திர உபகரணங்களின் குழுமம்.
- அனைத்து விவசாய இயந்திர உபகரணங்களுக்கும் வரி விடுதலை.
- ஆகக்கூடியது ஐந்து இலட்சம் ரூபா என்ற அளவில் 4 சதவீத வட்டி வீதத்தின் கீழ் 5 வருட காலத்திற்கு விவசாயக் கடனையும் ஏனைய நிதியியல் சேவைகளையும் வசதிகளையும் வழங்குவதற்கானதோர் இலங்கை விவசாய வங்கி.
- முதல் 05 ஆண்டு காலத்தினுள் ஒன்றிணைந்த விவசாய நிலங்களை ஒழுங்கமைத்தலும் அறுவடைக்கான செலவில் 50 சதவீதத்தை அரசாங்கம் பொறுப்பேற்றலும்.
- உள்ளூர் மற்றும் வெளிநாட்டு விவசாய உழைப்பாளர் சந்தையை இலக்காகக் கொண்டு 100,000 விவசாயத் தொழில் முனைவோர்களுக்கு பயிற்சியளிப்பதற்கான நான்காண்டுத் திட்டம்.
- சம்பா நெல் ஒரு கிலோவிற்கு 60 ரூபா விலையும் நாட்டரிசி நெல் ஒரு கிலோவிற்கு 50 ரூபாவும் என்ற உத்தரவாத விலை.
- ஓர் ஏக்கரிலிருந்து 120 பூசலைத் தாண்டும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் அதிகரிக்கின்ற ஒவ்வொரு நெல் பூசலுக்கும் 1,000 ரூபா ஊக்குவிப்புக் கொடுப்பனவொன்று.
- முதல் 03 ஆண்டு காலத்துள் விவசாய ஏற்றுமதி வருமானத்தை 50% ஐ விட அதிகரிக்கச் செய்வதற்காக ஏற்றுமதி விவசாய உற்பத்தி பெறுமதி சேர்க்கும் 50 கைத்தொழில்கள்.

- 03 ஆண்டு காலத்துள் பலசரக்கு வகை, மலர்கள், வெற்றிலை, அலங்காரச் செடிகள், பழங்கள் முதலான உற்பத்திகளை அடிப்படையாகக் கொண்ட 200 விவசாய ஏற்றுமதிக் கிராமங்கள்.
- உள்ளூர் மற்றும் வெளிநாட்டுச் சந்தையை இலக்காகக்கொண்டு ஆண்டொன்றிற்கு 10,000 மில்லியன் ரூபா வருமானம் பெறக்கூடிய வகையில் 1,000 சேதன விவசாய உற்பத்தி அலகுகள்.
- உலக சந்தையை இலக்காகக்கொண்டு பெறுமதிசேர்க்கப்பட்ட விவசாய ஏற்றுமதி உற்பத்திகளை சந்தைப்படுத்துவதற்கான ஓர் ஊக்குவிப்புத் திட்டம்.
- விவசாய உணவுகளின் இறக்குமதிச் செலவினை 50மூ இனால் குறைப்பதற்கு உள்;ரில் உற்பத்தி செய்யக்கூடிய மாமிசம், முட்டை, மீன், கீரை வகைகள், தானிய வகைகள், மரக்கறி வகைகள், பழ வகைகள் என்பவற்றின் உற்பத்தி ஊக்குவிப்புக்கான மூன்றாண்டுத் திட்டம்.
- நவீன தொழில்நுட்பத்தைக் கொண்ட அரிசி ஆலைகளைக் கொள்வனவுசெய்ய சிறிய மற்றும் நடுத்தர அளவான அரிசி ஆலை உரிமையாளர்களுக்கு சலுகை வட்டி அடிப்படையிலான வங்கிக் கடன்.
- பாதுகாக்கப்பட்ட வீடுகளில் பயிர் வகைகளை ஊக்குவிப்பதற்கான வட்டியில்லாக் கடன் திட்டம்.
- விவசாய ஆராய்ச்சி நிலையங்களுக்கான வருடாந்த செயலாற்றுகை இலக்குகள்.
- ஈர வலயத்தை சார்ந்த சேதன மற்றும் மூலிகை அரிசி உற்பத்திற்கு 20,000 ஏக்கர்கள்.
- ஈர வலயம் சார்ந்த மூலிகைச் செடிகளைப் பயிரிடுவதற்கு 3,000 ஏக்கர்கள்.
- முறையானதும் பயனுறுதிவாய்ந்ததுமான விவசாய ஆராய்ச்சிகளுக்கு பல்கலைக்கழகங்கள், விவசாயக் கல்லூரிகள், விவசாய இயந்திர உபகரண மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்கள், விவசாய ஆராய்ச்சி நிலையங்கள் என்பவற்றை ஒன்றிணைந்த ஒரு தேசிய வேலைத்திட்டம்.
- விவசாய அமைப்புக்களை சட்ட ரீதியான அலகுகளாக ஏற்றங்கீகரிப்பதற்கான ஒரு விசேட பாராளுமன்றச் சட்டம்.
- விவசாய மரபணு வளங்களுக்கு ஆக்கவுரிமை உரிமங்களைப் பெற்றுக்கொள்வதை முறைவலுப்படுத்துவதற்கான ஒரு வேலைத்திட்டம்.
- 15 புதிய விவசாயப் பொருளாதார நிலையங்கள்.
- விவசாயிகளுக்கு காலநிலை எதிர்வுகூறல்களைக் காட்டக்கூடிய நடமாடும் பிரயோகங்கள் அடங்கிய ஒரு மென்பொருள்.

## விதைகளும் நடுகைப் பொருள்களும்

- 05 ஆண்டு காலத்தினுள் உள்ளூர் விதைத் தேவைப்பாட்டில் 20 சதவீதத்தை அரசாங்க விதைப் பண்ணைகளிலிருந்தும் 40 சதவீதத்தை தெரிவுசெய்யப்பட்ட விதை விவசாய கிராமங்களிலிருந்தும் எஞ்சிய 40 சதவீதத்தை உள்ளூர் தனியார் விதை உற்பத்தியாளர்களிடமிருந்தும் பெற்றுக்கொள்வதற்கு அரசாங்கத்தின் விதைப் பண்ணைகளையும் விவசாயக் கிராமங்களையும் நவீனமயப்படுத்தி விஸ்தரித்தல்.
- விவசாயிக்கு சலுகை விலையில் தரமான விதைகளை தேவையான நேரத்தில் பெற்றுக்கொள்வதற்கான முறைசார்ந்த விற்பனை அலகுகள்.
- உள்ளூர் மற்றும் வெளிநாட்டுச் சந்தைகளை இலக்காகக்கொண்டு கலப்பின விதைகளை உற்பத்திசெய்வதற்கு அரசாங்க மற்றும் தனியார்துறை ஒருங்கிணைந்த விதை ஆராய்ச்சி நிலையமொன்றும் சமுதாய விவசாய உற்பத்தி அலகுகளும்.
- பாரம்பரிய விதை பேணல் நிலையங்களின் வலையமைப்பொன்று.

## மண் பேணல்

- மிகுதியான இரசாயன உரப் பாவனையும் பிழையான பிரயோகங்களும் காரணமாக அழிவடைந்த விவசாய மண்ணை மீண்டும் வளமான மண்ணாக மாற்றுவதற்கு விவசாய காலநிலை வலயங்களின் அனைத்து விவசாய நிலங்களையும் மண் பரிசோதனைக்கு உட்படுத்துவதற்கான விசேட அலகொன்றையும் அத்தகைய பரிசோதனையின் பெறுபேறுகளை அடிப்படையாகக்கொண்டு சேதன மற்றும் இரசாயன உரங்களின் விகிதங்களையும் சிபார்சுசெய்தல்.
- ஒவ்வோர் உள்ளூராட்சி அலகுக்கும் கூட்டெரு உற்பத்தி அலகொன்று.
- மண் பேணல் சட்டத்தைத் திருத்துதலும் சட்டங்களையும் ஒழுங்குவிதிகளையும் ஆக்குவதன் மூலம் தேசிய மண் பேணல் திட்டமொன்று.
- விவசாய ஆலோசனை அலுவலர்களுக்கு மண் பேணல் மேற்பார்வைக்கு அதிகாரமளிக்கும் சட்டதிட்டங்கள்.
- அந்தந்த விவசாய வலயங்களுக்கு விசேடமான மண் பேணல் திட்டமொன்று.
- எப்பாவல பொஸ்பேற் சுரங்கத்தைப் பயன்படுத்தி உயர் தரம் வாய்ந்த உர உற்பத்திச்சாலையொன்று.

## மரக் கன்றுகள் பேணல்

- சிறந்த விவசாய நடைமுறைகளையும் (GAP), ஒன்றிணைந்த பீடைக் கட்டுப்பாட்டு முறைகளையும் (ஐஆ) பிரபல்யப்படுத்துவதற்கான ஒரு தேசிய பட்டயம்.
- தொழில்நுட்ப சிபார்சுகளின் அடிப்படையில் மட்டும் பீடைக் கொல்லிகளை விற்பனை செய்வதற்கும் பயன்படுத்துவதற்குமான சட்டங்கள்.
- விற்பனைக்கு வைக்கப்பட்டிருக்கும் உணவுப் பொருள்களில் இரசாயன எச்சங்களை அளந்து பார்த்தல் (MRL), பொருத்தமற்ற கையிருப்புக்களை அகற்றுதல் என்பவற்றுக்கான அதிகாரம் பிரதேச சுகாதார அதிகாரிகளிடம்.
- மந்தி, மயில், பன்றி முதலிய பீடைகளைக் கட்டுப்படுத்துவதற்கான குறுகிய கால மற்றும் நீண்டகாலத் திட்டங்கள்.
- அத்தகைய பீடைகளின் இருப்புப் பிரதேசங்களைப் பேணி உணவையும் நீரையும் கிடைக்கச்செய்வதற்கான ஒரு திட்டம்.

## விவசாய விரிவாக்கல் சேவை

- விவசாய விரிவாக்கல் சேவையை முறையாக நிறுவுவதற்கு 2,000 விவசாய டிப்ளோமாதாரிகளும் விவசாயப் பட்டதாரிகளும்.
- விவசாய உற்பத்தி அலகு மற்றும் விவசாயக் குழு விரிவாக்குநர் செயலாற்றுகை இலக்குகள்.
- விவசாய விரிவாக்குநர்களின் தொழில்சார் நிபுணத்துவத்தை அதிகரிப்பதற்காக வருடாந்த இயல்திறன் அபிவிருத்திப் பயிற்சி.

## நீர் முகாமைத்துவம்

- இரு போகங்களுக்குத் தேவையான நீரைப் போதியளவில் வழங்குவதற்காக இதுவரை புனரமைக்கப்படாத பாரிய நீர்ப்பாசனத் தொகுதியை விரைவாக திருத்துதல்.

- 60 பாகையை விடக் கூடிய சரிவுகளும் அடையாளம் காணப்பட்ட சுற்றாடல் கூருணர்ச்சிமிக்க பகுதிகளும் தொடர்ந்தும் சன நெரிசல் மிக்க பிரதேசங்களாக மாறுவதனைத் தடுத்து வனக் காப்புகளாக மாற்றுதல்.
- 03 ஆண்டு காலத்தினுள் எல்லங்கா தொகுதிகளையும் சிறிய 10,000 குளங்களையும் புனரமைத்தல்.
- 05 ஆண்டு காலத்தினுள் மரக்கறி மற்றும் பழச்செய்கை பண்ணப்படும் நிலத்திலிருந்து 90மூ ஐயேனும் நுண் நீர்வழங்கல் தொகுதிகள் மூலம் உள்ளடக்குதல்.
- அனைத்து நீரேந்து பிரதேசங்களையும் பேணிப் பராமரித்தல்.
- நிலக்கீழ் நீர் நுகர்வை முறைவலுப்படுத்துவதற்கும் நிலக்கீழ் நீர் மட்டத்தை மீ;ட்டம் செய்வதற்குமான ஒரு வேலைத்திட்டம்.

## விவசாயக் காணிகள்

- பல்தேசிய கம்பனிகளுக்கு வழங்கப்பட்டுள்ள விவசாயக் காணிகளை மீண்டும் கையகப்படுத்தி விவசாயிகளுக்கு வழங்குதல்.
- நிலத்தின் உரித்தைக் கைமாற்றாமல் நவீன தொழில்நுட்பத்தினையும் இயந்திரங்களையும் உபயோகிப்பதை வசதிப்படுத்துவதற்காக ஒன்றிணைந்த விவசாய நிலங்களை ஏற்படுத்துதல்.
- ஒன்றிணைந்த விவசாய நிலங்களுக்கு அருகில் அரசாங்க செலவில் தொடர் மாடி வீடுகளை அமைத்தல்.
- 11 சதவீதமான விவசாய பயிர்ச்செய்கை நிலங்களின் அளவு தொடர்ந்தும் குறைவடைவதை தடுத்து நிலையானதாகப் பேணுதல்.

## காணி உரித்தும் காணிக் கையாளலும்

- காணிக் கையாளல் பௌதிகத் திட்டமொன்றைத் தயாரிப்பதற்கு நடவடிக்கையெடுத்தல்.
- காணிகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திரங்கள் மற்றும் அளிப்புப் பத்திரங்களின் எல்லா நிபந்தனைகளையும் நீக்கி கட்டற்ற உறுதிகளாக மாற்ற நடவடிக்கை எடுத்தல்.
- காணி உரித்து உறுதிகளை வழங்குவதிலுள்ள சிக்கல்களை நீக்குதல்.
- வெளிநாட்டவர்களுக்கு காணிகளை விற்பதைத் தடைசெய்தல்.
- காணியற்ற மக்களுக்கு 100,000 காணித்துண்டுகளைப் பகிர்ந்தளிக்கும் இரண்டாண்டு கால திட்டம்.
- ஒரு ஏக்கரை விட அதிகமாகவுள்ள பயிரிடப்படாத காணிகளுக்கு பெயரளவான குத்தகையை வழங்கி அவற்றைக் கையகப்படுத்தி சமூதாய விவசாயக் கம்பனிகளின் கீழ் பயிர்ச்செய்கைக்கு உட்படுத்தல்.

# கால்நடை வளர்ப்பு அபிவிருத்தி
## (Livestock Development)

கால்நடைவளர்ப்பு அபிவிருத்தித் துறையானது இலங்கையின் விவசாயப் பொருளாதாரத்தில் மிக முக்கியமான ஒரு கூறாகும். விவசாயப் பயிர்களுக்கும் கால்நடை வளர்ப்புக்கும் இடையே

நெருங்கிய ஒரு தொடர்பு காணப்படுகிறது. இத்தொடர்பை சிறந்த முறையில் பேணிச் செல்வதன் ஊடாக விவசாயப் பயிர்ச்செய்கை மற்றும் கால்நடை வளர்ப்புத் துறையின் விளைவுப் பெருக்கத்தை முன்னேற்றிக்கொள்ள முடியும் என்பதுடன் மொத்தத் தேசிய வருமானத்திற்கான பங்களிப்பையும் அதிகரித்துக்கொள்ளலாம். இலங்கையின் தலா வருமானம் படிப்படியாக அதிகரித்து வருவதுடன், அதற்கு இணையாக தலா விலங்கு உற்பத்திகளின் நுகர்வும் அதிகரித்து வருகின்றது. கால்நடை வளர்ப்புத் துறையின் முன்னேற்றத்தை காத்து மக்களுக்கு அவசியமான விலங்கு உற்பத்திகளை பண்புத் தரமுள்ளதாகவும் போதியளவிலும் வழங்குவதற்கு செயலாற்ற எதிர்பார்க்கும் விலங்கு வளர்ப்புக் கொள்கையை இத்துடன் சமர்ப்பிக்கிறோம்.

## விலங்கு இனப்பெருக்கம்

இலங்கையில் நிலவும் காலநிலை மற்றும் ஏனைய சூழற் காரணிகள், கால்நடை வளர்ப்பிற்காக ஈடுபடுத்திக்கொள்ளக்கூடிய ஏனைய பௌதிக வளங்கள், விலங்கு உணவுகளுக்காக பயன்படுத்தக்கூடிய மூலப்பொருள்களின் பண்புத்தரம், போதியதாந்தன்மை என்பவற்றை கருத்திற்கொள்ளும்போது இலங்கைக்கு மிகவும் உகந்தது உயர் உற்பத்தி இயலளவு கொண்ட, தலைமையுரிமை ரீதியாக முன்னேறிய உயர் தரத்திலான விலங்குகள் அல்ல. பாதகமான சூழல் நிலைமைகளுக்கு நன்கு தாக்குப் பிடிக்கக்கூடியதும் உள்;ர் விலங்குகளை அடிப்படையாகக் கொண்ட இனப்பெருக்க கொள்கை அடிப்படையில் முன்னேற்றியதுமான கலப்பின விலங்குகளைப் பிரபல்யப்படுத்துவது அதற்கு மிகவும் உகந்ததாகும்.

- தேசிய விலங்கு இனப்பெருக்கக் குழுவை (NABCO) மீள் உருவாக்கல்.
- அரசாங்கம் வசமுள்ள விலங்கு இனப்பெருக்கப் பண்ணைகளை விவசாயிகளுக்கு இனப்பெருக்க விலங்குகளை வழங்கும் நிலையங்களாக மாற்றியமைத்தல்.
- விலங்கு இனப்பெருக்கத் துறையில் முதலீடுசெய்வதற்கு தனியார்துறையை ஊக்குவித்தல்.
- இலங்கைக்குப் பொருத்தமான நவீன இனப்பெருக்க முறையைப் பிரபல்யப்படுத்தல்.
- இனப்பெருக்கப் பண்ணைகளையும் உயர்தரம் வாய்ந்த தாய், தந்தை விலங்குகளையும் பேணிப் பராமரிப்பதில் தனியார் துறையின் பங்களிப்பு.

## விலங்குப் போசாக்கு

- விவசாயத் திணைக்களத்துடன் இணைந்து உள்;ர் உணவு உற்பத்திக்கு அவசியமான சோளம், அவரை தேவையை இரண்டாண்டு காலத்தினுள் நூற்றுக்கு நூறு வீதம் உள்;ரில் உற்பத்தி செய்தல்.
- விலங்கு உணவுகளுக்கு பயன்படுத்தக்கூடிய விவசாய பக்கவிளைவுகளை மிகவும் முறையாகவும் பயனுறுதிவாய்ந்த விதத்திலும் ஈடுபடுத்திக்கொள்வதனை ஊக்குவித்தல்.
- விலங்குணவு மூலக்கூறுகள், கனிப்பொருள் கலவைகள் என்பவற்றின் இறக்குமதியை மட்டுப்படுத்தி அவற்றை உள்ளூரில் உற்பத்தி செய்வதனை ஊக்குவிப்பதற்கான உற்பத்திக் கைத்தொழில்களுக்கு தொழில்நுட்ப உதவியினையும் வரிச் சலுகையினையும் வழங்குதல்.
- உயர் தரத்திலான காளைகளின் உணவுத் தேவைக்கு வைக்கோல், புல் இனங்கள், சைலேஜ் உற்பத்தியினை ஊக்குவிப்பதற்கான தொழில்நுட்ப உதவியும் கடன் வசதியும்.
- மிகையான விலங்கு உணவுப் பொருள்களைப் பேணிப் பராமரிப்பதற்கான நவீன தொழில்நுட்ப முறைகள்.
- மூன்றாண்டு காலத்தினுள் உலர் வலயத்தில் 15 முன்னேறிய புல் நிலங்கள் விவசாயிகளிடம்.

## விலங்குச் சுகாதாரம்

பிராந்தியத்தின் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும்போது பௌதிக ரீதியான இடஅமைவு காரணமாக ஆரோக்கியமான விலங்குக் குடித்தொகையொன்று இலங்கையில் காணப்படுகின்றது. இருப்பினும், புதிய நோய்கள் இலங்கைக்குள் ஊடுருவும் ஆபத்தைப் புறக்கணித்துவிட முடியாது.

- பிரதேசங்களுக்குரிய சிறப்பான தொழில்நுட்பச் சேவைகளை வழங்குவதற்கும் தொற்று நோய் நிலைமைகளுக்கு முகங்கொடுப்பதற்கும் 25 விலங்கு ஆராய்ச்சி நிலையங்களை அபிவிருத்திசெய்தல்.
- விலங்கு மருத்துவ சேவை மற்றும் விரிவாக்கல் சேவையின் வினைத்திறனை அதிகரிப்பதற்காக நவீன தொழில்நுட்பம்.
- மருந்தூசிகள், உயிரியல் விஞ்ஞான பதார்த்தங்கள் என்பவற்றை உள்;ரில் உற்பத்தி செய்வதற்கான ஒரு வேலைத்திட்டம்.
- விலங்குகளிலிருந்து மனிதர்களுக்கு தொற்றும் நோய்களற்ற விலங்குச் சாகியம் ஒன்றுக்கான சிபாரிசுசெய்யப்பட்ட ஒரு முறைமை.
- விமானநிலையங்கள் மற்றும் துறைமுகங்களை அண்டியுள்ள விலங்குத் தொற்றுத்தடை நீக்கங்களுக்குத் தேவையான நவீன தொழில்நுட்ப வசதிகளை வழங்குதல்.

## விலங்கு உற்பத்திகள் சந்தைப்படுத்தல்

- விவசாயிகளினால் உற்பத்திசெய்யப்படுகின்ற மொத்த பால் அளவினையும் கொள்வனவு செய்வதற்கும் குளிரூட்டுவதற்கும் அவசியமான வசதிகள் இலங்கை பூராகவும் நிறுவப்படும்.
- பாலுக்கு பண்புத்தரத்தின் அடிப்படையிலான விலை முறையொன்று ஏற்படுத்தப்படும். ஒவ்வொரு பால் உற்பத்தியாளரும் வழங்கும் பாலின் பண்புத்தரத்தின் அடிப்படையில் 80 ரூபா வரையான விலையில் பால் விற்பனைசெய்வதற்கான சந்தர்ப்பம்.
- பால் சேகரிப்பை காலையிலும் மாலையிலும் மேற்கொள்வதற்கான முறையான ஒரு வேலைத்திட்டம்.
- பால்மா இறக்குமதியினை ஒழுங்குபடுத்துவதுடன், நாட்டுக்கு அவசியமான பால்மாவினை உயர்ந்தபட்சம் உள்;ரில் உற்பத்திசெய்யப்படும் பால் மூலம் உற்பத்திசெய்தல்
- கிழக்கு மாகாணம் மற்றும் பொலனறுவை பிரதேசத்தினை அண்டிய பகுதியில் பால்மா உற்பத்தித் தொழிற்சாலை ஒன்றை நிறுவுதல்.
- பாரியளவான விலங்குப் பண்ணைகளுக்கு கவர்ச்சிகரமான வரிச் சலுகையையும் தொழில்நுட்ப அறிவையும் கடன் வசதிகளையும் வழங்குதல்.
- விவசாயியைப் பாதுகாப்பதற்காக பால், முட்டை, மாமிசம் என்பவற்றின் விலைகளை ஒழுங்குபடுத்துவதற்கான ஒரு முறைமை.
- பால், மாமிசம், முட்டை போன்ற விலங்கு உற்பத்திகளுக்கு பெறுமதிசேர்க்கும் கைத்தொழில்களுக்கு அவசியமான தொழில்நுட்பத்தையும் சலுகைக் கடனையும் சந்தை வாய்ப்புகளையும் ஏற்படுத்திக் கொடுத்தல்.
- ஏற்றுமதிச் சந்தையை இலக்காக்கொண்ட விலங்கு உற்பத்திகளுக்கு நீண்டகால வரிச் சலுகையையும் நிதி வசதிகளையும் வழங்குதல்.

- பால் கறவை விவசாயிகளையும், கோழிப் பண்ணை விவசாயிகளையும், ஏனைய விலங்கு வளர்ப்பு விவசாயிகளையும் ஒருங்கிணைப்பதற்கும் அவர்களுக்கு புதிய தொழில்நுட்பத்தையும் மூலதன வசதியையும் வழங்குவதற்கும் விவசாய சங்கங்களை.·. உற்பத்தி அலகுகளை உருவாக்குதல்.

## கால்நடைவளர்ப்பு ஆலோசனைச் சேவை

மேம்பட்ட தொழில்நுட்பம் கால்நடை விவசாயியின் கைகளை அடைவது மந்தகதியில் இடம்பெறுவதுடன், சிலவேளை அது அறவே இடம்பெறுவதில்லை. இதனைத் தவிர்ப்பதற்கான ஒரு முறை, தற்போதைய கால்நடை விரிவாக்கலை இதனை விட வினைத்திறன் வாய்ந்ததாகவும் தொழில்சார் மட்ட சேவையாகவும் மாற்றியமைப்பதாகும். இதற்குத் தேவையான உழைப்பாளர் சேனையை தாராளமாக வழங்க செயலாற்றப்படுவதுடன், அவர்களுக்குத் தேவையான வசதி, தொழில்நுட்பம் மற்றும் ஏனைய பௌதிக வளங்களை குறைவின்றி வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். மேற்குறிப்பிட்ட முக்கிய பிரிவுகளுக்கு மேலதிகமாக பின்வரும் துறைகள் மீதும் கவனம் செலுத்தப்படுகின்றது:-

- 1,000 கால்நடை மருத்துவர்களும் கால்நடை உற்பத்தி உதவியாளர்களும் விரிவாக்கல் அலுவலர்களும் மூன்று ஆண்டுகளில் சேவைக்கு.
- சிறியளவிலும் சுதந்திர விலங்கு வளர்ப்பில் ஈடுபடும் விவசாயிக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் தங்குதடையின்றி வழங்க நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், நடுத்தர மற்றும் பாரிய அளவிலான விவசாயிகளை மென்மேலும் ஊக்குவிக்க நடவடிக்கை.
- கால்நடை வளர்ப்புத் துறையின் அபிவிருத்திக்கு மறைமுகமாக பாதிப்புச் செலுத்துகின்ற போதும் மிகவும் அத்தியவசிய நிறுவனங்களான வனசீவராசிகள்/ நீர்ப்பாசனம் / கமநல சேவைகள்/ சுற்றாடல் / கடற்றொழில்/ விவசாய/ உள்ராட்சி முதலான அரச நிறுவனங்களுக்கான ஒருங்கிணைந்த ஒரு கட்டமைப்பு.
- விலங்குகளின் நலன்புரி விடயங்களை உயர்ந்த மட்டத்தில் பேணிச் செல்வதற்குத் தேவையான சட்டதிட்டங்களை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

# கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் கைத்தொழில்

மனித வளத்தின் இயல்திறன் மற்றும் விருத்தி, ஒரு நாடு என்ற வகையில் அபிவிருத்தி செய்ய இன்றியமையாததாகும். அதற்குத் தேவையான மூளையின் செயற்பாட்டைத் தூண்டக்கூடிய இன்றியமையாத அமினோ அமிலங்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய இலகுவான வழி விலங்குப் புரதங்களை உட்கொள்வதாகும். இந்நாட்டின் விலங்குப் புரதத் தேவையின் 54% இனை மீன் மற்றும் மீன் சார்ந்த உற்பத்திக் கைத்தொழில், உணவுப் பாதுகாப்பு, போசாக்கு மற்றும் பொருளாதார அபிவிருத்தி என்ற 03 விடயங்கள் மீதும் பெரிதும் தாக்கம் செலுத்துகின்றது.

இலங்கையின் மீன்பிடி வளத்தின் அடிப்படை 517,500 சதுர கிலோ மீற்றர் பரப்பெங்கும் உள்ள புறநீங்கலான பொருளாதார வலயத்தினைக் கொண்டதாகும். அதேபோல் 21,500 சதுர கிலோ மீற்றர் உள்நாட்டு நீர்ப்பரப்பினாலும் 1,580 சதுர கிலோ மீற்றர் கடனீரேரிகளையும் ஆற்றுக் கழிமுகங்களையும் 5,200 சதுர கிலோ மீற்றர் மனிதனால் உருவாக்கப்பட்ட நீர்நிலைகளையும் கொண்டமைந்துள்ளது. முனைகள், கடனீரேரிகள், நீர்நிலைகள் மற்றும் கரையோரங்கள், நீர்நிலைகள் சார்ந்ததாக உள்ள காணிகளும் நீரகவுயிர் அபிவிருத்திக்கான

வள அடிப்படையொன்றை உருவாக்குகின்றது. இன்று இந்நாட்டில் உவர் நீர், சவர் நீர், நன்னீர் மீன்பிடி உற்பத்தி முறையே 267,980 மெற்றிக் டொன், 177,950 மெற்றிக் டொன், 66,910 மெற்றிக் டொன் என்ற அடிப்படையில் அமையும். இந்நாட்டின் இயற்கை நீரகவளமூலத்திற்கு ஒப்பீடாக இந்த உற்பத்தியானது தாழ்ந்த ஒரு பெறுமானமாகும். இலங்கையின் தனிநபர் மீன் நுகர்வு வருடாந்தம் 22-24 கிலோ கிராமிற்கு இடைப்பட்ட பெறுமானத்தைக் கொண்டுள்ளது. உலக சுகாதார அமைப்பின் சிபார்சுப்படி ஒருவர் நாளாந்தம் நுகரவேண்டிய ஆகக் குறைந்த புரதத்தின் அளவு 65 கிராம் அளவேனும் இருக்க வேண்டும். எனினும், இந்நாட்டில் 38–45 கிராம் கொண்டதாக இருப்பது, மிகவும் தாழ்ந்த பெறுமானமாகும். கடற்றொழில் மற்றும் நீரகவுயிர் வளர்ப்புத்துறை மொத்தத் தேசிய உற்பத்திக்கு அண்ணளவாக 1.4மூ பங்களிப்பை வழங்குகின்றது. இதன் மூலம் 575,000 பேருக்கு (நாட்டின் உழைப்பாளர் சேனையில் 3.7 சதவீதம்) நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படுகின்றது. 1,300 மில்லியன் அமெரிக்க டொலர் கூடிய பெறுமதி சேர்ப்புடன் இன்றைய (2017) வருடாந்த மீன் உற்பத்தி 530,000 மெற்றிக் டொன்னுக்கும் அதிகமானதாகும். நாட்டின் மொத்த மீன் நுகர்வுத் தேவையில் 65 சதவீதம் உள்நாட்டு மீன் வளங்களின் மூலமே இன்று நிறைவுசெய்யப்படுகின்றது. எஞ்சியவை இறக்குமதி செய்யப்படும் மீன் மூலம் நிறைவு செய்யப்படுகின்றது.

## இலங்கையில் மீன்பிடித்துறை எதிர்நோக்கும் பிரச்சினைகள்

- மிகுதியான வளச் சுரண்டல் (Over Exploitation), பேண்தகு விதத்தில் முகாமை செய்யாமை ஆகியன காரணமாக மீன் வளம் துரிதமாக தேய்வடைதல், சமுத்திர மாசுறல் கட்டுப்படுத்தப்படாமை.
- பின்னைய அறுவடை விரயம் (40 சதவீதத்தை தாண்டியுள்ளது)
- ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தித் துறையிலுள்ள பிரச்சினைகள்-பலவீனங்கள்.
- மீன்பிடித்துறைக்கான உட்கட்டமைப்பு வசதிகள் முன்னேற்றமடையாத மட்டத்தில் காணப்படுதல்.
- மீன்பிடித்துறை சாராத சமுத்திர வளங்கள் தொடர்பில் செலுத்தப்படும் குறைவான கவனம்.
- வெளிநாட்டு மீன்பிடியாளர்கள் சட்டவிரோதமான முறையில் எமது நாட்டின் கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைதலும் வளங்களை அழித்தலும்.
- நீரக வளமூல சூழல் வேகமாக மாசடைதல் - நீர்நிலைகளுக்கு சேதனப் பதார்த்தங்கள், வண்டல், உப்புச் சேர்தல், பொலித்தீன், விவசாய மற்றும் வேறு இரசாயனப் பதார்த்தங்கள் நீருடன் கலத்தல், சேதனமல்லாப் பதார்த்தங்கள் நீருடன் கலத்தல், ஆழமற்ற நீரின் மோசமான செயற்பாடுகளும் ஒலி மாசடைதலும், இயற்கை அனர்த்தங்கள்.
- நீரகவுயிர் வளக் கைத்தொழில் பற்றியதான எதிர்மாறான உளப்பாங்கும் இக்கைத்தொழிலின் அபிவிருத்திக்கு பாதகமான முறையில் பாதிப்புச்செலுத்தும் மத மற்றும் கலாசார நம்பிக்கைகளும்.
- இந்நாட்டில் உற்பத்தியாகும் சில உயர் தரம் வாய்ந்த உணவுசார் மற்றும் அலங்கார மீன்கள் ஆண்டு முழுவதும் தொடர்ச்சியாக வழங்கல் செய்வதன் மூலம் சந்தைக்கு விடுவிக்கக்கூடிய ஆற்றல் இல்லாதிருத்தல்.

## நோக்கங்கள்

- தனிநபர் மீன் நுகர்வை அதிகரிப்பதன் ஊடாக ஆரோக்கியமானதும் உயர் விளைவுப்பெருக்கம் கொண்ட மனித வளத்தை உருவாக்குதல்
- சமுத்திர கடற்றொழில் உற்பத்திகள், நீரகவுயிர் வளர்ப்பு மற்றும் நன்னீர் மீன் உற்பத்தி என்பவற்றை அதிகரித்தல்.
- கடற்றொழில் சார்ந்த உற்பத்திகளின் ஏற்றுமதி வருமானத்தை அதிகரிப்பதன் ஊடாக தேசிய பொருளாதாரத்திற்கு குறிப்பிடத்தக்க ஒரு பங்களிப்பை வழங்குதல்.
- நவீன தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி கடற்றொழில் வளத்தை பேண்தகு விதத்தில் முகாமைசெய்தலும் அபிவிருத்திசெய்தலும்.
- குறை பயன்பாட்டுக்கு உள்ளாகியுள்ள சமுத்திர வளங்களைக் கண்டுபிடித்தலும் பொருளாதார அபிவிருத்திக்கு உயர் விளைவுப்பெருக்கத்துடன் ஈடுபடுத்திக் கொள்ளலும்.

## செயற்பாடுகள்

## உற்பத்தியை அதிகரித்தல்

- கடல் கடந்த மற்றும் ஆழ்கடல் மீன்வள அறுவடைக்காக உயர் தொழில்நுட்பத்துடன் கூடிய மீன்பிடிப் படகுகளை ஈடுபடுத்தல்.
- புதிய மீன்பிடிப் பரப்புக்களை அடையாளம் காணலும் குறியீடுசெய்தலும்.
- நன்னீர், சவர் நீர் மற்றும் கடல் நீரகவுயிர் வளர்ப்பு ஊக்குவிப்பு.
    - நீரகவுயிர் வளர்ப்பை விவசாயத்தோடிணைந்த முன்னணிக் கைத்தொழிலொன்றாக அடையாளம் கண்டு முன்னேற்றுதல்.
    - 05 வருட காலத்தினுள் நன்னீர் நீரகவுயிர் வளர்ப்பினை உயர் இயல்திறன் எல்லை வரை அதிகரித்தல்.
    - சவர்நீர் நீரகவுயிர் வளர்ப்பிற்காக கடனீரேரிகளையும் ஆற்றுக் கழிமுகங்களையும் அண்டிய பகுதிகளை சிறப்பாகப் பயன்படுத்திக் கொள்ளல்.
    - நீரகவுயிர் வளப்பிற்குப் பொருத்தமான பரப்புக்களை அடையாளம் கண்டு அதற்கேற்றவாறு நீரகவுயிர்களை வளர்த்தல் (உயர் பெருக்கு வலயம் - இறால், வேக்கயா மீன்கள், இடைப் பெருக்கு வலயம் - கடலட்டைகள், இடைப் பெருக்கு வலயத்திற்கு கீழுள்ள பகுதிகள் - கடற் சிற்பிகள், மொதா, கொஸ்ஸா போன்ற நன்னீர் மீன்கள்.)

- வளர்ப்பினை அடிப்படையாகக் கொண்ட மீன்பிடித் துறையை அபிவிருத்தி செய்தல்.
    - உயர் தொழில்நுட்பத்துடன்கூடிய மீன் இனப்பெருக்க நிலையங்களை நிர்மாணித்தல்.
    - சமுதாய அடிப்படையிலான நீரகவுயிர் வளர்ப்பு அபிவிருத்திக்காக கூடுகளில் மீன் குஞ்சுகளின் உற்பத்திசெய்தல் போன்ற நவீன முறைகளைப் பயன்படுத்தி எசித்தா, எங்கில்லா போன்ற மீன் குஞ்சுகளை வளர்க்கும் கருத்திட்டங்களை ஆரம்பித்தல்.
    - இனப்பெருக்கத் தொட்டிகளில் அதிக பெறுமதியான மீன் குஞ்சுகளை உற்பத்திசெய்தல் (கடல் அட்டைகள், சேற்று நண்டுகள், மொதா மீன்கள், நீள் கொடுக்கைகளுடைய இறால்கள் போன்றன)

## பேண்தகு மீன்பிடி முகாமையும் அபிவிருத்தியும்

- மீன்பிடி உற்பத்தியையும் தொழில் வாய்ப்பினையும் அடிப்படையாகக்கொண்ட முகாமைத்துவ வலயங்களை அறிமுகப்படுத்தல்.

- விஞ்ஞானபூர்வ தரவுகளை அடிப்படையாகக்கொண்ட மீன் வளத்தினை அறுவடை செய்யக்கூடிய பருவ முறையொன்றை அறிமுகப்படுத்தல்.
- இலங்கைக் கடற்பரப்பினுள் சமுத்திர வளங்களை சிறப்பாக முகாமைசெய்தல்.
- மீனவ சமூக குழு முறையொன்றை அறிமுகப்படுத்தி முகாமைசெய்வதற்கு சமுதாயத்தின் பங்களிப்பினைப் பெற்றுக்கொள்ளல்.
- உணவுக்காக மீன் இறக்குமதிசெய்யப்படும் இந்நாட்டின் சமுத்திர வலயத்தில் இல்லாத மீன் இனங்களை சுற்றுலாக் கைத்தொழில் போன்ற அத்தியாவசிய துறைகளுக்கு மட்டும் மட்டுப்படுத்தல்.
- இந்திய கடற்பரப்பெல்லைக்குள் அத்துமீறலையும் சமுத்திர வளங்களை அழிப்பதையும் பலம்பொருந்திய இராஜதந்திர தலையீடொன்றின் ஊடாக சிறப்பாக முகாமைசெய்தல்.
- நீரகவுயிர்ச் சூழல் மாசுறலைத் தடுத்தலும் பேணுகையும்.

## பின்னைய அறுவடை சேதங்களை குறைத்தல்

- படகுகளின் நடவடிக்கைகள், மீன்களைக் களஞ்சியப்படுத்தல், ஏலத்தில விடல், பதனிடல், போக்குவரவு, விற்பனை ஆகிய கருமங்களுக்கு தேவைப்படும் உட்கட்டமைப்பு வசதிகளின் வசதி மையப்படுத்திய மற்றும் ஒருங்கிணைந்த திட்டமிடல் முறைமையைப் பயன்படுத்தி பிரதான திட்ட அடிப்படையில் அதனை மேற்கொள்ளல்.
- உயர் தொழில்நுட்பத்துடன்கூடிய மீன்பிடித் துறைமுகம் உள்ளிட்ட உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி.
- மீன்களை இறக்கும் பிரதான இடங்களில் போதியளவு குளிர் அறைகளை நிர்மாணித்தல்.
- ஒவ்வொரு பிரதான மீன்பிடித் துறைமுகத்தினையும் அண்டியதாக மீன் பின்அறுவடை, பதனிடல் தொழிற்சாலைகளை நிறுவுதல்.
- குளிர் அறை வசதியுன்கூடிய போக்குவரவு வலையமைப்பொன்றை ஏற்படுத்தல்.
- வீதிப் போக்குவரத்திற்குப் பதிலாக குளிர் அறை வசதிகள் கொண்ட மிகவும் வினைத்திறன் வாய்ந்த புகையிரத மற்றும் கடல் போக்குவரத்தை அறிமுகப்படுத்துதல்.
- உயர்மட்ட பனிக்கட்டி உற்பத்தி ஆலைகளை நிர்மாணித்தலும் சுமக்கக்கூடிய விலையில் பனிக்கட்டிகளை விற்பனைசெய்யும் நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தலும்.

## மீன் உற்பத்திக்குப் பெறுமதி சேர்த்தல்

- உயர் தொழில்நுட்பத்துடன்கூடிய மீன்பிடிப் படகைக் கொள்வனவுசெய்வதற்கு மீனவ சமூகத்திற்கு அவசியமான நிதி வசதியளித்தல்.
- மீன்பிடிப் படகினுள் முதனிலை மட்ட பதனிடல் கருமங்களை ஊக்குவித்தல்.
- மீன்பிடி, செயற்பாட்டு நடவடிக்கைகள், களஞ்சியப்படுத்தல், போக்குவரத்து போன்ற பெறுமதி சங்கிலித் தொடரில் அடையாளம் காணப்பட்ட தீர்மானகரமான சந்தர்ப்பங்களுக்கு உரிய பயிற்சி, அபிவிருத்தி மற்றும் தொழில்நுட்ப ஒத்தாசையை வழங்குதல்.
- தரத்தில் உயர்ந்த பின்னைய அறுவடை உற்பத்திகளுக்கு அவசியமான அறிவு, திறன்கள் (பயிற்சியூடாக), தொழில்நுட்பம் என்பவற்றை வழங்குதல்
- உழைப்புச் செறிவான செயற்பாட்டு நடவடிக்கைக்கு (Manual Handling) பதிலாக தொழில்நுட்பத்தை பதலீடுசெய்தல்.

## மீனவ சமூகத்தவரின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றுதல்

- மீனவ சமூகத்தவர் உள்ளிட்ட உற்பத்திக் கைத்தொழிலுக்கு பங்களிப்புச்செய்யும் சமூகத்தினருக்கு உறுதியான சமூகப் பாதுகாப்புத் திட்டமொன்றை அறிமுகப்படுத்தல்.
- மீனவக் கிராமங்களை அண்டியதாக மருத்துவ நிலையங்கள், சிகிச்சை களங்கள், முன் சிறுவர் பராய அபிவிருத்தி நிலையங்கள் போன்ற உடலியல் மற்றும் உளவியல் சுகாதாரத்திற்கு தேவைப்படும் வசதிகளை ஏற்படுத்தல்.
- மின்சாரம், நீர், பாதைகள், பொழுதுபோக்கு அலுவல்கள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தல்.
- ஒவ்வொரு மீனவ குடும்பத்திற்கும் வசதிகளுடன் கூடிய மீனவர் வீடுகளை வழங்குதல்.
- மேலதிக வருமான உருவாக்குகைக்கான சந்தர்ப்பங்களாக நேரடி மீன்பிடி அல்லாத பொருளாதார செயற்பாடுகளுக்கு வாய்ப்பளித்தல்.

## வேலைவாய்ப்பை அதிகரித்தல்

- முதனிலை உற்பத்திக்குப் பதிலாக பெறுமதிசேர்க்கப்பட்ட உற்பத்திகளை முன்னேற்றுதல்.
- மீன்பிடிக் கைத்தொழிலை சமூகத்தில் ஒரு கௌரவமான தொழிலாக ஊக்குவித்தல்.
- மீன்பிடிக் கைத்தொழிலாளர்களுக்கு தொடர்ந்தும் புத்தறிவையும் பயிற்சியையும் வழங்குதல்.

## அந்நியச் செலாவணியை அதிகரித்தல்

- பெறுமதி சேர்க்கப்பட்ட மீன்பிடி உற்பத்திகளின் ஏற்றுமதியை ஊக்குவித்தல்.
- மீன் இறக்குமதிகளைப் பதப்படுத்தி மீள் ஏற்றுமதிசெய்யும் கைத்தொழிலுக்கு மட்டுப்பாடுகளை விதிப்பதன் மூலம் வர்த்தக மீதியின் அனுகூலங்களை அதிகரித்தல்.
- முதனிலை உற்பத்திகளுக்குப் பதிலாக பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளை ஏற்றுமதி செய்தல்.
- மீன்பிடிக் கைத்தொழில் சார்ந்த வெளிநாட்டு உழைப்புச் சந்தைக்கு பயிற்றப்பட்ட ஊழியத்தை ஏற்றுமதி செய்தல்.
- இறக்குமதிப் பதிலீடுகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் இறக்குமதியைக் குறைத்தலும், அதன்மூலம் வர்த்தக அனுகூலமொன்றைப் பெற்றுக்கொள்ளலும்.

## குறை பயன்பாட்டு அல்லது பயன்பாட்டிற்குப் பெறாத சமுத்திர வளங்களைப் பயன்படுத்தல்

- சமுத்திர வளத்தைப் போக்குவரத்து ஊடகமொன்றாக அபிவிருத்தி செய்தல்.
- சுற்றுலாக் கைத்தொழில் மற்றும் களிபேருவகைக்காக சமுத்திர மற்றும் நீரகவுயிர்ச் சூழலை ஈடுபடுத்திக்கொள்ளல்.
- மாற்று மற்றும் புதுப்பிக்கத்தகு எரிசக்தி மூலங்களை (கடலலைகள், கடற்காற்று போன்றன) அபிவிருத்தி செய்தல்.
- சமூக மற்றும் கலாசார கருமங்களுக்கு சமுத்திரங்களைப் பயன்படுத்திக் கொள்ளல்.
- கடலடி ஆய்வும் அரிய, உயர் பெறுமானம் கொண்ட பெற்றோலிய வளங்களைப் பெற்றுக்கொள்ளலும்.
- சமுத்திர வளங்களின் அபிவிருத்தியும், ஊக்குவிப்பிற்காக உயர் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தலும்.

# எரிசக்தி

- இலங்கையின் முழுதும் அளாவிய எரிசக்தித் தேவை 530 PJ (530 Petajoules) அளவாகும். இதில் 39% அளவு வீடுகளின் தேவைகளுக்கு பயன்படுத்தப்படுவதுடன், 36% போக்குவரத்துக்காக பயன்படுத்தப்படுகிறது. எஞ்சிய 24% கைத்தொழில் துறைக்குப் பயன்படுத்தப்படுகிறது. இந்த 530 PJ அளவான எரிசக்தியை பிரதான நான்கு சக்தி மூலங்களிலிருந்து நாம் உற்பத்தி செய்கின்றோம். அதாவது பெற்றோலியம் மூலம் 54%, மின்சாரத்தின் மூலம் 10% விறகு போன்ற சுவட்டு மூலங்களிலிருந்து 36% என்ற அடிப்படையில் உற்பத்தி செய்கின்றோம்.

- எமது எரிசக்தித் தேவையில் 54% போக்குவரத்துத் தேவையானது முற்றிலும் பெற்றோலியத்தின் மூலம் நிறைவுசெய்யப்படுகிறது. மற்றுமொரு முக்கிய விடயம் யாதெனில், எமது எரிசக்தித் துறையின் மூலம் மின்சாரம் வழங்கப்படுவது 10% போன்றதொரு சொற்பள அவானவர்களுக்கே. எனினும், நம் அனைவரதும் மனதில் எரிசக்தி என்ற பதத்துடன் உருவாவது, மின்சாரத் துறையாகும். எனினும், எமது நாட்டில் எரிசக்தி வழங்கலில் 36% அளவானவை விறகின் மூலமும் 54% அளவானவை பெற்றோலியத்தின் மூலமும் வழங்கப்படுகிறது.

- எமது எரிசக்தித் துறையில் முக்கியமாக இரண்டு துறைகளின் ஊடாக விரிவடைகிறது என்பதே இவ்வெண்ணிக்கைகளிலிருந்து தெளிவாகின்றது. பெற்றோலியத்தின் மூலம் இயங்கும் போக்குவரத்தும் விறகின் மூலம் இயங்கும் வீடுகளின் எரிசக்திப் பாவனையும் இலங்கையின் எரிசக்தித் துறையில் அடங்கும்.

- மின்சக்தி எரிசக்தித் துறையில் 10% அளவானதாக இருப்பதுடன் அது வீடுகளின் தேவைப்பாட்டில் 18% அளவையும் கைத்தொழில் துறையில் 13% அளவையும் நிறைவு செய்கின்றது.

- இலங்கையில் எரிசக்திக் குறிகாட்டிகள் மிகவும் தொடக்கநிலையான, முன்னேறாத ஒரு நாட்டின் குறிகாட்டிக்குச் சமமானதாகும். நாம் எந்தளவு நாட்டின் அபிவிருத்தி குறித்து மார்தட்டிப் பேசியபோதும் எமது நாடு இன்னும் விறகின் மூலம் இயங்கும் வீடுகளையும் எண்ணெய் மூலம் இயங்கும் போக்குவரத்தையும் 10% அளான மின்சார வழங்கலையும் கொண்ட ஒரு நாடாகும்.

- எமது நாட்டின் சமூக, பொருளாதார வளர்ச்சிக்கு விகிதசமமாக உமது எரிசக்திச் சூழல் பரிணாமம் அடைந்துள்ளது. எமது நாட்டின் எரிசக்தி தொடர்பில் நிலவும் முக்கிய பிரச்சினை இதுவாகும். மிகவும் நவீன, விரிவாக்கம் செய்யக்கூடிய மின்சாரம் இன்னும் எரிசக்தி வரைபடத்தில் 10% அளவாகவே உள்ளது.

- எனினும், எமது எல்லா வீடுகளுக்கும் மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் நாம் கால குண்டொன்றை நிர்மாணித்துள்ளோம். வெகு விரைவிலேயே 167 PJ அளவான வீடுகளுக்கான சமையலறை எரிசக்திப் பாவனையின் இடத்தை மின்சாரம் கைப்பற்றும். தற்போது முழு மின்சார முறைமையின் ஊடாக நாட்டுக்கு 48 PJ அளவையே வழங்குகின்றது. இது தற்போது காணப்படும் தேவைப்பாட்டை மும்மடங்கால் அதிகரிப்பதாகும். அவ்வாறாயின், மின்சார முறைமையினால் இதனைத் தாங்கிக்கொள்ள முடியுமா?

- இரண்டாவது பாரிய நெருக்கடி யாதெனில், கனியநெய் (பெற்றோலியம்) தொடர்பானது. எமது நாட்டில் வாகனங்களுக்குச் செலவாகும் பெற்றோலியத்திற்கான செலவுச் சுமையை நாட்டின் பொருளாதாரத்திற்கு இன்னும் எவ்வளவு காலத்திற்கு தாக்குபிடிக்க முடியும்? அதற்கான ஒரே தீர்வு, சிறந்த போக்குவரத்து முறைமையொன்றின் ஊடாக நாட்டின் பாதைகளிலிருந்து பெரும் எண்ணிக்கையான வாகனங்களை வெளியேற்றுவதொன்று மாத்திரமே. அவ்வாறான ஒரு கருத்திட்டத்தின் மூலம் போக்குவரத்துக்குச் செலவாகும் 154 அளவான PJ எரிசக்தியின் அளவில் 40% அளவான (62 PJ) மீண்டும் தற்போது 48 PJ அளவானவை மின்சார முறைமையுடன் சேர்வதாகும். அது, மின்சார முறைமையை தற்போது காணப்படும் நிலையிலிருந்து இரட்டிப்பாக்குவதாகும்.

- மேலே நாம் குறிப்பிட்ட எரிசக்தித் துறையின் எதிர்காலத் தேவையை இலக்கிட்டு அனைத்தும் மின்சாரத் தொகுதியின் விரிவாக்கமும் இறுதியில் பிரதான எரிசக்தி கடத்துநராக மின்சக்தி வளர்ச்சியடைவதுமாகும். அந்த பரிணாமங்களினுள் மின்சக்தித் தொகுதி இன்று காணப்படும் மட்டத்திலிருந்து ஐந்து மடங்கால் வளர்ச்சி அடையும். ஒரு நாடு என்ற ரீதியில் அல்லது ஒரு துறை என்ற ரீதியில் இலங்கையும் எமது மின்சக்தித் துறையும் இந்த வளர்ச்சிக்கு எந்தளவில் தயாராக உள்ளது?

- இத்தகைய வளர்ச்சிகளை நாம் சிறந்த முறையில் கட்டுப்படுத்தாத பட்சத்தில் எமக்கு தீர்த்துக்கொள்ள நினைத்தும் பார்க்கமுடியாத சிக்கலார்ந்த பிரச்சினையை நாம் எதிர்நோக்க நேரிடும்.

- இலங்கையின் மின்சக்தித் தொகுதி பிரதான எரிசக்தி கடத்துநராக மாற்றுவது அந்தளவு இலேசான காரயமன்று. மின்சக்தித் துறையில் முக்கிய குறைபாடுகளில் கோடிட்டுக்காட்டத்தக்க குறைபாடு யாதெனில், முறைமையில் காணப்படும் குறைபாடுகள் அன்று. அங்கு தற்போது நிலவும் நிருவாக மற்றும் முகாமைத்துவப் பலவீனங்கள் துறையின் முக்கிய பிரச்சினையாகும். எரிசக்தித் துறையின் வினைத்திறனும் உயர் விளைதிறன் கொண்டதாக நிருவகிக்கப்பட வேண்டும் என்பதுடன் அது மக்கள் சார்பான வெளிப்படையான, ஜனநாயக ஆட்சியாகவும் இருக்க வேண்டும். அது அவ்வாறல்லாத பட்சத்தில், மின்சக்தியை தமது பிரதான எரிசக்தி என மக்கள் மனதளவில் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்பதுடன், அது முறைமையின் மாற்றத்தைப் பலவீனப்படுத்தும் பிரதான காரணியாக அமையும். நாட்டின் எரிசக்தி கொள்கையில் அத்துறையின் நல்லாட்சிக்கான கொள்கைகள் முக்கிய இடத்தை வகிக்க வேண்டும்.

- அதற்காக நாம் கொள்கையளவிலான நிலைப்பாடுகளை நோக்கி ஒரு நாடு என்ற ரீதியில் உடனடியாக கவனயீர்ப்பை மேற்கொள்ள வேண்டும். விறகு கொண்டு சமைக்கப்படும் எமது உணவுகள் மின்சக்தி அடுப்புக்களுக்கு நிலைமாறுவதைத் தடுப்பதற்கு உபாயமுறைகளைப் பயன்படுத்த வேண்டும். அரசாங்கம் அதற்காக முனைப்பான பங்களிப்பை வழங்காத பட்சத்தில் மலிவான மின் உபகரண வியாபாரிகள் பல்வேறு கடன் திட்டங்களின் கீழ் இலகு தவணைக் கொடுப்பனவு முறைகளின் கீழ் கிராமங்களில் விறகுப் பாவனையை அகற்றிவிட்டு அதற்குப் பதிலாக மின்சக்தியையும் எரிவாயுவையும் பிரபல்யப்படுத்தி விடுவர்.

- இது ஒருவகையில் மின்சக்தித் துறையில் சிக்கலார்ந்த நிலையை ஏற்படுத்தும். அவ்வாறன்றேல், நாட்டின் பொருளாதாரத்தை பாரிய சரிவை நோக்கித் தள்ளிவிடும்.

## அடையாளம் காணப்பட வேண்டிய துறைகள்

- இலங்கை, ஒரு நாடு என்ற வகையில் இறக்குமதிசெய்யப்படும் அதேபோல் நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களை பாவனையின் பின்னர் அப்புறப்படுத்துவதை எமது கொள்கையாகக் கொள்ளுமாயின், நாடு பாரிய குப்பை மேடாக மாறுவதைத் தடுக்க முடியாது. வரையறுக்கப்பட்ட நிலத்தையும் வரையறுக்கப்பட்ட வளங்களையும் கொண்டுள்ள எமது நாட்டுக்கு மிகவும் பொருத்தமான முறை யாதெனில், மீள்சுழற்சியை முன்னிலைப்படுத்திய சுழற்சிப் பொருளாதாரமொன்றே அன்றி, நேர்வரிசைப் பொருளாதாரமொன்றல்ல. எரிசக்தித் துறையில் இந்த எண்ணக்கருவை உட்படுத்தி எரிசக்தியில் குறிப்பிடத்தக்க அளவு பாவனைக்குப் பெறாமல் அப்புறப்படுத்தப்படுவதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும். அப்புறப்படுத்தும் எல்லாப் பொருள்களிலும் காணப்படும் இறுதித் துளியளவு எரிசக்தியையும் திரட்டிப் பெற வேண்டும்.

- எரிசக்தி மூலங்களில் சிறப்பான ஒரு மூலம் காணப்படுகிறது. ஏனைய அனைத்து சக்தி மூலங்களுடனும் சூரியனுக்குத் தொடர்புள்ளபோதும், இந்த மூலம் சூரியனுடன் தொடர்புபடவில்லை. அதுவே அணு சக்தியாகும். பூமியில் காணப்படும் யுரேனியம், புளுட்டோனியம் என்பன இயற்கையாக அணுக்கரு பிளந்து அதனை விட எடையிற் குறைந்த அணுக்களாக மாறும் அணுக்கருச் செயன்முறையின் ஊடாக இந்த எரிசக்தி பிறப்பிக்கப்படுகிறது. மக்கள் அபிப்பிராயம் எவ்வாறிருந்தபோதும் அது மிகவும் இலாபகரமான, மிகவும் பாதுகாப்பான எரிசக்தியாகும். வரலாற்றில் இடம்பெற்ற பல விபத்துக்கள் காரணமாக அணுசக்தி குறித்து மக்கள் மத்தியில் அச்சம் நிலவுவதுடன் பலமான அரச கொள்கையொன்றின் மூலம் நாட்டில் அணுசக்திப் பிறப்பாக்கத்தையும் ஊக்குவித்தலையும் எரிசக்தி அடிப்படையிலான பொருளாதாரமொன்றையும் ஏற்படுத்துவது ஓர் இன்றியமையாக் காரணியாகும்.

## கொள்கைகளும் நோக்கங்களும்

- Smart Grid பாவனையின் மூலம் சிறந்த விளைவுப்பெருக்கமுள்ள, தூய, தொடர்ச்சியான எரிசக்தித் தொகுதியொன்றைக் கட்டியெழுப்புதல்.
- வீட்டு எரிசக்தித் தேவையை இயன்றளவுக்கு உயிரிய மூலங்களை மையமாகக் கொண்டதாக அமைத்துக்கொள்ளலும் அதற்காக உயிரிய அடிப்படையிலான எரிசக்திகளை நவீனமயப்படுத்துதலும்.
- பெற்றோலியம் மூலம் பெற்றுக்கொள்ளும் போக்குவரத்து எரிசக்தியை கிராமத்தின் மின்வலுவின் மூலம் பெற்றுக்கொள்ளல்.

- மின்வலுத் தேவையைக் கவனத்திலெடுத்து மின்பிறப்பாக்கத்திற்கான திட்டங்களை வகுத்தல்.

- காற்றலைச் சக்தி, சூரிய சக்தி, புவி வெப்பம் போன்ற புதுப்பிக்கத்தக்க மூலங்களை உயர்ந்தபட்ச மின்வலுப் பிறப்பாக்கத்திற்காக பயன்படுத்திக்கொள்ளல்.

- போக்குவரத்து முறைமையை வினைத்திறனுடையதாக்குவதன் மூலம் அதற்குச் செலவாகும் எரிசக்தியின் அளவைக் குறைத்தல்.

- சிக்கனமான எரிசக்தி நுகர்வொன்றுக்காக நவீன தொழில்நுட்பத்தையும் (சூட்டிகையானதாக்கல்) ஏனைய வசதிகளையும் வழங்குதலும் பொதுமக்களின் கண்காணிப்பையும் பொறுப்புக்கூறலையும் மேம்படுத்தல்.

- எரிசக்தி நுகர்வை நியாயமான அறவீட்டுக் கோலமொன்றின் அடிப்படையில் முன்னெடுத்துச் செல்லல்.

- எரிசக்தித் துறையின் வெளிப்படைத்தன்மையையும் பொறுப்புக்கூறலையும் உறுதிப்படுத்தும் விதத்தில் அரச கண்காணிப்பொன்றை ஏற்படுத்தல்.

- அரசாங்க உரித்தை உறுதிப்படுத்தி பெற்றோலியம் மற்றும் இயற்கை வாயு உள்ளிட்ட இலங்கை வசமுள்ள எரிசக்தி ஊற்றிடங்கள் பற்றிய ஆராய்ச்சிகளை வினைத்திறனுடன் முறைவலுப்படுத்தல்.

## செயற்பாடுகள்

- மூன்றாண்டு காலத்துள் ஒவ்வொரு வீட்டினதும் கேள்வி – வழங்கலின் அடிப்படையில் மின்சாரக் கட்டணத்தைத் தீர்மானிக்கக்கூடிய சூட்டிகையான மின்மானியை (Smart Meter) பொருத்துதல்.

- அனைத்து அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்கும் 5GYD Smart Grid ஐ கட்டாயப்படுத்தல்.

- உயிர்மூல மூலங்களின் (விறகு, தென்னம் சிரட்டை, நிலக்கரி) பயன்பாடு பற்றிய ஆராய்ச்சிகளை ஊக்குவித்தலும் அத்தகைய மூலங்களைப் பயன்படுத்தும் உபகரணங்களை நவீனமயப்படுத்தி பிரபல்யப்படுத்தலும்.

- கொழும்பு, காலி, மாத்தறை, கண்டி, குருணாகல் போன்ற பிரதான நகரங்களில் மின்சாரத்தில் இயங்கும் பொதுப் போக்குவரத்து முறைமையொன்றை ஏற்படுத்துதல்.

- மென்ரக மின்சார இரயில் தொகுதியொன்றை கொழும்பையும் அதனையண்டிய பகுதிகளில் ஏற்படுத்துதல்.

- மாற்று எரிபொருள் மூலங்கள் பற்றிய ஆராய்ச்சிகளும் அபிவிருத்தி நிறுவகமொன்றை (RDAARE) உருவாக்குதலும்.

- ஒவ்வொரு மாவட்டத்திலும் கழிவுப்பொருள் பயன்பாட்டு மின்நிலையமொன்று வீதம் நிர்மாணிப்பதற்காக அரச-தனியார்-பொதுமக்கள் கூட்டுப் பங்காண்மைக் கம்பனியை (4P’s) ஏற்படுத்தல்.

- எதிர்வரும் ஐந்தாண்டு காலத்துள் பிரதான மற்றும் உப நகரங்களில் மின்விநியோகத் தொகுதியை நிலக்கீழ் முறைமையொன்றாக (Underground Distribution System) நிர்மாணித்தல்.

- மின் நுகர்வை சதவீத அடிப்படையில் குறைக்கும்போது வாடிக்கையாளர்களுக்கு அதற்கு விகிதசமமாக தள்ளுபடிகளை வழங்குதல்.

- ஒவ்வொரு இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை 1 மெகா உவோற் க்கு மேற்பட்டதாக மின்வலுவைப் பயன்படுத்தும் தொழிற்சாலைகளினுள் எரிசக்திக் கணக்காய்வு இடம்பெறுவதைக் கட்டாயமாக்குதலும் எரிசக்தி விரயத்தைக் குறைப்பதற்கான சிபார்சுகளை முன்வைத்தலும்.

- மின்சாரத்தை சிக்கனமாகப் பயன்படுத்தக்கூடிய பண்டங்களுக்கான இறக்குமதி வரியை நீக்குதல்.

- சூரிய மின்சாரத்தை சேமித்துப் பேணக்கூடிய மின்கலன்களை இறக்குமதி செய்வதற்கான இறக்குமதி வரியை நீக்குதல்.

- சூரிய மின்வலு உற்பத்திப் பிறப்பாக்க பனல்கள் மற்றும் மின்சாரத்தை சேமித்து வைக்கக்கூடிய மின்கலன்களை உற்பத்திசெய்வதற்காக அரச-தனியார்-பொதுமக்கள் கூட்டுப் பங்காண்மைக் கம்பனிகளை ஏற்படுத்தல்.

- மீன்பிடிக் கைத்தொழிலுக்கு தடங்கல் ஏற்படாதவாறு கடனீரேரிகள், குளங்களை அண்டியதாக மிதக்கும் சிறிய சூரியசக்தி மின் உற்பத்தி நிலையங்களை ஏற்படுத்தல்.

- அதிவேகப் பாதையின் இரு மருங்கிலும் சூரிய சக்தி உற்பத்திச் சாலைகளை ஏற்படுத்தல்.

- நிர்மாணிக்கப்படும் ஒவ்வொரு இரண்டு மாடிகளுக்கு மேற்பட்ட கட்டிடத்திலும் சூரிய சக்தி உற்பத்தி நிலையத்தை கட்டாயமாக்குதல்.

- கட்டிட நிர்மாணிப்பிற்கான திட்டமிடலின்போது எரிசக்தி நுகர்வைக் குறைக்கும் முறைகளைக் கட்டாயமாக்குதல்.

- நாளொன்றுக்கு 12,000 பீப்பாய்களை சுத்திகரிப்பு செய்யக்கூடியவாறு சப்புகஸ்கந்தை எண்ணெய் சுத்திகரிப்புத் தொகுதியை ஓராண்டு காலத்துள் நவீனமயப்படுத்தி விஸ்தரித்தல்.

- இலங்கை மின்சார சபை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் அவற்றோடிணைந்த நிறுவனங்களை ஒன்றிணைந்த பொது தொழில்முயற்சியொன்றாக மாற்றுதல்.

- எரிசக்தி நெருக்கடிக்கு குறுகிய காலத் தீர்வொன்றாக 2040 ஆம் ஆண்டாகும்போது முற்றாக நீக்கும் அடிப்படையில் 500 மெகா உவோற் கொள்ளளவு கொண்ட நிலக்கரி மின் உற்பத்தி நிலையங்கள் இரண்டை நிர்மாணித்தல்.

- ஓராண்டு காலத்துள் சர்வதேச நிறுவனங்களின் பங்கேற்புடன் 300 மெகா உவோற் கொள்ளளவு கொண்ட 05 இயற்கைத் திரவநிலை வாயு (LNG) நிலையங்களை உருவாக்குதல்.

- ஐந்தாண்டு காலத்துள் பெற்றோலியத்தைப் பயன்படுத்தி இயங்கும் அனல் மின் உற்பத்தி நிலையங்களை இயற்கைத் திரவநிலை வாயு (LNG) நிலையங்களாக மாற்றுதல்.

- ஓராண்டு காலத்துள் திருகோணமலை எண்ணெய்த் தாங்கித் தொகுதியை மீண்டும் பயன்படுத்த ஆரம்பித்து மூன்று மாதங்களுக்காவது சேமிப்பு எண்ணெய் இருப்பைப் பேணுவதற்குத் தேவையான களஞ்சிய வசதியை ஏற்படுத்தல்.

# போக்குவரத்து

## சுற்றுச்சூழல் நட்புறவுடன்கூடிய, வினைத்திறன் வாய்ந்த ஒரு போக்குவரத்துச் சேவை

பொதுமக்களின் கண்ணோட்டத்தில் ஆராயும்போது இலங்கையின் போக்குவரத்து ஒரு பன்முகப் பிரச்சினையாக விளங்குகிறது. முறைசாராத மற்றும் வினைத்திறனற்ற போக்குவரத்துத்துறை நாட்டின் அறுதிப் பெரும்பான்மையினரின் வாழ்வில் குறிப்பிடத்தக்க பகுதியை வீணடித்து வருகின்றது. நாட்டு மக்களை கண்ணியமான குடிமக்களாகக் கட்டியெழுப்புவதற்குப் பதிலாக அனைத்தையும் சகித்துக்கொள்ளும், இம்சைக்கும் மன விரக்திக்கும் உள்ளான மக்களாக ஆக்கியுள்ளது.
பொதுவாக நோக்குமிடத்து, நகர்ப்புற உள் வீதிகளில் மட்டுமன்றி நகர்ப்புற பிரதான சாலைகளிலும் பொது போக்குவரத்து கிராமப்புற மற்றும் தோட்டப் பகுதிகளின் பொதுப் போக்குவரத்தும் ரயில் சேவையும் பண்டப் போக்குவரத்தும் அவற்றுக்கேயுரிய நெருக்கடிகள் மிக்கவையாக உள்ளன. அதிக இடநெரிசல், அதிக காலமெடுத்தல் என்பவற்றின் காரணமாக ஆபத்தானதும் ஒழுக்க பண்பற்ற ஓட்டமும் இராக்காலத்தில் போக்குவரத்துச் சேவைகள் இயங்காமை, வீதி விபத்துக்கள், பொதுச் சேவைகளில் பெண்களும் சிறுவர்களும் எதிர்நோக்கும் பாலியல் மற்றும் ஏனைய இம்சைகள், பயணியர் போக்குவரத்தில் அரிதாகக் காணக்கிடைக்கும் சம்பவங்களாகும்.

ஆண்டுதோறும் சுமார் 30,000 வீதி விபத்துக்கள் அறிக்கையிடப்படுவதன் காரணமாகவும் அவற்றின் மூலம் சுமார் 3,000 மனித உயிர்கள் பலியாவதும் போக்குவரத்துத் துறையின் பாதுகாப்பற்ற நிலைமையுடன் அதன் தீவிரத்தன்மையை எடுத்துக் காட்டுகிறது.

இலங்கையின் மொத்த ரயில் பாதை வலையமைப்பு 1,450 கி.மீ. நீளமானதாகும். 323 ரயில் நிலையங்கள் உள்ளன. 1965 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட காலாவதியான சமிக்ஞை அமைப்பின் மூலம் ரயில்கள் இயங்குவதும் போதுமான ரயில் இயந்திரங்களும் ரயில் பெட்டிகளும் இன்மையும், மந்த கதியான ஓட்ட வேகம், நாள் முழுதும் இயங்கும் நம்பகரமான சேவையொன்று காணப்படாமையும் அலுவலக நேரங்களில்கூட போதுமான எண்ணிக்கையான தடவைகள் சேவையில் ஈடுபடுத்தப்படாமையும் இடநெரிசலும் ரயில் போக்குவரத்து வலையமைப்பில் காணக்கூடியதாகவுள்ள சேவை முறிவுகள், ரயில் போக்குவரத்து சார்ந்த முக்கிய பிரச்சினைகளாக விளங்குகின்றன. இதன் விளைவாக, இலங்கையில் போக்குவரத்துத் துறையில் ரயில் போக்குவரத்தின் பங்களிப்பு 5% அளவு மிகக் குறைவானதாக உள்ளது.

நாட்டு மக்களில் அரைவாசிக்கும் மேற்பட்ட பெண்களும் அண்ணளவாக 14% சதவீதமான முதியோர் சனத்தொகையும் சனத்தொகையில் 7% சதவீதமான வலதுகுறைந்த ஆட்களும் மேற்குறிப்பிட்ட முக்கிய பிரச்சினைகளுக்கு மேலதிகமாக அவர்களுக்கேயுரிய ஏராளமான பிரச்சினைகளுக்கு பொதுப் போக்குவரத்துச் சேவைகளில் எதிர்நோக்கி வருகின்றனர்.

பொதுப் போக்குவரத்தின் வீழ்ச்சிநிலை காரணமாக, சுமார் 48மூ சதவீத மக்கள் தங்கள் போக்குவரத்துத் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்காக தனியார் வாகனங்களை பயன்படுத்துகின்றனர், மேலும் அவர்கள் தமது வருமானத்தில் பெரும் பகுதியை போக்குவரத்துக்கு செலவிட வேண்டியுள்ளது. இது கடுமையான போக்குவரத்து நெரிசலையும் உருவாக்கியுள்ளது. பயணியர் பேருந்துச் சேவைகளில் இலங்கை போக்குவரத்துச் சபையின் (SLTB) பங்கு 14% வரை குறைவடைந்துள்ளதுடன் 5,600 பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்படுகின்றன. தனியார் துறையிடம் 20,000 க்கும் மேற்பட்ட தனியார் பேருந்துகள் உள்ளன. மேலும், இலங்கையில் தனியார் மோட்டார் வாகனங்களின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்து வருகிறது. இது, இப்போது சுமார் 73 லட்சம் போன்றதொரு கூடிய

பெறுமானத்தைக் கொண்டுள்ளது. இதற்கு மேலதிகமாக, 1.7 மில்லியன் சைக்கிள்கள் உள்ளன. சுமார் 93மூ சதவீதுமானவர்கள் பயணியர் போக்குவரத்துக்கும் சுமார் 97% பண்டப் போக்குவரத்துக்கும் நிலவழிப் பாதை வலையமைப்பே பங்களிப்புச் செய்கிறது. இலங்கையில் சுமார் 100,000 கிலோ மீற்றர் நீளமான நெடுஞ்சாலை வலையமைப்பு காணப்பட்டபோதும் நெடுஞ்சாலைகள் அமைச்சு 12,300 கிலோ மீற்றர் நீளமான சாலைகளை மட்டுமே பராமரிக்கிறது.

இந்த வீதி வலையமைப்பில் மேலும் 15,000 கி.மீ. பாதை மாகாண சபைகளினால் பராமரிக்கப்படுகிறது. எஞ்சிய சுமார் 73,000 கி.மீ. தூரத்தை உள்ளூராட்சி மன்றங்களும் சில தோட்டக் கம்பனிகளும் நீர்ப்பாசனத் திணைக்களமும் பாராமரிக்க வேண்டியுள்ளது. அதேபோல், நாளொன்று தகனமடையும் சுமார் 140 கோடி ரூபா (2019 ஜனவரி நிலவரப்படி) பெறுமதியான எரிபொருள்களில் 90% போக்குவரத்துத் துறைக்காக செலவாகின்றது. இந்நிலையானது வளி மாசுறலின் சரிபாதிக்கு பங்களிப்பு செய்கின்றது. சுமார் 40% காய்கறிகளும் பழங்களும் பாதுகாப்பற்ற போக்குவரத்தின் காரணமாக வீணடிக்கப்படுகின்றன.

## மக்கள் போக்குவரத்துச் சேவையொன்றிற்கான தேவை

பயணியர் போக்குவரத்தின் அடிப்படையாக அமையும் போக்குவரத்துச் செய்வது பயணி என்ற எண்ணக்கருவைப் புறக்கணித்து போக்குவரத்து ஊடகம், உட்கட்டமைப்பு வசதிகள் என்பவற்றின் மீது மட்டும் கவனம் செலுத்தும் போக்குவரத்துத் திட்டங்களும் செயன்முறைகளும் ஊடாக நாட்டின் தேசிய செல்வத்தில் பெரும் பகுதி செலவிடப்படுகிறது. பன்முகத்தன்மை வாய்ந்த பிரச்சினைகள் மலிந்த இலங்கையில் போக்குவரத்துத் துறையின் வினைத்திறனையும் பயனுறுதியாகவும் மக்களைச் சென்றடையக்கூடிய விதத்திலும் ஒழுங்கமைத்து கண்ணியமான ஒரு போக்குவரத்துச் சேவையை பொதுமக்களுக்கு வழங்குவதற்கு தேசிய போக்குவரத்துக் கொள்கையொன்றின் தேவை எழுந்துள்ளது.

இலங்கையில் ஆட்சிபீடம் அமர்ந்த எந்தவொரு அரசாங்கமும் மக்களின் கண்ணோட்டத்திலிருந்து ஒரு தேசிய போக்குவரத்துக் கொள்கையைத் தயாரிக்கவோ அமுல்படுத்தவோ முற்பவில்லை என்பதுடன் தொடர்ந்துவரும் இந்நெருக்கடியை மேலும் தீவிரப்படுத்த அது காரணமாக அமைந்துள்ளது. அதனடிப்படையில் போக்குவரத்துத் துறையின் கட்டமைப்புசார்ந்த மாற்றமின்றி இந்நாட்டு மக்கள் எதிர்நோக்கும் போக்குவரத்து நெருக்கடிக்குத் தீர்வு காண முடியாது.

## நோக்கு

எங்களால் அறிமுகப்படுத்தப்படுகின்ற தேசிய போக்குவரத்துக் கொள்கையானது, பொது மக்களின் போக்குவரத்துத் தேவைகளை ஒட்டுமொத்தமாக இலக்கிட்ட, சுற்றுச்சூழல் நட்புறவான போக்குவரத்து அமைப்பாக படிப்படியாக மாற்றும் நோக்குடன், அரசாங்கத் தலையீட்டை வலியுறுத்தும் திறமையான, நம்பகமான, பாதுகாப்பான, கண்ணியமான போக்குவரத்துச் சேவையை நிறுவுவதாகும்.

# அடிப்படைக் கொள்கை

- **சுற்றுச்சூழல் நட்பு மற்றும் வசதியான** போக்குவரத்து சேவைகளை அனுபவிப்பதற்கான எதிர்கால தலைமுறையினரின் உரிமையை அங்கீகரித்தல் மற்றும் நீண்டகால சூழல் நட்புடன்கூடிய நிலையான போக்குவரத்து முறையொன்றை வழங்குவதில் கவனம் செலுத்துதல்.

- **பொதுச் சேவை** - பொது போக்குவரத்து என்பது வெறும் இலாப நோக்கற்ற வணிகமாக இல்லாமல் பொதுச் சேவையாக முன்னெடுப்பது அரசாங்கத்தின் இருக்க வேண்டும்.

- **பயணிகள் அமைப்பு** - பயணிகளின் அமைப்பு பல்வேறு போக்குவரத்துத் தேவைகளைக் கொண்ட பல குழுக்களையும் ஆண்கள், பெண்கள், பெரியவர்கள், குழந்தைகள் மற்றும் வலதுகுறைந்தவர்கள் என்பவர்களைக் கொண்ட பல்வேறு சமூக பிரிவின் கட்டமைப்பை கொண்டுள்ளது.

- **கிராமப்புற போக்குவரத்து** - நகர்ப்புற போக்குவரத்திற்கு சமமான முக்கியத்துவம் அளித்து முக்கிய நகரங்களில் மட்டுமல்லாமல் கிராமங்கள் மற்றும் தோட்டப் பகுதிகளில் வசிக்கும் மக்களின் போக்குவரத்துத் தேவைகளைப் பூர்த்திசெய்யும் போக்குவரத்து சேவையை அறிமுகப்படுத்தல்.

- **பொருளாதார அபிவிருத்தி** - மக்களின் பொருளாதார அபிவிருத்தியில் போக்குவரத்து குறிப்பிடத்தக்க பங்களிப்புச் செலுத்துவதாக இருக்க வேண்டும்.

- **சரக்குப் போக்குவரத்து** - பயணிகள் மற்றும் சரக்கு போக்குவரத்தின் மீதும் விசேட கவனம் செலுத்துதல்.

- **கண்காணிப்பு** - போக்குவரத்து ஊடகங்களின் ஒருங்கிணைப்பை நிறுவுதலும் ஒழுங்குபடுத்துதலும்.

- **திட்டமிடல்** - முறையான நகர மற்றும் குடியேற்றத் திட்டங்களை மாகாண மட்டத்தில் அமுல்படுத்தி பணியிடங்களை நிறுவுவதன் மூலம் மக்களின் போக்குவரத்துக்கான கேள்வி குறைவடைவதுடன், போக்குவரத்துப் பிரச்சினைக்கு நீண்டகால தீர்வை வழங்க அதன் பங்களிப்பைப் பெறுதல்.

# செயற்பாடுகள்

## ஒருங்கிணைந்த போக்குவரத்து முகாமைத்துவக் கட்டமைபொன்றை அறிமுகப்படுத்தல்

வினைத்திறனான, மக்கள் நட்புறவான போக்குவரத்துச் சேவையொன்றை வழங்குவதற்கெனில், போக்குவரத்துத் துறையில் நிறுவன ரீதியான புத்தெழுச்சியொன்று ஏற்படுவது அத்தியவசியமாகும். பொறுப்பான, அர்ப்பணிப்புள்ள முகாமைத்துவக் கட்டமைப்பொன்றை நிறுவுதல் கண்ணியமான ஒரு சேவையை வழங்குவதற்கும் ஊழல் மோசடியற்றதாக வருமான – செலவின முகாமையை மேற்கொள்வதற்கும் உதவும். அதற்காக பின்வரும் செயற்பாடுகள் பின்பற்றப்படும்:-

- பயணிகளுக்கு கண்ணியமான முறையில் கவனிக்கும், வெளிப்படையான ஆட்சேர்ப்புக் கொள்கையொன்றுடன்கூடிய, உயர் சேவை விளைவுப்பெருக்கத்துடன்கூடிய முகாமைத்துவக் கட்டமைப்பொன்றை அறிமுகப்படுத்தல்.

- போக்குவரத்துத் துறையில் உயர்ந்த தரமுடைய மனித வளத்தை உருவாக்கும் நோக்கத்துடன் ஊழியர்களின் விளைவுப்பெருக்கத்தை மேம்படுத்தத் தேவையான அறிவையும் பயிற்சியையும் கட்டாயமானதாக்குதல்.

## பொதுப் போக்குவரத்து துறையைப் பலப்படுத்துதல்

வினைத்திறனுடைய போக்குவரத்துச் சேவையின் ஊடாக வினைத்திறனான இலங்கையைக் கட்டியெழுப்பும் செயல்முனைப்பில் பொதுப் போக்குவரத்துத் துறையை மேம்படுத்துவது எமது முக்கிய குறிக்கோளாகும். அதன்படி, பொதுமக்களின் போக்குவரத்துத் தேவைகளில் 80% ஐ ஐந்து ஆண்டுகளுக்குள் பொதுப் போக்குவரத்துச் சேவைகள் ஊடாக வழங்குவது இலக்காகும். இதன்கீழ் பின்வரும் செயற்பாடுகள் பின்பற்றப்படும்:

## ரயில் சேவையைப் பலப்படுத்துதல்

நாட்டின் எதிர்காலத் தேவைகளின் அடிப்படையில் ரயில் சேவையை நவீனமயப்படுத்தி ரயில் சேவையை பிரதான பொதுப் போக்குவரத்து முறையாக மேம்படுத்துவது எமது போக்குவரத்துக் கொள்கையின் முக்கிய ஓர் இலக்காகும்.

அதன்படி, போக்குவரத்துத் துறையில் ரயில் போக்குவரத்தின் பங்களிப்பை முதல் ஐந்து ஆண்டுகளில் 20% ஆகவும், இரண்டாவது ஐந்து ஆண்டுகளில் 50% ஆகவும் அதிகரிக்க எதிர்பார்க்கப்படுகிறது. இது, நெடுஞ்சாலை நெரிசலுக்கு ஒரு குறிப்பிடத்தக்க தீர்வை வழங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. எடுக்க வேண்டிய சில அடிப்படை நடவடிக்கைகள் கீழே தரப்பட்டுள்ளது:-

- தற்போதுள்ள பழுதடைந்த நிலையிலுள்ள அனைத்து ரயில் பாதைகளை நவீனமயப்படுத்தி நீண்டகாலத்திற்கு பராமரிப்பதுடன், தானியங்கி சமிக்ஞை முறையொன்றை அறிமுகப்படுத்தல்.

- அனைத்து முக்கிய ரயில் பாதைகளையும் இரட்டைப் பாதைகளாகவும், பிரதான நகரங்களை அண்டியதாக மூன்று பாதைகளாகவும் மேம்படுத்தல்.

- தற்போதைய ரயில் பாதை வலையமைப்பின் கீழ் ரயில்கள் சேவையில் ஈடுபடுத்தப்படாத பகுதிகளுக்கு ரயில் பாதைகளை நீடித்து அதன்மூலம் இலங்கையின் அனைத்து நகரங்களுக்கும் ரயில் சேவைகளை வழங்குதல்..

- ரயில் பெட்டிகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதன் மூலமும், ரயில்களின் சேவை பயணத் தடவைகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதன் மூலம் அதிகாலை முதல் நள்ளிரவு வரை வினைத்திறனான ரயில் சேவையைப் பேணுதல்.

- நகரங்களுக்கு இடையிலான கடுகதி ரயில் சேவை பயணத் தடவைகள் மற்றும் அலுவலக நேரங்களில் ரயில் சேவை பயணத் தடவைகளின் எண்ணிக்கையை அதிகரித்தல்.

- சுற்றயல் பகுதிகளில் பணயத்தில் ஈடுபடுவதற்கு மின்சாரத்தில் இயங்கும் நகரங்களுக்கு இடையிலான இலகு ரயில் சேவையொன்றை அறிமுகப்படுத்தல்.

- எரிபொருள், சீமெந்து போன்ற உற்பத்தி பொருள்களையும் மாவு போன்ற நுகர்வுப் பண்டங்களையும் மரக்கறி, பழங்கள், மீன் போன்ற விவசாய மற்றும் கடற்றொழில் உற்பத்திகளையும் பாதுகாப்பான முறையில் போக்குவரவில் ஈடுபடுத்துவதற்கு ரயில் சேவையை வினைத்திறனாக பயன்படுத்துவதன் விளைவாக எஞ்சும் போக்குவரத்துச் செலவின் நன்மையை வாடிக்கையாளர்களுக்கு வழங்குதல்.

- பயணிகள் பயன்படுத்தும் தனியார் வாகனங்களை தரித்து நிறுத்துவதற்காக அமைக்கப்பட்டுள்ள ரயில் நிலையங்களுக்கருவில் நிறுத்திவைக்கும் வசதிகளை ஏற்படுத்தல்.

## பேருந்துப் பயணிகள் போக்குவரத்துச் சேவையை வினைத்திறனுடையதாக மாற்றுதல்

- பயணிகள் போக்குவரத்துக்காகத் தயாரிக்கப்பட்ட, வசதியான பேருந்து வண்டிகளை அறிமுகப்படுத்தலும் அத்தகைய பேருந்து வண்டிகளைக் கொள்வனவுசெய்வதற்காக இலகு கடன் திட்டமொன்றை நிறுவுதலும் அனைத்து இறக்குமதி வரிகளையும் நீக்குதலும்.

- பிரதான பாதைகளிலும் இன்று பயணிகள் பேருந்துச் சேவை வீழ்ச்சிகண்டுள்ள ஓரளவு நகர்ப்புற மற்றும் கிராமப்புற பாதைகளிலும் இராக்கால போக்குவரத்தையும் முறைவலுப்படுத்தும் பொருட்டு அரசதுறை பேருந்துச் சேவையைப் பலப்படுத்துதல்.

- பயணிகளின் அளவு குறைவான வலயங்களில் பொதுப் போக்குரத்துச் சேவையை தொடர்ந்தேர்ச்சியாக முன்னெடுத்துச் செல்வதற்கு வரிச் சலுகைகளையும் தேவையானவிடத்து ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளை வழங்குதல்.

- ஒழுங்கு நடவடிக்கை மூலம் ஓட்டுநர்களை வழிநடத்துவதன் மூலம் வீதிப் போக்குவரத்துச ்சட்டங்கள் மீறப்படுவதை முற்றிலும் நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

- கண்ணியமான முறையில் பயணிகளுக்கு எந்தவிதமான துன்புறுத்தலும் இன்றி பேருந்துகளில் பயணிக்கக்கூடிய பின்னணியொன்றை ஏற்படுத்துவதற்குத் தேவையான உளப்பாங்குசார் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு பயணிகளையும் பேருந்துச் சேவை ஊழியர்களையும் அறிவுறுத்துவதுடன் அவை தொடர்பான தகவல்களை துரிதமாக அறிக்கையிடுவதற்கான ஒரு முறையை அறிமுகப்படுத்தலும் அறிக்கையிடப்படும் சம்பவங்கள் தொடர்பில் துரித நடவடிக்கை எடுப்பதற்கான தனியான அலகொன்றை நிறுவுதலும்.

- பயணிகள் பயன்படுத்தும் தனியார் வாகனங்களை பேருந்து நிலையங்களுக்கு அருகில் அருகில் தரித்து நிறுத்துவதற்கான (பார்க்கிங்) வசதிகளை ஏற்படுத்துதல்.

## முறையான, கட்டாயமான கால அட்டவணை முறையொன்றை அறிமுகப்படுத்தல்

- ரயில் சேவைக்கும் பேருந்து சேவைக்கும் கட்டாய கால அட்டவணை முறையொன்றை அறிமுகப்படுத்தல்.

- அதிகாலை முதல் நள்ளிரவு வரை கால அட்டவணை முறையொன்றுக்கு அமைய இயங்கும் பொதுப் போக்குவரத்துச் சேவையை கட்டாயமாக்குதல்.

- மேம்பட்ட தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட கால அட்டவணைகளை எவரும் இணையத்தைப் பயன்படுத்தி தேடக்கூடிய தரவு சேமிப்புத் தளமொன்றாக நிறுவுதல்.

- குறிப்பாக நீண்ட தூர சேவைகளில். பயணிகளுக்கு இடங்களை முன்பதிவு செய்வதற்கான வாய்ப்பை வழங்குதல்.

- ஒவ்வொரு ரயில் மற்றும் பேருந்து நிலையத்திலும் கால அட்டவணைகளைக் காட்சிப்படுத்தலும் அத்தகைய கால அட்டவணைப்படி இயங்குவதைக் கட்டாயமாக்குதல்.

## பொதுப் போக்குவரத்தை தொடர்புபடுத்துதல்

## போக்குவரத்தைத் தொடர்புபடுத்துவதற்கான ஒரு நிறுவனம்

- போக்குவரத்தானது பயணி ஒருவரின் சேரிடம் வரை தொடர்புபடுத்தக்கூடிய ஒரு சேவையாகக் கருதி அதற்காக அனைத்து போக்குவரத்துச் சேவைகளையும் அத்தகைய சேவைகளுடன் இணைந்த நிறுவனங்களையும் தொடர்புபடுத்துவதற்காக புதியதொரு நிறுவனத்தை நிறுவுதல்.

- அனைத்து தேசிய மற்றும் பிராந்திய போக்குவரத்து நிறுவனங்களையும் தொடர்புபட்ட உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கும் நிறுவனங்களையும் அவ்வாறு நிறுவப்படும் புதிய நிறுவனத்தின் கீழ் இணைத்தல்.

- இந்த புதிய நிறுவனத்துடன் அனைத்து தேசிய மற்றும் பிராந்திய போக்குவரத்து நிறுவனங்கள் அதனோடு தொடர்புடைய உள்கட்டமைப்பு நிறுவனங்களையும் இணைத்தல்.

- ரயில், பேருந்து சேவை இயங்கும் கால அட்டவணையை மாற்றியமைத்து, பயண சேரிடங்களைச் சென்றடையக்கூடிய விதத்தில் ரயில் மற்றும் பேருந்துப் பாதை வலையமைப்பை நவீனமயப்படுத்தி விஸ்தரிக்கும் செயற்றிட்டம் முன்னெடுக்கப்படும்.

## கிராமப்புற போக்குவரத்து

- சமுதாய முகாமைத்துவ அமைப்புகள் மூலம் பொருத்தமான தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி தற்போது பாழடைந்த நிலையிலுள்ள அனைத்து கிராமப்புற மற்றும் தோட்ட புற பாதைகளையும் புனரமைத்து பேண்தகு அடிப்படையில் பராமரித்தல்.

- கிராமப்புற மக்களின் அத்தியாவசிய சேவைகளான பாடசாலைகள், மருத்துவமனைகள், வர்த்தக நிலையங்கள், பொது நிறுவனங்களை திட்டமிட்ட முறைப்படி பொதுமக்களுக்கு நெருக்கமானதாக மாற்றுதல்.

- கிராமப்புற பாதைகளில் பேருந்துச் சேவையைத் தொடர்ச்சியாக இயக்குவதற்கும் தேவையானபோது விசேட வரிச் சலுகைகளையும ஏனைய ஊக்குவிப்புக்களையும் வழங்குதல்.

- கிராமப்புற மக்களின் உற்பத்திகளை ஏற்றிச் செல்வதற்கு, சரக்குப் போக்குவரத்துச் சேவைகளையும் குறிப்பாக அறுவடை காலத்தில் அமுல்படுத்தல்.

## நடைபாதை மற்றும் மிதிவண்டிப் பாவனையை ஊக்குவித்தல்

நகர்ப்புற போக்குவரத்து நெரிசலுக்கு ஒரு தீர்வாகவும், சுற்றுச்சூழல் நட்புறவான போக்குவரத்து முறையாகவும் மிதி வண்டிகளைப் பயன்படுத்துவதை ஊக்குவித்தல். பின்பற்ற வேண்டிய படிமுறைகள் பின்வருமாறு:

- நெரிசலான பகுதிகளிலுள்ள பிரதான நகரங்களிலும் அதைச் சுற்றியுள்ள பாதைகளிலிலுமிருந்து பிரதான நகரம் வரை பாதுகாப்பான மிதிவண்டிப் பாதைகளை அமைத்தல்.
- புதிதாக அமைக்கப்படும் அனைத்து புதிய பாதைகளிலும் மிதிவண்டிப் பாதைகளை அமைப்பதைக் கட்டாயமாக்கல்.
- மிதிவண்டிப் பாதைகள் அமைப்பதற்கு இணையாக மிதிவண்டிகளைப் பயன்படுத்துவதற்கு தேவையான உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல். (எடுத்துக்காட்டாக: அனைத்து ரயில் நிலையங்கள் - பிரதான பேருந்து நிலையம் - பிரதான நிறுவனங்கள் என்பவற்றை இணைத்து நிர்மாணிக்கப்படும் மிதிவண்டி நிறுத்துமிடங்கள்)
- மிதிவண்டிகளைக் கொள்வனவுசெய்வதற்கு சலுகைக் கடன் திட்டத்தை அறிமுகப்படுத்துதல்.

- இலங்கையில் அமுலிலுள்ள மிதிவண்டிப் பாவனையைக் கட்டுப்படுத்தும் அனைத்து விதிமுறைகளையும் நீக்குதல்.

## நடைபாதைகள்

- குறுகிய தூர போக்குவரத்தை ஊக்குவிக்கவும் நடந்துசெல்வதை ஊக்குவிக்கவும் சனச் செரிவான நகரங்களுக்கு மத்தியிலும் ஏனைய பிரதான மற்றும் இடைப் பாதைகளுக்கும் செல்வதற்கு நடைபாதைகளை அமைத்தல்.

- தேவையான ஒவ்வோரிடத்திலும் பாதுகாப்பான பாதசாரிகள் கடவைகளை அமைத்தல்.

- முடிந்தவரை சாலையின் இருபுறமும் நிழல் தரும் மரங்களை நடுதல்.

## சரக்கு மற்றும் பயணிகள் போக்குவரத்துக்கு நீர்வழிப் பாதையைப் பயன்படுத்தல்

நாட்டின் உள்பகுதிகளிலும் அதனை சூழவுள்ள கடல், கால்வாய்கள் மற்றும் ஆறுகளைப் பயன்படுத்தி வினைத்திறனான பயணிகள் மற்றும் சரக்குப் போக்குவரத்து சேவையை அறிமுகப்படுத்தல். அதற்காக, பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்படும்:

- நீர்வழிப் போக்குவரத்தை ஆராய்ச்சி மற்றும் அதனை மேம்படுத்துவதற்கான தொழில்நுட்ப அலகு ஒன்றை நிறுவுதல்.

- கொழும்பு பகுதியில் உள்ள நகர்ப்புற போக்குவரத்து நெரிசலுக்குரிய ஒரு தீர்வாக பயணிகள் மற்றும் சரக்குப் போக்குவரத்துக்காக தற்போதுள்ள கொழும்பை அண்டிய பகுதிகளிலுள்ள கால்வாய்களைப் பயன்படுத்துதல்.

- சாத்தியவள ஆய்வின் மூலம் அடையாளம் காணப்பட்ட நாட்டின் அனைத்து பகுதிகளிலும் நீர்வழிப் போக்குவரத்துச் சேவைகளை அமுல்படுத்தல்.

- கப்பல்களை அடையாளம் காணலும் நீர்வழிப் போக்குவரத்தை வசதிப்படுத்துவதற்காக துறைமுகங்களை அகலப்படுத்துதலும்.

## சிவில் விமான சேவை

மக்களுக்குத் தேவைப்படும் சந்தர்ப்பங்களில் வான் வழிப் போக்குவரத்து வசதிகளை நிறைவுசெய்துகொள்வதற்கு வசதியளிக்குமுகமாக நாட்டின் ஒன்பது மாகாணங்களையும் உள்ளடக்கக்கூடிய வகையில் உள்நாட்டு (சிவில்) விமான நிலையங்களை அபிவிருத்திசெய்து உள்நாட்டு வான் பயண சேவைகளை நிறுவுதல்.

## பெண்கள் - வயதுவந்தவர்கள் - வலதுகுறைந்த பயணிகளின் பாதுகாப்பும் உட்கட்டமைப்பு வசதிகளும்

பெண்களதும் வயதுவந்தவர்களதும் வலதுகுறைந்த சமுதாயத்தினரின் சிறப்பான போக்குவரத்துத் தேவைகளை நிறைவேற்றுவதற்காக பின்வரும் நடைமுறை பின்பற்றப்படும்:

## பெண்களின் போக்குவரத்துத் தேவைகள்

பெண்களுக்கு பாதுகாப்பான முறையிலும் கண்ணியமான முறையிலும் பொதுப் போக்குவரத்துச் சேவைகளைப் பயன்படுத்துவதற்கான உரிமையை ஏற்றுக்கொண்டு பொதுப் போக்குவரத்துச் சேவைகளில் பெண்கள் முகங்கொடுக்கும் பல்வேறு தொந்தரவுகளின்போது தலையிடும் ஒரு விசேட அலகை அறிமுகப்படுத்தல்.

- போக்குவரத்து சேவைகளில் ஏற்படும் இம்சைகளையும் பிரச்சினைகளையும் பற்றி தெரியப்படுத்துவதற்கான ஒரு கணினி மென்பொருளை அறிமுகப்படுத்துதல்.

- நீண்ட பயணங்களில் பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் அதாவது சுத்தமான கழிப்பறை வசதிகள், சுத்தமான உணவு வழங்கும் சேவைகள் இல்லாமைக்கான தீர்வாக பொருத்தமான வசதிகளை நிறுவுதல்.

## வயதுவந்தர்களதும் வலதுகுறைந்தவர்களதும் போக்குவரத்துத் தேவைகள்

வயதுவந்த மற்றும் ஊனமுற்ற குடிமக்களின் தேவைகள் தொடர்பில் பின்வரும் நடவடிக்கைகள் நடைமுறைபடுத்தப்படும், குறிப்பாக ரயில் மற்றும் பேருந்துகளில் வயதான மற்றும் ஊனமுற்ற சமூகத்திற்கு அணுகக்கூடிய போக்குவரத்து சேவையை நிறுவுவதை நோக்காகக் கொண்டு குறிப்பாக பின்வரும் செயற்பாடுகள் பின்பற்றப்படும்:-

- ரயில்கள், பேருந்துகள் போன்ற பொதுப் போக்குவரத்து துறைகளில் ஊனமுற்றோர் மற்றும் முதியோருக்கு அணுகல் முறையை ஏற்படுத்துவதை கட்டாயப்படுத்துதல்.

- வலதுகுறைந்தவர்களுக்கும் வயதுவந்தவர்களுக்கும் ரயில் மற்றும் பேருந்து நிறுத்தங்களை அணுகுவது தொடர்பில் வசதிகளை ஏற்படுத்தல்.

## பயணிகளை ஒழுங்கமைத்தல்

சிறந்த ஒரு போக்குவரத்துச் சேவையை நிறுவுதலும் பேணுவதற்குமான முக்கிய ஒரு கொள்கையாக அமைவது, ஒழுங்கமைந்த பயணிகள் இருப்பதாகும். அனைத்து விதமான பயணிகளின் ஒழுங்கமைவை எமது போக்குவரத்துக் கொள்கை அங்கீகரிக்கின்றது:

- பயணிகள் “ரயில் பயணிகள், பஸ் பயணிகள், முச்சக்கர வண்டிப் பயணிகள்”, மற்றும் “பாதசாரிகள், மிதிவண்டி ஓட்டுநர்கள்” என தங்களை ஒழுங்கமைத்து அமைப்பாக செயற்படுவதற்கு பயணிகளை ஊக்குவித்தல்.

- அரசாங்கம் பயணிகள் அமைப்புகளை சம்பந்தப்பட்ட துறையில் பயணிகள் பிரதிநிதிகளாக ஏற்றுக்கொண்டு அவர்களின் ஆலோசனைகளை ஏற்றுக்கொள்ளல், அவற்றை அழுத்தக் குழுக்களாக மட்டுமல்லாமல், போக்குவரத்துத் துறையில் முடிவெடுப்பவர்களாகவும் மாற்றுதல்.

## போக்குவரத்துடன் தொடர்புபடாத செயல்முறை

நெகிழ்வான அலுவலக நாட்கள் மற்றும் வேலை நேரங்களை அறிமுகப்படுத்துதல், சேவை வழங்கல் வாய்ப்புகளை விரிவுபடுத்துதல்.

நாட்டின் புறநகர்களில் இணையம் மற்றும் பிற வசதிகளுடன்கூடிய சேவை வழங்கல் வலயங்களை நிறுவுதல்.

## ஒன்றிணைந்த குடியிருப்புக்களும் சேவைகளைத் திட்டமிடலும்

ஒருங்கிணைந்த சேவை திட்டமிடல் மற்றும் நகர்ப்புற திட்டமிடல் ஆகியவை நாட்டின் பொருளாதார மற்றும் அரசியல் கொள்கைகளுடன் நீண்டகாலமாகவும், நிலைபேறானதாகவும் மக்களின் போக்குவரத்துத் தேவைகளை நிவர்த்திசெய்வதோடு, மேலும் இந்த போக்குவரத்துக் கொள்கை பிற கொள்கைகளுடன் இணைந்து செயற்படுத்தல்.

# 06

# சட்டத்திற்கு மதிப்பளிக்கின்ற ஒரு தேசம்

# புதியதோர் அரசியலமைப்பு

71 ஆண்டு காலமாக அவ்வப்போது மூன்று அரசியலமைப்புகளை அறிமுகப்படுத்துவதற்கும் இன்றைய அரசியலமைப்பு 19 தடவைகள் திருத்தப்பட்டபோதும் குறித்த எந்தவோர் அரசியலமைப்பினாலும் அல்லது திருத்தத்தினாலும் இலங்கைத் தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கு அல்லது மக்களின் ஜனநாயக சுதந்திரத்தையும் அடிப்படை மனித உரிமைகளையும் உறுதிப்படுத்துவதற்கும் மனித உரிமைகளைக் காப்பதற்கும் முடியவில்லை. ஆகையால், மேற்கூறிய நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு புதியதோர் அரசியலமைப்பைத் தயாரிக்க வேண்டுமென்றும் ஜனநாயகத்தையும் அடிப்படை உரிமைகளையும் மனித உரிமைகளையும் பாதுகாப்பது அதன் அடிப்படையாக அமைய வேண்டுமென்றும் நாம் நம்புகின்றோம்.

இன்றைய அரசியலமைப்பு முழுமையாக திருத்தப்பட வேண்டும் என்பதில் ஒருமித்த பொது உடன்பாடு காணப்படுகிறது. புதியதோர் அரசியலமைப்பின் மூலம் ஜனநாயகம், அடிப்படை மனித உரிமைகள், இனங்களுக்கிடையிலான ஒற்றுமை, பொருளாதார மற்றும் சமூக உரிமைகள் உறுதிப்படுத்தப்படல், பல்வேறு இனத்துவ அடையாளங்களும் சமமான உரிமைகளும் உறுதிப்படுத்தப்படுகின்ற விதத்தில் இலங்கைத் தேசியத்தை உருவாக்குதல் என்பன முக்கியமாக கவனிக்கப்பட வேண்டிய விடயங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

## நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சிமுறை

- நிறைவேற்றதிகாரங்கொண்ட ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழித்து பாராளுமன்றத்திற்கு பொறுப்புக்கூற வேண்டிய அமைச்சரவையைக் கொண்ட பாராளுமன்ற ஆட்சிமுறையொன்றை நிறுவுதல்.
- பாராளுமன்ற உறுப்பினர்களின் வாக்குகள் மூலம் ஜனாதிபதியை நியமித்தல்.
- ஜனாதிபதியானவர் அரசின் தலைவரும் படைக்கலன்தாங்கிய சேவைகளின் பிரதான முனைஞருமாவார்.
- ஒரு மாகாண சபை அரசியலமைப்பிற்கு முரணாக செயற்படும் பட்சத்தில் அதற்கெதிராக செயற்படக்கூடிய அதிகாரம் ஜனாதிபதிக்குண்டு.
- பாராளுமன்றத்தின் மேலாண்மையின் கீழ் பிரதம அமைச்சர் அடங்கலான அமைச்சரவைக்கு நிறைவேற்றதிகாரத்தை வழங்குதல்.
- அமைச்சரவையை 25 உறுப்பினர்களாக மட்டுப்படுத்துவதுடன், அதே எண்ணிக்கையில் பிரதி அமைச்சர்கள் தவிர்ந்த வேறெந்த விதமான அமைச்சர்களும் நியமிக்கப்பட மாட்டார்களா.
- பிரதம அமைச்சர் அரசாங்கத்தின் தலைவராவார் என்பதுடன் மக்களின் சட்டவாக்க, நிறைவேற்று மற்றும் நீதித்துறை அதிகாரம் செவ்வை மற்றும் சமநிலை (check & balances) கோட்பாட்டின் அடிப்படையில் தொழிற்படுதல்.
- பிரதம அமைச்சரும் அமைச்சரவையும் பாராளுமன்றத்திற்கு பொறுப்புக்கூற வேண்டுமென்பதுடன், பாராளுமன்றத்தின் நம்பிக்கை இருக்கும் வரை மட்டும் அவர்களுக்கு அப்பதவிகளை வகிக்க முடியும்.

## தேசிய ஒற்றுமையும் அரசியல் தீர்வும்

- இலங்கை, பல இனங்களும் பல மதப் பிரிவினரும் வாழும் பன்முக கலாசாரமொன்றைக் கொண்ட ஒரு நாடு என்பதை ஏற்றுக்கொள்ளல்.

- இனங்களுக்கிடையிலான வேற்றுமையையும் மத வெறுப்புணர்வையும் ஏற்படுத்தாத, பால்நிலை அல்லது வேறு காரணங்களின் அடிப்படையில் பாரபட்சம் காட்டப்படாதிருத்தல் என்ற நிபந்தனைகளின் கீழ் பேச்சுச் சுதந்திரத்தை உறுதிப்படுத்தல்.

- அனைத்து இனப்பிரிவுகளுக்கும் இருக்கின்ற கலாசார அடையாளத்தை ஏற்றுக்கொண்டு, குறித்த இனப்பிரிவுகளுக்கு தமது கலாசாரங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கும் அதேபோல் அதனை வளர்ப்பதற்குமான சுதந்திரமும் உரிமையும் ஒருசேர உண்டென்பதை ஏற்றுக்கொள்ளல்.

- அனைத்து இனப்பிரிவுகளின் அரசியல் அபிலாசைகளையும் குறிக்கோள்களையும் பிரதிநிதித்துவப்படுத்தி மாகாண சபைகளிலிருந்து தெரிவுசெய்யப்படும் பிரதிநிதிகளினாலும் பாராளுமன்றத்தினாலும் தேர்ந்தெடுக்கப்படும் புகழ்பூத்த, கற்றறிந்த தொழில்வாண்மையினரை உள்ளடக்கிய இரண்டாவது பிரதிநிதிகள் சபையை நிறுவுதல்.

## தேர்தல் முறை

- ஒவ்வொரு தேர்தல் தொகுதிக்கும் ஒரு மக்கள் பிரதிநிதியின் நேரடி பொறுப்புணர்வை உறுதிசெய்யும், எளிய பெரும்பான்மை பிரதிநிதித்துவ முறை, மாவட்ட இறுதி முடிவிற்கு விகிதாசார பிரதிநிதித்துவ முறை என்பவற்றை உள்ளடக்கிய கலப்புத் தேர்தல் முறையொன்றை அறிமுகப்படுத்தல்.
- ஸ்திரமான ஓர் அரசாங்கம் அமைக்கப்படுவதை உறுதிசெய்வதற்காக அதிகூடிய எண்ணிக்கையான இடங்களை வென்ற கட்சிக்கு குறித்த எண்ணிக்கை போனஸ் இடங்களை வழங்குதல்.
- மக்கள் பிரதிநிதித்துவ நிறுவனங்களில் பெண்கள் மற்றும் இளைஞர்களின் பிரதிநிதித்துவம் குறைந்தபட்சம் 25% ஆக இருப்பதை உறுதிப்படுத்துதல்.
- வாக்களிப்பதற்காக வயதை 16 வயதாக மாற்றுதல்.
- தேர்தல்களில் வெற்றிபெறும் கட்சி அல்லது வேட்பாளர் முன்வைத்த வேலைத்திட்டத்தை அமுல்படுத்துவதற்கான சட்டபூர்வ வலுவூட்டலை மேற்கொள்ளல்.

## பொது நிதி

- பாராளுமன்றத்திற்கு கட்டுப்பட்ட நிறைவேற்றுத்துறையொன்றை ஏற்படுத்துவதற்காக அனைத்து விடயங்களும் பற்றிய பாராளுமன்ற மேற்பார்வைக் குழுக்களை நியமித்தல்.
- மாகாணங்களிடையே நிதி மற்றும் வளங்களை விநியோகிப்பதற்காக அரசியலமைப்பின் மூலம் ஒரு சுயாதீன நிதி ஆணைக்குழுவை நிறுவுதல்.
-

## அடிப்படை உரிமைகள்

- சமூக, பொருளாதார உரிமைகளைப் பாதுகாத்தல் பற்றிய சர்வதேச சமவாயத்திற்கமைய உரிமைகளை அடிப்படை உரிமைகளாக ஏற்றுக்கொண்டு செயல்வலுப்படுத்துதல். அதற்கமைய முன்சிறுவர் பராய அபிவிருத்தி, கல்வியை பெறல், பிரத்தியேக சுகாதாரப் பாதுகாப்பு, தொழிலொன்றைப் பெற்றுக்கொள்ளல், வீடமைப்பு, சுத்தமான நீர், துப்புரவேற்பாடு, போதியளவு உணவும் போசாக்கும் என்பன அடிப்படை உரிமைகளாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

- சிறுவர்கள், மகளிர் மற்றும் மாற்றுத்திறனாளி சமூகத்தவரின் உரிமைகள் பற்றிய அரசியலமைப்புச் சட்டத்தை சர்வதேச சாசனங்களுக்கு ஏற்றவாறு விஸ்தரித்தல்.

- வேலைகளுக்காக நாட்டினுள் அத்துடன் நாட்டிற்கு வெளியே புலம்பெயரும் நபர்களின் வாக்குரிமையை உறுதிசெய்தல்.

## சுயாதீன ஆணைக்குழுக்கள்

ஏற்கனவே நிறுவப்பட்ட ஆணைக்குழுக்களுக்கு மேலதிகமாக கல்வி, பகுதியளவு அரசாங்க சேவை, வெகுஜன ஊடகம் ஆகிய துறைகளுக்கு சுயாதீன ஆணைக்குழுக்களை நிறுவி அரசியல் தலையீடுகளிலிருந்து அப்பிரிவுகளை விடுவித்தல்.

மக்கள் பிரதிநிதிகளை விசேட சிறப்புரிமையற்ற மக்களின் சேவகர்களாக்குதல்

## ஜனாதிபதி

- நீதிமன்றம் அல்லது வேறு நியதிச்சட்ட அதிகாரசபையொன்றினால் விதித்துரைக்கப்பம் ஒரு தண்டனையைத் தளர்த்துவதற்கான ஜனாதிபதியின் அதிகாரத்தை ஒழித்தல்.
- நாடு முழுவதிலுமுள்ள ஜனாதிபதி உத்தியோகபூர்வ வாசஸ்தலங்களை ஒழித்து ஒரு உத்தியோகபூர்வ வாசஸ்தலத்திற்கு அதனை மட்டுப்படுத்தல்.
- இளைப்பாறிய ஜனாதிபதிகளுக்கும அவர்களின் வாழ்க்கைத் துணைகளுக்கும் வழங்கப்பட்டுள்ள ஓய்வூதியம், விசேட கொடுப்பனவுகள் மற்றும் ஏனைய சிறப்புரிமைகள் அனைத்தையும் ஒழித்தல்.

## பாராளுமன்ற உறுப்பினர்கள்

- தனது பொறுப்பை நிறைவேற்றவில்லையெனில் அதேபோல் ஊழல் செயற்பாடுகளில் ஈடுபடுவராராயின் அவரைத் திருப்பியழைக்கும் அதிகாரம் ஆண்டுக்கொரு முறை வாக்காளர்களுக்குக் கிடைக்கின்றவாறான ஏற்பாடுகளை அரசியலமைப்பில் கொண்டுவருதல்.
- பாராளுமன்ற உறுப்பினர்களின் பிரத்தியேக பணியாள்தொகுதியினருக்கு குடும்ப உறவினர்களை இணைத்துக்கொள்வது தடைசெய்யப்படுவதுடன், அந்தந்த பதவிகளுகககு அடிப்படைக் கல்வித் தகைமகளை அறிமுகப்படுத்தல்.
- பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் பூரண வரி விடுதலையுடன் கூடிய வாகன அனுமதிப்பத்திர முறையை ஒழித்தல்.
- பாராளுமன்ற உறுப்பினர்களுக்க அமர்வுகளில் கலந்துகொள்வதற்காக செலுத்தப்படம் கொடுப்பனவுகளை ஒழித்தல்.

- பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு 05 ஆண்டுகளுக்குப் பின் வழங்கப்பம்ட ஓய்வூதியத்தை ஒழித்தல்.
- பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அல்லது குடும்பத்தவர்களுக்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ வியாபார நடவடிக்கைகளில் அல்லது ஒப்பந்த வேலைகளில் ஈடுபடுவதைத் தடைசெய்தல்.
- ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினர் வேட்பாளரதும் தகமைமைகளை பொதுமக்கள் அறிந்துகொள்ளக்கூடிய வகையில் தாக்கல்செய்யப்படும் நியமனப் பத்திரத்துடன் சத்தியக் கடதாசி ஒன்றின் மூலம் அவற்றை முன்வைப்பதைக் கட்டாயப்படுத்துதல்.
- மதுபானசாலை உரிமம் வைத்துள்ளவர்களுக்கு அல்லது அவர்களின் குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு எந்த விதமான அல்லது தேர்தலிலும் போட்டியிடுவதற்கான வாய்ப்பை இல்லாமலாக்குதல்.
- பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வாகனங்களை வழங்குவதற்கான பொது வாகனக் குழாமொன்றை நிறுவுதல்.
- பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சினால் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான ஒரு காப்பீட்டுத் திட்டம் அமுல்படுத்தப்படுவதால் ஜனாதிபதி நிதியத்திலிருந்து நிதி வழங்குவதை இடைநிறுத்துதுல்.

## நீதித்துறை

இன்றைய அரசியலமைப்பில் “நீதித்துறை சுதந்திரம்” என்ற உப தலைப்பின்கீழ் சில உட்பிரிவுகள் உள்ளடக்கப்பட்டிருந்தபோதும் அப்பிரிவுகள் உயர்நீதிமன்றம், மேன்முறையீட்டு நீதிமன்றம் என்பவற்றிற்கான நீதிபதிகளை நியமித்தல், பதவிக் காலம், பதவிநீக்கம் செய்தல், இளைப்பாறும் வயது, ஊதியம் முதலானவை தொடர்பில் மட்டுமே முக்கியமாக அவை ஏற்புடைத்தாகின்றன. நீதித்துறையில் நாடு எதிர்நோக்கியுள்ள அனுபவங்களைக் கவனத்திலெடுக்கும்போது, நீதிமன்றத்தின் சுதந்திரம் பற்றிய கொள்கையை உறுதிப்படுத்துவதற்கான யாதேனும் வெளிப்படையான ஏற்பாடுகளை அரசியலமைப்பில் உட்சேர்க்க வேண்டியுள்ளது.

1800 களில் பிரித்தானிய ஆட்சியாளர்களால் ஏற்படுத்தப்பட்ட ஒரு நீதித்துறை அமைப்பினாலும் சட்டத்திட்டங்களினாலும் எமது நாடு நிருவகிக்கப்படுகிறது. ஆகையால் இந்நாட்டின் நீதித்துறை அமைப்பு முற்றிலும் மீளமைப்புக்கு உள்ளாக்கப்பட வேண்டியுள்ளது. பொதுமக்களுக்கு நீதிமன்றத்தின் உதவியை நாடுவது மிகவும் கடினமானதாக உள்ளது. நீதிமன்றத்திற்குச் செல்வது செலவு மிகுந்ததாதலால், பொதுமக்களுக்கு நீதிமன்றத்தின் உதவி இல்லாமல் போயுள்ளது.

நீதித்துறையிலுள்ள தாமதம் இன்று ஒரு சமூகப் பிரச்சினையாக மாறியுள்ளது. புதிய நீதித்துறை சீர்திருத்தங்களின் ஊடாக பொது மக்களை நீதித்துறையுடன் நெருக்கமாக்கி செலவு அதிகமில்லாத நீதிமன்ற செயலொழுங்கு முறையொன்று ஏற்படுத்தப்படும். அதேபோல் நீதிமன்றத்தின் நிவாரணங்களை தாமதமின்றி பெற்றுக்கொள்ளத் தக்க வகையில் மறுசீரமைப்புகள் மேற்கொள்ளப்படும்.

நீதித்துறை சாராத நடுத்தீர்ப்புச் சபைகளாக தற்போது அமுலிலுள்ள மத்தியஸ் சபைகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதுடன் மக்களிடையே ஏற்படும் சிறு பிணக்குகளை அதனூடாக தீர்த்துவைக்கும் செயன்முறை ஊக்குவிக்கப்படும். மேலும் வழக்குகளை தாமதமின்றியும் வினைத்திறனுடனும் தீர்த்துவைப்பதற்கு நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதுடன் நீதிமன்றங்களுக்கு அதற்கான வசதிகள் வழங்கப்படும்.

- அடிப்படை உரிமைகள் மீறப்படும் சந்தர்ப்பங்களில் நாட்டின் எந்தவொரு பிரஜைக்கும் உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யக்கூடிய வகையில் அதன் அலுவல்கள் பன்முகப்படுத்தப்படுவதுடன், அதற்குத் தேவைப்படும் வழக்கறிஞர்களின் ஒத்தாசையை இலவசமாக வழங்குவதற்கான ஒரு நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்துதல்.
- அனைத்து விதமான மேன்முறையீட்டு நீதிமன்றத் தீர்ப்புக்களையும் அடிப்படை உரிமை மீறல் வழக்குகளையும் ஆறு மாத காலத்துள் முடிவுறுத்துதல் தொடர்பாக நீதிமன்ற அமைப்பை விஸ்தரித்தல்.
- அனைத்து சிவில் மற்றும் குற்றவியல் வழக்குகளையும் மாவட்ட மற்றும் நீதவான் நீதிமன்ற வழங்குகளையும் அவை தாக்கல்செய்யப்பட்ட தினத்திலிருந்து 12 மாத காலத்துள் முடிவுறுத்த நடவடிக்கை.
- காணி, குற்றவியல், போதைப்பொருள், கற்பழிப்பு மற்றும் சிறுவர் துஷ்பிரயோக குற்றங்கள் போன்றவற்றுக்கு ஏற்ப அத்தகைய வழக்குகளைத் தீர்த்துவைப்பதற்கு எடுக்கும் காலத்தைக் குறைக்குமுகமாக தேவைப்படும் சட்டத் திருத்தங்களைக் கொண்டுவருவதற்கான நடவடிக்கை.
- புதிய தொழில்நுட்பத்தை உபயோகித்து பொதுவான வாகனப் போக்குவரத்துக் குற்றங்களைக் கண்டறிவதற்கும் நீதிமன்றம் வரை செல்லாமல் அவை தொடர்பில் அபராதமொன்றை விதிப்பதன் மூலம் தீர்த்துவைப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல்.
- நீதிமன்றங்களில் வழக்குகளைத் தீர்த்துவைப்பதற்கு தேசிய மொழியைப் பயன்படுத்துதலும் வழக்குத் தீர்ப்புக்களை தரப்பினர்களுக்கு தான் விரும்பும் மொழியில் தீர்ப்புகளைப் பெறுவதற்கான உரிமையை வழங்குதலும்.
- உயர்நீதிமன்ற நீதிபதிகளும் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகளும் சேவையிலிருந்து இளைப்பாறிய பின் எந்தவொரு அரசாங்க அல்லது தனியார் துறை தொழிலிலும் ஈடுபடுவதையும் வெளிநாட்டுத் தூதுவர்களாகத் தெரிவுசெய்யப்படுவதையும் தடைசெய்தல்.

# இலஞ்சமும் ஊழலும்

இலஞ்சமும் ஊழலும் தொடர்பிலான இன்றுள்ள சட்டம் போதியதாக இல்லை. ஆகையால், அதனை முன்னேற்ற வேண்டியுள்ளது. கொழும்புடன் மட்டும் மட்டுப்படுத்தப்பட்ட இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவை (CIABOC) குறைந்தபட்சம் மாகாண மட்டத்தில் நிறுவ நடவடிக்கை எடுக்கப்படும். அதற்கமைய, பிரதேச வாரியாக இடம்பெறும் இலஞ்சமும் ஊழலும் பற்றி முறைப்பாடு செய்வதற்கு பொதுமக்களுக்கு வாய்ப்பு ஏற்படும். ஊழல் எதிர்ப்புக் கலாசாரமொன்றை ஏற்படுத்துவதற்கு பாடசாலைசெல்லும் பராயத்திலிருந்தே பொதுமக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

## செயற்பாடுகள்

- வீண்விரயம், இலஞ்சம், ஊழல், மோசடி உள்ளிட்ட அனைத்து நிதிக் குற்றங்களையும் ஒழித்துக்கட்டுவதற்காக பாராளுமன்றத்திற்கு மட்டும் பொறுப்புக்கூறக்கூடிய அனைத்து புலனாய்வு நிறுவனங்களையும் ஒருங்கிணைக்கும் ஒரு மத்திய பணியகத்தை நிறுவுதல்.
- இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வுசெய்வதற்கான ஆணைக்குழுவின் அலுவலகங்களை மாவட்டந்தோறும் நிறுவுதல்.

- இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வுசெய்வதற்கான ஆணைக்குழுவுக்குக் கிடைக்கப்பெறும் முறைப்பாடுகளை ஆறு(6) மாத காலத்துள் புலனாய்வுகளை நிறைவுசெய்து உரிய சட்ட நடவடிக்கை எடுத்தல்.
- தற்போது முறைப்பாடுகளாக கிடைக்கப்பெற்றுள்ள அனைத்து ஊழல் மோசடிகளையும் துரிதமாக விசாரணைசெய்து அந்தஸ்தைப் பாராமல் ஓராண்டு(01) காலத்துள் குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கு தண்டனை விதிப்பதற்கும் அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நட்டத்தை மீள அறவிட்டுக்கொள்வதற்கும் புலனாய்வு மற்றும் நீதிமுறைச் செயன்முறையை மிகவும் வினைத்திறனுடையதாக்குதல்.
- தற்போது காணப்படும் அனைத்து புலனாய்வு நிறுவனங்களையும் சுயாதீனமான நிறுவனங்களாக மாற்றியமைத்தல்.
- குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கு அரசியல் தஞ்சமளிப்பவர்களையும் குறித்த தவறுடன் தொடர்புடைய ஒருவராகக் கருதி சட்டத்தின் முன் நிறுத்துவதற்குத் தேவையான சட்டங்களை ஆக்குதல்.
- அரச வளங்களைத் துஷ்பிரயோகம் செய்வதன் மூலம் நாடு இழந்த பொதுமக்களின் பணத்தை மீள அறவிட்டுக்கொள்வதற்கான சட்டதிட்டங்களை ஆக்குவதை முக்கிய ஒரு கருமமாகக் கருதி நடவடிக்கை எடுத்தல்.
- இலஞ்சம், ஊழல், மோசடி போன்றன தொடர்பாக பொதுமக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும் அவற்றுக்கெதிராக பொதுமக்களை வலுப்படுத்தக்கூடிய அரச ஆதரவு பெற்ற ஓர் இயக்கத்தை நிறுவுவதற்கும் நடவடிக்கை எடுத்தல்.

# பொது நிருவாகம்

- விஞ்ஞான ரீதியான ஓர் அடிப்படைக்கமைய உருவாக்கப்படும் அமைச்சுக்களின் எண்ணிக்கையை 25 ஆக மட்டுப்படுத்தி அவற்றை வர்த்தமானியில் பிரசுரித்தல்.
- அமைச்சுச் செயலாளர்கள், தாபனத் தலைவர்கள், பணிப்பாளர் சபைகளை நியமிப்பதற்காக பாராளுமன்றத்திற்கு பொறுப்புக்கூறக்கூடிய முழு அதிகாரம்பொருந்திய ஒரு பணியகம்.
- அரச மற்றும் அரசோடிணைந்த நிறுவனங்களின் பதயியணியினர் எண்ணிக்கை தொடர்பாக மீண்டும் கணக்காய்வுசெய்து ஓராண்டு (01) காலத்துள் அரச சேவையை மீள்கட்டமைத்தல்.
- அனைத்து பகுதியளவு அரச, அரச, பொது தொழில்முயற்சிகள் மற்றும் தனியார்துறைக்கான ஓய்வூதியத் திட்டமொன்றுடன்கூடிய சமூகக் காப்பீட்டுத் திட்டமொன்றை ஏற்படுத்துதல்.
- போதைப்பொருள்கள் நாட்டுக்குள் ஊடுருவுவதைத் தடுப்பதற்காக அரச புலனாய்வுத் துறையையும் கரையோர காவல் படையையும் துறைமுகங்களையும் விமானநிலையங்களையும் ஒன்றிணைக்கும் சுயாதீன நடவடிக்கைப் பணியகமொன்றை (IOD) நிறுவுதல்.
- அனைத்து பகுதியளவு அரச நிறுவனங்களின் அனைத்து ஆட்சேர்ப்புகள், பதவிஉயர்வுகள், சேவை நீடிப்புகள் என்பவற்றுக்கான சுயாதீன ஆணைக்குழுவொன்றை நியமித்தல்.
- தொழில்புரியும் தாய்மார்களின் பராயமடையாத பிள்ளைகளுக்கான பகல்நேர பராமரிப்பு நிலையங்களை (Day Care Centres) நிறுவுதல்.

- வருடாந்த கணக்காய்வுப் பரிசோதனை அறிக்கைகளுக்கமைய அனைத்து அரச நிறுவனங்களுக்கும் இலஞ்சம், ஊழல் மற்றும் மோசடி பற்றிய சுட்டியொன்றை (Index) வழங்குதல்.
- இலஞ்சம், ஊழல் மற்றும் மோசடிக் குற்றச்சாட்டுக்களின்றி திறம்பட பணியிலீடுபடும் அரசாங்க ஊழியர்களையும் ஒவ்வொரு ஐந்து(05) ஆண்டுகளுக்கும் ஒருமுறை மதிப்பீட்டுக்கு உட்படுத்தி ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளை வழங்குதல்.
- அரச சேவை ஊடாக இடம்பெறக்கூடிய அடிப்படை உரிமை மீறல்கள் தொடர்பில் செயலாற்றுவதற்கு பாதிக்கப்பட்டவர்களுக்கு சட்ட உதவியையும் ஆதரவுச் சேவை வழங்கும் சுயாதீன நிறுவனமொன்றை நிறுவுதல்.
- ஓர் அரசாங்க நிறுவனம் மூலம் நிறைவேற்றப்படும் ஒவ்வொரு அத்தியாவசிய பொதுப் பணிக்கும் எடுக்கும் அதிகபட்ச நாட்களை குறித்துரைத்தல்.
- அடையாளம் காணப்பட்ட 30 சேவைகளுக்கான நடவடிக்கைகளை வீட்டிலிருந்தே பெறுவதற்காக “வீட்டுக்கு வீடு பொதுச் சேவை” என்ற திட்டத்தை ஆரம்பித்தல்.
- அரசு மற்றும் பகுதியளவு அரச நிறுவனங்களில் 05 வயதுக்குக் குறைந்த பிள்ளைகள் இருக்கின்ற தாய்மாருக்கு புதன்கிழமைகளில் 04 மணித்தியால விடுமுறையை வழங்குதல்.
- பொது சேவையின் அனைத்து தரங்களுக்கும் முறைப்படி பதவி உயர்வு வழங்கும் ஒரு நடவடிக்கைமுறையை அறிமுகப்படுத்துதல்.
- அரசாங்கத்தின் ஐந்து(05) ஆண்டு காலத்துள் தலைநகரெங்கும் பரந்துள்ள அனைத்து அரச மற்றும் பகுதியளவு அரச நிறுவனங்களையும் நிருவாகத் தலைநகரை அண்டிய கட்டிடங்களுக்கு எடுத்துச்செல்லல்.
- தலைநகர் முழுவதும் சிதறியுள்ள அனைத்து பொது மற்றும் அரை அரசு நிறுவனங்களை ஐந்து ஆண்டுகளுக்குள் சீர்திருத்தம் செய்தல்.
- சேவை முறைமாற்று அடிப்படையில் பணியிலீடுபடவேண்டிய அனைத்து அரசம ற்றும் பகுதியளவு அரச நிறுவனங்களின் அலுவலர்களுக்கு உத்தியோகபூர்வ குடிமனை/தங்குமிட வசதி வழங்கப்படுவதை கட்டாயமாக்குதலும் அவ்வசதியை வழங்குதலும்.
- நிர்வாகத் தலைநகரை அண்டியதாக அரச ஊழியர்களுக்கு தனியார்துறையினதும் பங்களிப்புடன் அனைத்து வசதிகளும்கொண்ட தொடர்மாடி வீடுகளை நிர்மாணித்தலும் அவற்றை தற்காலிக அடிப்படையில் வழங்குதலும்.
- அரசதுறை சம்பள முரண்பாடுகளை நீக்குவதற்கும் சிறப்பு மற்றும் சிறப்புரிமைபெற்ற குழுக்களின் சம்பளங்கள், விசேட சலுகைகளாக வழங்கப்படுவதைத் தடுப்பதற்கு பொதுத்துறை சம்பளக் கொள்கையொன்றை வகுத்து அதனை சட்டபூர்வமாக்குதல்.
- பெண்களதும் தாய்மாரதும் உரிமைகள்/தேவைகளுக்கு முன்னுரிமையளிக்கும் மிகவும் நெகிழ்வுப் போக்குடையதும் ஒளிவுமறைவற்றதுமான இடமாற்றக் கொள்கையொன்றை வகுத்தல்.
- பொதுமக்களுக்கு மேம்பட்ட ஓர் அரச சேவையை உறுதிப்படுத்தும் பொருட்டு மிகவும் திருப்திகரமான அரச சேவையை உருவாக்குமுமாக கடினமானதமும் அடையாளம் காணப்பட்டதுமான பிரபல்யமற்ற பணியிடங்களில் பணியிலீடுபடுத்தப்படும் பணியாள்தொகுதியினருக்கு சம்பளத்தின் அடிப்படையிலான ஓர் ஊக்குவிப்புக் கொடுப்பனவை வழங்குதல்.
- பயிற்சியையும் அபிவிருத்தியையும் கட்டாயமாக்குதல்.
- அரச துறைக்கு தொழில்தருநர்/தொழிலாளர் பங்களிப்புடன்கூடிய ஒரு சுகாதாரக் காப்பீட்டுத் திட்டத்தை அமுல்படுத்துதல்.
- அரச துறையின் பணியாள்தொகுதிக்கு ஆண்டொன்றில் பூரண சுகாதார பரிசோதனையொன்றை வழங்குதலும் அரச துறை அலுவலர்களின் சிறந்த உடல்

மற்றும் உளச் சுகாதார பேணல் கண்காணிப்பு முறையொன்றை அரச நிறுவனங்களில் அமுல்படுத்துதலும்.

- வினைத்திறனுடன்கூடிய அரச சேவையுடைய நாடுகளின் நடைமுறைகளுக்கு அமைய அரச துறை விடுமுறைகளை மீள்கட்டமைப்புக்கு உட்படுத்துதல்.
- அனைத்து அரச ஊழியர்களுக்கும் ஆண்டுக்கொரு முறை அதிகபட்சம் ஏழு நாள் விடுமுறையொன்றைப் பெறுவதற்கு வாய்ப்பளித்தலும் முன்னைய ஆண்டின் மீதமான விடுமுறைகளுக்கேற்ப குறித்த விடுமுறையைப் பெறுவதற்கான செலவில் ஒரு பகுதியை அரசாங்கம் ஏற்றல்.
- பாரம்பரிய செயலாற்றுகை மதிப்பீட்டுக்குப் பதிலாக நிதி/பிற நன்மைகளுடன் நேரடியாக தொடர்புபடுத்தப்பட்ட செயலாற்றுகை முறைமையொன்றை அறிமுகப்படுத்தல்.
- குறிப்பாக, பெண்களுக்கும் பிள்ளைகள் இருக்கின்ற தாய்மாருக்கு வீட்டிலிருந்தே கடமைகளை நிறைவேற்றுவதற்கு ஏற்ற வகையில் அரச சேவையை அடையாளம் காணப்பட்ட பணிகளை வீட்டிலிருந்தே நிறைவேற்றுவதற்கு ஏற்றதொரு முறையை ஏற்படுத்துதல்.
- பெண்களுக்கு மாதமொன்றில் ஒரு நாள் மாதவிடாய் விடுப்பு ஒன்றை வழங்குதல்.
- அரச சேவையில் 10 ஆண்டு கால சேவையைப் பூர்த்திசெய்த பணியாளர்கள் அரச சேவையிலிருந்து விலகி தனியார்துறை அல்லது பகுதியளவு அரச துறை அல்லது அரச சார்பற்ற துறை அல்லது வெளிநாட்டு வேலைவாய்ப்புகளில் ஈடுபடக்கூடிய விதத்தில் விருப்பத் தேர்வு அடிப்படையிலான ஓய்வுபெறும் வயதை அடையும்போது அத்திகதியன்று காணப்படும் இசைவான ஓய்வூதியமொன்றைப் பெறுவதற்குள்ள ஆற்றலை உறுதிப்படுத்தி ஓய்வுபெறுவதற்கான வாய்ப்பு ஏற்படுத்திக்கொடுத்தல்.
- பெண் அரச அலுவலர்கள் பிள்ளை வளர்ப்பின்போது பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் இடையில் சிறந்த இணக்கத்தை உறுதிசெய்வதற்காக பிள்ளையின் வயது மட்டத்தைக் கவனத்திலெடுத்து மகப்பேற்று விடுப்புக்கு ஒப்பான முறைமையொன்றை அறிமுகப்படுத்தல்.
- அரச அலுவலர்களின் ஒழுகலாற்றை ஊக்குவிப்பதற்கான ஒழுக்கச் சுட்டியொன்றை அறிமுகப்படுத்தலும் அதனை அடிப்படையாகக்கொண்ட ஊக்குவிப்புக் கொடுப்பனவுத் திட்டமொன்றை அறிமுகப்படுத்தலும்.
- அரச துறையில் தற்போது காணப்படும் முரண்பாடுகளை ஒழித்துக்கட்டுவதற்கும் மிகவும் வினைத்திறனானதும் பயனுறுதிவாய்ந்ததுமான ஒரு சேவையை பொதுமக்களுக்கு வழங்குவதற்கும் ஏற்ற வகையில் அனைத்துச் சேவைகளையும் தரங்களையும் மிக்க தர்க்கரீதியான அடிப்படையிலும் விஞ்ஞான அடிப்படையொன்றின் அடிப்படையிலும் தயாரிக்கப்படும் பல சேவைப் பிரமாணக்குறிப்புகளினுள் உட்படுத்துதல்.
- பல்வேறு நிபந்தனைகளின் கீழ் தற்போது அமுல்படுத்தப்படும் பட்டதாரிகள் அடங்கிய வெளிக்கள அலுவலர்கள்/திணைக்கள மற்றும் அமைச்சுக்களில் பணியிலீடுபடும் அபிவிருத்தி அலுவலர்கள், அதையொத்த சேவைகளின் அலுவலர்கள் என்போரை மிகவும் தர்க்கரீதியான அடிப்படையில் செயல்படும் ஒரு சேவைப் பிரமாணக் குறிப்பின் கீழ் உட்படுத்துதல். அவர்களின் பணிப்பொறுப்புக்களை தெளிவாக பொருள்வரையறை செய்தல்.
- முகாமைத்துவ சேவைக்கும் பிற சேவைகளுக்கும் மிகவும் தர்க்க ரீதியானதும் விஞ்ஞானபூர்வமானதுமான நிபந்தனைகளின் கீழ் அமுல்படுத்தப்படும் சேவைப் பிரமாணக்குறிப்பொன்றை அறிமுகம்செய்தல்.
- அனைத்து அலுவலர்கள் மத்தியிலும் தன்னாபிமானத்துடன் பணியாற்றுவதற்கான உளப்பாங்குகளை ஊக்குவித்தலும் அதற்கான விசேட நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்குசெய்தலும்.

# பொலிஸ் சேவை

சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டும்போது பொதுமக்களுக்கு மிகவும் நெருக்கமான ஒரு நிறுவனமாக பொலிஸ் மிக முக்கிய கருமமாற்றுகின்றது. அதேபோல் ஒரு சமூகத்தில் சட்டவாட்சி உறுதிப்பாடடைந்துள்ளதா என்பதை எடுத்துக்காட்டும்போது பொலிஸ் சேவையின் சுயாதீனமான செயற்பாடு மிக முக்கியமானதாகும். இருப்பினும் இன்று இலங்கை பொலிஸ் சேவையினால் ஆற்றப்படும் சேவை குறித்து கடும் விமர்சனங்கள் காணப்படுகின்றன. அரசியல் அல்லது பிற சமூகத் தொடர்பு அல்லது பணமளிப்புக்கள் இன்றி பொலிஸின் ஊடாக சேவையைப் பெறுவது சாத்தியமில்லையென்ற கருத்து சமூகத்தில் நிலவுவதன் காரணமாக பொலிஸ் சேவையின் கௌரவத்தன்மை குறைவடைந்துள்ளது. இலங்கை பொலிஸ் சேவையை பொதுமக்களுக்கு மிகவும் நெருக்கமான ஒரு சேவையாக மாற்றியமைப்பதற்கும் அதன் செயல்திறனை அதிகரிப்பதன் ஊடாக நட்புறவான ஒரு பொலிஸ் சேவையை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுப்பது இன்றியமையாததாகும்.

- பொலிஸ் பொதுமக்களுடன் நெருக்கமான உறவை ஏற்படுத்துவதற்கு "பொலிஸ் பொதுமக்கள் தொடர்புக் குழுக்களை" நிறுவுதல்.
- பொலிஸ் சேவையின் அனைத்து நியமனங்கள், பதவி உயர்வுகள், இடமாற்றங்கள் ஆகியவற்றை அரசியல் மயமாக்காமல் மேற்கொள்ளப்படுவதற்காக பொலிஸ் ஆணைக்குழுவுக்கு அதிகாரமளித்தல்.
- அனைத்து முறைப்பாடுகளையும் கணினிமயப்படுத்தலும் பொலிஸ் அறிக்கைகளை மின்னஞ்சல் ஊடாக வழங்குவதற்கு ஓராண்டு காலத்துள் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல்.
- பொலிஸாருக்குக் கிடைக்கும் அனைத்து முறைப்பாடுகளையும் 06 மாதங்களுக்கு முன்னர் விசாரித்து பூர்த்திசெய்தலும் அவ்வாறு விசாரணைகள் பூர்த்திசெய்யப்படாத கோப்புக்க் குறித்து பொலிஸ் ஆணைக்குழுவுக்கு அறிக்கையிடுதலும்.
- குற்றப் புலனாய்வுக்கு விஞ்ஞான ரீதியான பயிற்சி, நவீன தொழில்நுட்பக் கருவிகள், தகவல் தொழில்நுட்பவியல் என்பவற்றை உபயோகித்தல்.
- பொலிஸ் சேவையை தொழில்சார் பொலிஸ் சேவையொன்றாக மாற்றுவதற்குத் தேவையான அறிவையும் பயிற்சியையும் வழங்குவதற்காக பொலிஸ் பல்கலைக்கழகத்தை துரிதமாக நிறுவி குற்றவியல் மற்றும் குற்றவியல் நீதி, பொலிஸ்-பொதுமக்கள் உறவுகள், மதியுரை, உளவியல் போன்ற துறைகள் குறித்த பட்டக் கற்கைநெறிகளைத் தொடர்வதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக்கொடுத்தல்.
- பொலிஸாரின் சம்பளங்கள் மற்றும் படிகளை முழுதும் அளாவிய அரசாங்க சேவைக்கு விகிசாதார அடிப்படையில் அதிகரிப்பதற்கும் இலஞ்சம், ஊழல், மோசடியை பொலிஸ் சேவையிலிருந்து அகற்றுவதற்கான விசேட புலனாய்வுப் பிரிவை மிகவும் பலம்பொருந்தியதாக பொலிஸ், சிவில், சட்டம் என்ற வெளிக்கள அலுவலர்களை உள்ளடக்கி நிறுவுவதற்கு சட்டவாக்கங்களைச் செய்வதற்கும் நடவடிக்கை எடுத்தல்.
- சட்டவிரோதமான முறையில் பொதுமக்களுக்கு இழைக்கப்படும் பலவந்தங்கள், தாக்குதல்கள், பொய்க் குற்றச்சாட்டுக்களைப் புனைந்து சிறையிடல், அரசியல் தேவையின் பேரில் பொதுமக்களுக்கு இழைக்கப்படும் துன்புறுத்தல்களின்போது அவற்றுக்கெதிராக செயற்படுவதற்கு புதுமாதிரியாக நிறுவப்படும் பொலிஸ் ஆணைக்குழுவின் கீழ் செயல்படும் பொலிஸ் விசேட புலனாய்வுப் பிரிவுக்கு அதிகாரமளித்தல்.
- திறமையான பொலிஸ் அலுவலர்களை கௌரவித்தலும் பணரீதியான வெகுமதிகளையும் சான்றிதழ்களையும் வழங்கும் ஒரு வேலைத்திட்டமொன்றையும் அவர்களுக்கு வெளிநாட்டுப் பயிற்சியளிக்கும் ஒரு வேலைத்திட்டத்தையும் அமுல்படுத்துதல்.

- வீடொன்றுக்கான உரித்தற்ற அனைத்து பொலிஸ் அலுவலர்களுக்கும் வீடுகளை வழங்கும் ஒரு வேலைத்திட்டத்தை அமுல்படுத்தல்.

# சிறைச்சாலை

கடந்த காலத்தில் பல்வேறு சிறைச்சாலைகளிலுள்ள சிறைக்கைதிகள் கொலைசெய்யப்பட்டதுடன், மனிதாபிமானமற்ற சித்திரவதைகளுக்குள்ளான சம்பவங்கள் பற்றி அறிக்கையிடப்பட்டதிலிருந்து "சிறைக்கைதிகளும் மனிதர்களே" என்பது இன்று ஒரு தொனிப்பொருளுடன் மட்டும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதை எடுத்துக் காட்டுகிறது. இடநெறிசலும் சிறைக்கைதிகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் இல்லாதநிலையும் சிறைச்சாலைகள் எதிர்நோக்கும் பாரதூரமான பிரச்சினைகளாகும். சிறைச்சாலை சிறைக்கைதிகளைச் சீர்திருத்தும் ஓரிடம் என்பதை விட அவர்களுக்கு தண்டனையளிப்பதை இலக்காகக்கொண்ட ஓரிடமாக மாறியுள்ளது. சிறைச்சாலைகளினுள் இடம்பெறும் போதைப்பொருள் கடத்தலும் நிழலுலக செயற்பாடுகளும் காரணமாக இன்றளவில் அவை குற்றச்செயல்கள் பற்றி கற்றுக்கொள்ளக்கூடிய நிலையங்களாக மாறி சிறைவாசம் அனுபவிக்கும் திருந்தியவர்களுக்கு இடைஞ்சல்களை ஏற்படுத்தியுள்ளது. சட்ட நடவடிக்கைகள் பூர்த்தியடைவதற்கு நீண்டகாலம் எடுப்பதால் மறியற்சாலைகளில் இருக்கின்ற கைதிகளின் தொகை அதிகரிப்பதானது சிறைச்சாலைகளில் நிலவும் இடநெறிசலுக்கு முக்கிய ஒரு காரணமாகும். 2017 ஆம் ஆண்டில் மறியற்சாலைகளிலுள்ள குற்றத் தீர்ப்பளிக்கப்படாத கைதிகள் (unconvicted) 99,036 பேரும் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்ட (Convicted) கைதிகள் 22,833 பேரும் காணப்பட்டனர். அவர்கள் அனைவரையும் மனிதர்களாகக் கருதி செயலாற்றுவதற்கான முறைமையொன்றின் மீது கவனம் செலுத்த வேண்டும்.

## செயற்பாடுகள்

- சிறைச்சாலைகளில் இடம்பெறும் அனைத்து விதமான இம்சைகளையும் தடுப்பதற்கான முறையான ஒரு வேலைத்திட்டத்தைத் தயாரித்தல்.
- மனோநிலைகள் பற்றி பகுப்பாய்வுசெய்து அதனடிப்படையில் கைதிகளை வகுப்பீடுசெய்து தடுப்பில் வைத்தல்.
- சர்வதேச தராதரங்களுக்கு ஏற்புடையவாறு சிறைச்சாலைகளில் இடநெருக்கடி உள்ளிட்ட ஏனைய வசதிகளை விஸ்தரித்தல்.
- சமுதாய சீர்திருத்தச் சட்டத்தை முறைப்படி அமுல்படுத்தி சிறு குற்றச்செயல்களுக்கு தண்டனை அனுபவிப்பவர்களை சிறையிடாமல் சமுதாயஞ்சார் நிகழ்ச்சித்திட்டங்களுக்கு ஆற்றுப்படுத்துதல்.
- கைதிகளை சிறுகுழுக்களாக நிறுத்தி அவர்களை சீர்திருத்துவதற்கான ஆலோசனைகளையும் கல்விசார் நிகழ்ச்சித்திட்டங்களையும் அமுல்படுத்துதல்.
- கைதிகளின் தேகாரோக்கியத்தைப் பேணுவதற்கு முறைப்படியான தேகாப்பியாச நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துதல்.
- நீண்டகாலமாக சிறைவாசம் அனுபவிக்கும் கைதிகளை பல்வேறு உற்பத்திகள் மற்றும் சேவைகளில் ஈடுபடுத்திக்கொள்வதற்கான ஒரு நிகழ்ச்சித்திட்டத்தை இனங்காணல்.
- நல்ல நடத்தையுடைய சிறைக்கைதிகளை திறந்தவெளி சிறை முகாம்களில் தடுத்துவைத்தலும் அனுமதிப்பத்திரத்தின் பேரில் வீடுகளுக்குச் செல்வதற்கான ஒரு முறைமையை முறைவலுப்படுத்தி நிறுவுதல்.

- அனைத்த சிறைச்சாலைகளிலும் கல்வி மற்றும் தொழில் வழிகாட்டல் பாடநெறிகளை அமுல்படுத்துதல்.
- மறியற்சாலைகளில் நீண்டகாலமாக தடுத்துவைத்திருக்கப்படுவதைத் தடுக்கும் வகையில் குற்றவியல் நீதி முறையுடன் தொடர்புபட்ட நிறுவனங்களின் விளைதிறனை அதிகரித்தல்.
- தற்போதுள்ள அனைத்து புலனாய்வு நிறுவனங்களையும் சுயாதீன நிறுவனங்களாக மாற்றியமைத்தல்.
- குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டவர்களுக்கு அரசியல் தஞ்சமளிப்பவர்களையும் குறித்த தவறுடன் சம்பந்தப்பட்ட ஒருவராகக் கருதி சட்டத்தின் முன் நிறுத்துவதற்குத் தேவைப்படும் சட்டங்களை இயற்றுதல்.
- அரச வளங்களைத் துஷ்பிரயோகம் செய்வதன் மூலம் நாடு இழக்கின்ற பொது நிதியை மீள அறவிட்டுக் கொள்வதற்கான சட்டதிட்டங்களை தயாரித்தலும் அவற்றை அமுல்படுத்துதலும்.
- நிதி மோசடிகள், இலஞ்சம் போன்ற மோசடிச் செயல்களைத் தடுப்பதை நோக்காகக்கொண்டு முன்னோடிக் கருமமொன்றாகக் கருதி செயலாற்றுதல்.
- ஊழல், மோசடி, இலஞ்சம் போன்றன குறித்து பொதுமக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துதலும் அவற்றுக்கெதிராக பொதுமக்களை வலுப்படுத்தும் இயக்கமொன்றை அரச ஆதரவுடன் நிறுவுதலும்.

# போதைப்பொருள் தடுப்பு

இன்று, நச்சுப் போதைப்பொருள்களின் பாவனை சமூகத்தில் பேரிடரொன்றாக மாறியுள்ளது. தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் 2017 ஆம் ஆண்டுக்கான அறிக்கைக்கமைய நச்சுப் போதைப்பொருள் சார்ந்த குற்றச்செயல்களுக்காக 34,970 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்களில் 20 -24 வயதுப் பிரிவிலுள்ள 24% சதவீதத்தினரும் ஆண்களில் 97% சதவீதத்தினரும் பெண்களில் 3% சதவீதத்தினரும் அடங்குவர். விவாகமானவர்களின் சதவீதம் 53% ஆக இருப்பதுடன் 4,454 பேர் விவாகமாகாதவர்களாவர். கல்வியின் அடிப்படையில் நோக்கின், தரம் 5-10 இடைப்பட்ட கல்விபெற்றவர்களின் எண்ணிக்கை 45% சதவீதமாகும். 2018 ஆம் ஆண்டில் நச்சுப் போதைப்பொருள்களை தம்வசம் வைத்திருந்தமைக்காக கைதுசெய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 95,679 ஆகும்.

இவ்வாறு எண்ணிக்கை ரீதியில் குறிப்பிடக்கூடியதாக இருந்தபோதும், கைதுசெய்யப்பட்ட நச்சுப் போதைப்பொருள்களுக்கு அடிமையான கணிசமான எண்ணிக்கையில் சமூகத்தில் காணப்படுகின்றனர். அண்மைக்காலமாக பரவலாக பலதரப்பட்ட நச்சுப் போதைப்பொருள்கள் பாடசாலை மாணாக்கர்கள் மத்தியில் ஒரு பேரனர்த்தத்தின் வடிவில் பரவி வருகிறது.

இன்று, அரசியல் மற்றும் பிற ஆதிக்கசக்திகளின் பாதுகாப்பில் இலங்கை பிராந்தியத்தின் போதைப்பொருள் பரிமாற்று மையமொன்றாக மாறியுள்ளது. திட்டமிட்ட குற்றச்செயல்களின் அதிகரிப்பின் மீது அது பெரிதும் பாதிப்புச் செலுத்தியுள்ளது.

## நோக்கங்கள்

நச்சுப் போதைப்பொருள்களின் பாவனை, விற்பனை, விநியோகம் மற்றும் ஏனைய தாக்கங்கள் அற்ற ஒரு நாடாக மாற்றுவதும் போதைப்பொருள்களுக்கு அடிமையானவர்கள் அற்றதொரு நாட்டை உருவாக்குதலும்.

## செயற்பாடுகள்

- போதைப்பொருள் சார்ந்த குற்றச்செயல்களுக்கு தண்டனையளித்தலை கடுமையாக்குவதற்கும் அது சம்பந்தமான வழக்கு விசாரணைகளைத் துரிதப்படுத்துவதற்கும் தேவையான சட்டத் திருத்தங்களை மேற்கொள்ளல்.
- போதைப்பொருள்களை நாட்டுக்குள் ஊடுருவும் பிரதான வழிமுறைகளான வான், கடல் மார்க்கங்களில் பரிசோதிப்பதற்கான வசதிகளை முன்னேற்றுதலும் நவீன பரிசோதனைக் கருவிகளை அறிமுகப்படுத்தலும் அலுவலர்களுக்குப் பயிற்சியளித்தலும்.
- தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் பணிகளை விஸ்தரித்து பாடசாலைப் பிள்ளைகள், பெற்றோருக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை தொடர்ச்சியாக மேற்கொள்வதன் மூலம் புதிதாக அடிமையாவோரின் அளவைக் குறைத்தல்.
- போதை அரக்கன் கிராமத்துள் ஊடுருவும் வலையமைப்பு குறித்த தகவல்களைத் திரட்டி அத்தகைய தகவல்களைப் பகுப்பாய்வு உட்படுத்தி அதனுடன் சம்பந்தப்பட்ட நபர்களுக்கு சமூக ரீதியாக அழுத்தமொன்றைப் பிரயோகிக்கக்கூடிய, ஒழுங்கமைந்த, சமுதாய அடிப்படையிலான குழுவொன்றை கிராமத்தில் ஏற்படுத்தலும் தேவைப்படும் வசதிகளை ஏற்பாடுசெய்து அதனை உரிய முறையில் நெறிப்படுத்தக்கூடிய அரச பொறிமுறையொன்றை ஏற்படுத்தலும்.
- நாட்டைச் சூழவுள்ள கரையோரப் பகுதிகளில் பொலிஸாரையும் சமுதாயத்தவர்களையும் இணைத்துக்கொண்டு கண்காணிப்புக் குழுக்களை நிறுவுதல்.

# 07

# பாதுகாப்பளிக்கின்ற ஒரு தேசம்

# வெளியுறவுக் கொள்கை

இன்றைய உலக அரசியல் ஒரு நிலைமாறு கட்டத்தை அடைந்து வருகிறது. 1990 களுக்குப் பிறகு தோன்றிய உலக அதிகாரச் சமநிலைக்கு ஆசிய நாடுகளின் எழுச்சி ஒரு சவாலாக இருப்பதாகத் தோற்றளிக்கின்றபோதும், உலகின் பொருளாதார மற்றும் அரசியல் பலத்தை வழிநடாத்தும் அதிகாரங்களுக்கிடையில் ஒருவித சமநிலையின்மை தற்போது உருவெடுத்துள்ளது. மறுபுறம், உலகளாவிய நிறுவனங்களின் ஊடாக ஆட்சிமுறையும் பொருளாதார செயன்முறையும் தொடர்பான பெரும் சமூக விதிமுறைகள் பல உருவாகியுள்ளதுடன் சாத்தியப்பாடுகளின் அடிப்படையில் ஒரு கீழ்நிலை நாடென்ற வகையில் அதன் தாக்கம் இலங்கையினால் பெரிதும் உணரப்படுகிறது. சுதந்திரத்தையடுத்த காலகட்டத்தில் இலங்கை சர்வதேச ஒழுங்கில் தளர்வான ஒரு நாடாகத் தோற்றமெடுப்பதற்கு மிக முக்கிய காரணம், இலங்கையின் வெளியுறவு அரசியல் மற்றும் பொருளாதாரக் கொள்கை ஒரு சார்புநிலையாக இருந்து வந்தமையும் இராஜதந்திர செயன்முறை தேசிய அபிலாசைக்குப் பதிலாக நடப்பாட்சிகளின் நலன்களுக்கு அடிபணியும் ஒன்றாக மாறியது.

உலகமயமாக்கலும் சர்வதேச மூலதனம் மற்றும் அரசியல் தலையீடும் மிகவும் முனைப்படைந்துள்ள ஒரு யுகத்தில் சுயாதீனமான, தேசிய மக்கள் அபிலாசையினால் உந்தப்படும் உலக அமைதிக்கும் சகவாழ்வுக்கும் ஆதரவாக அமைவதுடன் எமது நாட்டின் இயல்திறனை அலங்கீகரிக்கும் ஓர் உலக அரங்கில் வரவேற்புக்கு உட்படும் உலகின் அதிசிறந்த ஓர் அரசை உருவாக்கிக் கொள்வதே நமது வெளியுறவுக் கொள்கையின் பரந்த நோக்கமாகும்.

## செயற்பாடுகள்

### அணிசேராமை

உலகளவிலான அதிகார அரசியலுக்கு இரையாகும் ஆபத்து எம் எதிரே எப்போதும் உள்ளது. பிராந்திய ரீதியிலும், சர்வதேச ரீதியிலும் நிலவும் அரசியல் நெருக்கடிகளை எதிர்கொண்டு நீதியின் பாதையில் நாம் பயணிக்க வேண்டும். உலகின் அனைத்து முற்போக்கான நாடுகளுடனும் ஒன்றாகப் பிணைந்து போட்டிக்குப் பதிலாக ஒத்துழைப்புடனும் சர்வதேச சமத்துவத்துவத்தை ஊக்கப்படுத்தும், நிரவி உலகொன்றை உருவாக்கும் அணிசேரா கொள்கையொன்றைப் பின்பற்றல்.

### சுதந்திரம்

ஒரு சிறிய நாடானபோதும் நாங்கள் எங்கள் அரசியல் ரீதியான சுயாதீனத்தன்மையையும் அடிமைத்தளையற்ற சுதந்திரத்தையும் முக்கியமாக போற்றி மதிக்கிறோம். புதிய எதேச்சதிகாரத்தின் புதுவித சொரூபத்தைக் கவனமாக இனங்கண்டு ஜனரஞ்சகவாதமற்ற மாதிரியொன்றைக்கொண்ட ஜனநாயகத்தை இலக்காகக்கொண்ட கொள்கையொன்றின் மூலம் அப்புதுவித எதேச்சதிரகார யுகத்திற்கு முகங்கொடுப்பதற்குத் தேவையான தேசிய மனோபாவத்தையும் சர்வதேச செயற்பாடுகளையும் உருவாக்குதல்.

### உலக அமைதியும் சகவாழ்வும் நீதியும்

உலக அரசியல் என்பது மனித குலத்திற்கிடையிலான புரிந்துகொள்ளலையும் கௌரவத்தைக் காப்பதுமான ஒரு செயன்முறை என்பதை ஏற்றுக்கொண்டு, உலக அமைதியை ஊக்குவித்து

உலகந்தழுவிய பிரச்சினைகளுக்கு சகவாழ்வுடன் செயல்பட சர்வதேச மற்றும் பிராந்திய நிறுவனங்கள் மத்தியில் எமது அடையாளத்தை உறுதிப்படுத்தல்.

## உலகளாவிய நோக்கும் உள்ளூர்ச் செயற்பாடும்

குறுகிய பிராந்திய சிந்தனையொன்றுடன் புதிய உலக ஒழுங்கை எதிர்கொள்ள முடியாதென்பதால் உலக பொருளாதார, கலாசார மற்றும் தொழில்நுட்ப செல்நெறிகளை உள்ளூர் ரீதியில் தழுவி சர்வதேச உலகில் இயங்குதல்.

## இடைநிலைகளை அங்கீகரிக்கும் ஒரு உலக ஒழுங்கை ஆதரித்தல்.

உலக அரசியல் என்பது பலசாலிகளின் ஒரு போராட்டமோ பிராந்திய ஆதிக்கம் செயல்படவேண்டிய களமோ அல்ல. ஆனால் உலகளாவிய மற்றும் பிராந்திய ரீதியாக முடிவெடுக்கும் செயல்முறைசார்ந்த இடைநிலை யதார்த்தமாகும். எனவே, உலக அரசியலில் ஜனநாயக நீரோட்டத்தை விசாலிப்பதற்குத் தேவையான சர்வதேச ஆதரவைக் கட்டியெழுப்ப நடவடிக்கை எடுத்தல்.

## வெளிநாட்டுத் தூதராண்மைக் குழுக்கள்

ஒவ்வொரு தூதுவரகத்திற்கும் பின்வரும் விடயங்கள் சார்பாக ஒரு செயலாற்றற் குறிகாட்டி:

- இருபுடை வர்த்தக ஒப்பந்தங்கள்
- சமூக பொருளாதார நன்மைகள்
- வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் அளவு
- வெளிநாட்டு வேலைவாய்ப்புகளின் அளவு
- உலக அரசியலில் இலங்கைக்கு வழங்கப்பட்ட இராஜதந்திர ஒத்துழைப்பு
- ஏற்றுமதி ஊக்குவிப்புக்கான பங்களிப்பு

- தோல்வியடைந்த மக்கள் பிரதிநிதிகள் மற்றும் அரசியல் கட்சிகளின் அதிகாரிகளை தூதுவர்களாக நியமிக்கும் முறை ரத்து.
- தூதுவர் பதவிக்கு அதிகபட்ச வயதெல்லை 70.
- தூதரக சேவைக்கு நியமனம் பெற முன், இராஜதந்திரிகள் உட்பட அனைத்து அதிகாரிகளும் ஆங்கிலம் உட்பட ஜெர்மன், பிரஞ்சு, சீனம் ஆகிய மொழிகளில் ஒரு மொழியிலும் சர்வதேச உறவுகளிலும் ஆறு மாத காலப் பயிற்சி பெற வேண்டும்.
- தூதரகம் தகவல் வலையமைப்பு மூலம் நாட்டின் புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் நலன் மற்றும் வேலைவாய்ப்பு பிரச்சினைகளை ஒருங்கிணைத்து தொடர்ந்து கண்காணிக்கும் ஒரு பொறிமுறையை உருவாக்குதல்.
- வெளிநாட்டில் கல்வியைத் தொடரும் மாணவர்களுக்குத் தேவையான தொடர்பிணைப்பும் இளைஞர் திட்டங்களை ஒருங்கிணைத்து செயல்படுத்துவதன் மூலம் சுற்றுலா தொழில்முயற்சியை ஊக்குவித்தலும்.
- முறையான ஆய்வுக்குப் பிறகு, தூதராண்மை அலுவலகங்களை வலுப்படுத்தவும் தேவையற்ற அலுவலகங்களை மூடுவதற்கும் உரிய நடபடிகள்.
- கணக்காய்வுக்குப் பிறகு தூதராண்மை அலுவலகங்களின் ஊழியர்களின் எண்ணிக்கையை மீள்கட்டமைக்க நடவடிக்கை எடுத்தல்.
- நாட்டுக்கு நன்மைகளைக் கொணரும் இருபுடை மற்றும் பல்புடை வர்த்தக ஒப்பந்தங்களை கைச்சாத்திடல்.

# தேசிய பாதுகாப்பு

முப்பது ஆண்டு கால யுத்தமும் சமீப காலமாக அவ்வப்பொது ஏற்பட்ட மதரீதியான மோதல்களும் காரணமாக தேசிய பாதுகாப்பு என்பது ஒரு வலுவான யுத்தப் பொறிமுறையை ஏற்படுத்தல் என்ற குறுகிய பொருள்வரைறையுடன் சுருங்கியுள்ளது. எனவே தேசிய பாதுகாப்பின் தற்போதைய மற்றும் வரையறுக்கப்பட்ட கருத்தாக்கத்தை நாம் விரிவுபடுத்த வேண்டிய தேவை நம் எதிரேயுள்ளது.

தேசிய பாதுகாப்பு என்பது வெளிப்புற இராணுவ மற்றும் பிற மூலோபாய தலையீடுகளுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதன் மூலமும், உள்நாட்டு மோதல்களுக்கு இடமளிக்காமல் பொதுமக்களுக்கு பலியாவதற்கு அனுமதிக்காமல் குடிமகனின் பாதுகாப்பை உறுதி செய்வதன் மூலமும் நாட்டின் இறையாண்மையைப் பாதுகாப்பதாகும்.

மறுபுறம், அரசாங்கத்தின் அரசியல் குழுக்களின் அதிகாரத்தை உறுதிப்படுத்திக் கொள்வதையும் எதிரணிக் குழுக்களை பலவீனப்படுத்திக் கொள்வதையும் நோக்காகக்கொண்டு தேசிய பாதுகாப்பு சமீபத்திய காலங்களில் மூலோபாய ரீதியாக பயன்படுத்தப்பட்டு வருகிறது. அதே நேரத்தில் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டைப் பெறுவதற்கான குறுகிய கால மூலோபாயமாக தேசிய பாதுகாப்பு என்ற கருத்துருவை எதிர்க்கட்சிகளின் சில குழுக்கள் துஷ்பிரயோகம் செய்வதைக் காண முடிந்தது.

## நோக்கங்கள்

- இராணுவ, பொருளாதார மற்றும் பிற மூலோபாய வெளிநாட்டுத் தலையீடுகளுக்கு எதிராக செயல்படுவதன் மூலம் நாட்டின் இறையாண்மையைப் பாதுகாத்தல்.
- நாட்டின் அனைத்து தேசிய இனங்கள், மதங்கள் மற்றும் பல்லினத் தன்மைவாய்ந்த வேறு இனக் குழுமங்கள் ஒருவருக்கொருவர் கலாசார அடையாளங்களைக் காத்து நம்பிக்கையுடனும் புரிந்துணர்வுடனும் இலங்கை தேசமாக செயல்படக்கூடிய ஒரு சூழலைக் கட்டியெழுப்புதல்.
- தேசிய மற்றும் பொது ஏமம் தொடர்பான அனைத்து அரச பொறிமுறைகளும் பொதுமக்களுக்கு பொறுப்புக்கூறும் நிறுவனங்களாக மாற்றுதல்..

## செயற்பாடுகள்

- உலக அரசியலின் எந்தவொரு அதிகார மையத்திற்கும் சார்பான அல்லது பக்கச்சார்பற்ற ஒரு அணிசேரா வெளியுறவுக் கொள்கை.
- நாட்டின் இயற்கை வளங்களை அல்லது நிலத்தை எந்த வகையிலும் ஒரு வெளிநாட்டுக்கு அல்லது நிறுவனத்திற்கு உரிமை மாற்றுவதிலிருந்து அல்லது தனியாக நீண்டகால குத்தகைக்கு விடுவதிலிருந்து தவிர்ந்திருத்தல்.
- எந்தவொரு வெளியக அல்லது உள்யக ஆதிக்க சக்தியிடமிருந்தும் தொடுக்கப்படக்கூடிய போரியல்சார், அரசியல்சார், பொருளாதாரம்சார், கலாசாரம்சார் அச்சுறுத்தல்களுக்கும் நெருக்குதல்களுக்கும் முகங்கொடுப்பதற்கும் அவற்றை வெற்றிகொள்வதற்கும் தேவையான இராஜதந்திர பொறிமுறையொன்றையும் மோதல் தீர்வுச் செயன்முறையொன்றையும் தொடர்ந்தும் பேணுதல்.

- எந்தவொரு வெளியக அல்லது உள்யக ஆதிக்க சக்தியிடமிருந்து தொடுக்கப்படக்கூடிய போரியல் அச்சுறுத்தலொன்றுக்கு முகங்கெடுக்கக்கூடியவாறு பாதுகாப்புப் படைகளையும் இணைந்த நிறுவனங்களையும் பலப்படுத்துதல்.
- நாட்டுப் பிரஜைகளின் சுதந்திரமும் உயிர்ப் பாதுகாப்பும், இறைமை, ஆட்புல ஒருமைப்பாடு, சுயாதிபத்தியம், பெருமை என்பவற்றைப் பாதுகாக்கக்கூடிய ஒரு பொறிமுறையை அறிமுகப்படுத்தல்.
- இயற்கைப் பேரழிவுகள், தொற்றுநோய்கள் மற்றும் பஞ்சம், தொழில்துறை மற்றும் சுற்றுச்சூழல் மாசுபாடு காரணமாக பொது ஏமத்துக்கு அச்சுறுத்தல்களை ஏற்படுத்தும் அச்சுறுத்தல்களை முன்கூட்டியே அடையாளம் காணல், தடுப்பதற்கான பொறிமுறைகளை அமைத்தல், உரிய முறையில் அமுல்படுத்தல்.
- வெவ்வேறு இனப் பிரிவுகளிடையே மத மற்றும் கலாசார மோதல்களைத் தடுப்பதன் மூலமும், மக்களிடையே அமைதியை உருவாக்குவதன் மூலமும் உள் சகவாழ்வு பற்றிய ஸ்திரத்தன்மையை உறுதிசெய்தல்.
- சர்வதேச போதைப்பொருள் கடத்தல், ஆட்கடத்தல் மற்றும் பிற சட்டவிரோத நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதற்குத் தேவையான சட்ட அமைப்பைப் பலப்படுத்துதல்.
- பெண்கள், குழந்தைகள், முதியவர்கள் மற்றும் வலதுகுறைந்தவர்கள் ஆகிய சனத்தொகைக்கு ஏற்படக்கூடிய இம்சைகளையும் வன்முறைகளையும் தடுத்தல்.
- தொழில்நுட்ப அச்சுறுத்தல்களினால் தேசிய பாதுகாப்பிற்கு ஏற்படக்கூடிய பாதிப்பைத் தடுத்தல், சைபர் வெற்றிடப் பாதுகாப்பை விஸ்தரித்தல், தொழில்நுட்ப ஆபத்துக்களைத் தடுத்தல்.
- அரச வளங்களின் பாதுகாப்பையும் சுதேச மரபுரிமைகின் பேணலையும் பேண்தகு தன்மையையும் உறுதிசெய்து எதிர்கால சந்ததிக்கும் அத்தகைய வளங்களை அன்பளிப்புச் செய்தல்.
- முப்படைகள் மற்றும் காவல்துறையை அரசியல் கலப்பற்றதாக்கலும் பாதுகாப்புச் சேவையை மிகவும் திறமையாகவும் மாற்றத் தேவையான நவீன தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தலும்.
- தேசிய பாதுகாப்பையும் ஒழுங்கையும் பாதுகாக்கும் அனைத்து தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தத் தேவையான வீட்டுவசதி, சுகாதாரம் மற்றும் பிற உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல்.

# ஊடக சுதந்திரமும் தகவலுக்கான அணுகும் வாய்ப்பும்

ஒரு ஜனநாயக சமூகத்தின் நல்வாழ்வில் வெகுஜன ஊடகங்கள் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும். ஆனால் பொதுவாக இலங்கையில், பொதுவாக, சமூகத்தின் நலனுக்காக அன்றி ஊடக நிறுவனங்களின் உரித்தாளிகளின் நலன்களுக்காகவோ அல்லது அரசின் நலனுக்காகவோ ஊடகங்களின் இந்த சக்தி பயன்படுத்தப்படுகிறது. இது தற்போது நாடு எதிர்கொள்ளும் பல சமூக-பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிகளை நேரடியாக பாதிக்கிறது. வெகுஜன ஊடகங்கள் மக்களின் பிரச்சினைகளை முறையாக ஆராய வேண்டும். நாட்டில் ஒரு சிறந்த ஊடக கலாசாரத்தை உருவாக்குவது, மக்கள் தகவல் அறியும் உரிமையை சிதைக்காமல் உறுதிசெய்யும்.

## நோக்கு

- அரச ஊடகங்களை பொதுச் சொத்தாகக் கருதி செயலாற்றுதல்.
- வானொலி மற்றும் தொலைக்காட்சி அதிர்வெண்களைப் பயன்படுத்தும் அரச அல்லது தனியார் ஊடக நிறுவனங்கள் அத்தகைய அதிர்வெண்கள் ஒரு பொதுச் சொத்தாகக் கருதி செயலாற்றுதல்.
- வெகுஜன ஊடகங்களின் சுதந்திரத்திற்கு மதிப்பளித்தும் அவற்றின் சுயாதீனமான பயன்பாட்டை அனுமதித்தும் வெகுஜன ஊடகங்கள் கருத்து வெளிப்பாட்டுரிமையையும் சரியான தகவல்களை அணுகுவதற்கான பொதுமக்களின் உரிமையையும் சரிசமமாக உறுதிப்படுத்துதல்.
- ஊடக நிறுவன உரிமையாளர்களின் அல்லது வேறு அழுத்தங்கள் இன்றி செயலாற்றக்கூடியவாறு ஊடகவியலாளர்களின் தொழில்சார் உரிமைகளையும் சுதந்திரத்தையும் உறுதிப்படுத்துதல்.

## செயற்பாடுகள்

- ஊடக நிறுவனங்களுக்குரிய பண்டங்கள், சேவைகளுக்கு வருமான வரி வில்களித்தல்.
- ஊடக நிறுவனங்களுக்கும் ஊடகவியலாளர்களுக்கும் ஒழுக்கநெறிக் கோவையொன்றை அறிமுகப்படுத்தல்.
- ஊடகவியலாளர்களுக்கான காப்பீட்டுத் திட்டமொன்றை அறிமுகப்படுத்தல்.
- ஊடக தொழிற்றுறையாளர்களுக்கு உயர்கல்வி நடவடிக்கைகளுக்காக ஊடக பல்கலைக்கழகமொன்றை நிறுவுதல்.
- ஊடகங்களிடையிலான சுதந்திரமான போட்டிக்கு மிகச் சிறந்த ஊடக பிரயோகமொன்றை ஊக்குவிக்கும் நோக்குடன் தரமான செய்தித்தாள்கள், தொலைக்காட்சி, வானொலை அலைவரிசைகள், ஊடகவியலாளர்கள், நிகழ்ச்சிகள், ஆக்கங்கள், புகைப்படங்கள் போன்ற கூறுகளை மதிப்பீட்டுக்கு உட்படுத்தும் நிகழ்ச்சிகளை அறிமுகப்படுத்தல்.
- ஊடகங்கள் வாயிலாக தனிமனித சுதந்திரத்திற்கும் சமூக நல்வாழ்வுக்கும் ஏற்படக்கூடிய தாக்கங்களுக்கு எதிராக பாதிக்கப்பட்ட பிரஜைகளுக்கு முறைப்பாடுசெய்வதற்கும் நியாயம் பெறுவதற்குமான சுயாதீன ஊடக முறைப்பாட்டு ஆணைக்குழுவொன்றை நிறுவுதல்.
- ஊடக நிறுவனமொன்று ஏதேனும் அரசியல் கருத்து அல்லது குழுவொன்று சார்பாக தனது ஊடகத்தைப் பயன்படுத்துமாயின், அது குறித்து பொதுமக்களுக்கு தெரிவிப்பதை கட்டாயப்படுத்தல்.
- சுயாதீன ஊடக முறைப்பாட்டு ஆணைக்குழுவின் மூலம் அவ்வப்போது முன்வைக்கப்படும் பொதுமக்கள் கருத்துக் கணிப்புகள் மூலம் அனைத்து அரச மற்றும் தனியார் ஊடக நிறுவனங்களின் பிரயோகம் குறித்த அறிக்கையொன்றைச் சமர்ப்பித்தல்.
- ஊடகங்கள் வாயிலாக இனங்களுக்கும் மதக் குழுக்களுக்கும் இடையில் குரோதத்தைப் பரப்புவதைத் தடுப்பதற்கான சட்டங்களை ஆக்குதல்.
- மக்கள் பிரதிநிதிகளுக்கும் அரசியல் கட்சிகளின் அதிகாரிகளுக்கும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கும் ஊடக நிறுவனங்களின் பூரண அல்லது பங்குரிமையைப் பெற்றுக்கொள்வதைத் தடைசெய்தல்.
- அந்தந்த ஊடக நிறுவனங்களுக்கு பல்வேறு அரச நிறுவனங்களினால் வழங்கப்படும் வர்த்தக விளம்பரங்களையும் ஏனைய நிதிக் கொடுக்கல்வாங்கல்களையும் வருடாந்தம் வெளியிடுதல்

# பிரஜையின் பொறுப்பு

முன்னேறிய ஜனநாயக சமூகமொன்றைத் தோற்றுவிப்பதற்கான செயன்முறையின்போது முனைப்பாக அரச செயன்முறையும் தொடர்பும் அத்தியவசியமாகும். பிரஜாவுரிமை என்ற வரையறையில், நாட்டினுள் சட்டபூர்வமாக பிரஜாவுரிமை பெறும் அனைத்து நபர்களும் சமமான பிரஜைகள் என்ற விடயம் வலியுறுத்தப்பட்டுள்ளதுடன், இரண்டாம் தரப் பிரஜைகள் இருக்கின்ற ஒரு நாட்டில் மனித கௌரவம் பாதுகாக்கப்பட மாட்டாதென்பதும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

## யோசனைகள்

- ஒவ்வொரு பிரஜையும் தங்களிடம் உள்ள திறன்களையும் பலங்களையும் பயன்படுத்தவும், அவற்றை மேம்படுத்தவும் ஊக்குவிக்கவும் கல்வியை அதிகபட்சமாக பயன்படுத்த வேண்டும். எனவே, அறிவுபெறலும் கல்வியறிவினால் எப்பொழுதும் நிரம்பியிருத்தலும் பிரஜையின் ஒரு பொறுப்பும் கடமையும் என்ற விடயம் ஏற்றுக்கொள்ளப்படுவதுடன், அதற்காக அரசாங்கம் இலவசக் கல்விச் செயன்முறையைப் பயன்படுத்த ஒவ்வொரு பிரஜைக்கும் இருக்கின்ற உரிமையை உறுதிசெய்தல்.

- சமூகத்தில் ஏற்படும் மோதல்களைக் குறைத்து சமூகங்களிடையே சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான பொறுப்பும் கடமையும் பிரஜைக்கு உண்டு. எனவே, அனைத்து கலாசாரங்களையும் மதித்து சமூக நல்லிணக்கத்தை உறுதிசெய்கின்றவாறு செயலாற்றுதல் பல் கலாசார சூழலொன்றில் வாழும் பிரஜையின் பொறுப்பாகும்.

- பிரஜைக்கும் அரசியல் முறைமைக்கும் இடையில் பரஸ்பரத் தொடர்பொன்று இருப்பதால் அரசியல் செயன்முறையை ஜனநாயகமயப்படுத்துவதில் பிரஜையின் பொறுப்பு சிறப்பானது. அரசியல் மற்றும் சமூக முறைமையை மிகச் சிறந்ததாக மாற்றுவதற்கு ஜனநாயகத் தேர்தல் செயன்முறைக்கு உதவுதல், சரியான வேட்பாளர்களைத் தெரிவுசெய்தல், அரசியல் முறைமையில் ஊழலுக்கும் மோசடிக்கும் எதிராக செயலாற்றுதல் முதலின கருமங்கள் ஒரு பிரஜையின் பொறுப்பு என்பதை ஏற்றுக்கொண்டு அதற்காக அவர்களை முனைப்பாக ஈடுபடுத்திக்கொள்ளல்.

- பேண்தகு பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் செயல்முறைகளில் பிரஜையை பங்குகொள்ளச்செய்தல், அரசின் வளங்களையும் இயற்கைச் சூழலையும் எதிர்கால பிரஜைகளுக்கும் பயன்படுத்தக்கூடிய வகையில் பயன்பாட்டுக்குப் பெறல், சுற்றுச்சூழல் சமநிலை, பொருளாதார நீதி என்பவற்றை அனைவருக்கும் கிடைக்கின்றவாறு செயலாற்றும் பொறுப்பும் பிரஜைகளுக்கு உண்டு.

# 08

# ஒரே தேசம்

# பன்முகத்தன்மையுடனும் சமத்துவத்துடனும் பிணைந்த ஓர் இலங்கைத் தேசம்

சுதந்திரத்தையடுத்து கடந்த 71 ஆண்டுகளாக நாட்டை ஆட்சிசெய்த அரசாங்கங்கள் இனங்களுக்கிடையில் சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் வளர்க்கத் தவறியதால் இலங்கைச் சமூகம் பாரதூரமான துன்பியல்களை எதிர்நோக்கியுள்ளது. குறிப்பாக 30 ஆண்டுகால சிவில் போரினால் தோன்றிய விளைவுகளை அத்தொலைநோக்கற்ற ஆட்சியின் விளைவாகவே அனைத்துச் சமூகங்களுக்கும் அனுபவிக்க நேர்ந்தது.

போர் ஓய்ந்த பின்னரும் சமூகத்தின் மீதான பாதிப்புகளை நிவர்த்திசெய்யவோ மீண்டும் அத்தகைய நிலைமைகளை வளர்வதைத் தடுக்கவோ போதிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை என்பதும் வெளிப்படையானதாகும்.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவொன்று (எல்.எல்.ஆர்.சி) நியமிக்கப்பட்டபோதும் அன்றைய அல்லது இன்றைய அரசாங்கங்கள் அதன் பரிந்துரைகளை செயல்படுத்துவதில் அக்கறை காட்டவில்லை.

எனவே, இவை அனைத்தையும் கவனத்திலெடுத்து, அனைத்து சமூகங்களின் அடையாளங்களையும் அங்கீகரிக்கும் நல்லிணக்கத்தையும் ஒத்திசைக்கும் இலங்கை தேசத்தை உருவாக்க பின்வரும் யோசனைகள் முன்வைக்கப்படுகின்றன:-

## குறித்த யோசனைகளின் நோக்கங்கள்

- அனைத்து தேசிய இனங்களின் சமூக, கலாசார, மத, பொருளாதார, மொழிசார் மற்றும் அரசியல் பன்முகத் தன்மையையும் அவர்களின் உரிமைகளையும் அங்கீகரித்து மதிக்கும் மக்கள் சமூகத்தை உருவாக்குதல்.
- பிரிந்துசெல்லும் மனோபாவமின்றி இலங்கைத் தேசத்தைக் கட்டியெழுப்பும் பொருட்டு அனைத்து இனங்கள் மற்றும் மத குழுக்களிடையே பரஸ்பர புரிந்துணர்வு மற்றும் நம்பிக்கையைக் கட்டியெழுப்பி அனைவரின் பாதுகாப்பையும் உரிமைகளையும் உறுதி செய்தல்.
- இலங்கைத் தேசமாக செயல்படும்போது அனைத்து இனங்களின் அடையாளத்தையும் உறுதிப்படுத்துவதோடு அவர்களின் அரசியல் அபிலாசைகளையும் குறிக்கோள்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் அதே வேளையில் அனைத்து சமூகங்களினதும் சமூக நிர்வாக பங்களிப்பை உறுதிசெய்தல்.
- அனைத்து விதமான இனவாத, சாதிப்பிரிவினை வாத, மத தீவிரவாத கருத்தியல்களுக்கு அப்பால் சகவாழ்வுடனும் நல்லிணக்கத்துடனும் செயலாற்றக்கூடிய மக்கட் சமூகமொன்றை உருவாக்குதல்.

## செயற்பாடுகள்

## சுதந்திரமும் ஜனநாயகமும்

- அனைத்து அரசியல் கைதிகளையும் விடுதலைசெய்தல்.
- சட்டரீதியான தடைகள் இல்லாமல், சுதந்திரமாக வாழ்வதற்கு அவர்களுக்கு முழு பாதுகாப்பையும் ஒத்துழைப்பையும் வழங்குதல்.
- அனைத்து மாகாணங்களிலும் அரசியல் கருத்து வெளிப்பாட்டுக்கும் செயல்பாடுகளுக்கும் ஒன்றுகூடுவதற்கும் ஒழுங்கமைவதற்குமான சுதந்திரத்தை உறுதிப்படுத்தல்..

- வடக்கு, கிழக்கு மற்றும் நாட்டின் பிற பகுதிகளில் உள்ள மக்களின் சிவில் உரிமையை உறுதிசெய்யக்கூடிய விதத்தில் சிவில் நிர்வாகத்தை நிறுவுதல்.
- நாட்டின் அனைத்து பகுதிகளிலும் பயணம் செய்வதற்கும் சுதந்திரமாக வாழ்வதற்கும் மக்களின் உரிமையை உறுதிசெய்தல்.
- பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் உள்ளிட்ட அனைத்து ஒடுக்குமுறைச் சட்டதிட்டங்களையும் ஒழித்து அனைத்து மக்களின் சிவில் சுதந்திரத்தையும் உறுதிப்படுத்துதல்.
- வடக்கு, கிழக்கு மக்களின் நீதி மற்றும் நீதித்துறை சேவையை விரைவுபடுத்தலும் வசதிப்படுத்தலும் சட்ட உதவி சேவைகளை செயல்படுத்தலும்.
- உள்நாட்டுப் போருக்குப் பின்னர் வடக்கு, கிழக்கில் உள்ள வழிபாட்டுத்தலங்களின் சட்டபூர்வமான தன்மையைக் கண்டறிய ஒரு சுயாதீன ஆணைக்குழுவை நியமித்தல்.
- தேசிய ஒற்றுமைக்கு தடங்கலாக அமையும் மதமாதத்தை நிறுத்துதல்.

## போரினால் பாதிப்புற்ற மக்களுக்கான நீதி

- போரின்போது அனைத்து தரப்பினரும் செய்த போர்க் குற்றங்களை விசாரிக்க ஒரு மெய்யறியும் ஆணைக்குழுவை (Truth Commission) நிறுவுதல்.
- காணாமல்போனோர் பற்றிய குழுவை அது குறித்து ஆராய்ந்து நியாயத்தை நிலைநாட்ட வேண்டிய விதம் குறித்த விதப்புரைகளைச் செய்வதற்கும் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கும் அதிகாரமுள்ள ஆணைக்குழுவொன்றாக மாற்றுதல்.
- விதவைகள், அனாதைகள் மற்றும் ஊனமுற்றோர் தொடர்பில் அரசு தலையிட்டு அவர்களின் பாதுகாப்பை உறுதிசெய்தல்.
- போரினால் இழந்த உயிர்கள், வீடுகள், சொத்துக்கள் தொடர்பில் இழப்பீட்டு ஆணைக்குழுவொன்றை நிறுவி சிபார்சுசெய்யப்படும் இழப்பீடுகளை வழங்குதலும் வீடுகளையும் சொத்துக்களையும் புனரமைத்தலும்.
- யுத்தத்தின் பல்வேறு சந்தர்ப்பங்களில் கைது செய்யப்பட்டு மறுவாழ்வு பெற்றவர்கள் மற்றும் விடுவிக்கப்பட்ட அனைவருக்கும் பொருத்தமான வாழ்வாதார வாய்ப்புகளை உருவாக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்தல்.
- போரின் நிகழ்வுகள் காரணமாக மன அதிர்ச்சி, மன அழுத்தம் மற்றும் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டவர்களை மீட்க அந்தந்த மாகாணங்களில் மனநல நிறுவனங்களை நிறுவுதல்.

## நிலங்களும் இருப்பிடங்களும்

- போருக்கு முன்னர் மக்களுக்கு சொந்தமானதாகவிருந்த அனைத்து நிலங்களையும் வீடுகளையும் அவற்றின் அசல் உரிமையாளர்களுக்கு மாற்றீடுசெய்வதும் கையகப்படுத்தியிருப்பதன் காரணமாக கடற்படை இழப்பீடொன்றை வழங்குதலும்.
- வடக்கு மற்றும் கிழக்கில் நிலம் மற்றும் வாழ்விடப் பிரச்சினை மிகவும் தீவிரமான மற்றும் முக்கியமான பிரச்சினையாக உள்ளது. நிலங்களின் அசல் உரிமையாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். தற்போதுள்ள குடியிருப்பாளர்களை அடையாளம் காணவும், சமமான தீர்வுகளை வழங்கவும், சிக்கல்களை விரைவாக தீர்க்கவும் மக்கள் பிரதிநிதிகள், மாவட்ட செயலாளர்கள் மற்றும் காணி அமைச்சு அதிகாரிகள் அடங்கிய ஒரு முழுமையான நில மற்றும் சொத்து ஆணைக்குழுவை நிறுவுதல்.
- பல்தேசிய கம்பனிகளுக்கு இறையிலி நிலம் மற்றும் சொத்துக்களை வழங்குவதை நிறுத்துதல்.

- மக்களின் நிலங்களையும் சொத்துக்களையும் அரசியல் ஆதரவாளர்களுக்கு வலுக்கட்டாயமாக கொடுப்பதை உடன் நிறுத்துதல்.

## குடியேற்றங்களை நிறுவுதல்

- நாட்டின் எந்தவோர் இடத்திலும் இன விகிதாசாரத்தை மாற்றும் நோக்குடன் மேற்கொள்ளப்படும் திட்டமிட்ட குடியேற்றங்களை நிறுத்துதல்.
- மகாவலி அதிகாரச் சட்டம் மற்றும் பிற திட்டங்களின் கீழ் குடியேற்றங்கள் குறித்த பிரச்சினைகளைத் தீர்க்க ஒரு சிறப்புப் பொறிமுறையை நிறுவுதல்.
- நிலங்களை இழந்த மக்களுக்கு நிலங்களையும், குடியிருப்புகளையும் வழங்கும்போது பிரதேசத்தில் வசிக்கும் நிலங்களையும் குடியிருப்புகளையும் இழந்த மக்களுக்கு முன்னுரிமை அளித்தல்.

## மொழி

- 16 ஆவது திருத்தத்தின் கீழ் 1988 ஆம் ஆண்டிலிருந்து அரசியலமைப்பினால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய மொழிக் கொள்கையை உரிய முறையில் அமுல்படுத்துதல்.
- இலங்கை குடிமக்களின் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளை தேசிய மொழிகளாக நிறுவுவது, மொழியின் மீதான அழுத்தங்களை ஒழிப்பதற்கும், எந்தவொரு மொழியிலும் செயல்படுவதற்கான குடிமக்களின் உரிமையை ஏற்றுக்கொள்வதற்கும், மொழி காரணமாக இருக்கும் சிரமங்களை நீக்குவதற்கும் நடவடிக்கை எடுத்தல்.
- இலங்கையில் உள்ள அனைத்து இனங்களின் சிவில் நிர்வாகத்திற்குரிய ஏற்புடைய தேவைகளை தமது தாய்மொழியில் அதாவது தனக்கு கருத்துத் தெரிவிக்கக்கூடிய வசதியான மொழியில் நிறைவேற்றிக்கொள்வதற்கு உயர்ந்தபட்ச வசதியளித்தல்.
- மாணவர்கள் சாதாரண தரம் வரை சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளை கற்பதைக் கட்டாயமாக்குதலும் அதற்குத் தேவையான ஒதுக்கீடுகளை வழங்குதலும்.
- தமிழர்கள் மற்றும் முஸ்லிம்கள் பெரும்பான்மையான வசிக்கும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள காவல் நிலையங்கள் மற்றும் அரசு அலுவலகங்கள் போன்ற சிவில் சேவைகளில் தமிழ் மொழியில் பணியாற்றக்கூடிய காவல்துறை அதிகாரிகள், மொழிபெயர்ப்பாளர்கள் மற்றும் அரசு ஊழியர்களை நியமிக்க நடவடிக்கை எடுத்தல்.
- காவல்துறை, பாதுகாப்புப் படைகள் மற்றும் பொதுத்துறையில் உள்ள அனைத்து அதிகாரிகளையும் அவர்களின் தாய்மொழிக்கு மேலதிகமாக அரசகரும மொழிகளைக் கற்பித்தலையும் மொழிகளைக் கற்பதையும் ஊக்குவித்தல்.
- வழக்கு விசாரணைகளின்போது எந்தவொரு நீதிமன்றத்திலும் குற்றம்சாட்டப்பட்ட அனைவருக்கும் அவர்களின் தாய்மொழியில் செயல்படுவதற்கான உரிமையை அங்கீகரித்து அவர்களுக்கு மொழிபெயர்ப்பாளர்களை வழங்குதல்.
- வடக்கு, கிழக்கில் உள்ள ஒவ்வொரு காவல் நிலையத்திற்கும் ஏராளமான தமிழ் படித்த பட்டதாரிகளை நியமிக்க வேண்டும் என்ற கட்டளையுடன் பொது ஒருங்கிணைப்பு பிரிவை நிறுவ நடவடிக்கை எடுத்தல்.
- இந்த அலகுகள் காவல் நிலையத்தின் கீழ் இருந்தாலும், மக்கள் தொடர்புகளை ஊக்குவிக்கும் நிறுவனங்களாக செயல்படுத்தல்.
- அனைத்து சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளையும் நாட்டில் உள்ள அனைத்து குழந்தைகளுக்கும் கற்பிக்க தற்போது காணப்படும் நிலையை விட

நடைமுறைச் சாத்தியமான ஒரு வேலைத்திட்டத்தை வகுப்பதோடு அதற்குத் தேவையான ஆசிரியர்களை முறையாகப் பயிற்றுவிக்கும் முறைமைகளை ஆரம்பித்தல்.

- ஒவ்வொரு பல்கலைக்கழகத்திலும் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் மொழி ஆய்வுத் துறைகளை நிறுவுதல்.
- இரண்டாம் மொழியைக் கற்க விரும்பும் பெரியவர்களுக்கு சிங்கள மற்றும் தமிழ் மொழி பயிற்சி அளிக்கும் வயதுவந்தோர் கல்வித் திட்டத்தை ஆரம்பித்தல்.
- வேலைவாய்ப்புகளை வழங்குவதில் எந்தவொரு அரசியல் செல்வாக்குமின்றி, அனைத்து இனங்களுக்கும் நீதியை உறுதிசெய்வதற்கான தகுதித் தேவைகளுக்கு ஏற்ப செயல்படுதல்.
- சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் எந்தவொரு மொழியிலும், மொழியின் அடிப்படையில் இருக்கும் சிரமங்களை சமாளிக்க, எந்தவொரு மொழியிலும் வேலை செய்வதை எளிதாக்குவதற்கு தேவையான அனைத்து பொது மற்றும் நிர்வாக நிறுவனங்களையும் தேவையான மனித வளங்களை கொடுத்தல்.
- பொலிஸ் நிலையங்கள், தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் அதிகம் வாழும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள அரசு அலுவலகங்கள் போன்ற சிவில் சேவைகளில் தமிழ் மொழியில் பணியாற்றக்கூடிய அதிகாரிகள், பணியாளர்கள் மற்றும் மொழிபெயர்ப்பாளர்களை வழங்குதல்.

## தோட்டப்பகுதிவாழ் மக்கள்

- தோட்டப்பகுதியிலுள்ள தமிழர்கள் இந்த நாட்டின் சரிசமமான குடிமக்கள் என்பதையும், ஒவ்வொரு மனிதனும் பிறக்கும்போது மனித கௌரவம் அவர்களுக்கு உண்டென்பதையும், அவர்களுக்கு ஒரு தனித்துவமான கலாசார மற்றும் கலாசார அடையாளம் இருப்பதையும் ஏற்றுக்கொள்ளல்.
- பெருந்தோட்டத் துறையில் குறைந்தபட்ச தினசரி ஊதியம் ரூ.1000 க்கு மேலதிக கூடுதல் கொடுப்பனவுகளையும் வழங்குதல்.
- பெருந்தோட்டத் துறையில் தொழில்புரியும் அனைத்துத் தொழிலாளர்களுக்கும் வாழ்விட உரிமைகள் குறித்த தேசிய கொள்கைக்கான சிறப்புக் குழுவை அமைத்தல்.
- உற்பத்தித்திறன் என்பது தோட்டத்துறையில் உள்ள அனைத்து பங்குதாரர்களின் பிரச்சினைகளையும் தீர்க்கும் ஒரு பொதுவான காரணியாகும், இதனால் அரசு, தோட்டத் தொழில், ஆராய்ச்சி பிரிவுகள், ஏற்றுமதி மேம்பாடு, பல்கலைக்கழகங்கள், தோட்டத் தொழிலாளர் அமைப்புகள் போன்றவை உற்பத்தித்திறனை அதிகரிக்க ஒன்றிணைந்து செயல்படுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- தோட்டத் துறையில் தற்போதுள்ள கல்வி சிக்கல்களை நீக்கி, அனைத்து குழந்தைகளுக்கும் சம வாய்ப்புகளை உருவாக்குதல்.
- மருத்துவ மற்றும் மருத்துவமனை வசதிகளை உறுதிப்படுத்துதல்.
- வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ள மொழிச் சிரமங்களை ஒழிக்க நடவடிக்கை எடுதத்தல்.
- அனைத்து இனங்களுக்கும் சமமான குடியுரிமை உரிமைகள் உள்ளதென்பதை ஏற்றுக்கொள்ளல்.
- இனவெறி மற்றும் மத தீவிரவாதத்தால் ஏற்பட்ட வன்முறைகளை விசாரிக்கும் மெய்யறியும் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் செயற்பாட்டை விரிவுபடுத்தல்.
- ஒப்பீட்டு மத, கல்விப் பாடமொன்றின் மூலம் அனைத்து மதங்களின் மதிப்புகள் மற்றும் கலாசாரங்கள் தொடர்பான புரிந்துணர்வொன்றை ஏற்படுத்தல்.
-

# தேசிய ஒற்றுமையும் நல்லிணக்கமும்

- ஒரு புதிய அரசியலமைப்பின் மூலம் பிரிவினையைத் தடுக்கும் அதேவேளையில், சமத்துவம் மற்றும் ஜனநாயகத்தின் அடிப்படையில் அதிகாரத்தை அரசியல் ரீதியாகவும் நிர்வாக ரீதியாகவும் பரவலாக்கும் ஒரு தீர்வின் மூலம் தேசிய பிரச்சினைகளுக்கு ஒரு நீடித்த தீர்வு உறுதிசெய்யப்படும் வரை மாகாண சபைகளை முறையான மற்றும் திறமையான நிறுவனங்களாக இயக்குதல்.
- அனைத்து மதத் தலைவர்களும், அனைத்து மதங்களின் மத அறிஞர்களும் அடங்கிய ஒரு இடை-மத சபையை நிறுவுதல், இதன் மூலம் அனைத்து மதங்களின் பொதுவான மதிப்புகளை ஊக்குவித்தல் மற்றும் மதங்களுக்கு இடையிலான பிரச்சினைகளைத் தீர்த்துவைத்தல்.
- தேசியம், மதம், சாதி அல்லது தாய்மொழியை அடிப்படையாகக் கொண்ட எந்தவொரு நபரும் அல்லது சமூகமும் அவமதிக்கப்படுவதோ, அல்லது சங்கடப்படுவதோ கண்டிப்பாக தடைசெய்யப்பட்டுள்ளது. அந்த பிரச்சினைகள் தொடர்பான ஆணையத்திற்குப் பாதிக்கப்பட்டவர்களை ஏற்றுக்கொள்ளவும், விசாரிக்கவும், வழக்குத் தொடரவும் அதிகாரம் உள்ள பாரட்சங்களை ஒழிக்கும் ஆணைக்குழுவொன்றை (Commission against Discrimination) நிறுவுதல்.
- கலாசார அலுவல்கள் அமைச்சின் கீழ், கலாசார அலுவல்கள் அமைச்சகம் பல்வேறு சமூகங்களிடையே கலாசார வேறுபாடுகளை அங்கீகரித்தல், நிலைநிறுத்துதல், ஊக்குவித்தல் மற்றும் பல்வேறு கலாசாரங்களை மதிப்பிடுவதை நோக்கமாகக் கொண்ட சிறப்பு கலாசார மற்றும் கலை நிகழ்ச்சிகளை மேற்கொள்ளல்.
- வடக்கு மற்றும் கிழக்கு உள்ளிட்ட ஏனைய பகுதிகளில் மக்களின் பங்களிப்புடன் பொது பண்ணைகளை நிறுவுதலும் செயல்படுத்துதலும்.
- மீன் வளத் தொழிலுக்கு இந்திய மீனவர்களின் சவாலை இராஜதந்திர ரீதியில் நீக்கி அதற்கு அவசியமான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல்.
- வடக்கு மாகாணத்தில் உள்ள அனைத்து குளங்கள் மற்றும் அடிக்கட்டுகளின் புனரமைப்பு.
- அனைத்து பாடசாலைகளிலும் உயர்கல்வி நிறுவனங்களிலுமுள்ள அனைத்து மத மாணவர்களுக்கும் புத்த, கிறிஸ்தவ, இந்து மற்றும் இஸ்லாமிய வழிபாட்டுத்தலங்களை நிறுவுதலும் அவற்றைப் பராமரித்தலும்.
- இலங்கையை பல இன, பல மத நாடாக ஏற்று அங்கீகரித்தல்.
- எந்தவொரு குடிமகனும் அல்லது சமூகமும் தேசியம், மதம், சாதி மற்றும் பாலின அடிப்படையில் அவமானம், அடக்குமுறை, சிரமம் அல்லது அநீதிக்கு ஆளாகாதபடி சமத்துவ சட்டத்தை நிறுவுதல்.
- கிராம அலுவலர் பிரிவுகள் ஊடாக அனைத்து மாவட்டங்களிலும் விவசாயிகள், மீனவர்கள், தொழிலாளர்கள், ஆசிரியர்கள், பொது மற்றும் தனியார்துறை தொழிலாளர்கள், பெண்கள், அறிஞர்கள் மற்றும் பிற சமூகங்களை அங்கீகரிக்கப்பட்ட அடையாளத்துடன் ஒழுங்கமைத்தலும் அத்தகைய ஒழுங்கமைப்புகளுக்குத் தேவையான அவசியமான ஏற்றுக்கொள்ளப்பட்ட வாய்ப்புகளை ஏற்படுத்தலும்.
- அரசியல் சமூகங்களின் பிரதிநிதிகள் மற்றும் பாராளுமன்ற பிரதிநிதிகள் அடங்கிய ஒரு சிறப்பு “மக்கள் முடிவு ஆணையத்தை” நிறுவுதல், அந்த சமூகங்களை போதுமான அளவில் பிரதிநிதித்துவப்படுத்துவதற்காக ஒரு மக்கள் சபையை நிறுவுதல், இதன் மூலம் மக்கள் பேரவையின் நிர்வாக கட்டமைப்பை வரையறுத்தல் மற்றும் அதற்கு அடிப்படையான அளவுகோல்களை தீர்மானித்தலும் அதற்காக மக்களின் கருத்துக்களைப் பெறலும்.

## நிலங்களும் குடியிருப்புக்களும்

- நிலம் மற்றும் வாழ்விடப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு நிலம் மற்றும் வாழ்விடம் குறித்த ஒரு தேசிய ஆணையத்தை நிறுவுதல் மற்றும் தேசிய ஒற்றுமையைத் வலுப்படுத்தும் பொருட்டு நிலம் மற்றும் வாழ்விடங்கள் குறித்த தேசிய கொள்கையை வகுத்தல்.

## தொழில்களும் விவசாயமும்

- வடக்கு மற்றும் கிழக்கில் முன்பு காணப்பட்ட கைத்தொழில்களை மீளநிறுவுதலும் புதிய கைத்தொழில்களை உருவாக்குதலும்.
- அந்த பகுதிகளில் விவசாயம் மற்றும் கால்நடை வளர்ப்பிற்கு தேவையான ஆலோசனைகளையும் வசதிகளையும் வழங்கும் நிறுவனங்களை நிறுவுதல்.
- பிரதேச மக்களின் பங்களிப்புடன் அரசு பண்ணைகள் நிறுவுதல் மற்றும் செயல்படுதல்.
- நல்லிணக்கத்திற்கு இடையூறு ஏற்படாதவாறும் அதனை வளர்க்கக்கூடியவாறும் பாடசாலை முறையை மீள் அமைத்தல்.
- அனைத்துப் பாடசாலைகளிலும் இருக்கின்ற மாணவ மாணவிகளுக்கு அவர்களின் மதங்களைஅப்பாடசாலையில் கற்பிப்பதை கட்டாயப்படுத்தலும் அதற்கவசியமான வசதிகளை அளித்தலும்.
- மதங்கள் பற்றிய ஒப்பீட்டாய்வொன்றை பாடவிதானத்தில் உட்படுத்துதல்.
- சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலத்தை இரண்டாம் மொழிகளாக உயர்தரம் வரையில் கற்பித்தல். உயர்தர வகுப்பில் நடைமுறை மொழியறிவுக்கு முன்னுரிமை கொடுத்தல்.
- ஒரு குறிப்பிட்ட மாகாணத்தில் உள்ள அரசு மற்றும் பகுதியளவு அரசு நிறுவனங்களின் காலியிடங்களை நிரப்பும்போது அக்மாகாணங்களிலுள்ள தகுதியானவர்களுக்கு முன்னுரிமை வழங்கி நடவடிக்கை எடுத்தல்.
- இலக்கிய விழாக்கள், சிங்கள இலக்கிய தினம், தமிழ் இலக்கிய தினம், மற்றும் ஆங்கில இலக்கிய தினம் ஆகியவற்றை அனைத்து தேசிய இனங்களின் பங்கேற்புடன் நடாத்துதல்.
- சிங்கள, தமிழ், முஸ்லீம், பர்கர், மலாய் மற்றும் தேசிய ஒற்றுமை மற்றும் மத ஒற்றுமைக்கு உண்மையிலேயே உறுதியளித்த பிற தேசிய மற்றும் மத கதாபாத்திரங்களுடன் கலந்துரையாடல்களை ஆரம்பித்தல்.
- அனைத்து முக்கிய மதங்களிலும் விடுதலை பற்றிய உரையாடலின் மூலம் தேசிய ஒற்றுமைக்கான ஒரு திட்டத்தை நிறுவுதல.
- வெவ்வேறு இனங்களின் உணர்வுகளையும் கலாசாரங்களையும் புரிந்துகொள்வதற்கு ஏற்ற வகையில் Immersion Programmes ஏற்படுத்தலும் முறையான, முறைசாரா மற்றும் வயதுவந்தோருக்கான கல்வியுடன் அவற்றை இணைத்தலும்.

# கொள்கைத் திட்டமிடல் குழுக்கள்

# <u>கல்விக் கொள்கைத் திட்டமிடல் குழு</u>

மொரட்டுவைப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் பிரதி துணை வேந்தரும் இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவகத்தின் பட்டப்பின்படிப்பு மற்றும் ஆராய்ச்சிக் கற்கைத் துறையின் பீடாதிபதி
**பேராசிரியர் ராகுல அத்தலகே அவர்கள்**

அமெரிக்காவின் சாம் ஹூஸ்ரன் பல்கலைக்கழகத்தின் அதிர்வெண் துறைப்
**பேராசிரியர் ஆனந்த பந்துலசிறி அவர்கள்**

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணை வேந்தர்
**பேராசிரியர் எஸ்.பி. ஹெட்டிஆரச்சி அவர்கள்**

றுஹுணு பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தின் பீடாதிபதி
**பேராசிரியர் பீ.ஏ. ஜயந்த அவர்கள்**

றுஹுணு பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தின் இரசாயனவியல் பற்றிய
**பேராசிரியர் ஜினசேன ஹேவகே அவர்கள்**

சியனே கல்வியியற் கல்லூரியின் முன்னாள் பீடாதிபதி
**திரு. சுனந்த வர்ணகுலசூரிய அவர்கள்**

தென்கிழக்குப் பல்கலைக்கழகப் பதிவாளர்
**திரு. அப்துல் சத்தார் அவர்கள்**

கல்வி அமைச்சின் கணித பாடத்துறை பற்றிய முன்னாள் கல்விப் பணிப்பாளர்
**திரு. விஜயதாச ஹேவாவிதாரண அவர்கள்**

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் அரசியல் மற்றும் சர்வதேச கற்கைகள் துறையின் **பேராசிரியர் அத்துலசிறி சமரகோன் அவர்கள்**

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பிரயோக விஞ்ஞான பீடத்தின்
**கலாநிதி விஜேந்திர பண்டார அவர்கள்**

கொழும்புப் பல்கலைக்கழகத்தின் வரலாற்று கற்கைகள் துறையின்
**கலாநிதி நிர்மால் ரஞ்சித் தேவசிறி அவர்கள்**

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் சமூக விஞ்ஞான கற்கைகள் துறையின்
**கலாநிதி ஹரிணி அமரசூரிய அவர்கள்**

இலங்கை ஆசிரியர் சேவைச் சங்கத்தின் பொதுச் செயலாளர்
**திரு. மஹிந்த ஜயசிங்க அவர்கள்**

களனிப் பல்கலைக்கழகத்தின் ஆங்கிலமொழிக் கற்கைத் துறையின்
**கலாநிதி (திருமதி) பிரபா மனுரத்ன அவர்கள்**

களனிப் பல்கலைக்கழகத்தின் பௌதிகவியல் கற்கைத் துறையின்
**பேராசிரியர் ஜே.ஆர்.பீ. ஜயகொடி அவர்கள்**

றுஹுணு பல்கலைக்கழக கணிதவியல் கற்கைத் துறையின்
**கலாநிதி அஜித் ரவீந்திர த மெல் அவர்கள்**

களனிப் பல்கலைக்கழகத்தின் இரசாயனவியல் கற்கைத் துறையின்
**பேராசிரியர் கபில செனவிரத்ன அவர்கள்**

பாராளுமன்ற உறுப்பினர்
**திரு. பிமல் ரத்நாயக்க அவர்கள்**

**கலாநிதி மைக்கல் பர்னாந்து அவர்கள்**

**திரு. மஹிந்த ரத்நாயக்க அவர்கள்**

**ரங்கன லக்மால் தேவப்பிரிய அவர்கள்**

# சுகாதார கொள்கைத் திட்டமிடல் குழு

களனிப் பல்கலைக்கழகத்தின் மருத்துவவியல் பீடத்தின் பொதுச் சுகாதாரத் துறையின்
**பேராசிரியர் சனசமூக நிபுணத்து மருத்துவர் கிரிசாந்த அபேசேன அவர்கள்**

சுகாதார அமைச்சின் முன்னாள் பணிப்பாளர் (திட்டமிடல்) சனசமூக பற்சுகாதார நிபுணத்துவ மருத்துவர்
**திரு. சமந்த விமலரத்ன அவர்கள்**

சுகாதார அமைச்சின் முன்னாள் பணிப்பாளர் - எயிட்ஸ் மற்றும் பாலியல் நோய் ஒழிப்புப் பிரிவின் முன்னாள் பணிப்பாளர் **மருத்துவர் நிமல் எதிரிசிங்க அவர்கள்**

மேல்மாகாண சுகாதார அமைச்சின் முன்னாள் தாதியர் பணிப்பாளர்,
இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் முதுநிலை விரிவுரையாளர்
**திருமதி கே.திசாநாயக்க அவர்கள்**

சுகாதார அமைச்சின் சுகாதார நலக் கல்விப் பிரிவின் முன்னாள் பிரதிப் பணிப்பாளர்

**திரு. கே.பீ.பீ.பண்டார அவர்கள்**

பதுளை முன்ளாள் சுகாதார மருத்துவ அதிகாரி
**திரு. பீ.ஆர். சாந்தலால் அவர்கள்**

சுகாதார அமைச்சின் முன்னாள் பிரதான கொள்ளைநோய்கள் பற்றிய விஞ்ஞானி,
உலக சுகாதார தாபனத்தின் முன்னாள் பிராந்திய உசாவுநர்,
சனசமூக நிபுணத்துவ மருத்துவர்
**நிஹால் அபேசிங்க அவர்கள்**

கொழும்புப் பல்கலைக்கழகத்தின் சுதேச மருத்துவவியல் நிறுவகத்தின் சுதேச சிகிச்சைகள் கற்கைத் துறையின் தலைவர் நிபுணத்துவ மருத்துவர்
**எஸ்.எம்.எஸ்.சமரகோன் அவர்கள்**

றுஹுணு பல்கலைக்கழகத்தின் கராபிட்டிய மருத்துவ பீடத்தின்
சட்ட மருத்துவத் துறையின் தலைவர், நிபுணத்துவ மருத்துவர்
**க்ளிபர்ட் பெரேரா அவர்கள்**

அகில இலங்கை தாதியர் சங்க தலைவர், தாதி அலுவலர்
**திரு. எஸ்.பி.மெதிவத்த அவர்கள்**

சிறுநீரகங்கள் காப்பு மக்கள் இயக்கத்தின் தலைவர்,
அநுராதபுர போதனா மருத்துவமனையின் சிறுநீரக நோய் நிவாரணப் பிரிவின்
**மருத்துவர் சுசில் ரணசிங்க அவர்கள்**

அகில இலங்கை மருத்துவ அலுவலர் சங்கத்தின் செயலாளர்
**மருத்துவர் ஜயந்த பண்டார அவர்கள்**

பாராளுமன்ற உறுப்பினர்
**மருத்துவர் நளிந்த ஜயதிஸ்ஸ அவர்கள்**
**மருத்துவர் அசங்க விக்ரமசிங்க அவர்கள்**
**கலாநிதி மைக்கல் பர்னாந்து அவர்கள்**
**திரு. மஹிந்த ரத்னாயக்க அவர்கள்**

# கலை, கலாசார கொள்கைத் திட்டமிடல் குழு

இலக்கியவாதி
**சங்கைக்குரிய பட்டுவன்கல ராகுல தேரர்**

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் சிங்களமொழி கற்கைத் துறையின்
**பேராசிரியர் கலை விற்பன்னர் திரு. லியனகே அமரகீர்த்தி அவர்கள்**

கலாசார, தேசிய மரபுரிமைகள் பற்றிய அமைச்சின் முன்னாள் செயலாளர்
**திரு. ஏ.பீ.ஏ.குணசேக்கர அவர்கள்**

இலக்கியவாதி
**திரு. கீர்த்தி வெலிசரகே அவர்கள்**

இலக்கியவாதி
**திரு. கமல் பெரேரா அவர்கள்**

நடிகை
**செல்வி தீபானீ சில்வா அவர்கள்**

இசையமைப்பாளர்
**திரு. விஸ்வநாதன் சதானந்தன் அவர்கள்**

கிராகம ஆசிரியர் கல்லூரியின் முன்னாள் அதிபர், விரிவுரையாளர், ஓவியக் கலைஞர்
**திரு. சாள்ஸ் தயானந்த அவர்கள்**

தேசிய தொழிற்சங்க நிலையத்தின் தலைவர்
**திரு. கே.டீ.லால் காந்த அவர்கள்**

இலக்கியவாதி
**திருமதி சாந்தி திசாநாயக்க அவர்கள்**

களனிப் பல்கலைக்கழகத்தின் நுண்கலைக் கற்கைத் துறையின் முதுநிலை விரிவுரையாளர்
**கலாநிதி உதித கயாஷான் குணசேக்க அவர்கள்**

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் மொழிக் கற்கைத் துறையின் முதுநிலை விரிவுரையாளர்
**கலாநிதி ஹினிதுவ சுனில் செனெவி அவர்கள்**

களனிப் பல்கலைக்கழகத்தின் நாடகம் மற்றும் அரங்கியல் கலை மற்றும்
பிரதிவிம்பக் கலை கற்கைத்துறையின் பிரிவுத் தலைவர் முதுநிலை விரிவுரையாளர், நடிகர்
**திரு. பிரியங்கர ரத்னாயக்க அவர்கள்**

திரைப்பட இயக்குநர்
**திரு. செனெஷ் திசாநாயக்க பண்டார அவர்கள்**

அழகியற்கலைகள் பல்கலைக்கழகத்தின் நாடகம் மற்றும் முத்ரா நாடகம் மற்றும் நவீன நடனக் கற்கைத் துறையின் முதுநிலை விரிவுரையாளர், நடிகர்
**திரு. பிரசன்னஜித் அபேசூரிய அவர்கள்**

கவிஞர்
**நிலார் எம். காசிம்**

திரைப்பட இயக்குநர்

**திரு. அநுருத்த ஜயசிங்க அவர்கள்**

தொலைக்காட்சி நாடக இயக்குநர், நடிகர்

**திரு. நாமல் ஜயசிங்க அவர்கள்**

அழகியற்கலைப் பல்கலைக்கழகத்தின் நாடகம் மற்றும் முத்ரா நாடகம்,
நவீன நடனக் கற்கைத் துறையின் முதுநிலை விரிவுரையாளர்,

**திரு. அசேல ரங்கதேவ அவர்கள்**

இசையமைப்பாளர்

**திரு. நதீக குருகே அவர்கள்**

திரைப்பட இயக்குநர்

**திரு. பிரியந்த களுஆரச்சி அவர்கள்**

இலக்கியவாதி

**திரு. கௌசல்ய குமாரசிங்க அவர்கள்**

இசையமைப்பாளர்

**திரு. சுதந்த மாதவ அவர்கள்**

நடிகர்

**திரு. ஜகத் மனுவர்ண அவர்கள்**

நாடகக் கலைஞர்

**திரு. பிரேமரத்ன தென்னகோன் அவர்கள்**

**கலாநிதி மைக்கல் பர்னாந்து அவர்கள்**

## சுற்றுச்சூழல் கொள்கைத் திட்டமிடல் குழு

சூழலியலாளர்

**வண. வேகந்தவல ராகுல தேரர்**

சூழலியலாளர்

**கலாநிதி எஸ்.டீ.கொடிகமுவ அவர்கள்**

**கலாநிதி அசோக்க ரண்வல அவர்கள்**

றுஹுணுப் பல்கலைக்கழகத்தின் அரச கொள்கைகள் கற்கைத் துறையின் முதுநிலை விரிவுரையாளர்

**கலாநிதி டீ.எல்.ஏ.எம்.சம்மிக்க லியனகே அவர்கள்**

சிரேட்ட சூழலியலாளர்

**கலாநிதி ரவீந்திர காரியவசம் அவர்கள்**

சிரேட்ட சூழலியலாளர்

**திரு. லேகக சம்பத் ஆரியசேன அவர்கள்**

பாடசாலை அதிபர்
**திரு. என்.விஜேகுமாரன் அவர்கள**

ஜீவயே ஐத்திய ஏற்பாட்டாளர், பன்முக அழிவுகர உமா ஓயா கருத்திட்டத்திற்கு எதிரான மக்கள் முன்னணியின் அவைகூட்டுநர்,
**திரு. சமன்த வித்யாரத்ன அவர்கள்**

றுஹுஹுணுப் பல்கலைக்கழகத்தின்
**பேராசிரியர் பேமதாச லியனாரச்சி அவர்கள்**

சூழலியலாளர், கட்டிடக் கலைஞர்
**திரு. உதுல பண்டார ஔசதகாமீ அவர்கள்**

களனி கங்தியவர காப்பு தேசிய இயக்கத்தின் தலைவர்
**திரு. அசித நிரோஷன் அவர்கள்**

**திரு. ரீ.டீ.எம்.எஸ். சமரநாயக்க அவர்கள்**

# பொருளாதாரக் கொள்கைத் திட்டமிடல் குழு

ஶ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் கணக்கியல் கற்கைப் பிரிவின் முதுநிலை விரிவுரையாளர்
**கலாநிதி அனில் ஜயந்த அவர்கள்**

களனிப் பல்கலைக்கழகத்தின் வணிக கற்கைப் பிரிவின் முதுநிலை விரிவுரையாளர்
**கலாநிதி ஶ்ரீயந்த பர்னாந்து அவர்கள்**

பொருளியல் ஆய்வாளர்
**திரு. காமினீ வருஷமான அவர்கள்**

ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் சமூக விஞ்ஞான மற்றும் மானிடவியல் பீடத்தின்
**கலாநிதி இந்திக்க பிரசன்ன அவர்கள்**

ஶ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ கற்கைப் பிரிவின் முதுநிலை விரிவுரையாளர்
**கலாநிதி தயானந்த அம்பலன்கொடகே அவர்கள்**

ஶ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ கற்கைப் பிரிவின் முதுநிலை விரிவுரையாளர்
**கலாநிதி கிங்ஸ்லி கருணாரத்ன அவர்கள்**

றுஹுஹுணு பல்கலைக்கழகத்தின் பொருளியல் கற்கைப் பிரிவின் கலாநிதி, முதுநிலை விரிவுரையாளர்
**கலாநிதி சாந்த சுமணரத்ன அவர்கள்**

பாராளுமன்ற கோப் குழுவின் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர்
**திரு. சுனில் ஹந்துன்னெத்தி அவர்கள்**

அனைத்து கம்பனி ஊழியர் சங்கத்தின் தலைவர்
**திரு. வசந்த சமரசிங்க அவர்கள்**

பட்டயம்பெற்ற கணிய அளவையாளர், நிர்மாணத் துறையில் பிணக்குத் தீர்த்தல் மாற்று முறைமைகள் பற்றிய நிபுணர், ரத்மலானை தொழில்சார் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தின் முதுநிலை விரிவுரையாளர்
**கலாநிதி சந்தன ஜயலத் அவர்கள்**

லங்கா ரைல்ஸ், முகாமைத்துவப் பணிப்பாளர்
**திரு. மஹேந்திர ஜயசேக்கர அவர்கள்**

அநுராத செரமிக் பிறைவேற் லிமிற்றட் தலைவர், முகாமைத்துவப் பணிப்பாளர்
**திரு. அஜித் பெரேரா அவர்கள்**

வர்த்தகர்

**திரு. எஸ்.எம்.டீ.சூரியகுமார் அவர்கள்**

களனி சியெற் ரயர் கைத்தொழில் நிறுவனத்தின் பொது முகாமையாளர்
**திரு. துசார ஹெட்டிதந்திரி அவர்கள்**

**திரு. மாதவ பளிஹபிட்டிய அவர்கள்**

Associate Director, Massachusetts office of public collaboration, Lecturer, McCormack graduate school of policy and global studies, University of Massachusetts Boston USA
**கலாநிதி மைக்கல் பர்னாந்து அவர்கள்**

**திரு. வசந்த திசாநாயக்க அவர்கள்**

**திரு. மஹிந்த ரத்னாயக்க அவர்கள்**

# விவசாய, கடற்றொழில் மற்றும் கால்நடைவளர்ப்பு கொள்கைத் திட்டமிடல் குழு

றுஹுணுப் பல்கலைக்கழகத்தின் விவசாயப் பொருளாதார கற்கைத் துறையின் பிரிவுத் தலைவர்
**பேராசிரியர் எல்.எம்.அபேவிக்ரம அவர்கள்**

விவசாய, கால்நடைவளர்ப்பு, காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் முன்னாள் செயலாளர்
**திரு. திஸ்ஸ வர்ணசூரிய அவர்கள்**

விலங்குற்பத்திகள் மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் நாயகம்,
விலங்கு மருத்துவர் **திரு. குமார த சில்வா அவர்கள்**

பத்தலகொட நெல் ஆராய்ச்சி நிலையத்தின் முன்னாள் பணிப்பாளர்
**கலாநிதி சுமித் அபேசிறிவர்தன அவர்கள்**

விவசாயத் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் நாயகம்
**திரு. கமல் மான்கோட்டே அவர்கள்**

றுஹுணுப் பல்கலைக்கழகத்தின் விவசாய விஞ்ஞான பீடத்தின் முன்னாள் விரிவுரையாளர்
**திரு. அசோக்க குணவர்தன அவர்கள்**

பத்தலகொட நெல் ஆராய்ச்சி நிலையத்தின் முன்னாள் பணிப்பாளர்
**கலாநிதி எம்.பீ.தனபால அவர்கள்**

தெங்கு அபிவிருத்திச் சபையின் முன்னாள் தலைவர்
**கலாநிதி பராக்கிரம வைத்தியநாத அவர்கள்**

அகில இலங்கை கமநல சம்மேளனத்தின் தலைவர், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்
**திரு. நாமல் கருணாரத்ன அவர்கள்**

அகில இலங்கை கமநல சம்மேளனத்தின் செயலாளர்

**திரு. டீ.பி.சரத் அவர்கள்**

நீரகவுயிர் வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் முன்னாள் நீரகவுயிர் வளர்ப்பு கருத்திட்ட அலுவலர்
**திரு. பேமசிறி ஜாசிங் ஆரச்சி அவர்கள்**

விவசாயத் திணைக்களத்தின் கட்புல-செவிப்புல அலகின் முன்னாள் பணிப்பாளர்
**திரு. ஆர்.டீ. சிறிபால அவர்கள்**

விலங்கு மருத்துவர்
**திரு. புபுது சமரவீர அவர்கள்**

OPEX AGRI Pvt Ltd இன் பிரதிப் பொது முகாமையாளர்
**திரு. ஹேமஜீவ கோட்டாபய அவர்கள்**

சிறுநில தேயிலைத் தோட்டங்கள் அபிவிருத்தி அதிகாரசபையின் முன்னாள் தலைவர்
**திரு. கமல் ஓரேசேக்கர அவர்கள்**

# போக்குவரத்துக் கொள்கைத் திட்டமிடல் குழு

றுஹுணுப் பல்கலைக்கழகத்தின் மானிடவியல் மற்றும் சமூகவியல் பீடத்தின் பீடாதிபதி
**கலாநிதி உபாலி பன்னிலகே அவர்கள்**

முன்னாள் புகையிரத பொது முகாமையாளர்
**திரு. பியால் சில்வா அவர்கள்**

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொறிமுறைப் பொறியியல் கற்கைத்துறையின் முதுநிலை விரிவுரையாளர்
**கலாநிதி பிரீமால் பர்னாந்து அவர்கள்**

மொரட்டுவைப் பல்கலைக்கழகத்தின் போக்குவரத்து மற்றும் வழங்கல் முகாமைத்துவ துறையின்
**கலாநிதி மஹிந்த பண்டார அவர்கள்**

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் பொறிமுறைப் பொறியியல் பீடத்தின்
முன்னாள் பிரிவுத் தலைவர், முதுநிலை விரிவுரையாளர்
**திரு. ரவீ த மெல் அவர்கள்**

அகில இலங்கை புகையிரத ஊழியர் சங்கத்தின் பொது சேவைச் சங்கத்தின் செயலாளர்
**திரு. எஸ்.பீ.விதானகே அவர்கள்**

அகில இலங்கை போக்குவரத்து ஊழியர் சங்தத்தின் செயலாளர்

**திரு. சேபால லியனகே அவர்கள்**

மாகாணசபை உறுப்பினர்
**திரு. நளின் ஹேவகே அவர்கள்**

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் முதுநிலை விரிவுரையாளர்
**கலாநிதி திலீப விதாரண அவர்கள்**

மொரட்டுவைப் பல்கலைக்கழகத்தின் முழுமையாக்க நிர்மாண கற்கைத் துறையின் பிரிவுத் தலைவர் முதுநிலை விரிவுரையாளர் **திரு. சிட்டுமின ரத்னமலல அவர்கள்**

ஸ்கொட்லாந்து டன்டீ பல்கலைக்கழகத்தின்
**திரு. கௌசல்ய ஹேரத் அவர்கள்**

# தேசிய ஐக்கிய கொள்கைத் திட்டமிடல் குழு

ராமஞ்ஞ நிக்காயவின் அதிகரன லேக்ககாதிகாரீ, தேசிய பிக்கு முன்னணியின் பிரதான போசகர்
**பேராசிரியர் அத்தன்கனே ரதனபால தேரர்**

முன்னாள் அமைச்சுச் செயலாளரும் எல்லை நிர்ணய மேன்முறையீட்டுக் குழுவின் தலைவரும்
**திரு. அசோக்க பீரிஸ் அவர்கள்**

வவுனியா முன்னாள் அரசாங்க அதிபர்
**திரு. தில்லை நடராசா அவர்கள்**

மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வு அமைச்சின் முன்னாள் செயலாளர்
**திரு. ஏ.சீ.எம்.ராசிக் அவர்கள்**

**சட்டத்தரணி உபுல் குமாரப்பெரும அவர்கள்**

களனிப் பல்கலைக்கழகத்தின்
**பேராசிரியர் எஸ்.ஜே.யோகராசா அவர்கள்**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முதுநிலை விரிவுரையாளர்
**கலாநிதி சாமிநாதன் விமல் அவர்கள்**

களனிப் பல்கலைக்கழகத்தின் கிறிஸ்தவ கலாசார கற்கைப் பிரிவின் முதுநிலை விரிவுரையாளர்
**கலாநிதி விஜித ரோஹண பர்னாந்து அவர்கள்**

களனிப் பல்கலைக்கழகத்தின் சமூக விஞ்ஞான பீடத்தின் பீடாதிபதி
**பேராசிரியர் சந்தன அபேரத்ன அவர்கள்**

**பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் அவர்கள்**

றுஹுணு பல்கலைக்கழகத்தின் வெளிநிலை விரிவுரையாளர்
**திருமதி சரோஜா போல்ராஜ் அவர்கள்**

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர், பிரதிக் குழுக்களின் தலைவர்
**திரு. இராமலிங்கம் சந்திரசேகரன் அவர்கள்**

றுஹுணு பல்கலைக்கழகத்தின் வரலாற்று கற்கைப் பிரிவின் முதுநிலை விரிவுரையாளர்
**திரு. தேவா மைக்கல் த சில்வா அவர்கள்**

கொழும்புப் பல்கலைக்கழகத்தின் சமூக விஞ்ஞான கற்கைப் பிரிவின் முதுநிலை விரிவுரையாளர்
**கலாநிதி (திருமதி) ஃபாரா ஹமீட் அவர்கள்**

**சட்டத்தரணி ஹர்ஷண நாணாயக்கார அவர்கள்**

சமூக மற்றும் சமய நடுநிலையம்
**அருட்தந்தை அசோக் ஸ்ரீவன் அவர்கள்**

ஜனாவபோத கேந்திரத்தின் பணிப்பாளர்
**திரு. அஜித் ஹெட்லி பெரேரா அவர்கள்**

**கலாநிதி மைக்கல் பர்னாந்து அவர்கள்**

**திரு. மஹிந்த ரத்னாயக்க அவர்கள்**

**திரு. வசந்த திசாநாயக்க அவர்கள்**

இந்த கொள்கை பிரகடனம்
நாட்டை கட்டியெழுப்புவதற்கான
எங்களது தூர சிந்தணையாகும்
இதுவரை எங்கள் வாழ்க்கையை
அர்பணித்து சட்டமும் ஒழுங்கும்
நிறைந்த சுபீட்சமான இலங்கையை
கட்டியெழுப்பவதற்கான எங்களின்
எதிர்கால அணுகுமுறை
இதுவாகும்.

# தேசிய மக்கள் சக்தி

இல 33, ஶ்ரீ சுபூதிபுர மாவத்த, பத்தரமுல்ல.